வெளியீடு எண் 248.

உ
சிவமயம்

ஸ்ரீ மாணிக்கவாசகர்

அல்லது

நீத்தார் பெருமை

இஃது
திருக்கயிலாயபரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
இருபத்திரண்டாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாணதேசிக பரமாசாரிய சுவாமிகள்
கட்டளையிட்டருளியபடி
வெளியிடப்பெற்றது

மார்கழி திருவாதிரை விழாமலர்

திருவாவடுதுறை ஆதீனம்
1969

ஸ்ரீ நமசிவாயமூர்த்தி அச்சகம்
— திருவாவடுதுறை —

இதில் அடங்கியவை

உ

நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனுயின் ளமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
தானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தான்
ஊனுரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே.

— திருவாசகம்.



ஆனந்த தாண்டவம்

சிறப்புரை

மாணிக்கவாசகர் அல்லது நீத்தார் பெருமை என்னும் நூல் திருவாவடுதுறை ஆதீன வெளியீடாக வருவது பெரும்பாக்கியம் என்று கருதுகிறேன். அதன் ஆசிரியர் சிவக்கவிமணி அவர்கள் நமது ஆதீன அடியவராகவும், கல்விக் கடலாகவும் விளங்கியுள்ள மாதவச்சிவஞான முனிவர் அவர்களது வித்தியா பரம்பரையைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள்.

சிவஞானசுவாமிகள், அவர்களது மாணவர் கச்சியப்பமுனிவர், அவர்களது மாணவர் கந்தப்பையர், அவர்களது மாணவர் சரவணப்பெருமாளையர், அவர்களது மாணவர் சந்திரசேகரம் பிள்ளை, அவர்களது மாணவர் வித்துவான் கந்தசாமி முதலியார், அவர்களது மாணவர் பண்டித ச. திருச்சிற்றம்பலம்பிள்ளை அவர்கள், அவர்களது மாணவர் சிவக்கவிமணி சி. கே. சுப்பிரமணிய முதலியார் அவர்கள். ஆகையால் இந் நூல் திருவாவடுதுறை ஆதீன வெளியீடாக வெளி வருவது மிகப் பொருத்தமுடையதும், திருவருளின் வழியும் ஆகும் என்று நம்புகிறேன். மேலும் இது திருப்பெருந்துறை ஆலயத்துக்குப் பயன்படுவது பற்றியும் மகிழ்ச்சி அடைகிறேன்.

அன்பன்

சி. சு. கண்ணுயிரம்.

உ

குருமரபு வாழ்த்து

கயிலாய பரம்பரையிற் சிவஞான
போதநெறி காட்டும் வெண்ணெய்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞான பாநு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ்
குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ.

—ஸ்ரீ மாதவச் சிவஞானயோகிகள்.

உ
சிவமயம்

முன்னுரை

மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாற் றொடங்கி னர்க்கோர்
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே.

திருவாசகம் என்பது சைவத் திருமுறையாம் தெய்வத் திருமுறை. இது தமிழ் மொழியில் உள்ள சமயநூல்களுள் தலைமணியாக விளங்குவது. இதனை ஞானக்கருவூலம் என்றும் கூறலாம். இவ்வருள் நூல் திருமுறைகளுள் எட்டாந்திரு முறையாக அமைந்து விளங்குவது. இந்நூலைப் படிப்போர் மனங்கரைந்து உருகி மாசுநீக்கம்பெற்று உயர்வடைவர். உள்ள மொன்றுபட்டு இந்நூலைப்படிப்போர் தனைமறந்து ஆனந்தக் கண்ணீர் வடிப்பர். அளப்பரிய பொருளுடைய இந்நூலை வளப்பமுள்ள உளமுடன் உள்கலந்து உணர்ந்து படிப்போர் உள்ளொளிபெருகி உலப்பிலாத தேனமுதம் உண்டு மகிழ்ந் தவராவார்கள். பண்பட்ட உள்ளமுடைய எவரும் இந்தத் தெய்வப் பாடல்களின் பொருளுணர்ந்து படிப்பார்களாயின், இந்நூலைத் தங்கள் உயிர்க்கு உறுதுணையாகக்கொண்டு நல் வாழ்வடைவார்கள் என்பது திண்ணமாகும்.

இத்தகைய சிறந்த அருள்நூலினை ஆக்கிய திருவாதவூரடி கள் என்னும் மாணிக்கவாசக சுவாமிகளையும் அவர்செய் தருளிய திருவாசகம் திருக்கோவையார் என்ற திருமுறை களையும் அறியாத தமிழனும் சைவனும் உலகத்தில் இல்லை என்றே கூறலாம். அந்நிய நாட்டினர்கூட நமது ஆசாரிய மூர்த்திகளின் வரலாற்றையும் அவர் அருந்திருவாக்கையும் அறிந்து பழகிப் பயன்பெற விரும்புகிறார்கள். அவர்களுள் ஒருவருடைய குறிப்பைக் காண்போம். அது ஏற்றமுடையதும் பொருத்தமுடையதும் ஆகும்.

ஆங்கில நாட்டினராகிய ஜி. யு. போப்பையருடைய தமிழ் ஆர்வமும் பற்றும் உலகறிந்த ஒன்று. அவருடைய ஆங்கில மொழிபெயர்ப்பு நூல்களாகிய திருவாசகம், திருக்குறள், நாலடியார் இவைகளால்தான் தமிழின் பெருமையை உலகு

அறிந்து கொண்டது. இப்பெரியார் பல ஆண்டுகள் தமிழ் நாட்டுள் உறைந்து, தமிழினைப்பயின்று, அதிலும் சிறப்பாகத் திருவாசகத்தைப் பயின்று அந்நூலுள் தனிப்பட்ட ஆர்வம் கொண்டவர். இவர் தமிழ்மொழியின்பால் கொண்ட அன்பால் தன்னுடைய கல்லறையில் ஒரு தாழ்மையுள்ள தமிழ்மாண வன் என்று பொறிக்கச் சொல்லிய ஒன்றே இவரது தமிழின் பால் உள்ள உண்மை உணர்வைப் புலப்படுத்தும். இத்தகைய ஏற்றம் வேறு எம்மொழிக்கும் ஏற்பட்டதில்லை.

இவ்வாறு உலகமறிந்த பெரியாரான மாணிக்கவாசகர் என்னும் ஆசாரிய மூர்த்திகளுடைய வரலாறு யாது? அவர் பெருமைகள் யாவை? அவர் திருவாக்காகிய திருவாசகம், திருக்கோவையார் என்ற இருதிருமுறைகள் எந்த அளவில் அவர் வரலாறுகளையும் அவர் பெருமைகளையும் விளக்கு கின்றன. இத்தகைய ஆராய்ச்சியில் பலர் பலகோணங்களில் நின்று மிகவிரிவானமுறையிலும் நூல்கள் ஆக்கியுள்ளார்கள். எளியேனும் இவ்வாராய்ச்சியைச் சிறிய அறிவுக்கும் சிறிய சக் திக்கும் ஏற்றபடி மேற்கொள்வதே இந்நூலை எழுதத் துணிவு கொண்டதற்கு ஏற்ற காரணமாகும். அம்முயற்சிக்கேற்ப இந் நூலுக்கு இருபெயர்கள் தலைப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளது. அறிஞருலகம் அவற்றின் உட்பொருளை உணர்வார்களாக. உணர்ந்து உயர்வடைவார்களாக.

இந்நூல் எல்லோரது உள்ளத்தையும் இயல்பாக உருக்கு வது குறித்துச் சுமார் 150 ஆண்டுகட்குமுன் தஞ்சை அரண் மனைப் புலவரும், திருவிடைமருதூர்த் தலபுராண ஆசிரியரும் ஆகிய கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகரால் ஏட்டுச்சுவடி யிலிருந்து அச்சுக்குக் கொண்டுவரப்பட்டது. அதன் பின்னர் பலர் பலமுறையில் திருவாசகத்தை வெளியிட்டுள்ளார்கள். திருவாசகம் பெரும்பாலும் இசையுடன் பாடி இன்புறுதலே மரபாகவிருந்து வருகிறது. 'இழுக்குடைய பாட்டிற்கு இசை நன்று' என்ற தொடர் உண்மையும் நோக்குக. இசையோடு பாடப்படின் உள்ளமுருக்கும் உயர்வுடையது.

திருவாசகத்துக்கு உருகார் ஒருவாசகத்துக்கும் உருகார் என்பது முதுமொழி. அத்தகைய வாசகத்தை இயற்றிய மணி வாசகரது அருமை பெருமைகளை அறிந்துகொள்வது சைவ நன்மக்களின் முதற்கடமையாகும். பண்பாடுமாகும்.

தமிழ்நாட்டில் சைவநன்மக்களால் தெய்வநிலையில் வைத்துப் போற்றப்பெறும் சமயகுரவர் நால்வருள் வாதவூரடிகளும் ஒருவர். இவருக்கு மாணிக்கவாசகர், மணிவாசகர், பெருந்துறைப்பிள்ளை, ஆளுடைய அடிகள் என்ற பல பெயர்களும் வழங்குகின்றன. இதனுள் மாணிக்கவாசகர் என்னும் திருப்பெயர் சிவபெருமான் ஞானதேசிகனாக எழுந்தருளி இவரை ஆட்கொண்டபோது சூட்டிய திருப்பெயராகும். இவ்வுண்மையை,

> பழுதி லாதசொல் மணியினைப் பத்திசெய் தன்பு
> முழுது மாகிய வடத்தினால் முறைதொடுந் தலங்கல்
> அழுது சாத்துமெய் யன்பருக் ககமகிழ்ந் தையர்
> வழுவி லாதபேர் மாணிக்க வாசக னென்றார்.

என்ற பரஞ்சோதி முனிவர் பாடலால் உணரலாம்.

இவருடைய வாழ்க்கைநெறியை இரண்டு பெரும் பிரிவுகளில் உணரலாம். ஒன்று ஞானநெறி, ஏனையது உலகநெறியாகும். ஞானநெறியை அறிந்து கொள்வதற்கு இவரே தமது நூலுள் தெளிவான பல குறிப்புகள் கொடுத்துள்ளார். அக்குறிப்புகள் திருவாசகத்துள் தேனூறும் அமுதப் பாடல்களில் உள்ளனவேயாகும். அவைகளின் உட்பொருளை விளக்குவதே இந்நூலின் நோக்கமாகும்.

இரண்டாவதாகிய உலக நெறியினைப்பற்றித் திட்டவட்டமாகவும், தெளிவாகவும், அறிந்து கொள்ளுதற்கேற்ற பழைய வரலாற்றுத் தொடர்புடைய செய்திகள் நூல்வழியாகவோ வரலாற்று முறையில் இடம்பெறக்கூடிய வேறு ஆதாரங்கள் வழியாகவோ இதுகாறும் நமக்குக் கிடைக்கவில்லை. நம் மக்களும் இதுகாறும் இவற்றைத் தேடும் முயற்சியிலே ஈடுபடவில்லை. முதலில் இவரது இயற்பெயர்தானும் இன்னதென்று அறிந்தோமில்லை. இதுபொழுது நமக்குக் கிடைத்துள்ளனவெல்லாம், புராணங்கள், கர்னபரம்பரைச் செய்திகள், பழங்கதைகள் இவைகளேயாகும். அவைகளும் ஒன்றுக்கொன்று சில இடங்களில் முரண்படுகின்றன. அவற்றுள் சிறப்புடையன கொண்டே இச்சிறுநூல் எழுதப்பட்டுள்ளன.

மாணிக்கவாசகர் வரலாற்றைக் கூறுவனவாக எழுந்த புராணங்களுள் காலத்தால் முற்பட்டது பெரும்பற்றப்புலியூர் நம்பி திருவாலவாயுடையார் திருவிளையாடல் புராணமாகும்.

பின்னர்த் தோன்றியவற்றுள் ஏறத்தாழ ஐந்நூறு ஆண்டுகளுக்குமுன் பாடப்பட்ட கடவுண்மாமுனிவர் இயற்றிய திருவாதவூரர் புராணமும், 350 ஆண்டுகளுக்கு முற்பட்ட பரஞ்சோதி முனிவர் திருவிளையாடல் புராணமும், 100 ஆண்டுகளுக்கு முற்பட்ட திருவாவடுதுறை மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் பாடிய திருப்பெருந்துறைப் புராணமும் குறிப்பிடக் கூடியனவாம். இத்துடன் உத்தரகோசமங்கைப் புராணம் மாணிக்கவாசகரின் முற்பிறப்பு வரலாற்றைக் கூறுகின்றது. இவைகளின் துணைகொண்டே இந்த ஆராய்ச்சிநூல் எழுதப்பட்டுள்ளது.

தெய்வத் திருநெறிபரவும் மூதூர்களுள் திருவாதவூரும் ஒன்று. இது பாண்டியநாட்டில் உள்ளது. சங்ககாலப் பெரும் புலவராகிய கபிலர் பிறந்ததும் இப்பதியே. கபிலர் காலத்து இவ்வூர் பறம்புநாட்டைச் சேர்ந்திருந்தது. இவ்வூர் சிறந்த இயற்கை எழிலுடன் விளங்கியிருந்தது என்பதைக் கபிலர் கூற்றால் உணரலாம். இவ்வூரில் இருப்பை முதலிய மரங்கள் வானுற ஓங்கி வளர்ந்து நின்றன. அம்மரநீழலில் கபிலர் தன் இளமையில் விளையாடிய சிறப்பைப் பின்வருமாறு விளக்குகிறார். இது பழங்காலப் புலவரின் நற்பண்பை விளக்கும்.

இருப்பை மரநிழலில் விளையாடிய கபிலர் ஒருநாள் அந்த மரத்தின் மலர்கள் மரத்திலிருக்கும் நிலையையும், உலர்ந்து மண்ணில் விழுந்துகிடக்கும் நிலையையும் பார்த்தார். மரத்தோடிணைந்து தனது நிலைகெடாது இருந்த மலரின் தோற்றம் பெண்யானையின் எழில்மிகும் கொம்பைப் போன்றிருந்தது; மரத்தைவிட்டுப் பிரிந்து மண்மீதுவிழுந்த உலர்ந்த மலர் பரதவர் முற்றத்திலே உலரும் இறால்போன்றிருந்தது. ஒரே பொருள் தன்னிலையில் இருந்தபோதும், நிலை தவறியபோதும் அடையும் ஏற்றத்தாழ்வு அவருள்ளத்தில் பலவகையான உலக நிகழ்ச்சிகளையும், எண்ணங்களையும் தோற்றுவித்தது. தான் கண்ட காட்சியைக் கண்டபடியே ஏற்ற உவமையோடு கூறி ஏனைய கருத்துக்களை உய்த்துணர வைத்துள்ளார்.

இதனை,

நெட்டிலை யிருப்பை வட்ட வொண்பூ—வாடாதாயின்
பிடுடைப் பிடியின் கோடேய்க் கும்மே!—வாடிலோ
பைந்தலைப் பரதர் மனைதொறு முணங்கும்
செந்தலை இறவின் சிரேய்க் கும்மே.

என்ற பாடலால் அறியலாம்.

இதே கருத்தைப் பெரும்பற்றப் புலியூர்நம்பி,

நீதிமா மதூக நிழல் நெட்டிலை இருப்பை என்றோர்
காதல்கூர் பனுவல் பாடும் கபிலனூர் பிறந்த மூதூர்
சோதிசேர் வகுள நீழற் சிலம்பொலி துளங்கக் காட்டும்
வேதநா யகனூர் வாழும் வியன்திரு வாத வூரால்.

என்று தமது திருவிளையாடற் புராணத்துள் கூறியுள்ளார். இவைகள் அறிஞர் உளத்துக்குப் பெருவிருந்தாக அமைந்துள்ளன; புலவர்களது இயற்கை வருணனையை விளக்குவனவாகவும் அமைந்துள்ளன.

இத்தகைய சிறப்புடைய திருவாதவூரில் அமாத்தியப் பிராமணகுலத்தில் ஒரு அந்தணருக்கு அவருடைய மனைவி பால் மணிவாசகர் மகவாகப் பிறந்தார். ஆனால் வடமொழி ஆலாஸ்யமான்மியம் சம்புபாதாசிரியர் என்ற அந்தணருக்கும் சிவஞானவதிக்கும் மகவாகப் பிறந்தார் என்று சுட்டுகிறது. திருப்பெருந்துறைப் புராணமோ இவரைத் திருநந்திதேவர் அவதாரமெனக் கூறுகிறது. ஏனைய புராணங்கள் கணநாதர் என்று கூறுகிறது. இவை காலவேறுபாட்டால் நிகழ்ந்தவை.

இவருடைய இளமையையும் கல்வி உயர்வையும் கருதிய பாண்டியன் இவரை அமைச்சர் தலைவராக்கித் தென்னவன் பிரமராயனென்ற பட்டப்பெயருடன் அமைச்சர்க்குரிய ஆடை, பூண், கவிகை, தண்டு, யானை முதலியவற்றையும் கொடுத்தான். திருவாதவூரர் அமைச்சராக இருந்து,

காதலித் தறஞ்செய் வோர்க்குக் கவசமும் கண்ணு மாகி
ஏதிலர்க் கிடும்பை யாகி யிறைஞ்சினர்க் கின்ப மாகி
ஆதுலர்க் கன்னை யாகி அரனடிக் கன்பு மிக்கார்
பூதலத் திறைவ னாணை பொதுவற நடத்தும் நாளில்.

சிவபெருமானிடத்து அன்புமிக்குடையராய் உலக வாழ்க்கையில் ஒட்டியும் ஒட்டாதும் தாமரை இலைத்தண்ணீர்போல் இருந்து தன்னை வீட்டுலக நெறியில் செலுத்தவல்ல ஞான குரவனை எதிர்நோக்கிக்கொண்டே இருந்தார். இது இவரது முன்னைப் பிறவியின் எண்ணம்போலும்.

இந்நிலையில் பாண்டியனிடம் அவனது குதிரைச் சேவகர்கள் குதிரைப்படை அருகிவிட்டதை எடுத்துக் கூறினார்கள்.

அரசனும் அமைச்சரைப் பொற்குவியலுடன் சென்று கீழ்க் கடற்கரையில் இறங்கும் குதிரைகளை வாங்கிவருமாறு பணித்தார். வாதவூரரும் அரசர்பணியேற்று ஆலவாயரனை அடிபணிந்து சென்றவர் திருப்பெருந்துறையை அடைந்தார். அங்கு அடைந்ததும் மணிவாசகர் சிவாகம ஒலியினைக் காதுறக் கேட்டார். கேட்டவழியே நடந்துசென்ருர். சென்றவர் சோலையின் நடுவில் உள்ள குருந்தமர நீழலிலே ஞான குரவனுகச் சிவபெருமான் திருக்கோலங்கொண்டு வீற்றிருப்பதைக்கண்டார். கண்டவர் கீழ்விழுந்து வணங்கி எழுந்தார். ஐயனே! தமது செங்கையில் தாங்கியுள்ள புத்தகம் யாது? என வினவ ஐயன் 'பொய்மை இலாச் சிவஞானபோதம்' என்ருர். திருவாதவூரர் சிவம் யாது? ஞானமாவது யாது? போதம் என்பது எது? இவற்றை ஏற்றபடி விளக்கின் உமக்கு அடிமையாவேன் என்ருர். ஞானகுரவன் சிவமென்பது ஒப்பற்ற மெய்ப்பொருள்; அதாவது செம்பொருள். ஞானமென்பது அந்த மெய்ப்பொருளை உள்ளுணர்வால் அறிதல். போதம் என்பது அவற்றைத் தெளிதல் என்று கூறினர். இது பொருளின் சுருங்கிய விளக்கமாகும்.

இவ்வாறு ஞானகுரவன் கூறுதலும், தன்னை ஆட்கொள்வதற்குச் சிவபெருமானே குருவாக எழுந்தருளி உள்ளார் என்பதை உணர்ந்த வாதவூரர் கண்ணீர்வார முன்னின்று வணங்கி, எம்முயிர்க்கு இறைவனே! உன் திருவடியை அணைந்து அடியேன் பிறப்பொழிதல் வேண்டும். என்னை ஆட்கொண்டருளுக என விண்ணப்பித்தார். குறையிறைந்து அடியற்றமரம்போல் விழுந்து வணங்கினர்.

ஞானகுருவாகவந்த இறைவன் வாதவூரரைக் கடைக்கணித்து அஞ்சற்க! உன்னை ஆட்கொள்ளவே வந்தோம் என்று திருவாய் மலர்ந்தருளினர். மணிவாசகரைப் பற்றியிருந்த மாயை தொலையும் காலமாகிய கதிரவன் மறைந்த பதினைந்து நாழிகையும் வந்தது. ஞானதேசிகரும் தவிசின் மேலிருந்து மணிவாசகருக்குத் திருவைந்தெழுத்தை உபதேசித்தருளினர். உடன் இவருடைய பிறவித்துன்பம் விளக்கின்முன் இருள்போல் ஒழிந்தது. உடன் உடல்முழுதும் நிலத்தில் படிய விழுந்து பணிந்தார். சிவபெருமான் இவர் தலைமேல் தன் திருவடிகளை வைத்தார். தேசிகன் திருவடி

தோய்ந்தநிலையில் வாதவூரருக்கு மக்கட்குரிய பொய்ப்புலனும் பொய்யுணர்வும் மாய்ந்து சிவகரணங்கள் தோன்றின. எல்லை யற்ற ஆனந்தமுற்று மெய்யுணர்வோடு எழுந்து நின்றார். தன்வசமற்றுத் தற்போதமழிந்து நின்றார்.

மறுநாள் ஞானதேசிகன் வாதவூரரைத் தனியே அழைத்துச் சிவாகமங்களின் உண்மைகளைக்காட்டித் தன் உருவத்தை மனத்தில் வைப்பதே மெய்ப்பொருளுணர்வது என்று தெளிவாகக் கூறினார். மணிவாசகரும் தன் உடல் பொருள் ஆவிகளைத் தேசிகன் திருவடியில் ஒப்புவித்துவிட்டார். தான் குதிரைவாங்கக் கொண்டுவந்த பொற்குவியல் அனைத்தையும் குருவின் திருவடி காணிக்கையாக வைத்துவிட்டார். இறைவரும் அதனை ஏற்றாற்போல் திருவருள் பாலித்தார். பொற்குவியல்கள் சிவப்பணிக்கு ஆக்கப்பட்டன.

சேனைகள்சூழ அரசரைப்போல வந்த வாதவூரர், மக்கள் யாக்கையிலிருந்து விடுபெற்றவராய், உருத்தெரியாமல் உடம்பெல்லாம் திருநீறணிந்து, கோவண உடையும் அணிந்து நீர் பொழி கண்ணும் உடையவரானார். இந்நிலையில் ஞானதேசிகனைப் பார்த்து நிற்பார்; அழுவார்; கைகூப்பித் தொழுவார்; விழுவார்; மீட்டும் எழுவார்; பகல் இரவு அற்றவராய் ஞானத் திருமேனியையே இடைவிடாது கண்டு பாலர், பித்தர், பேயர், போலானார். உடன்வந்தோர் வந்த காரியத்தை நினைவுபடுத்தவும் அறியாராய் பொய்யுரை பேசன்மின், அகன்றுபோமின் என்று கூறிவிட்டார். அவர்களும் செய்வதறியாது பாண்டியன் அவையை அடைந்து நிகழ்ந்தவற்றைக் கூறலானார்கள்.

இதுகேட்ட பாண்டியன் உடன் ஒரு ஓலை எழுதி வாதவூரர்க்குக் காட்டிக் கைப்பிடியாகக் கொணருமாறு பணித்தான். அவர்களும் விரைந்தோடி வாதவூரரிடம் திருமுகத்தைக் காட்டினார்கள். வாதவூரர் யாது என பாண்டியன் விடுத்த திருமுகம் என்றனர். வாதவூரர் அதைக்கையில் ஏற்க மனமிலராய்ப் படிக்குமாறு பணித்தார். படிக்கக்கேட்ட வாதவூரர் உலகஞானம் உண்டானவராய் ஞானதேசிகனிடம் சென்று பாண்டியன் திருமுகம் விடுத்தமையை விண்ணப்பித்தார். இதுகேட்ட தேசிகன் புன்முறுவல் கொண்டு, ஆவணிமூலத்தன்று நாமே குதிரைகளைக்கொண்டுவருவோம் நீ மன்னனிடம் சென்று இச்செய்தியைக் கூறுக என்றார்.

மணிவாசகரும் பழைய அமைச்சர் கோலத்துடன் பாண்டியனை அடைந்து குதிரைவரும் செய்தியைக் கூறினர். பாண்டியனும் ஆவணிமூலத்தை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். இறைவரும் வாதவூரர் துயரத்தைப் போக்கத்திருவுளங்கொண்டு காட்டுநரிகளையெல்லாம் குதிரைகளாக ஆக்கி, தாமே குதிரைவணிகன் கோலங்கொண்டு பெரிய குதிரைக் கூட்டத்துடன் மதுரையை நோக்கி வந்தார். குதிரைகளைப்பெற்ற பாண்டியன் அவைகளைப் பந்தியில் சேர்க்குமாறு பணித்தான். வாதவூரரையும் மகிழ்வுடன் அவருடைய மாளிகைக்குச் செல்லுமாறு கூறினன். அவரும் இறைபருளை எண்ணிச் செல்வாரானர்.

மறுநாள் இரவு குதிரைகள் எல்லாம் நரிகளாக மாறிப் பந்தியிலிருந்த பழைய குதிரைகளையும் கொன்று ஊரவர் அஞ்சும்படி ஊளையிட்டு ஓடிமறைந்தன. இச்செய்தியைக் குதிரைச் சேவகர்கள் தமது உளம்பதற உடல்பதற ஓடி அரசனிடம் முறையிட்டனர். பாண்டியன் கேட்டு மனங்கொதித்து வாதவூரரை அழைத்துவரச் செய்தான். தண்டலாளரை நோக்கி இவரைக் கடுவெயிலில் நிறுத்தித் தக்கதண்டம் செய்து கொண்டுசென்ற பொன்முழுவதையும் பெற்றுவருக என்று ஏவினன். தண்டலர்கள் கடுவெயிலில் ஒரு கோடிட்டு அதற்குள் நிறுத்தி ஒறுத்தார்கள். திருவாதவூரர் திருவருளை நினைந்து 'உன்னையன்றி எத்துணையும் இல்லாத எனக்கு இத் துன்பம் வருவது முறையோ' என்று ஏங்கினர்; துடித்தார்; செய்வதறியாது திகைத்தார். இறைவனே! என்று பலவாறு கூறினர்.

திருவாதவூரர் படும் துன்பத்தைப் போக்க எண்ணிய சிவபெருமான் அத்துன்பத்தை நீக்க வழிதேடுமாறு கங்கையைப்பணித்தார். கங்கையும் விரைந்துவந்து வையையில் பெருக்கெடுத்து மதுரை முழுவதும் பரவியது. வெள்ளம் கண்டபாண்டியன் மனமாற்றமடைந்து வாதவூரரையழைத்து இத்துன்பத்தைப் போக்கி நாட்டைக் காப்பாற்ற வேண்டும் என்று வேண்டினன். வாதவூரரும் இறைவரைக் குறை வேண்டி நின்றூர். ஊரவர் அனைவரும் வையையிற்பெருகும் வெள்ளத்தைத்தடுத்து நிறுத்த முயன்றனர். அவருள் பிட்டு வாணிபஞ் செய்துவாழும் வந்தி தன்பங்கை அடைக்க ஆள்

இல்லாமல் வருந்த இறைவரே கூலியாளாகவந்து பிட்டேற்று உண்டு பிரம்படியும்பட்டார். அவ்வடி அனைத்துப் பொருள் மேலும் விழுந்தது. பாண்டியனும் உண்மை உணர்ந்தான். இந்நிலையில் இறைவரும் மறைந்தார். வையையின் வெள்ளம் வடிந்தது. மன்னனின் மனமாசும் அகன்றது.

பாண்டியன் தன் தவறுணர்ந்து வாதவூரரை அரசுரிமை ஏற்குமாறு வேண்டினன். வாதவூரரும் பெருமான் நிலத்துள்ள பெருந்துறைக்குச் செல்வதே! எமது விருப்பமாகும் என்றார். பாண்டியனும் அவர் விரும்பியவாறு விடையளித்து அரண்மனையை அடைந்தான். முடிவில் மெய்ஞ்ஞானமே வென்றது.

திருவாதவூரர் அரசகோலத்தைக் களைந்து தவவேடம் தாங்கி மிக விரைந்து திருப்பெருந்துறையை அடைந்தார். ஞானதேசிகரின் திருவடிகளில் விழுந்து வணங்கினர். அவருடைய கட்டளைப்படிக் குருந்தமரநிழலில் இடம் அமைத்துத் திருவடிகளை வைத்து வழிபாடுசெய்தார். பின் தாமே அங்கு ஒரு பெரிய கோயிலை எடுத்தார். அக்கோவில் இன்றும் உபதேச பரம்பரையில் வந்துகொண்டிருக்கும் திருவாவடுதுறை ஆதீனத்துக்குச் சொந்தமாக உள்ளது. அக்கோயில் திருப்பணிக்கென்று முன்னரே திருவாசகமும், திருக்கோவையாரும் உரை விளக்கங்களுடன் பதிப்பிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. அதன் தொடர்பாகவே இந்நூலும் வெளியிடப்படுகிறது. திருவாவடுதுறை ஆதீனம் பல சாத்திர தோத்திர நூல்கள் வெளியிட்டு வருகின்றது உலகறிந்த ஒன்று.

இந்த நூலுக்கு மாணிக்கவாசகர் அல்லது நீத்தார் பெருமை என்று இரண்டு பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவ்விரண்டும் வெவ்வேறு தனித்த பொருள்களைக் குறிப்பன என்று நீங்கள் எண்ணலாம். அவ்வாறல்ல.

திருவள்ளுவர் தமது அருமைத் திருக்குறளிலே பாயிரத்திலே கடவுள் வாழ்த்துக்கும் வான் சிறப்புக்கும் அடுத்தாற்போல் நீத்தார் பெருமை என ஒரு அதிகாரம் வைத்துள்ளார் மக்கட்கு உறுதியென உயர்ந்தோரான் எடுக்கப்பட்டபொருள் நான்கு. அறம் பொருள் இன்பம் வீடு என்பன. 'அவற்றுள் வீடு என்பது சிந்தையும் மொழியும் செல்லாநிலைமைத்து

ஆகலின் துறவறமாகிய காரணவகையாற் கூறப்படுவ தல்லது இலக்கணவகையால் கூறப்படாமையின் நூல்களாற் கூறப்படுவன ஏனைய மூன்றுமேயாம்' என்று கூறுவர் ஆசிரியர் பரிமேலழகர்.

இவ்வாறு விட்டுநெறியைக் காரண வகையால் உணர்த் தும் இத்துணைச் சிறப்பு வாய்ந்த துறவறத்தை மேலே ஆசிரி யர் அறத்துப்பாலிலே 13 அதிகாரங்களால் வகுத்துக் கூறு வாராய் அது வாயிலாக விட்டு நெறியையும் தம் நூலிலே உணர்த்தி நிரப்பி 'முப்பாலில் நாற்பால் மொழிந்த மொழி' என்று சிறப்பித்தோதும்படி வைத்துள்ளார்.

அறம் முதலிய பொருள்களை உலகிற்கு உள்ளவாறு உணர்த்துவார் முற்றத்துறந்த முனிவர்களாகிய நீத்தார் களேயாவர் என்றார் ஆசிரியர் பரிமேலழகர். இத்தகைய நீத்தார்களது பெருமையை இலக்கணவகையால் இன்னின்ன படி என்று ஆசிரியர் திருவள்ளுவர் பத்துத் திருக்குறள் களினாலே நீத்தார்பெருமை என்ற அதிகாரத்திலே எடுத் தோதினர்.

அந்தப் பத்துத் திருக்குறள் பாக்களிலேயும் உள்ள பெருமைகள் யாவும் ஒன்றுவிடாமல் நமது மணிவாசகப் பெருமானது வரலாற்றுப் பகுதியிலே இலக்கியமாக அமைந்து கிடப்பதையும் வரலாற்றுப் பெரும்பகுதிகள் பத் தும் அந்தப்பத்துத் திருக்குறள்களின் உள்ளுறைகளோடு பொருந்தி முடிதலையும் உள்ளீடாகக்கொண்டே இந்நூலுக்கு மாணிக்கவாசகர் அல்லது நீத்தார் பெருமை என்று பெயர் இடத் துணிந்தேன்.

எனவே எளியேனது சிற்றறிவிற்கு எட்டியமட்டிலே மணிவாசகப் பெருமானுடைய வரலாற்றை வரிசைக் கிரம மாகத் திருவவதாரமுதல் முத்திவரை ஈருகப் பத்துப் பாகங்க ளாகப் பிரித்து அந்தந்தப் பாகங்களில் குறிக்கப்பெறும் உள்ளீடான நீத்தார்பெருமைத் திருக்குறளை முதலிலே காட் டியும், அப்பெருமையினைச் சுட்டிய வரலாற்றுப் பகுதியை விரித்தும் அந்தந்தப் பகுதியில் எளியேன் ஆராய்ச்சி சென்ற அளவிலே ஆசாரியமூர்த்திகள் திருவாக்குகளிலேயிருந்தே தெரியவரும் வரலாற்றுக் குறிப்புகளை மேற்கோள்களாகக்

காட்டியும் முடிவிலே அவ்வரலாற்றுப்பகுதி குறட்பாவின் கருத்தோடு பொருந்தும் வகையைக்காட்டி முடித்தும் மேற் செல்வது என்னுடைய நோக்கமாகும். இம்முறையில் ஆக்கப் பட்டதே இந்நூலாகும்.

மாணிக்கவாசகரால் ஆக்கப்பட்டது திருவாசகம் என முன்னரே கூறினேம். திருவாசகம் என்னும் பெயரிலுள்ள திரு என்னும் அடைமொழிக்குப் பேராசிரியர், கண்டாரால் விரும்பப்படும் தன்மைநோக்கம் என்று பொருள் கூறியுள் ளார். ஆகவே திருவாசகம் என்பது அழகிய தெய்வத்தன்மை வாய்ந்த சொற்களால் ஆகிய செய்யுள் நூல் என்னும் பொரு ளுடையதாகும். இது திருவென்னும் அடையடுத்த வாசகம் என்னும் முதற்கருவியின் பெயர் அதன் காரியமாகிய செய் யுட்கு ஆயினமையின் கருவியாகு பெயராம் என்ப. சிவஞான முனிவர் பிறர் கொள்கையை மறுக்குங்கால் ஆகுபெயர் என்பதை உடன்பட்டுப் பின் ‘உண்மையான் நோக்குவார்க்கு அன்மொழித் தொகையே ஆகுமன்றி ஆகுபெயராகாமை யுணர்க’ எனவும் கூறியுள்ளார். திரு என்பது தெய்வத் தன்மை, அழகு என்னும் பொருளுடையதாகும். திரு கண்டா ரால் விரும்பப்படும் தன்மை நோக்கம் என்றது அழகு என்று பேராசிரியர் உரைகூறினாராயினும், ஈண்டு தெய்வத்தன்மை என்று கொள்ளுதல் சிறப்புடைத்தாம், இந்நூல் அனுபவ உண்மைகளைத் தெளிவுண்டாகும்படி விளக்குவனவாம்.

மணிவாசகர் ஆக்கிய திருவாசகம் தமிழகத்திலும் தமிழ் மக்கள் வாழும் வெளியிடங்களிலும் உள்ள சைவசமயத்தவ ரால் வழிபடப்படும் நூலாக இன்றும் விளங்கி வருகிறது. வழிபட்டுப் பயன்பெற்றோரும் பலராவர்.

இந்நூற்குரிய பொருள்கள் அனைத்துக்கும் திருவிளை யாடற்புராணம், திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், திருப்பெருந்துறைப் புராணம், திருவாதவூரர் புராணம் ஆகியவைகளும் ஆன்றோர்களது அரிய குறிப்புக் களும் உறுதுணையாக அமைந்து உதவிசெய்தன.

இவற்றுள் இரு திருவிளையாடல்களும் ஒருகருத்தையும், திருப்பெருந்துறைப் புராணம் திருவாதவூரர் புராணத்தைப்

பின்பற்றியதாயும் அமைந்துகிடப்பதைக் காணலாம். திருவாசகத்திலேயிருந்து நமது சுவாமிகளின் வரலாற்றிற்கிடைக்கும் சிற்சில ஆதாரங்கட்குத் திருவாதவூரர் புராணமே ஒத்து இடம் தருவது நினைவு கூரற்குரியதாம். உதாரணமாக,

நாயி னேனை நலமலி தில்லையுட்
கோல மார்தரு பொதுவினில் வருகென
ஏல என்னை யீங்கொழித் தருளி
அன்றுடன் சென்ற அருள்பெறு மடியவர்
ஒன்ற ஒன்ற உடன்கலந் தருளியும்
எய்தவந் திலாதா ரெரியிற் பாயவும்
இறைவ னீண்டிய அடியவ ரோடும்
பொலிதரு புலியூர்ப் புக்கினி தருளினன்.

என்று வருவனகொண்டும் பிறவற்றானும் காணலாம். பரஞ்சோதியார் புராணத்துக்கும் திருவாதவூரர் புராணத்துக்கும் பற்பல வேறுபாடுகள் காணப்படும்.

இந்நூல் அவைகளை மனத்துட்கொண்டு பெரும்பாலான கருத்துக்களைத்தழுவி கோவை வழக்கறிஞர் C. K. சுப்பிரமணிய முதலியாரால் எழுதப்பட்டு 1924-ம் ஆண்டு கோவை தமிழ்ச்சங்க வெளியீடாக வெளியிட்டப்பட்டுள்ளது. அந்நூல் இதுபொழுது கிடைக்காமைபற்றி அதனை வெளியிட்டு சைவ நல்லுலகுக்கு அளிக்க வேண்டுமென்ற திருவாவடுதுறை ஆதினம் 22-வது குருமகாசந்நிதானம்ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் திருவுளக் குறிப்பறிந்து கோவை சேக்கிழார் இல்லிலிருக்கும் நூலாசிரியரின் நெருங்கிய உறவினர் திரு. சி. சு. கண்ணுயிரம் முதலியார் அவர்கள் நூற்பிரதியொன்றை வெளியிடுமாறு கொடுத்து உதவினார்கள்.

இத்தகைய சிறந்த உரைநடை நூலைக் காலத்திற்கேற்பச் செப்பஞ்செய்து திருந்திய பதிப்பாக வெளியிடுக என்று திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதினத்து இருபத்திரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீ - ல - ஸ்ரீ அம்பலவாணதேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் நூலின் சிறப்பினையும் கருத்தினையும் கருதி நூல் முழுவதையும் திருக்கண்ணோக்கமிட்டுச் சில செய்திகளைச் சேர்த்தும், சிலவற்றை விளக்கியும் விரைவில் முடிக்க என்று அருளாணையிட்டார்கள்.

அடியேன் குருமகா சந்நிதானம் அவர்கள் அருளாணையைச் சிரமேற் கொண்டு மூலநூலின் கருத்து ஒரு சிறிதும் மாருமல் என் சிற்றறிவுக்கு எட்டியவரையில் ஏற்ற திருத்தங்கள் செய்து, முன்னுரையில் கற்போர்க்கெளிதாக மணிவாசகர் வரலாற்றைச் சுருங்கிய முறையில் எழுதியுஞ் சேர்த்துள்ளேன். இந்நூல் அறிஞர்க்குப் பெருவிருந்தாக அமைந்து விளங்கும் என்பது அடியேனது எண்ணமாகும்.

தொடர்புபற்றி முன்னுரையை அடுத்துத் திருவாவடுதுறை ஆதீனத்துத் திருக்கூட்டத்துத் தம்பிரான்களிலொருவரும் வித்துவானுமாகிய தாண்டவராய சுவாமிகள் இயற்றிய பாடலையும் சேர்த்துள்ளேன். திருவாசக உள்ளுறை என்ற பகுதியும் இதனுடன் சேர்க்கப்பட்டுள்ளது.

இத்தகைய சிறப்புடையநூல் திருப்பெருந்துறையில் மாணிக்கவாசகர் திருவிழாவாகிய திருவாதிரைவிழாவில் வெளிவருவது என்பது மிகவும் பொருத்தமுடைய ஒன்று. திருப்பெருந்துறையில் நடைபெறும் திருவிழா மாணிக்கவாசகருக்கு நடைபெறுகின்றன.

இந்நூலிற் பிழையுளதேல் பொறுத்தருள்க.

இங்ஙனம்

திருவிடைமருதூர்,
29—11—1969.

பொன். சுப்பிரமணியபிள்ளை,
தலைமைத் தமிழாசிரியர்,
திருவாவடுதுறை ஆதீன உயர்நிலைப்பள்ளி.

உ

திருவாவடுதுறை ஆதீனத்து வித்துவான்
தாண்டவராய சுவாமிகள் இயற்றியது

ஆசிரியப்பா

நிலமகள் முகத்தி னில்வுறு மியாணர்த்
திலகமென் றுரைக்குந் தென்னா டதனிற்
சீர்மலி புகலிச் சிவபிரா னருளா
லேர்மலி சிவையி னிணைமுலைப் பாலெனும்
பரஞா னந்தனைப் பரிவொடும் பருகி
யுரவுநிர் ஞால முஞற்றிய தவத்தாற்
றேடெழு வாயிற் றோன்றுபு துலங்கும்
பிடுசால் பதிகப் பெயர்பெற வுமிழ்ந்த
ஞானசம் பந்த நற்றமிழ்ப் பெருமா
னினசம் பந்த விருட்சமண் பொருட்டா
லருடிருப் பாசுர வருந்தமிழ் மறையினைத்
தெருள்படப் பயின்று தெய்வவை திகழுஞ்
சைவமு முலகிற் றழைந்திட நிறுத்த
வையைவார் நதிசூழ் வாத வூரின்
மறையவர் குலத்திலா மாத்தியர் மரபி
னிறையவ னருளென வெழில்பெறத் தோன்றி
வளர்தரத் தாதையார் வாத வூரனென்
றுளமகிழ் சிறப்பா னுதவுமொண் பெயருறீஇ
வேத மாகமம் வேறுமற் றுள்ள
வோது நூற்பகுதியு முளங்கொளக் கற்று
வாழூநாட் கூடன் மன்னரி மருத்தனப்
பூழியன் விளித்துப் புகன்முத லமைச்சுந்
தென்னவன் பிரம ராயனென் சிறப்பு
மன்னபி தானமும் வழங்குறப் பெற்றவ்
வண்ணலுக் கென்று மணிமணிக் கவசமுங்
கண்ணுமென் றுரைப்பக் காரியம் புரிந்து



ஸ்ரீ மாணிக்கவாசகசுவாமிகள்

வதியுநா ளூடுறும் வளர்சிவ புண்ணியப்
பொதியினுற் றூய்மை புந்தியிற் பொருந்த
நிலேநிலே யாமையி னிலேமையை யளவிட்
டலேவுறும் பிறவியி னருந்துயர்க் கஞ்சி
வீடு பேற்றின் மிகவிருப் பினராய்க்
கூடுமெய் யடியார் குழாத்தொடுங் குலாவிச்
சிந்தையைச் சிவபிரான் றிருவடிக் கமைத்துத்
தந்தொழி லுங்கொடு சாரவோர் ஞான்று
குணதிசைக் கலித்துறை குதிரைகள் குறுகலே
மணம்விரி தண்டார் மன்னவன் றெரிந்தெம்
பொன்னறை திறந்து பொருள்பல கவர்ந்துபோய்க்
கொன்பரி வாங்கிக் கொணர்கெனக் கூறி
விடைதரப் பொருளொடும் விமலனே வணங்கி
நடைகொடு வருமிவர் நடைமுத லனேத்தும்
பரசிவன் றிருவுளம் பற்றியோர் பனவக்
குரவனுய்ப் பெருந்துறைக் குருந்தடி நீழலிற்
போற்றிமா ணவர்குழாம் புடையுற நாப்பண்
வீற்றிருந் தருளவல் வியனக ரண்மி
யாலயம் புகுந்தன் பால்வலம் வருவார்
கோலமார் குருந்துறை குருமணி தன்னேக்
கண்டுள முருகிக் கண்ணீர் பெருகித்
தெண்டனிட் டெழுந்து சிவதே சிகனே
யடிய னேனேயு மாண்டருள் செய்கென
முடிமிசை யஞ்சலி முகிழ்த்துநின் றிரப்ப
வேதியர் மலபரி பாக விளேவினே
யாதிதே சிகனறிந் தியாக்கையா ருயிர்பொருண்
மூன்றையும் புனலொடு முளரியங் கரத்தா
லேன்றருட் கண்ணு லிருண்மல மகற்றிச்
சென்னிமேற் செங்கரஞ் சேர்த்தியைந் தெழுத்தான்
மன்னிய பாச வலிகெடுத் தின்பப்
பூரண வடிவம் புரிந்தவப் போதுபே
ராரண மறியா வருட்டே சிகனே

மாணிக்க நிகர்க்கு மதுரவா சகத்தாற்
பேணிப் பரவப் பிரானனி மகிழ்ந்தவ்
வாசில்கா ரணத்தா லமலமா ணிக்க
வாசக னெனப்பெயர் வழங்கினன் மறைதலும்
வியந்துபின் றெளிந்தவ் விரிபொரு ளனைத்து
நயந்தர னுலய நற்பணி தனக்கு
மணிவிழா விற்குமர்ச் சனைக்குமங் கணன்கண்
மணிகொண் மெய்யடியார் மாண்பூ சனைக்கு
மமைத்தரு ளந்த வாரிய னடிக
டமைப்பணிந் தங்ஙனஞ் சார்ந்தன ரிருப்ப
வழுதியி தறிந்து வரவழைத் தெம்பொருண
முழுதுமி யலதுமா முறையினிற் கொணர்தியென்
றண்டரு மஞ்ச வல்லல்செய் மல்லராற்
றண்டனை செய்வது சகிக்கில னுகிக்
கூடலங் கோனரி குதிரையாக் கியதிரு
வாடலா திகளா லரசனைத் தெருட்டத்
தெருண்டவவ் வரசனிச் சிவனடி யாரை
மருண்டபுன் மதியான் வருத்தின னெனவவ்
வன்பரை யடைவுற் றடிகளிற் பணிந்தே
யென்பிழை பொறுத்தருள் வீரென் றுரைப்ப
வகமகிழ்ந் தன்பரவ் வரசனுக் கலகில
முகமனன் குரைத்து முனைமதி முடியோன்
சன்னிதி சார்ந்து தாழ்ந்துபின் புறம்போந்
தென்னிதி யேயென வெய்துபாண் டியனை
நிற்கப் பணித்து நின்மல மாக்கிய
வற்களத் தைய ரமர்பெருந் துறையை
யடைந்து முன்போல வாரியற் காணவுள்
ளுடைந்துநைந் துருகி யுலப்பில்பே ரன்பாற்
பற்பல விதமாப் பாமா லைகள்புனைந்
தற்புதன் சேவடிக் கணிந்தவ ணிருப்பத்
தில்லையில் வருகெனச் சிவபர னருளலு
மொல்லையி லிறைஞ்சி யுதனினிங் கியாறு

செல்வுழிச் சிற்சில சிவநகர் துதித்துப்
பல்வளம் படைத்த பரமா காய
புண்ட ரீக புரந்தனிற் பொருந்தி
யண்டர்தம் பெருமா னருணடங் கும்பிட்
டாரா வன்பி னருட்டுதி யியற்றிச்
சீரார் சிவ்யோ கினிற்சிறந் திருப்ப
மணிமதிற் கூடலில் வளர்தமிழ்ச் சங்கத்
தணிமுதற் புலவனு யமர்தரும் போது
கூறரு மின்பொருட் கூறிறந் திடுதலின்
மாறனும் புலவரு மயங்குறு காலை
யிறையனு ரகப்பொரு ளெனப்படும் பனுவலை
முறைமையின் மொழிந்த முதிர்திரு வாக்கா
லைந்திணைக் கோவை யலங்கரித் துரையெனச்
சுந்தரத் தாண்டவத் தோன்றலார் பணிப்பக்
கருணையை யுன்னிக் கணக்கில்பே ரின்பப்
பொருணயந் தழுவிப் புனிதநல் வாக்காற்
றிருக்கோவை யுள்ளிடுந் தேவரும் பரவத்
திருக்கோவை யாரினைச் செப்பின ரஃதை
யிருக்கினுஞ் சிறந்ததா வேற்றெம் பெருமான்
றிருக்கரங் கொண்டு தீட்டிய தன்றியு
மழகிய திருச்சிற் றம்பல முடையா
னெழுதிய தெனநெட் டெழுத்துமிட் டருளினன்.

இத்திருப்பாடல் திருவாசகமருளிய மணிவாசகர் வரலாற்றை மணிநடையாக அணிசெய்துள்ளமையைக் காணலாம்.

மாணிக்கவாசகர் மலரடிவாழ்க.

திருவாசக உள்ளுறை

திருவாசகம் என்பது ஒரு முழுமுதல்நூல். அதன் அருமை பெருமை அளவிடற்கரியது. மணிவாசகப்பெருமான் ஐம்பத்தொரு பதிகங்களாக இவ்வருள் நூலை ஆக்கியுள்ளார். அப்பதிகங்கள் கூறும் உள்ளுறைப்பொருளை இங்கு சுருக்கமாகக் காண்பாம்.

1. சிவபுராணம்:- சிவபெருமானின் காலங் கடந்த தன்மையை விளக்குவது. இது கலிவெண்பாவால் நூலுக்கு நான்முகம்போல் அமைந்து விளங்குவது. இப்பாடல் முழுவதும் உணர்வோர் நான்முக உறுப்புக்கள் இதனுள் அமைந்து கிடந்தலை நன்குணர்வர். மேலும் திருவாசக நூலுள் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் முழுவதையும் தொகுத்துச் சிவ புராணம் கூறுகின்றது. திருவாசகம் முழுதும் பயில முடியாதார் சிவபுராணம் ஒன்றனைப்படித்தாலே முழுவதும் ஓதிய பயனைப்பெறுவர் என்பது திண்ணமாம்.

2. கீர்த்தித்திருவகவல் :- இது அகவற்பாவால் அமைந்து இறைவனது புகழினைக் கூறுவது. தில்லைப்பெருமான் திருக்கூத்து விளக்கம், அடியார்களது பெருமை, தன்னை ஆண்டவன் வலிய ஆட்கொண்ட சிறப்பு இவைகளைக் கூறுவது. இப்பகுதியில் சிவபெருமானுக்கு உரிய பத்து அரச சின்னங்களும் தத்துவ உண்மைகளும் பேசப்பட்டுள்ளன. கருத்தூன்றிப் பயில்வோர் அந்த உண்மைகளை நன்கறிவர்.

3. திருஅண்டப்பகுதி :- பாட்டின் தொடரால் இப்பகுதி இப்பெயர் பெற்றது. இணைக்குறள் ஆசிரியப்பாவால் ஆனது. இப்பகுதியில் இறைவனது கருணைத்தேன் விளைத்த ஆனந்தத்தையும் அது சமயம் தன் யாக்கையின் தெளிந்த நிலையையும் இன்பத்தையும் எடுத்து விளக்கியுள்ளார். இதனால் சிவஞானிகளின் தெளிந்த அநுபவ நிலையை விளக்கியுள்ளார். இத்திறன் சிந்தித்துப் பயில்வார்க்கே தெற்றென விளங்கும். இதில் உள்ளவாறுதோய்வோர் சிவஞானியரது திருவுருவப் பொலிவு இன்னதென்று உணர்ந்து இன்புறுவர்.

4. போற்றித் திருவகவல் :- இது நிலை மண்டில ஆசிரியப் பாவினுல் ஆனது. இதில் இறைவனது அடி தனக்கு எளிவரப் பெற்றமையும், பிறவிகளின் துன்பத்தையும், பிறந்தபின் அடையும் துன்பங்களையும், உண்மைப்பொருளை உணரமுடியாமைக் கான தடைகளையும், இவைகள் அனைத்தையும் ஒருவன் அடைய வழி இறைவெளிப்பாடே என்னும்உண்மையையும், எளிய இனிய முறையில் விளக்கியுள்ளார்.

5. திருச்சதகம் :- இது நூறு பாடல்கள் கொண்ட ஒரு பகுதி. சதகம் என்ற வடசொல்லுக்கு நூறு என்பதுபொருள். இப்பகுதி முழுதும் அந்தாதித்தொடையாக அமைந்துள்ளது. பத்துப் பத்துப் பாடல்களாகப் பத்து பிரிவுகளைக் கொண்டு விளங்குவது. இதனை ஆன்றோர்கள் பத்தி - வைராக்கிய - விசித்திரம் என்று குறிப்பிட்டுள்ளனர். அதாவது இறைபால் கொண்டுள்ள மெய்யன்பு அல்லது உலகப்பற்றுவிடுதல் என்பதாம். இதில் முதல் பகுதி மெய்யுணர்தல்:- அதாவது உலக நிலையாமை உணர்ந்து உலகப்பற்று விடுதல். இரண்டாவது பகுதி அறிவுறுத்தல்:- மெய்ப்பொருளை நாடுவதில் ஊக்கங் கொள்ளுதல். மூன்ருவது பகுதி சுட்டறுத்தல்:- அதாவது தன்செயலறுத்தல். நான்காவது பகுதி ஆன்மசுத்தி:- அதாவது இறைவன் கருணைக்குத் தக்கவாறு நடவாத தன் உள்ளத்தைப் பலவாறு கடிந்து தூய்மை செய்தலாம். ஐந்தாவது பகுதி கைம்மாறு கொடுத்தல்:- தன்னையே எனக்குத் தந்த தலைவனுக்குக் கைம்மாருக என்னையே அவனுக்களித்தல் என்கின்ருர். ஆருவது பகுதி அநுபோகசுத்தி:- இறைவன்பால் அணுகவிடாத உலக நுகர்ச்சிகளை எண்ணி வருந்தி முறையிடல். பின் மனத்தூய்மை பெறல். ஏழாவது பகுதி காருணியத்திரங்கல்:- அதாவது தன் சிறுமையை ஒழித்து ஆட்கொள்ளுமாறு இறைவன்பால் வேண்டல். எட்டாவது பகுதி ஆனந்தத் தழுந்தல்:- இறைவனிடத்து மாருத அன்பு வேண்டும் எனல். ஒன்பதாவது பகுதி ஆனந்தபரவசம்:- அஃதாவது தன் குறைகளை உள்ளவாறு கூறி வேண்டுதல். பத்தாவது பகுதி ஆனந்தாதீதம்:- ஞான நாடகம் ஆட்டுவித்த தன்மையை வியந்து போற்றல். இப்பகுதி முழுவதும் மாசற்ற ஆன்மா உலகநிலை ஞானநிலை இரண்டும் மாறிமாறி உண்டான நிலையில் ஊற்றெழுந்த அருளுரையாகும்.

6. நீத்தல் விண்ணப்பம்:- இப்பகுதி ஐம்பது பாடல்களாய் அந்தாதித்தொடையில் அமைந்துள்ளது. மணிவாசகர் தன்னை ஆண்டுகொண்ட இறைவன் கைவிட்டுவிட்டாரோ எனக் கவலுறும் நிலையில் அமைந்துள்ளது. தன்னுடைய உள்ள நிலையைக் கள்ளங் கபடற்றழுதல் என்ற நிலையை இதனுள் தெள்ளத்தெளிய எடுத்துவிளக்கியுள்ளார்.

7. திருவெம்பாவை:- இப்பகுதி இருபது பாடல்கள் உடையது. இதனுள் காலைக் காட்சி, நீராடற் சிறப்பு ஆகிய இவைகள் உரையாடல் முறையில் உள்ளதை உள்ளவாறு விளக்கியுள்ளமை உணர்ந்து இன்புறற்குரியது. இதற்குத் தத்துவமுறையில் விரிவான விளக்கங்கள் பலர் பலபடக் கூறியுள்ளனர்.

8. திருவம்மானை:- இது அம்மானை ஆடும் பெண்கள் ஆண்டவனைப்பாடும் முறையில் அமைந்து விளங்கும்பகுதி. இதன் ஒவ்வொருபாடலும் படிப்போர்க்கு ஆழ்ந்த சிந்தனையைத் தூண்டும் முறையில் அமைந்து விளங்குகின்றது.

9. திருப்பொற்சுண்ணம்:- சுண்ணம் இடிப்போர் பாடும் பாணியில் அமைந்துள்ளது. இறைவன் திருமஞ்சனம் ஆடும் போது பாடும் பாணியில் அமைந்துள்ளது இப்பாடல்கள். இதன் உட்பொருளை சைவ உலகம் நன்கறிந்து போற்றுகிறது.

10. திருக்கோத்தும்பி:- இதில் மணிவாசகர் ஆன்மாவை வண்டாக உருவகப்படுத்திப் பேசுகிறார். இப்பகுதி முழுவதும் மன அலைவினை ஒடுக்குதற்குரிய வழி வகைகளைத் தெளிவுற எடுத்துக் கூறுகின்றது.

11. திருத்தெள்ளேணம்:- இது பெண்கள் கைதட்டிப் பாடும் பாணியில் அமைந்துள்ள பகுதி. இது எவ்வகையிலும் இறைவனையே பாடவேண்டும் என்று பகர்கின்றது.

12. திருச்சாழல்:- இது வினவிடையாக அமைந்து விளங்கும் ஒருபகுதி. இதில் சிவனைப்பற்றிய புராணவரலாறுகளை ஒருபெண் இகழ்ந்து கூறுவதாகவும், வேறொருபெண் அச்செய்திகளின் உட்கருத்தாம் உண்மைகளை எடுத்துக்கூறிப் புகழ்வதாகவும் அமைந்து விளங்குகிறது.

13. திருப்பூவல்லி :- இப்பகுதியில் இறைவன் தனக்குத் தந்தையாய், தாயாய், சுற்றமாய், செல்வமாய், எல்லாமாய் எளிவந்து அருள் செய்த திறத்தைப் பாராட்டுகிறார்.

14. திருவுந்தியார்:- இப்பகுதியில் சிவபெருமானது ஐந்து பெருவெற்றிகள் பேசப்படுகின்றன. அதாவது முப்புரம் எரித்தது, தக்கன் வேள்வியைத் தகர்த்தது, இராவணன் தலை ஒருபதும் அற்றது முதலியன குறிப்பிடப்பட்டுள்ளன.

15. திருத்தோணோக்கம் :- இப்பகுதியில் இறைவனது எண்குணங்களும், அவ்விறைவன் கண்ணப்பர் சண்டேசர் இவர்கட்கு அருளிய திறமும் பேசப்பட்டுள்ளன. இப்பகுதி முழுவதும் தன் வன்னெஞ்சமாகிய கன்னெஞ்சைக் கனிய வைக்க ஆண்டவன் என்ன என்ன திறங்களைக் கையாண்டார் என்னும் உண்மையைத் தன் அனுபவ நிலையில் இருந்து பேசியுள்ளார். அத்திறனுய்வோர் வேறு எத்திறனுமாய மாட்டார் என்பது உறுதி.

16. திருப்பொன்னூசல்:- இப்பகுதியில் உள்ள உவமைகள் யாவும் சிந்தனைக்கு உரியவாம். மொழிக்குமொழி தேன் ஊறும் மொய்ம்பினையுடையது. இதில் இறைவன் தனக்கு எளிவந்து செய்த பல நன்மைகளை எண்ணி இரங்கி உள்ளார். என்றும் இறைவனது தூய புகழையே பாடவேண்டும் என்கின்றார்.

17. அன்னைப்பத்து :- மணிவாசகர் தான்பெற்ற சிவ ஞானத்தை ஏனையோரும் பெற்றுய்யவேண்டும் என்ற ஆசையால் ஒரு சிறுபெண்ணின் உரையாடலில் வைத்துக் கூறுகின்றார். இதனுடைய சொல்லழகையும் பொருளழகையும் பலகால் பயின்றோரே அறிவர்.

18. குயில்பத்து :- குயிலை அழைத்து இறைவன் புகழைக் கூவுமாறு அமைந்து உள்ளது. இப்பகுதியால் அடிகளது அஃறிணைப் பொருளின்மாட்டுள்ள அன்பு புலப்படுகிறது. இப்பகுதி முழுவதும் இனிமை, பெருமை, கனிவு இவைகள் கொண்டு விளங்குகின்றன.

19. திருத்தசாங்கம் :- கிளியை விளித்து இறைவனது பத்து அடையாளங்களைக் கூறுமாறு கேட்கும் நிலையில் அமைந்துவிளங்குவது.

20. திருப்பள்ளி எழுச்சி :- இது துயிலெழுப்பும் நிலையில் அமைந்து விளங்குவது. அடியவர்கட்கு அருள்புரியும் வண்ணம் துயில் எழுந்தருளவேண்டும் என்று சிவபெருமானை எண்ணி விண்ணப்பித்துக் கொள்ளும் நிலையில் இப்பகுதி அமைந்து விளங்குகின்றது. இதன் பொருட்சிறப்பு சொலற்கரியதாம்.

21. கோயில் மூத்ததிருப்பதிகம்:- இப்பதிகம் இறைவன் இறைவி இவர்களது தனித்த நிலையும், ஆன்மா அவர்களைக் காண விழைவுறுநிலையும் தெளிவுறப் பேசுகின்றது. சத்தி சிவத்துள் அடங்கும் என்றும், சிவம் சத்தியுள் அடங்கும் என்றும், இரண்டும் தன்னுள் அடங்கும் என்றும் கூறி மணிவாசகர் அனுபவிப்பதை ஆய்ந்துணர்க.

22. கோயில் திருப்பதிகம் :- இது நாள்தோறும் வழிபடற்குரியது. இதனுள் மணிவாசகர் அன்பைப் பெருக்கி ஆருயிரை ஆண்டுகொண்ட இறைவனது இன்பப்பெருக்கை வியந்து பேசுகின்றார்.

23. செத்திலாப்பத்து :- ஞானச்செல்வர்கள் நிலை இதில் பேசப்படுகிறது. இருளும் ஒளியும் மாறிமாறித் தோன்றும் இயல்புடையது; அதுபோல் மணிவாசகர் தான் அருள்பெற்றுக் கண்ட நிலையையும் காணாது துன்புற்ற நிலையையும் எடுத்துக் கூறுகிறார்.

24. அடைக்கலப்பத்து:- தன்செயலற்ற நிலையும் எல்லாம் இறைவன் செயலே என்பதனையும் விளக்குவது. இறைவன் திருவடியே எல்லாம் தரும் ஆதலால் அவன் அடியிணையே சாருதல் வேண்டும் என்கின்றார். இப்பதிகத்தால் அடிகளது ஞானவாழ்க்கையின் நிலை ஒருவாறு அறியப்படுகின்றது. ஆன்மா என்றும் ஞானத்தையே விரும்பவேண்டும். ஞானமே ஒருவனை நல்வினை பெறச்செய்யும். என்ன நேரிடினும் ஞானத்தில் ஒரு சிறிதும் பிறழ்தல் கூடாது என்கின்றார்.

25. ஆசைப்பத்து :- இப்பதிகத்தால் மணிவாசகர் இறைவனைக் காணவேண்டும் என்ற ஆசை ஏற்பட்ட நிலையை எடுத்து விளக்குகிறார். உலக இயற்கைக்கு மேம்பட்ட நிலை அது என்கின்றார். உலகியற்புகழை அறவே வெறுக்கின்றார். மெய்யுணர்வே வேண்டப்படுவது என்கின்றார். உள்ளம் உடல்

இவைபெறும் இன்பங்கள் பொய்ப்பொருளாம். திருவருள் ஒன்றே மெய்ப்பொருளாம் என்கின்றார். உலகவாழ்க்கையில் இருந்தபோதும் பற்றற்றே இருந்தேன் என்கின்றார். இதுவே நீடிக்க அருள்செய் என்கின்றார்.

26. அதிசயப்பத்து :- தாழ்ந்த நெறியில் சென்ற தன்னை உயர்ந்த நெறிக்குக்கொணர்ந்து வாழ்வித்த திருவருளை வியக்கின்றார். அடியவரோடு தன்னைக் கூட்டிய அதிசயத்தை எண்ணி இறும்பூதடைகிறார்.

27. புணர்ச்சிப்பத்து :- ஆன்மா அடையவேண்டிய மேலான தத்துவம் இப்பதிகத்துள் பேசப்பட்டுள்ளது. ஞானிகளது குறிக்கோள் இன்னதென நவில்கிறார். மாசற்ற மாண்பே தேசுற்ற சிவனைச்சேர்விக்கும் என்கின்றார். இப்பதிகத்துள் உள்ள இறைவனைக்குறிக்கும் சொற்களும் சொற்றொடர்களும் கற்போர் உள்ளத்தைக் கழிபேருவகையில் ஆழ்த்தும் என்பது திண்ணம். அவைகளை அவர் கூற்றுப்படி நெக்கு நெக்கு உருகி உருகிப் பருகுவோரே உள்ளவாறுணர்வர்.

28. வாழாப்பத்து :- இனி உலகில் வாழேன் என்று தன் நிலையை உள்ளவாறு உணர்ந்து கூறுகிறார். இறைவனோடு இரண்டறக் கலப்பதற்கு இடையூறாக இருப்பது இவ்வுடலே யென்று அதனை வெறுக்கின்றார். நில்லாத நிலவுலகவாழ்வுக்கு ஒரு முடிவுவேண்டுகின்றார். திருவருளுக்குப் புறம்பாக அவர் வாழ விரும்பவில்லை என்ற உண்மை இதனால் விளக்கப்படுகிறது.

29. அருட்பத்து :- இதனுள் திருப்பெருந்துறையில் தன்னை எளிவந்து ஆண்டுகொண்ட இறைவனை உள்ளி, பெருமானே! இதுதான் கயிலைக்குவழி இவ்வழிசெல் என்று திருவருள் செய்ய வேண்டுமென்கின்றார்.

30. திருக்கழுக்குன்றப் பதிகம்:- இப்பதிகம் முழுவதும் அடிகளின் ஞான நல்வாழ்வை விளக்குகின்றது. இதில் சில அடிப்படைத் தத்துவங்கள், ஞான அனுபவங்கள், இடைவிடா இறையன்பு, இறையின் இன்னருள், அடிகள் காலத்துச் சைவ சித்தாந்த உண்மைநிலை ஆகியவைகள் தெளிவுறப் பேசப்பட்டு உள்ளன. ஊன்றிநோக்குவார்க்கு இவ்வுண்மை விளங்கும்

சைவ சித்தாந்த உண்மையினை 'மும்மலப்பழவல்வினை' என்ற தொடரால் வலியுறுத்துகின்றார். இதுபோன்ற கருத்துக்களை நோக்குக.

31. கண்டபத்து :- அடிகள் தில்லையைக் கண்டவுடன் தன்மனத்துள் எல்லையிலா ஆனந்தம் கொண்டமையைவிளக்கு கின்றார். இப்பதிகத்தால் அடிகளது முன்பின் வாழ்க்கை முறைகளை உணரமுடிகின்றது.

32. பிரார்த்தனைப்பத்து :- அடிகள் இறைவன்பால் நிலைத்த அருள்வேண்டி நின்றமையை இப்பதிகம் வலியுறுத்துகிறது. இதனால் அடிகள் அழுது அழுது உள்ளத்தூய்மை செய்து கொண்ட முறைமையை உணரலாம்.

33. குழைத்தபத்து:- தன்னை ஆண்டவன்பால் ஒப்பு வித்துக்கொண்ட திறனை எடுத்துரைக்கின்றார். இதனால் உலக வாழ்வை அறவே ஒழிக்கவேண்டும் என்றும், இறைவனது திருவடியையே அடையவேண்டும் என்றும் தனது முடிவான எண்ணத்தைப் புலப்படுத்துகின்றார்.

34. உயிருண்ணிப்பத்து :- தன்னுடைய தாழ்ந்த நிலையும் இறைவனது உயர்ந்த நிலையும், உயர்ந்த நிலையிலுள்ள இறைவன் தன்பொருட்டு எளிவந்து இரங்கி அருள்செய்த நிலையும் கூறி யிருக்கும் முறைமை எண்ணி இன்புறற்குரிய ஒன்றும். எந்த நிலையில் இப்பதிகத்தை அருள் செய்திருப்பார் என்ற உட் பொருள் உன்னுந்தோறும் உன்னுந்தோறும் புலப்படாத ஒரு புதிராகவே இருக்கிறது. இறையருள் பெற்றார் அருள்வாக்கின் பண்பு அதுபோலும்.

35. அச்சப்பத்து :- இப்பதிகத்துள் இயற்கையாக அஞ்சத்தக்க பொருள்களை எடுத்துக்கூறி அவற்றுக்கு அஞ் சேன் என்கின்றார். சிவபெருமானிடத்து அன்பில்லாதவர்களைக் காணுவதுதான் அஞ்சத்தக்கதாகயிருக்கிறது என்று கூறுகிறார்.

36. திருப்பாண்டிப்பதிகம் :- மாயை நீங்கி ஆன்மா நல்லருள் பெறவேண்டுமாயின், குதிரைச் சேவகனாக வந்த இறைவனைப் பணிவதே என்கின்றார். இப்பதிகத்துள் சமய வளர்ச்சியோடு தொடர்புடைய சில சொற்றொடர்களைக் காணலாம்.

37. பிடித்தபத்து :- முடிந்தபொருள் இறைவனே. அவனை ஒழிய ஆன்மாவுக்கு வேறு புகலிடமோ போக்கிடமோ இல்லை. இப்பதிகத்துள் யோக முதிர்ச்சியின்பயன் ஞானம் கைவரப்பெறுதலே என்கின்றார்.

38. திருவேசறவு:- இறைவனது நன்மைகளைப் பலவாறு மனதில் எண்ணித் துதிக்கின்றார். இப்பதிகத்துள் அடிகள் திருவிடைமருதூர் அடைந்து வழிபட்டமை பேசப்படுகிறது.

39. திருப்புலம்பல் :- திருவடியே சிவஞானம் என்ற உண்மையில் இறைவன் திருவடிச் சிறப்பை உள்ளவாறு விளக்குகின்றார். உண்மையான கல்வியும் கற்றோரைப் பிரியாமையும் ஆகிய களிப்பினைத் தரும் செயலே யான் விரும்புவது வேறு எதுவும் என்றால் என்றும் விரும்பப்படமாட்டாது என்று புலம்புகிற முறையில் இப்பதிகம் அமைந்து விளங்குகின்றது.

40. குலாப்பத்து:- தில்லைப்பெருமானின் எல்லையிலா இன்பத்தில் திளைத்த திறத்தை விளம்புவது இப்பதிகம். இது சைவ சித்தாந்தக் கருத்துக்களை விளக்குவது. சிவன் அருளும் கருணைத் தேன்பருகும் ஆனந்தம் உலகினை உய்விப்பதற்கேயாம் என்கின்றார்.

41. அற்புதப்பத்து :- இறைவன் தன்னை ஆண்டு கொண்ட முறைமையைப் புலப்படுத்துகிறார். சிவபெருமான் தன்னை அறியும் அறிவுதந்து திருவடிகளாகிய திருவடித்தாமரைகளைக்காட்டி ஆண்டு கொண்ட அற்புதத்தை விவரிக்கின்றார்.

42. சென்னிப்பத்து :- இதில் ஞானிகளின் முடிவான பற்று "நான்பெற்ற இன்பம் வையகம் பெறுக" என்பதே என்கின்றார். மக்களே உங்கள் பாசபந்தம் முடிவுபெற வேண்டும் என்றால் இங்கு வாருங்கள் என்று தில்லைக்கு அழைக்கின்றார்.

43. திருவார்த்தை :- இறைவன் தாயாய், தலைவனாய், குருவாய் அருள்செய்த உண்மைகளை விளக்குகிறார். இறைவன் பேரன்புக்கு எல்லையில்லை என்பதை இதனால் விளக்குகிறார்.

44. எண்ணப்பதிகம் :- இப்பகுதியில் அடியவர் நடுவுள் தன்னைக்கூட்டியருள வேண்டுமென்கின்றார். ஆண்டவனை

உள்ளுற நினைத்தால் அவன் என்றும் நமக்கு நலத்தினையே செய்தருளுவான் என்று எத்தெடுத்துரைக்கின்றார். இதிலிருந்து இறைவன் அருள் செய்பாதொழியான் என்ற உண்மையை உளங்களிந்துரைக்கின்றார்.

45. யாத்திரைப்பத்து:- இறைவனை நாடிச் சென்ற ஆன்மா பல இடையூறுகளேயுங் கடந்து இறைவனது திருவருளை அடையும் முறைமையை விளக்குகிறார். சிவபுரக்கதவு திறக்கப்பட்டுவிட்டது. இனி உட்புகுந்துவிடலாம் என்கின்றார்.

46. திருப்படையெழுச்சி:- வீட்டுலகைக் கைப்பற்றும் நிலையை விளக்குகிறார். ஞானப்படையுடையார் அதனை அடைவர் என்கின்றார்.

47. திருவெண்பா:- இப்பகுதி முதிர்ந்த ஞானத்தெளிவை விளக்கியருளுவது.

48. பண்டாய நான்மறை:- இதுவும் அடிகளின் முதிர்ந்த ஞானத்தை விளக்குவதே.

49. திருப்படை ஆட்சி:- தேடிய பொருள்கிடைத்து விட்ட நிலையில் ஆனந்தமேலிட்டால் அருளிய பதிகம். பொய் யுலக வாழ்வின் புன்மை மெய்யுலக வாழ்வின் மேன்மை இவ் விரண்டினையும் விளக்குகிறார்.

50. ஆனந்தமாலை:- பகலில் பட்டபாட்டை நினைந்து இரங்கியும், இனி அடையப்போகும் இன்பத்தை எண்ணியும் பாடிய பதிகம்.

51. அச்சோப்பதிகம்:- இதனால் தன் சிறுமையை எண்ணுகிறார். இறைவன் சிவமாக்கிய நிலையை உன்னுகிறார். இனி அவன் திருவடியேதுணை. திருவடிசேர்ந்தாரென்றும் திரும்பார் என்கின்றார்.

இது ஒரு முதல் நினைப்புகளே ஒழிய திருவாசகத்தேன் முழுமையும் அள்ளிப்பருக உரைத்ததாக ஆகாமை உணர்க.



திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதினம்
இருபத்திரண்டாவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாணதேசிக பரமாசாரிய சுவாமிகள்

உ
சிவமயம்

ஸ்ரீ மாணிக்கவாசகர்

அல்லது

நீத்தார் பெருமை

1. திருவவதாரமும் அமைச்சியலும்

"ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிவு."

தமிழ்நாடென்பது சேர சோழ பாண்டியநாடு என்னும் முப்பெருநாட்டையும் குறிக்குமாயினும், சிறப்பாகப் பாண்டிய நாட்டைக் குறிக்கும் எனக் கூறுவாருமுளர். வடக்கு திருவேங்கடமும், தெற்கு குமரியாறும், கிழக்கும் மேற்கும் கடல்களும் எல்லையாகவுள்ள நிலம் தமிழ்நிலமாக இலக்கணங்கூறும்.

"வடவேங்கடம் தென்குமரி யாயிடைத்
தமிழ்கூறு நல்லுலகம் ... ..."

என்பது தொல்காப்பியப் பாயிரப்பெருமொழி. இத் தமிழ் உலக வெல்லைக்குட்பட்ட ஏனைத்தொண்டைநாடு, நடுநாடு, சோழநாடு, கொங்குநாடு முதலியனவும் தமிழ் வழங்கும் நாடுகளாயினும் சிறப்பாகப் பாண்டியநாடு ஒன்றிற்கே "தமிழ்நாடு" என்னும் பெயர் சாலவழங்கப்பெறும். இது நூல்களின் முடிபாகும்.

"தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டானை"

என்றார் நமது சுவாமிகளும். அந்தமும் முதலுமில்லாப் பரமன் சுந்தரபாண்டியனாகிச் செந்தமிழரசனாய் அரசுவீற்றிருந்த சிறப்பினைப் பாண்டியநாடு பெற்றது. அவ்வாறு அரசு வீற்றிருந்து "உயர் மதிற் கூடலி னாய்ந்த வொண்டீந் தமிழின் துறைகள்" நிரம்பின உயர்வுடையது. சங்கத் தலைமைப் புலவராக

விளங்கிய நக்கிரர் பெருமானுக்கு இலக்கணம் உபதேசித்தது. அகத்தியராகிய நமது தமிழ்க் குறுமுனிக்கு உபதேசித்தருளிய அறுமுக இறைவன் உக்கிரகுமாரனுக எழுந்தருளியிருந்து தமிழ் வளர்த்த பழமையுடையது. அன்றி அத்தமிழ் முனிவன் அன்றுபோல் இன்றும் தங்கித் தமிழ் பரப்பும் பொதியமலையை யுடையது. அம்மலையிலிருந்து தமிழ் மணமளாவி நாடெங்கும் மணந்து வீசும் "தமிழ் மாருதம்" பிறந்தது. இக்காரணங் களால் தமிழ்நாடு என்ற சிறப்புப்பெயரால் பாண்டியநாடு வழங்கப் பெறுகிறது. தமிழுக்கு உரிய ஏற்றம் தமிழ் நாட் டுக்கும் உரியதாகுமன்றோ?

மலைவளம் நிலவளம் முதலிய பல வளங்களும் நிறைந்து தமிழ் மணங்கமழ விளங்குவது இந்நாடேயாகும். மலையும் காடும் நாடும் கடலும் ஆக நாட்டின் நான்கு பகுதியும் அமையப்பெற்று நிலவுவதோடு இந்நான்கின் பாலும் படாத தாகிய பாலைப்பகுதியும் விரவி விளங்குவது இந்நாட்டின் தனிச் சிறப்பாம். ஆக பாண்டியநாடு ஐவகை நிலவளங்களும் இயல் பாகவே அமையப்பெற்று விளங்குவது.

> " ஆறு சூழ்கழிப் புலால்பெரு தசைந்துகூன் கைதை
> சோறு சால்வன வாம்பல்வாய் திறப்பன துணிந்து
> கூறு வாரெனக் குவளைகண் காட்டிடக் கூடித்
> நாறு வாரெனச் சிரித்தலர் நாற்றுவ முல்லை."
>
> — திருவிளை - நாட்டு - 41.

என்று பரஞ்சோதியார் இந்நான்கு நிலங்களின் சேர்க்கையையும் அழகாக வருணிப்பார்.

இனிப் பாண்டியநாட்டினுடைய உள்ளழகைப் புகுந்து காண்போமாகுல் மலைப்பகுதியாகிய குறிஞ்சியிலே சுந்தரன் தனைநிகர் செந்தமிழ் முனிவன் வந்து வீற்றிருக்கும் சந்தனப் பொதிகை முந்துற விளங்குவதை மேலே கண்டோம். அதுவு மன்றிக் "கொன்றை நறுஞ் சடை முடியார் மகிழ்ந்த திருக் கொடுங் குன்றம்" என்ற பிரான்மலையும் குளிர்ந்து குலாவும். இதன் சிறப்பை ஞானசம்பந்தர்,

> " வானிற்பொலி வெய்தும்மழை மேகங்கிழித் தோடிக்
> கூனற்பிறை சேருங் குளிர் சாரற்கொடுங் குன்றம்."

எனவும்,

" மயில் புல்குதன் பெடையோடுட னுடும்வளர் சாரல்
குயிலின்னிசை பாடுங்குளிர் சோலைக்கொடுங் குன்றம்."

எனவும், பலவாறு இனிமையாகத் தம் தேவாரத் திருவாக்கிலே சிறப்பித்தருளினர். அது கற்றேருக்குக் கழிபேருவகையைத் தருவது.

இனி, இக்குறிஞ்சியி லுள்ளதாய் யாவரும் காண விழையும் பொருப்பாகிய திருப்பரங்குன்றமோ இறைவனும் இறைவியும் எழுந்தருளி எங்கள் அறுமுக வள்ளலுக்குத் தெய்வயானை அம்மையாரைத் திருமணம் செய்வித்தருளிய செய்கை இன்றும் யாமெல்லாம் காண நிகழும் பெருநிகழ்ச்சியுடைய பெரும்பதி யாகும். அன்றியும் இத்தலமானது நம் சுந்தரர் தமிழ்நாட்டு மூவேந்தர்களுடன் எழுந்தருளி வழிபட்டு இறைத்தொண்டு செய்வதன் அருமையைச் சிறப்பித்து,

" அடிகே ளுமக் காட்செய அஞ்சுதுமென்
றமரர் பெருமானை ஆரூரன் அஞ்சி
முடியா லுலகாண்ட மூவேந்தர் முன்னே
மொழிந் தாறுமோர் நான்கி னையும்."

எனத் திருப்பதிகம் கட்டளையிட்டு வியந்து நயந்தருளிய நற்பதியாகும். மேலும் பரிபக்குவமுடைய சீடர் சிரத்திலே தம் கரத்தைவைத்து அஸ்த மஸ்தக சம்யோக தீட்சையினலே சிவமாக்கும் ஆசாரியரைப்போலத் திருமாலின் தலையிலே கைவைத்துக் குறுமுனிவராகிய செந்தமிழ் ஆசாரியர் அவரைச் சிவசாருப்பியமாக்கிச் சிவலிங்கத் திருவுருவம் கண்டருளிய திருக்குற்றுலம் என்னும் தலமும் இக்குறிஞ்சியிலே விளங்குவ தென்றல் இதன்பெருமை அளவிட முடியுமோ?

" ....ஏலங் கமழ் சோலை யினவண்டி யாழ்செய்
குருந்த மண நாறுங் குன்றிடஞ்சூழ் தண்சாரற் குறும்பலாவே."

" வம்பார் குன்றந் நீடுயர் சாரல் வளர்வேங்கைக்
கொம்பார் சோலைக் கோலவண் டியாழ்செய் குற்றுலம்
அம்பா னெய்யோ டாட லமர்ந்தா னலர் கொன்றை
நம்பான் மேய நன்னகர் போலும் நமரங்காள்."

" பக்கம் வாழைப் பைங்கனி யோடு பலவின்றேன்
கொக்கின் கோட்டுப் பைங்கனி தூங்கும் குற்றுலம்."

" மலையார் சாரல் மகவுடன் வந்த மடமந்தி
குலையார் வாழைத் தீங்கனி மாந்தும் குற்றாலம்."

" போதும் பொன்னும் உந்தி யருவி புடைசூழக்
கூதன் மாரி நுண்டுளி தூங்கும் குற்றாலம்."

என்று இதன் இனிமைகளைத் திருஞானசம்பந்தர் பாராட்டி யிருத்தலை உள்ளபடியே இந்நாளிலும் நாம் அனுபவிக்கக் கூடியதாயிருக்கின்றது. இன்றும் கூடக் குன்றவரிசையும் மன்றல்கமழும் செழுஞ்சோலைகளும் நிறைந்து அருவியும் சாரலும் பெருமையின் விளங்குதலின் உலகத்தவர் வேனிலை இங்கே விளையாட்டாய்க் கழிப்பர். நடராஜப் பெருமானின் ஐந்து சபைகளுள் ஒன்ருகிய சித்திரசபை சிறப்புடன்விளங்கிக் கொண்டிருப்பதை இங்கு கண்டு மகிழலாம்.

பாண்டியநாட்டுக் குறிஞ்சியின் பெருமை இம்மட்டோ? குன்றுதோறும் ஆடி மகிழும் குறிஞ்சிக் கிழவனுகிய எங்கள் குமரவேளுக்கு இதுவே கிழமையும் பழமையும் பெற்ற காணி யாட்சியாகும். பன்னிரு கரத்தனுக்குரிய ஆறுபடை வீடு களிலே முதன்மைபெற்ற திருப்பரங்குன்றம் இங்கே திகழ்ந்து விளங்கும். இரண்டாவதாய் உள்ள திருச்சீரலைவாயானது சந்தனுசலம் என்ற பெயருடன் குறிஞ்சிக்கும் நெய்தலுக்கும் ஒப்ப அழகுதந்து அமரும். மூன்ருவதாகிய திருவாவினன் குடியும் இந்நாட்டுக் குறிஞ்சியிலே உள்ளதாம். குமரேசன் திருக்கோயில்களைத் தம்மிடத்தேகொண்டு உலகத்தவர்களை அவரிடத்தே ஆற்றுப்படுத்து உய்விக்கவல்ல குன்றுதோருடல் களும் இக்குறிஞ்சியிலே அனந்தம் குலவுவன. இறுதிக் கண்ண தாகிய பழமுதிர்சோலையும் இதிலே விளங்குவதாகும். பழமுதிர் சோலை இக்காலத்து அழகர்மலை என்று வழங்குவதேயாம். அழகர்மலையில் இன்று முருகன்கோயில் அமைக்கப்பட்டு வழி பாடுகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

இனி, முல்லை நிலமாகிய காட்டின் பகுதியிலே எங்கள் கண்ணுதற்பெருமான் சுந்தரமூர்த்திசுவாமிகள் கனவிலே காளை வடிவாய் எழுந்தருளி "நாமிருப்பது கானப்பேர்" என்று கூறி நினைப்பூட்டிய தலமாகிய திருக்கானப்பேர் என்ற காளையார் கோயில் கவின்பெற்று விளங்கும். ஐயன் எழுந்தருளியிருப்ப தாகிய அழகிய திருப்புத்தூரும் விருப்புற மிளிரும்.

இந்நாட்டு மருதநிலப் பகுதியாகிய ஊர்களின் பெருமையோ என்றால் சைவத் திருநெறித் தமிழ் அரசதானியாக விளங்கும் திருவாலவாய் என்ற மதுரைமாநகரும், ஓர் பாண்டியமன்னன் பொருட்டு ஆப்பிலே இறைவன் ஆவிர்ப்பவித்து எழுந்தருளிய திருஆப்பனூரும், திருஞான சம்பந்தமூர்த்திகள் சமணர்களோடு செய்த புனல்வாதத்திலே வையை ஆற்றிலே இட்டதாகிய "வாழ்க அந்தணர் வானவ ரானினம்" என்று தொடங்கும் திருமுகப்பாசுரம் எழுதிய திருவேடு ஆற்றிற்கு எதிரேறிச் சென்று தங்கிய தலமாகிய திரு ஏடகமும், துருவாசர் சாபத்தால் ஆட்டுத்தலையும் யானை உடலுமாகிய பிருகுமுனிவர் பூசித்துச் சாபநீங்கிய தலமாகிய திரு ஆடானையும். திங்கட் சடையானாகிய தேவதேவனது திருஅடையாளங்களை அங்கம் அங்கமாகத் தரிசித்து அவன் வண்ணங்கள் இவ்விவ்வாறு தோன்றும் தோன்றும் என்று ஆளுடைய அரசு அனுபவித்துத் துதித்தருளிய தலமாகிய புஷ்பவனம் என்ற திருப்பூவணமும், கருச்சுழியிலாழாது எம்மைக் காப்பவன் வீற்றிருக்கும் திருச்சுழியலும், அன்பர் தமக்கு நிவேதனத்துக்குக் கட்டிவைத்த நெல்லை வெள்ளங்கொண்டு போகாமல் வேலியிட்ட வேணுவனநாதர் வீற்றிருந்தருளும் திரு நெல் வேலி என்னும் நெல்லையம்பதியும் ஆகிய இத்திருத்தலங்களைக்கொண்டு விளங்குவதென்று சொன்னமட்டிலே அமைவதல்லாது விரித்துச்சொல்ல இயலாது.

கடற் பகுதியாகிய நெய்தனிலமோ,

"சனிபுதன் ஞாயிறு வெள்ளி திங்கட் பல தீயன
முனிவன செய்துகந் தானை வென் றவ்வினை மூடிட
இனியருள் நல்கிடென் றண்ணல் செய்த இராமேச்சுரம்."

என்ற பெரும்பதியைத் தன்னுட்கொண்டு விளங்குவது. சேதுவின் பெருமை செப்பவியலுமோ? 'சூருடலங் கீண்ட சுடர் வேலோனாகிய கந்தப்பெருமான்'

"மூவர்குறை முடித்து விண்ணங் குடியேற்றித்
தேவர் சிறைவிடுத் தாட்கொள்"

வதற்கு முன்பும், அதற்குப் பின்புமாக இருமுறையும் வந்து வீற்றிருந்த செந்திலம்பதி என்ற திருச்செந்தூரானது சந்தனுசலம் என்ற பெயருடனே திருச்சீரலைவாயாகி இந்நெய்தனிலத்திற்கு அழகுசெய்து இன்றும் எண்ணிறந்த ஆன்மகோடிகட்கு

திருவருள் பாலித்து நிற்கும் என்றால் இந்நெய்தனிலம் செய்த பெருந்தவந்தான் யாதோ அறியோம். பாண்டிய நாட்டெல்லையும் தமிழ்வழங்குநாட்டெல்லையும் புண்ணிய பூமியாகிய இப்பரத நாட்டெல்லையும் ஆகி விளங்கும் குமரியின் பெருமை கொண்டு சொல்ல எம்மால் முடியாது.

நானிலம் பொதுளிய பாலைதானும் "பொங்கிலாங்தைகள் பாட்டருத"தும், "மறவேடுவர் பொருது சாத்தொடு பூசலருத"தும் ஆகிய திருப்புனவாயில் என்ற திருப்பதியினையுடையதாகும்.

ஆக இவ்வகையே ஐவகை நிலமும் செழித்துச் சிவலோகமென்றே சொல்லும்படிப் புண்ணிய வடிவமாய் விளங்குவது இப்பாண்டிய நாடு.

"அப்பாண்டி நாட்டைச் சிவலோக மாக் குவித்த
அப்பார் சடையப்பன்."

என்பது நமது சுவாமிகள் திருவாக்கு. மேலும் நமது ஆசாரிய சுவாமிகள்.

"ஏதமிலா இன்சொல் மரகதமே ஏழ்பொழிற்கும்
நாதனமை யாளுடையான் நாடுரையாய் - காதலவர்க்(கு)
அன்பாண்டு மீளா அருள்புரிவான் நாடென்றும்
தென்பாண்டி நாடே தெளி."

என்று தேற்றேகாரத்தாலே தெளியக்கூறிய சிறப்பு இந்தப் பாண்டிய நாட்டிற்கே உரியது.

இந்நாட்டிலே மதுரைப்பெருமான் மண்சுமந்த பெருமைக்குரியதாகிய கரையினையுடைய "அணியார்வையை" யாருனது பாய்ந்து செழிப்பை விளைக்கும். மெய் வாய் கண் மூக்குச் செவியாகிய ஐந்து இந்திரியங்கட்கும் ஒப்ப இனிமை தந்து உடலுக்கும் உயிருக்கும் ஒன்றுபோல உறுதி பயக்கத்தக்க தாமிரபரணிமுதலிய பல ஆறுகளும் செழித்துப் பருவந்தவறுது பாய்ந்து நாட்டை வளப்படுத்துவனவாம்.

இத்தகைய தெய்வத் தமிழ்த்தென்பாண்டி நாட்டிற்குத் திலகம்போல விளங்குவது மதுரையம்பதியாகிய முதிய தொன்னகரம். இதுவரை நாடு சுற்றி ஆறு சூழ்ந்து வந்த நாம் இந்நகரத்தையும் ஒருவாறு சுற்றி மேற்செல்வோமாக! இதனை

இந்நாட்டு அரசதானியே யன்றிச் சைவராசதானி எனவும், தமிழ் அரசதானி எனவும், அரசர்க்கரசனுகிய சுந்தரராசன் அரசுசெய்தததாதலால் அரச அரசதானி எனவும் பல படியாகப் பெரியோர் பாராட்டுவர்.

இது வையையாற்றின் தென்கரையிலே மிக அழகின் அமைந்து பழமை வாய்ந்தது. நாற்புறமும் சூழ்ந்த புறவீதி களும் அவற்றுள்ளே அணி அணியாய்ச் சூழ்ந்தமைந்த உள் வீதிகளும் இவற்றின் நடுவிலே மீனுட்சியம்மையாரோடு விளங் கும் சோமசுந்தரக் கடவுளாலயமும் காண்போர் மனத்தை யெல்லாம் கவர்ந்து புறத்தின்விடாப் பொலிவு வாய்ந்தன. மதுரையம்பதியின் மதுரம்பொருந்திய பேரமைப்பினை நேரே கண்டு அனுபவித்தாலல்லாமல் சொல்லி அளவிட யாரால் முடியும்? விராட்புருட வடிவிலே உச்சியாகிய பிரமரந்திரத் திற்கு மேற்பட்ட துவாதசாந்தத்தானமாக மதுரையானது கணிக்கப்படும் என்றால் இதன் பெருமை என்னவென்று கூற முடியும்.

"அரைக்குமே லுலகே மென்றும் அரைக்குக்கீழ் உலகேமென்றும்
உரைக்கலால் உலக மெல்லாம் உருவமாம் புருடற் கிந்தத்
தரைக்குமேல் அனந்தத் தெய்வத் தானமுண் டனைத்துங் கூறின்
வரைக்குரு சிலதா னங்கள் வகுத்துரை செய்யக் கேண்மின்."

"திருவளர் ஆரூர் மூலந் திருவானைக் காவே நாபி
மருவளர் பொழில்சூழ் அண்ணு மலைமணி பூர நீவிர்
இருவருங் கண்ட மன்றம் இதயமாந் திருக்கா ளத்தி
பொருவருங் கண்ட மாகும் புருவமத் தியமாங் காசி."

"பிறைதவழ் கயிலைக் குன்றம் பிரமரந் திரமாம் வேதம்
அறைதரு துவாத சாந்தம் மதுரையி ததிக மெந்த
முறையினல் என்னின் முன்னர்த் தோன்றிய முறையா லென்றக்
கறையறு தவத்த ரோடு கவுரியன் கோயில் புக்கான்."

— திருவிளை – வெள்ளியம்.

இந்நகர நடுவில் நாயகமாய் விளங்கும் சொக்கநாதர் ஆலய மும் அதில் நாற்புறமும் சூழ்ந்து விண்ணினை அளாவி உயர்ந்து செல்லும் "கபாலி நீள்கடி மதிலும்" அத்திருமதிலிலே நான்கு வாயில்களின் மேலும் மேகமண்டலத்திலே மறைந்து நிற்கின் றனவாய் உயர்ந்து உச்சி காணற்கரிய நான்கு திருக்கோபுரங் களும் அத்திருமதிலை அடுத்து உள்ளே சுற்றிவரும் ஆடி வீதியும் நாம் சூழ்ந்துவந்து கடப்போம். கடந்து உட்சென்றால்

பொற்றாமரை என்னும் புண்ணிய தீர்த்தம் கண்ணுறத்தோன்றும். அதனைக்கண்டு பரிசித்து ஏறிச்செல்லுவோம். சித்தி விநாயகர் தம்மை அடைந்தோர்க்குச் சகல சித்தியும் அருளி அங்கே வீற்றிருப்பர். அடுத்து எங்கள் ஆறுமாமுகத்து வள்ளலும் அருள்புரிந்து நிற்பர். அவர்களை அடைந்து உள்ளே செல்வோம். எப்படி மீனானது முட்டையிட்டுக்கொண்டே போய்ப் பின்னர்ப் பார்வைசெய்து அம்முட்டைகள் அனைத்தும் குஞ்சுகளாய்ப் பரிணமிக்கும்படி அருள்பாலிக்குமோ அதுபோன்று அனைத்து உயிர்களையும், அகிலாண்ட கோடிகளையும் ஈன்று தம் அருட்பார்வையால் பந்தநீக்கம் செய்து உலவச்செய்யும் பேரருள்வைத்த திருக்கண்ணோக்கத்துடன் எழுந்தருளியிருக்கும் மீனாட்சி அம்மையாராகிய அன்னையார் திருச்சந்நிதியைச் சென்று சேர்வோம். அவர் திருமுன்பு சென்ற எவனும் தான் உட்செல்லும்போது கொண்டுபோன வினை மூட்டையை விட்டுத் திரும்புதலல்லாது திரும்பக் கொண்டுவர இயலாது. அம்மையார் அருட்கண்ணோக்கம் பெற்றுத் தூயராகிப் பின் எங்கள் அழகிய சொக்கநாதப்பெருமான் திருமுன்னர்ச் செல்வோம். சென்று எல்லார்க்கும் முன்னே தோன்றி முளைத்தானாகிய அம்மூலலிங்கப் பெருமானைத் தரிசித்துச்

> " செய்யனே திரு ஆலவாய் மேவிய
> ஐயனே அஞ்சல் என்றருள் செய்யெனை."

எனவும்,

> " ஆதியே ஆலவாயில் அப்பனே அருள் செய்யாயே."

எனவும்,

> " தென்கூடற் றிருவாலவாய்ச் சிவனடியே
> சிந்திக்கப் பெற்றே னானே."

எனவும் வரும், ஆசாரிய மூர்த்திகளின் திருவாக்குகளின்படி துதித்துக் கண்ணும் கரணமும் பெற்ற பேறுபெற்று, களித்துத் திளைத்து மீளாதவண்ணம் மீளுவோம். அப்போது நமது ஆளுடைய பிள்ளையார் திருவாலவாயை நெடுந்தூரத்தே கண்ட மாத்திரத்திலே அறிந்து கீழ் வீழ்ந்து துதித்தருளிய,

> " மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
> வரிவளைக் கைம்மட மானி
> பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
> பணிசெய்து நாடொறும் பரவப்

பொங்கழ லுருவன் பூதநா யகனல்
வேதமும் பொருள்களு மருளி
அங்கயற் கண்ணி தன்னெடு மமர்ந்த
ஆலவா யாவது மிதுவே. "

என்பது இறைவன் கூட்டிய அளவிலே நமக்கும் அனுபவ பூர்வமாகக் கிடைத்து நாமும் அவ்வாறே கண்டு துதிப்போம்.

இத்தகைய பெருமை வாய்ந்த மதுரை வளம்பதியைத் தமக்கு அரசதானியாகக் கொண்டு பாண்டியர் வழிவந்தவர்கள் பாண்டியநாட்டை அரசுசெய்து வந்தார்கள். அந்த வழியிலே கி. பி. மூன்றும் நூற்றுண்டிலே அரிமர்த்தனபாண்டிய அரசர் அரசாண்டு வந்தார். இவரே மாணிக்கவாசகர் காலத்தவர் என்ற கொள்கையும் உண்டு.

இப்பாண்டியநாட்டில் வையையாற்றங்கரையில் மதுரை மாநகரிலிருந்து சுமார் ஏழுகல் தொலேவிலே திருவாதவூர் என்ற திருத்தலம் ஒன்றுண்டு. அங்கே உள்ள இறைவர் வாதபுரேசர் என்ற திருப்பெயரோடு எழுந்தருளியிருக்கின்ருர்.

" ஆதியா தித்தன் சோமன் அசுவினி தமது பேரால்
வேதியர் தமைவந் தேத்தி விமலனை யுகங்கள் மூன்றுங்
காதலில் வணங்கக் கண்டு கடையுகம் வாத ராஜன்
நீதியில் வணங்க வாத புரமென நிகழு மூதூர்."

— திருவால - திருவிளை - ஞானேப 4.

நான்குயுகங்களிலும் நான்கு தேவர்கள் பூசித்த காரணத்தால் ஒவ்வொரு பெயர்பெற்று விளங்குவது இந்தத் திருப்பதியாகும். கலியுகத்திலே வாதராசனுகிய வாயுபகவான் பூசனைசெய்த காரணத்தினுலே இது வாதபுரம் அல்லது திருவாதவூர் என்று பெயர் வழங்கப்பெறும். இந்தச் செழுமைவாய்ந்த மாநகரத்திலே பழமையாக வந்த அமாத்தியப் பிராமண குடியிலே சம்புபாதகிருதர் என்ற பேருடைய பெரியவர் ஒருவர் சிவநேசச் செல்வராய் விளங்கினுர். அவர் பத்தினியார் சிவஞானவதி அம்மையார் என்பார். இக்கருத்து புராணவாயிலாக அறியப் பட்டது. சில புராணங்களில் இப்பெயர் காணப்படவில்லை.

இவ்விருவரும் இல்லறம் வழுவாது இயற்றி வருகின்ற நாளிலே தமிழ்நாடும் பிறநாடுமாகிய சைவநாட்டிலே பௌத்த மாகிய புறச் சமய இருட்படலமானது பரவிக் காண்போர்

அகக்கண்களை மறைத்ததனாலே சைவ சமய விளக்கத்தைக் காணும் சக்தி ஆன்மாக்களுக்குக் குறைவுபட ஆரம்பித்தது. அது காரணமாகச் சைவசமய வழிபாடு குறைவடைந்து திருக் கோயிற் பூசைகள் முட்டுப்பாடுற்றன. ஆலயத்திலே வழிபடு வோர் வரவரக் குறைவடைந்தனர். சைவ நல்லொழுக்கமும் குறைவடைந்தது. சைவர்கள் சிவத்தை எண்ண இயலாத வாறு பௌத்தர்கள் தம் கொள்கையைப் பரப்பலானார்கள்.

ஆக இந்த அவல நிலையைக்கண்டு எண்ணி எண்ணி சைவ உத்தமசிலராகிய சம்புபாத கிருதர் கழிபெரும் கவலையுற்றார். ஆன்மாவானது எத்தனையோ பிறவிகளில் செய்த நற்கரும வினையாலன்றோ சைவத்தில் வந்து பிறக்கும் பேறு வாய்க்கப் பெறுகின்றது. பிறந்தார்க்கும் புகுந்தார்க்கும் உய்யும் நெறி அளிக்கவல்ல உத்தமமாகிய இச்சைவ மார்க்கமானது புத்தர் கள் எனும் மத்தர்களால் மங்கலுறுவதும் தகுதியாமோ? இவ்விருளை உடைத்தோட்டி உலகத்திற்குபகரித்து விளக்க வல்ல ஒருபுதல்வனை யான் இறைவன் அருளாற் பெறுதல் வேண்டும் என்று துணிந்தார். நாள்தோறும் சூரியன் உதிக்க ஐந்து நாழிகைக்கு முன்பாக எழுந்து கருமமுடித்துப் புனித நீராடி நியமஞ்செய்து திருநீறுங்கண்டிகையு மணிந்தவராய் மந்திரங்கட்கெல்லாம் மகாமந்திரமாகிய திருவைந்தெழுத்தை விதிப்படி எண்ணிக்கொண்டு திருநந்தனவனத்தில் சென்று எண்வகை மலர்களையும் பக்குவமாகத் தெரிந்து எடுத்துத் திருக்கோயிலிலே கொணர்ந்து திருப்பள்ளித் தாமங்கள் வகை வகையாகச் செய்து இறைவனுக்குச் சாத்துவார்; பசுநறு நெய்யினாலே திருவிளக்குகளிடுவார்; சைவசரியையாகிய புறப் பூசையும் அகப்பூசையும் அன்பிலேசிறையப்புரிவார்; இவ்வாறு இவர்கள் பலநாள் உலகிற்கு உபகாரமாக அரிய தவஞ்செய்து இறைவனது சந்நிதியின் முன்பாக விண்ணப்பம் செய்து வந்தார்கள்.

"நாமென்றும் மனந்தளராத் தகுதியராய் உலகத்துக்
காமென்று சரண்புகுந்தார் தமைக்காக்குங் கருணையினன்."

ஆகையினாலே அனைத்துலகுக்கும் நாயகனாகிய சிவபெருமான் அவர் தவத்திற்கிரங்கிக் கருணை செய்வாராயினர். சிவஞான வதியம்மையார் திருவயிற்றினிடமாகத் தூய சிவாகமநெறியின் துறை விளங்கவும், வஞ்சனையாலே மாயனார் இட்ட புத்த

இருளானது உடைந்தோடவும் இளஞ்சூரியனைப்போல நமது திருவாதவூரடிகள் திருவவதாரஞ்செய்தார். தாய் தந்தையர்கள் தமது அருந்தவப் பிள்ளைக்குத் திருவாதவூரர் என்னும் திருப் பெயரைச் சூட்டினார்கள். சகலசடங்குகளும் செய்யப்பெற் றாராய், சிறந்து வளர்ந்து உரிய பருவத்திலே எழுத்தறிவு கொளுத்தப்பெற்றார்.

முன்னைப் பிறவித் தொடர்பினாலே பதினாறு வயதளவிலே இவ்வுலகத்தில் விளங்கும் அறுபத்துநான்கென்று அறுதியிட்டுக் கூறப்பெறும் அனைத்துக்கலை ஞானங்களையும் கற்றுத் தேர்ந்து வல்லவராய் விளங்கினார். இவரது கல்வித்திறத்தையும் அறிவின் முதிர்ச்சியையும் அக்காலத்திலே முன் குறித்தபடி பாண்டிய நாட்டை ஆண்டுவந்த அரிமர்த்தன பாண்டியர் கேள்வியுற்று இவரைத் தம்பால் வரவழைத்து அளவளாவிப் பார்த்துத் தாம் கேள்வியுற்றதைவிடப் பலமடங்கு அதிகமாகவே அறிவுடைய ராய் விளங்கக்கண்டு மகிழ்வடைந்தவராய் அவருக்குப் பற்பல வரிசைகள் அளித்துத் "தென்னவன் பிரமராயர்" (தென்னவன் பாண்டியனால் தரப்பட்ட, பிரமம் - அறிவுக்கு, ராயர் - அரசர்) என்னும் பட்டம் சூட்டி இவரைத் தமது முதன்மந்திரியாக ஆக்கிக்கொண்டார். இவரும் இது இறைவனுடைய ஆணை என்று இறைவனை வணங்கி ஏற்றுக்கொண்டு அப்பெரிய பதவியை வகித்து அரசனுக்குக் கண்ணும் கவசமும்போலக் காரியஞ்செய்தொழுகுவாராயினர்.

இவர் செலுத்தி வந்த செங்கோல் முறையினாலே அந்நாடு முழுதும் செழித்துத் தழைத்து ஓங்கியது. எட்டாத நெடுந் தூரத்தே உள்ள செங்கோலரசர்களும் தங்கள் தங்கள் நாட்டிலே உள்ள அரும் பெரும் பொருள்களைக் காணிக்கை யாகக் கொண்டுவந்து செலுத்தி இவரைக்கண்டு வணங்கி இவரது நட்பைப்பெறும் வழியிலே நடந்து வந்தார்கள் என்றால் பகை அரசர்களை இவர் வென்று அடக்கித் திறை கொண்டு விளங்கினார் என்று கூறவேண்டியதில்லையே? எனவே பாண்டிய நாடானது இவருடைய அமைச்சியலிலே கோலுங்குடியுந் தழைத்து யாதொருஉட்பகையும் புறப்பகை யும் இன்றிப் பரிபூரண மகிழ்ச்சியையடைந்து செழித்தது என்பது சொல்லாமே அமையும்.

நமது பிரமராயர் தாம் அமைச்சுரிமை நடத்தும் காலத் திலே தம் ஆளுகைக்குட்பட்ட அந்நாட்டின் எல்லையையும்,

அதன் குடிகளின் தொகையையும், அவர்கள் அரசனுக்குச் செலுத்தும் ஆறில் ஒரு கடமையாகிய இறைப்பொருளின் அளவையும் இன்னும் உல்குபொருள் வருவாய்களேயும், கடல், மலே இவைகளின் வரவையும் மற்றும் பல வழிகளில் வரும் அரசாங்கத்தின் வரவுகளேயும் ஆராய்ந்தார்.

பின்னர் அவ்வருவாயிலிருந்து கல்விச்சாலே, அன்னசத்திரம், தண்ணீர்ப்பந்தர், தேவாலயம் முதலிய அறங்கட்குச் செலவாகும் பொருளும், படைகள், நெடுஞ்சாலேகள், மற்றும் ஆள்முதல் அமைச்சர்வரை உள்ள அரச அங்கங்கள் ஆகியவற்றிலே செலவாகும் தொகையும் கணக்கிட்டார். எஞ்சிய அரசனது பண்டாரத்திலே சேர்க்கத்தக்கவை இன்ன என்று குறித்தார். அக்காலத்துப் பாண்டியநாட்டு எல்லேயாவது:-

"பெருவழி மேல்பா லாகப் பெருங்கடல் கிழ்பா லாக
வொருவரும் புனல்சால் வெள்ளா றுத்தர மாகத் தெற்குப்
பொருவருங் குமரியாகப் போந்தநான் கெல்லே யுள்ளும்
மருவிய குடிக ளல்கு மிறைப்பொருள் வருவாய் தேர்ந்தும்."

என்பதனுல் அறியப்படும்.

இவ்வாறு அரசாங்கத்திலே முதற்பதவி வகித்துச் சீரும் சிறப்பும் பேரும் பொருளும் பெற்ற நமது பிரமராயர் அதற்கு மேலே என்னசெய்தார்? தமக்குக் கிடைத்த மிகமேலானதாகிய உலகமேம்பாட்டையே பெரிதாக மதித்துக் "கண்டதே காட்சி கொண்டதே கோலம்" என்றபடி இவ்வுலக அனுபவ இன்பங்களிலேயே அமிழ்ந்து நின்றுவிட்டாரா? இல்லே. உலகவிடயத்திலே ஆகஉயர்பதவி பெற்ற அவர் அதற்குமேலும் ஆராயத் தொடங்கினுர். உயிரைப்பற்றிய அறிவு அவருக்கு ஏற்பட்டது. அது அவரது முன்வினேத் தொடர்பாலேயாம்.

நாம் இவ்வுலகத்திலே பிறந்தபின் உண்டாயின இவ்விவகாரங்கள் எல்லாம் இவ்வுடம்போடு ஒழிவனவோ? அல்லது அதற்கு மேற்பட்டும் தொடர்வனவோ? இவ்வுடம்பினுள்ளே குடியிருந்துகொண்டு உடம்பையும் அதன் கரணங்களேயும் தன்னதாக ஆண்டு அனுபவிக்கும் உயிர் என்னும் ஒன்று எத்தன்மையது? உடம்பிற்கும் உயிர்க்கும் என்ன பொருத்தம்? இவையிரண்டும் பொருந்திப் பிறந்தபின் நாம் வாழ்ந்து அனுபவிக்கும் பலவகைப்பட்ட போகங்களும் அவற்றை நமக்குக்

கொடுக்கும் புவனங்களும் அவ்வுடம்பும் உயிருமாகிய நமக்கு என்ன தொடர்புடையவை? இவ்வனுபவங்களை அனுபவித்துக் கொடுக்கும் நமது கரணங்கள் என்ன தன்மையுடையவை? இவையெல்லாம் எப்படிப் பொருந்துவன? நாமே பொருத்திக் கொள்வன அன்றே! என்ற உள்ளுணர்வு தோன்றலாயிற்று.

ஆயின் உயிரை உடம்பிற்குள் புகுத்தி உலகத்தே உண்டு உடுத்துத் திரிந்து மறிந்து கிடக்கச்செய்வது யாருடைய செயல்? இவ்வாறு இவைகளைச் செய்யும் கருத்தர் ஒருவர் உண்டா? உண்டானால் அவர் எத்தன்மையுடையவர்! அவர் ஏன் உயிரையும் உடலையும் உலகத்தையும் பொருத்துதல்வேண்டும்? இப் பொருத்தமானது உடலைவிட்டு உயிர் பிரிந்தபின் என்ன ஆகின்றது? உலகமானது உடலுக்கு இன்ப துன்பங்களை விளைத்துக் கொடுக்கக் காண்கிறோம். அதுபோல உயிர்க்கு என்ன விளைத்துக் கொடுக்கிறது? முடிவான இன்பமா? துன்பமா? என்று எண்ணலானார்.

உலக இன்பங்கள் யாவும் அழியுந்தன்மையுடையனவாய்த் துன்பநிலை உடையனவாகவே காணப்படுவதால் அழியாத இன்பம் எங்கே இருக்கின்றது? அரிதிற்கிடைத்த இம்மானிடப் பிறவியானது நாழிகையும், நாளும், மாதமும், ஆண்டுமாகிக் கழிந்து நம் உயிரை வாள்போல் அறுத்துத்தள்ளி வருகிறதே! நாம் வாழ்நாள் முடிந்துவிடுவதன் முன்னமே முடியாத இன்பத்தை அடையும் வழியைத்தேடிப் பெற்றுக் கொள்வதல்லவோ நாம் அறிவுபெற்ற பயன்? இவ்வுலக இன்பம்போலவே மறுமைப் போகங்களும் அழிந்து படுவனதாமே. ஆதலால் அவை நாம் ஆசைப்படத் தக்கவையல்ல. அழியா இன்பமாகிய முத்தி இன்பமே நாம் தேர்ந்து அடையத் தக்கது. அதை அடைவதெப்படி? என்று ஆயலானார்.

பௌத்தம் முதலிய புறச்சமய நெறிகளும் நம்மன அழுக்கைப்போக்கிச் சிவனருளை விளக்குவன அல்ல. பக்தி நெறியிலே நின்று சிவனருள் பெற்ற உண்மையடியார்க்கே முத்திநிலை கைகூடும் என்று வேதம் முழங்குகின்றது. பொது நூலாகிய அவ்வேதத்திலே முடிந்த முடிவான சித்தாந்த உண்மைகளைச் சத்தினிபாதமுற்ற உத்தமர்களுக்கு ஆகமங்கள் உணர்த்துவன என்று பெரியோர் சொல்வர். அவ்வேதாந்த சித்தாந்த மோனசமரசமாகிய உண்மையை உணர்த்தி ஆணவ

இருளைப்போக்கி என்னை எனக்கறிவிப்பதோடு தன்னையும் உணர்த்திக் கிடைப்பித்து இன்பத்திருத்தவல்ல குருநாதன் எப்போது கிடைப்பான்? அவனருளாலன்றி இக்கொடிய பாசத்தை நம் ஆராய்ச்சிகளாலே நீக்கத்துணிவது கடலைக் கையாலே நீந்திக்கடப்போம் என்பதனோடொக்கும்? என்று இவ்வாறெல்லாம் தமக்குள் பலநாளும் பிரமராயர் சிந்திப்பா ராயினர். அமைச்சர் தொழிலையும் விட்டாரில்லை. அத்தொழிலை யும் அரச அவையிலே சென்றிருந்து அமைதிபெற நடத்துவார். இதிலிருந்து மணிவாசகரின் கடமை உணர்வை உணரலாம்.

உலக விவகாரங்களிலேயும், உலகத்திற்கும் அரசருக்கும் தம்மைச்சார்ந்தவர்கட்கும் தாம் செய்யவேண்டிய கடமை களிலேயும் ஒரு சிறிதும் தவிரார். ஆனால் அக்கடமைகளைச் செய்துகொண்டே மேலே நாம் காட்டிய வகையிலே உயிரை அறிவதிலே தம்முடைய அறிவைச் செலுத்தி உண்முகமான பரிசோதனையையும் ஒருங்கே செய்துவந்தார். அரச அவைக்கு வரும் அறிஞர்களைக் காணுந்தோறும் இவ்விடயங்களை விசாரிப் பார். அவர்கள் கூறும்விடைகள் ஒன்றும் இவரை ஒருசிறிதும் மனநிறைவை ஏற்படுத்தவில்லை. "உண்ணுநீர் விடாய்க்கு உவரிநீர் உண்டவர் ஒப்ப" உயிரை அறியவேண்டும் என்கிற எண்ணம்வரவர அதிகரிக்கப்பெற்றாரே ஒழியத் தணியப்பெற்றா ரில்லை. இதைத் தணித்து ஆன்மதரிசனமும் பதியறிவும் தலைக் கூடும்படி ஆட்கொள்ளவல்ல ஆசாரியரை அடையும். ஆசை அவருக்கு மேலிட்டுவந்தது. இது முதிர முதிர அவருக்கு இவ்வுலகப் பொருள்களின் அழியுந்தன்மை மெல்ல மெல்லத் தோன்றி வளர ஆரம்பித்தது. அழியாத இன்பந்தரும் உண்மைப் பொருள்கள் புலப்படத் தொடங்கின. இம்மைமறுமை இன் பங்களிரண்டும் நிலையற்றனவாதலால் உண்மையுணர்ந்தோரால் விரும்பத்தகாதவை என்ற துணிவுபிறந்து அவற்றின்மேலுள்ள ஆசைகுறையத் தலைப்பட்டது. அழியாது நிலைத்த இன்பவடி வினராகிய பரமசிவனிடத்திலே பதிந்த கருத்துடனே அவனை அடைவதாகிய பரம சாயுச்சியத்திற்குரிய வழிகளைத் தேர்வா ராயினர்.

"மெய்ம்மை யாம்பொருள் விவேகமும் வேறுபா டாய
பொய்ம்மை யாம்பொருள் விவேகமும் புந்தியுட் டோன்ற
இம்மை யாசையும் மறுமையி லாசையு மிகந்து
செம்மை யாகிய கருத்தராய்ப் பரகதி தேர்வார்."

இவ்வாருக நமது பிரமராயர் குலநலத்திலே பிராமணராக ஒழுகினர்.

அரசனிடத்திலே அமைச்சராக ஒழுகினர். குடிகளிடத்திலே கருணைகொண்ட தாயைப்போலப் பழகினர். சுற்றத்தாரிடத்திலே பற்றுக்கோடுள்ள சுற்றமாய் விளங்கினர். என்று இந்தவகையே தமக்குரிய ஒழுக்கத்தின்கண் நின்று அறம் வளர்த்தார். அது காரணமாகப் பாவம் தேய்ந்தது. பாவம் தேய அறியாமை நீங்கிற்று. அது நீங்கவே நித்த அனித்திய வேறுபாட்டுணர்வும் இம்மை மறுமையின்ப உவர்ப்பும் பிறவித்துன்பமும் தோன்றின. இவை தோன்ற வீட்டிறுசை உண்டாயிற்று. அதனல் யோக முயற்சியுண்டாயது. அஃது உண்டாக மெய்யுணர்வு பிறந்து புறப்பற்ருகிய எனது என்பதும் அகப்பற்ருகிய யான் என்பதும் இவரை விட்டு அகன்றன. இப்பற்றுக்களை இம்முறையே உவர்த்த நிலையில் நின்ற நமது பிரமராயர் தமக்குரிய ஒழுக்கத்தின்கண் நின்றே நீத்தாராயினர். அதாவது உலகத்தை உலகப்பற்றை அவர் விட்டவராயினர். இந்நிலையிலே அவர்.

> " ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
> வேண்டும் பனுவற் றுணிவு."

என்னும் திருக்குறளுக்கு இலக்கியமாக விளங்கினர். இவ்வித மான எண்ணம் மேலிடவே,

> " கள்ளக் காதல னிடத்நன்பு கலந்துவைத் தொழுகு
> முள்ளக் காரிகை மடந்தைபோல்."

இறைவனிடத்தே பதிந்த அகப்பற்றும் அரசனிடத்தும் உலகத்தினிடத்தும் தோற்றும் புறப்பற்றும் உடையராய் ஒழுகி வந்தார். ஒழுக்கத்தையே தமக்கு உரிய முதற்கடமையாகக் கொண்டு அதனல் உயர்வடைவாராயினர்.

2. உபதேசமும் உண்மை விளக்கமும்

" இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு."

" பொருப்பா லென்னுஞ் சுமை பரித்தோன்
போகட் டிடவென் னுதல் போலும்
நெருப்பால் வளையப் படுமொருவன்
நீங்க நினைக்கு மதுபோலும்
கருப்பா லுறுத்தும் பிரபஞ்சக்
கலப்பின் விடு கருதுவார்
திருப்பா லுறுவ தென்றென்று
தெரிந்து தெரிந்து முயலுவார்."

— திருப் பெ. ... ... புரா : திருப்பெ - சருக்கம் 6.

இவ்வுலகத்திலே பிறத்தல் என்பது மிகவும் துன்பத்துக்கு ஏதுவாக இருப்பது. இவ்வுண்மையை மணிவாசகர் கண்டார். என்னே! இவ்வுலகவாழ்க்கை! தண்ணீரில் போடப்பட்ட ஒரு சிறுகல்லானது எவ்வாறு ஒன்றன்பின் ஒன்ருய் ஓயாத அலைகளாகிய பரம்பரையை உண்டாக்கி விடுகின்றதோ அவ்வாறே இவ்வுலகில் பிறந்த ஒவ்வொரு ஆன்மாவும் எண்ணுகின்ற சிறு எண்ணங்களும்கூட உலகத்திலே "கர்மம்" என்று கூறப்படும் அலைகளையும் மாற்று அலைகளையும் உண்டாக்கும்.

எண்ணங்களே இவ்வாறு உண்டாக்கிவிடுமாகுல் சொற்களாலும் செய்கைகளாலும் எத்தனை கர்மபரம்பரைகள் கணந்தோறும் நிகழ்த்திவிடப்படுகின்றன என்பதை நாம் எடுத்துக் கூறவும் வேண்டுமா? இந்த அலைகள் மேலே வந்தும்போயும் அலைக்கின்றதனுலேயும் மேலும்மேலும் புதிது புதிதாய் உண்டாகிக்கொண்டு இருக்கின்றதனுலேயும் பிறவிக்கடல் ஓயாத அலைகளை உடையதாகுமன்ரே? இவைகள் ஓய்ந்தபின்னர் அல்லவா ஆன்மா அமைதியுறுவன்? அமைதி பெற்ருலன்றிச் சுகமேது? அமைதியே ஒருவனுக்கு நல்வாழ்வளிப்பது.

இவ்வாறு கர்ம அலைகளிலே சிக்கி அலைப்புண்டு துவண்டு எல்லாப் பிறப்பும் பிறந்திளைக்கும் ஆன்மாவுக்கு அதைத் தெரிந்து மெய்யனுடைய பொன்னடிகள் கண்டு வீடுறும்

நிலைமை எப்படி வரும்? இந்நிலைமையை அடையும் வழியைக் காட்டி ஆளவல்ல நல்ல வழிகாட்டியாகிய ஆசாரியர் எங்கே எப்போது கிடைப்பார்? அவரைத் தேடுவதே நம் பிறப்பின் பயனல்லாது இந்த அரசாங்கம் முதலிய உலக பாரங்களால் என்ன பயன்? இவைகளா நமக்கு உற்ற ஆசாரியனைத் தேடித் தருவன? இவற்றில் மயங்கி உழலுவதனுல் உயிர்க்கு என்ன ஊதியம் வரும்? உயிருக்கு இவைகளால் ஊதியம் கிடைக்கா மலிருப்பதோடு உறுதிப்பொருளைக் கைக்கூடுவதற்கு இவை கள் பெருந்தடையாயுமிருக்கின்றன. இன்பமாகத் தோன்றும் இவ்வுலகப் பொருள்கள் எல்லாம் ஆராயுமிடத்துத் துன்பத் துக்கே காரணமாயிருப்பதனுலே இவைகளிலிருந்து எவ்வெம் மட்டில்நீங்கி விடுபடுகிறேமோ அவ்வம்மட்டில் அவ்வவற்ருல் உண்டான துன்பம் நம்மைவிட்டுக்கழியும்.

> "யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
> அதனின் அதனின் இலன்."

என்பது பொய்யாமொழி. உலகப்பற்று நீங்க நீங்க இறைவன் நம்மைப் பற்றுவதற்குக் கிட்டுகிருன். அவன் அணுக அணுக ஆன்மாவுக்கு இன்பமுண்டாகும்.

> "ஆசைபடப்பட ஆய்வருந் துன்பங்கள்
> ஆசைவிடவிட ஆனந்த மாமே."

என்ருர் பெரியார். ஆதலின் ஆண்டானை அடையச்செய்து அழியாத இன்பத்தைத் தரவல்ல ஆசாரியரைத் தேடுவதிலே நாம் கண்ணுங்கருத்துமாக இருக்கவேண்டும் என்று துணிவு கொண்டார் பிரமராயர். இவ்வுலக காரியங்களை உவர்த்தார். தாமரையிலையிலே நின்ற தண்ணீரும், புளியம்பழத்தின் மேலே நின்ற ஓடும் போலவும், "கூத்தினர் தன்மைவேறு, கோலம் வேறு ஆகுமாறுபோ"லவும் உலக வியாபாரங்களும் அரசாங்க நிலையும் அவர்மேல் நின்றனவேயன்றி வேறல்ல.

இவ்வாருக இறைவனைத் தேடியும் ஒழுகியும் வந்த பிரம ராயர் வழக்கம்போல் ஒருநாள் அரச அவையிலே நீதிகூறும் அமைச்சராய் வீற்றிருந்தார். அவ்வமயம் அரசருடைய குதிரைச் சேவகர்கள் வந்து "அரசரேறே! தேவரீர் குதிரைச் சாலையிலே உள்ள குதிரைகளிலே 'நிறைந்த நோயவும் நெடிது மூப்புடை யவுமன்றிச்,சிறந்தவாம் பரி ஒன்றில்லை' ஆதலின் அண்ணலே?

நல்ல குதிரைகள் வாங்கிக் குதிரைப் படையைப் பலப்படுத்துவது தேவரீரது கடமை'' என்று தெரிவித்து அரசரை வணங்கி எதிரே நின்ருர்கள்.

அப்போது வேறு சில தூதுவர்கள் வந்து கீழைக்கடற்றுறையிலே நல்ல குதிரைகள் வந்து இறங்கியிருக்கின்ற செய்தியை அறிவித்தார்கள். அரசன் அமைச்சர் பெருமாஞகிய பிரமராயரைப் பார்த்து நம்முடைய பண்டாரத்திலே இருந்து வேண்டிய பொற்காசுகளைக் கைக்கொண்டு பரிசனங்களுடன் கீழ்க்கடற்றுறைக்குச் சென்று நல்ல குதிரைகள் வாங்கிக் கொண்டு வருதல் வேண்டுமென்று ஆணையிட்டான்.

நமது பிரமராயநும் அரசகட்டளையை ஏற்றுப் பண்டாரத்திலிருந்து அளவிறந்த பொன்களை எடுத்து ஒட்டகங்களின் மீதேற்றிக் கொண்டு படைகளும் பரிசனங்களும் சூழ்ந்து வரப் பரி கொள்ளப் புறப்படுவாராயினர். மதுரையைவிட்டுப் புறப்படுமுன் மதுரேசனுடைய மகாசந்நிதானத்திலே சென்று சித்திவிநாயகரையும் மீனுட்சியம்மையாரையும் சொக்கலிங்கப் பெருமானையும் வழிபட்டு வணங்கி நின்று பெருமானே! எனக்கு உற்ற சற்குருவைக் காட்டி என் பிறவிநோய் நீங்க அருள் பாலிக்க வேண்டும். அன்றியும்,

'' ஒன்று வேண்டும்இப் பொருளெலாம் உனக்கு ஐம்பொறியும்
வென்று வேண்டுநின் அன்பர்க்கும் ஆக்குக வெள்ளி
மன்று வேண்டிநின் ருடிய வள்ளல்என் குறையீது
என்று வேண்டி நின்று ஏத் ''

திக்குறையிரந்து பணிந்து விண்ணப்பித்துக் கொண்டார்.

அவ்வளவிலே ஆதிசைவராகிய அர்ச்சகர் ஒருவர் அணைந்து திருநீற்றுப் பிரசாதம் அளிக்கவே நமக்கு இதுபோல நன்னிமித்தம் வேறில்லை என்று உளமகிழ்ந்து திருநீற்றை ஏற்று அணிந்து அகமகிழ்ச்சியோடும் அளவற்ற ஆனந்தத்தோடும் அரியவிடை பெற்று ஆலவாயினின்றும் புறப்பட்டுச் செல்வாராயினர்.

அவ்வழியிலே பல காவதங்கள் கழியக் கடினமான பாதைகளும் கான்யாறும் காடும் காவும் கடந்து கடற்றுறைமுகமாகிய திருப்பெருந்துறை என்னும் திவ்விய திருத்தலத்தை அணுகிவருகிருர். வழியிலே அதனை அணுக அணுக அவர்மேல் ஏறி உள்ள ஒரு பெரிய சுமையானது குறைந்து இலகுவாகி

வருவதுபோலும் ஒரு இன்ப உணர்ச்சி நமது பிரமராயருக்கு ஏற்பட்டுவந்தது.

" ஆவதென் னிதனைக் கண்டிங்
 கணைதொறு மென்மேற் பாரம்
போவதொன் றுளது போலும்
 ஆசையும் பொங்கி மேன்மேன்
மேவிய நெஞ்சம் வேறோர்
 விருப்புற விரையா நிற்கும்."

— பெரிய, கண் - 97.

துக்க நீக்கமுற்று இன்பமடைவதாகிய இவ்வுணர்ச்சியோடு "இதுவே என்னையாளும் இனிய சற்குருநாதன் எழுந்தருளி யிருக்கும் இடமாகும்" என்ற துணிவுடனே அமைச்சர் பெருமான் திருப்பெருந்துறையை அடைந்தார். செழுந்திரு வைப் பெறவிழைந்தார்.

" அருந்தவர் சிந்தை செலுந்துறை வந்தனை
 யந்தணர் முந்தை மகம்
புரிந்து செயுந்துறை சந்தைப டுந்துறை
 புந்திக டந்த பதந்
தருந்துறை யிந்திரை வந்துறையுந் துறை
 தொந்திகொ டந்திபடும்
பெருந்துறை யெந்தை பரிந்து குருந்தினி
 திருந்தபெ ருந்துறையே."

— திருவால - ஞானோ - 36.

இத்திருவார் திருப்பெருந்துறை இன்று திருவாவடுதுறை ஆதீனத்துக்குச் சொந்தமான தேவாலயமாகத் திகழ்கிறது. இந்த ஆலயத்தின் பழமையும் பெருமையும் கருதித் திருவாவடு துறை ஆதீன கருத்தர் அவர்களாகிய 22 - வது குருமகா சந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாணதேசிக பரமாசாரிய சுவாமி கள் அவர்கள் இதனைத் திருப்பணிசெய்யத் திருவுளங்கொண் டுள்ளார்கள். இவ்வாலயம் சோழ நன்னாட்டுக்கு ஒரு அணி கலமாகத் திகழ்ந்துவருவது. மணிவாசகர் தம் நெஞ்சுருகி நின்று இறைவரைக் குருவடிவாகக் கண்ட தலம். இத்தலத் தைப்பற்றிப் பல பிரபந்தங்கள் உண்டு. அவைகள் யாவும் மணிவாசகர் பெருமையையே பெருக்க எடுத்துரைப்பன வாகும். அன்றியும் இத்தலத்தில் நடைபெறும் திருவிழாவும் மணிவாசகருக்கே நடைபெறுகின்றன. திருப்பணிதொடங்கிய

நிலையில் 'மணிவாசகர்' என்ற இந்நூல் வெளிவருகின்றது. இந்நூலின்பயன் திருப்பணியையேசாரும். சைவமுந் தமிழும் தழைத்தினிது ஓங்க அமைச்சரை அழைத்து அருள்வழங்கிய அருமைத் தலத்தின் பெருமைதான் என்னே?

அவருடைய இரண்டு கைகளும் தம்மையறியாமலே தமது தலையின்மீதேறிக் குவிந்தன. கண்களிலிருந்து ஆனந்தக்கண்ணீர் பெருகிற்று. இவ்வாறு நடந்துவரும் நமது பிரமராயருக்கு இவன் பித்தனே என்று உலகத்தார் கூறும் அதிதீவிர பக்குவமென்கின்ற நான்காம் சத்திநிபாதமானது பதிந்தது.

சத்திநிபாதத்தை சிவஞானியர் நான்கு வகைப்படுத்துவர். முதலாவது மந்தம்: அதாவது நமக்குப் பேருயுள்ள ஒரு பொருளுண்டு என்று அறிவெழுந்திருக்கை; அது வாழைத்தண்டிலே நெருப்புப் பற்றினாற்போலும். இரண்டாவது மந்ததரம்: அப்பதியை அடைதற்கு வழி எப்படியென்றாராய்கை; அது பச்சை விறகிலே நெருப்புப்பற்றினாற்போலும். மூன்றாவது தீவிரம்: அப்படி ஆராய்ந்தறிந்த பதியை அடைவதற்குப் பிரபஞ்சத்தை வெறுத்துப் புளியம்பழமும் அதனோடும்போல் நிற்றல்; அது உலர்ந்த விறகிலே நெருப்புப்பற்றினாற்போலும். நான்காவது தீவிரதரம்: பிரபஞ்சத்தை முற்றத் துறந்து ஆசாரியனேபொருள் எனக் கண்டு வழிபடுகை; அது கரியிலே நெருப்புப்பற்றினாற் போலும்.

இவ்வாறு சத்திநிபாத நிலையுற்றுத் திருப்பெருந்துறையை அடைந்த சுவாமிகள் அங்கே ஓர் சோலையினின்றும் தொண்டர்கள் ஓதுகின்ற சிவாகம ஓசையைக்கேட்டு அது இன்னதென்று ஏவலாளர்களை விடுத்து அறிந்துகொண்டு ஆங்கு விரைந்து சென்றார். அங்கே நீலகண்டன் அமர்ந்த கல்லாலமரம் போலப் பொலிந்து கோலங்கொண்ட குருந்தமரம் ஒன்று இருந்த வண்ணங்கண்டார். அதனடியிலே வேதங்கள் ஒருபுறம்; உண்மைச் சிவாகமங்கள் ஒருபுறம்; புராணங்களும் சமயவாத நூல்களும் ஒவ்வோர்புறம்; ஆகசிகழ்ந்து கொண்டிருந்தன.

சுருதிகளிலே கூறப்பெற்ற அறம், பொருள், இன்பம், வீடாகிய நான்கு உறுதிப்பொருள்களையும், மற்ற பசுநூல்களுக்கு அரியன என்று ஆகமங்கள் தலைக்காட்டிக் கூறும்படியான சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு

பாதங்களையும் அறிந்துணர்ந்த மாணவர் கூட்டங்கள் அங்கே தம்முட் பயின்று வினவிடை பேசிக்கொண்டிருந்தார்கள்.

1. சரியையாவது யாது :- சரியையாவது தேகத்தினைச் சிவார்ப்பிதஞ் செய்தல். அதாவது புறத்தொழிலின் மாத்திரையானே முதல்வனுடைய உருவத்திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு.

2. கிரியையாவது யாது :- கிரியையாவது இந்திரியங்களைச் சிவார்ப்பிதஞ் செய்தல். அதாவது புறத்தொழின் அகத்தொழின் மாத்திரையானே முதல்வனுடைய அருவுருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு.

3. யோகமாவது யாது :- யோகமாவது கரணங்களைச் சிவார்ப்பிதஞ் செய்தல். அதாவது அகத்தொழின் மாத்திரையானே முதல்வனுடைய அருவத்திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு.

4. ஞானமாவது யாது :- ஞானமாவது ஆன்மாவாகிய தன்னைச் சிவார்ப்பிதஞ்செய்தல். அதாவது புறத்தொழில் அகத்தொழில் என்ற இரண்டுமின்றி அறிவுத்தொழின் மாத்திரையானே உருவம் அருவுருவம் அருவம் என்னும் முத்திறத் திருமேனி கடந்த அகண்டாகார நித்த வியாபக சச்சிதானந்தப் பிழம்பாய் நிறைந்துநின்ற முதல்வனிடத்துச்செய்யும் வழிபாடு.

இவ்வாறு சரியையிலே வல்ல தொண்டர்களும், கிரியை செய்யும் மைந்தர்களும், சிவயோகம் தெரிந்த தோழர்களும், சிவஞானம் விளக்கும் போதகச் செல்வர்களும், பொலிந்து விளங்கினுர்கள். வேறு சிலர் காலக்கிரமத்திலே செய்யப் படும் சந்தியாதி கர்மங்களைக் கைகழன்றவர்களாயும் பாசம் நீங்கிய தம்கண்களால் சிவபெருமானுடைய திருவுருவைக் கண்டுகொண்டே இருக்கும் காரணத்தாலே உலகப்பொருள் கள் கண்ணுக்குத் தோன்றப்பெருமல் கண்விழித்திருந்தும் குருடர்போலச் சஞ்சாரம் செய்யும் விரதத்தன்மை வாய்ந்தவர் களாயும் காணப்பட்டு விளங்கினுர்கள்.

கரத்தலில்லாத உள்ளமாகிய சிதாகாசத்தினிடமாக எப் போதும் விளங்கிக்கொண்டிருக்கும் சோதியாகிய சிவபரஞ்சுட ருக்கு உதயமும் மறைவுமில்லாதபடியினுலே பகல் இரவு என்ற

பாகுபாடு காணப்பெறுதவர்களாய் நித்தியவிரதமாதி நோன்புகளை இழந்திருக்கும் பெரியவர்களும் பலபேர் அங்கே நிறைந்துவிற்றிருந்தார்கள்.

ஒற்றைக்கோவணமே ஆடை; கைப்பலியே உண்டி; சிவனடியார்களே உறவினர்; உருத்திராக்கமே ஆபரணம்; தரையே பாயல் என்றிருப்பார்களாயினும் இரவும் பகலும் இல்லாத காலத்திலே, முதலும் இடையும் முடிவும் இல்லாத இடத்திலே "தூங்காமல் தூங்கிச் சுகம்பெற்று" நிற்பது சிவஞானிகளாகிய இவர்களது வாழ்க்கைத்திறமாகும்.

இவ்வாறாக மகாமுனிவர்களும் பற்பல மாணுக்கர்களும் அங்கே பயின்று விற்றிருக்க அவர்கள் நடுவிலே ஆகாயத்தின் நடுவில் உடுக்கூட்டங்கள் சூழ ஒளியுடன் விளங்கும் நிறைமதி போலப் பரந்து விரிந்து பச்சென்று விளங்தும் அக் குருந்த மரத்தினடியிலே ஒருவர் திவ்விய ஒளிவடிவினராய் "பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரிய"ருய் எழுந்தருளியிருந்தார்.

அவரது தூய திருமேனியானது "மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுட"ராய்ப் "பொன்வண்ண மெவ் வண்ணம் அவ்வண்ணம் பொலிந்திலங்கி"யது. "அன்பரானவர்க்கருளி மெய்யடியார்கட் கின்பந்தழைத்திடும், செம்பொன் மாமலர்ச் சேவடிக்கண" மாகியிலங்குகின்ற சேவடிகள் "நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி" அந்த இரண்டிலே இடது திருவடி ஊன்றப்பெற்றும் அதன்மேல் வலது திருவடியானது மடித்து வைக்கப்பெற்றும் விளங்கின. அதன்பேரில் அவரது இடத் திருக்கையினிடமாகச் சிவஞானபோதம் என்னும் மெய்ப் புத்தகம் விளங்கிக்கொண்டிருந்தது.

அப்புத்தகத்தின் உண்மைப் பொருளை விரிக்கும் வகையாலே சின்முத்திரையை வலத் திருக்கையானது காட்டிக் கொண்டிருந்தது. "கழுநீர்மாலை, ஏலுடைத்தாக எழில்பெற அணிந்"த திருமார்பகத்தி னிடமாய்த் "தூய வெண்ணீறு துதை"ந்து ஒளிவிட்டு விளங்கியது. ஒன்பது புரிகள்கொண்ட பூணூல் வடமானது மார்பகத்திலே வெண்ணீற்றிற் கிடந்து வழியும் சிறுபாம்பு போன்றிருந்தது. கண்டத்திலேயும் கைகளிலேயும் மார்பிலேயும் அழகிய உருத்திராக்க வடங்கள்

அணிசெய்வனவாய் அமர்ந்திருந்தன. இரண்டு காதுகளிலேயும் இணைக்கவச குண்டலங்கள் கவின்பெறத் திகழ்ந்தன. உள்ளே இருந்து ஊறும் அமிர்த தாரைகளான உபதேசப் பொலிவை முன்விளக்குவதாய்க் கண்டோரைக் கவரவல்ல புன்முறுவல் திருவாயிலே நிலாப்பாரித்து விளங்கிற்று.

பார்த்த மாத்திரத்திலே அப்பார்வையிற்பட்ட சகலருக்குங் கன்மமோசனம் செய்து கட்டறுத்துக் களிப்பிக்கும் கருணை நாட்டம் செய்யவல்ல இரண்டு கண்மலர்களும் அருள்ஒளி பெற்று மிளிர்ந்தன. மூன்றும் பிறைக்கீற்றுகள் மூன்று அடுக்கியனபோல விளங்கித் திரிபுண்டரமாகத் தரித்த திருநீற்றுப் பூச்சானது திருநெற்றியிலே அழகுபெறக் காட்சிதந்தது.

முடிபோலக் கட்டிய சடைகளானவை திருமுடியிலே நின்று வைதிக அரசாங்கத்தின் மௌனமோலியாய் விளங்கின. இவ்வண்ணமாக ஆசாரியமூர்த்தியாய் "மறையோர் கோலங் காட்டி" அருட்பெரு வடிவங்கொண்டு தம்மை ஆட்கொள்வதற்கென்றே "சீரார் பெருந்துறையில் எளிவந்திருந்திரங்கி, எண்ணரிய இன்னருளாய் ஒளிவந்து" "உள்ளத்தினுள்ளே அளிவந்த அந்தண"னாகி வீற்றிருந்தருளிய குருமூர்த்தியைப் பிரமராயர் கண்குளிரக் கண்டார்.

"காண்டலுந் தொழுது வீழ்ந்துடன் எழுந்து
கரையிலன் பென்பினை யுருக்கப்
பூண்டஐம் புலனிற் புலப்படா இன்பம்
புணர்ந்துமெய் யுணர்வினிற் பொங்க."

என்றபடி அடியற்ற மரம்போல அவரது திருவடிகளிலே விழுந்தார். சிதம்பரத்திலே ஆனந்த நடனஞ் செய்யும் இறையின் திருவடிவமும், ஆலினடியிருந்து அருமறைப் பொருளை உணர்த்திய முதற் குருமூர்த்தியின் திருவடிவமும் இங்கே எழுந்தருளிய இவரது திருவுருவமேயாகும் என்று திருஅருட் குறிப்பு உணர்த்த உணர்ந்தார்.

"இவ்வண்ண மெண்ணி மற்று மெண்ணுவ தொன்று மில்லை
செவ்வண்ணல் இவரே நம்மை ஆட்கொளல் தேற்றந் தீரா
நவ்வண்ண மவ்வண் ணம்போய் நசித்தவென் றேடிச் சென்றே
அவ்வண்ண மாயி னார்தம் அடிவண்ண மலர்க்கீழ் வீழ்ந்தார்."

அவர் எழுக என்று ஆணையிட எழுந்து "ஐயனே! அடியேனைக் கருணையுடன் ஆட்கொள்ளவேண்டும்." என்று விண்ணப்பித்துக் குறையிரந்து நின்றார். சூழ இருந்தவர்களாகிய மாணவர் குழாங்களில் முதல்வராகிய ஒருவர் இவரது அதிதீவிர பக்குவத்தைக் கண்டு "பெருமானே! இவர் தேவரீரது திருவருளை இன்றே பெறத் தக்கவராவர்; இவருக்குக் கருணை காட்டவேண்டும்" என்று விண்ணப்பித்தார். அவ்வாறே ஆசாரிய மூர்த்திகளும் அன்றிரவே ஆட்கொள்வாராயினர். காலம், கனா, காட்சி, நிமித்தம் என்றவற்றை நோக்கினரில்லை.

அலங்கரிக்கப்பெற்ற "பொன்வின்செய் மண்டபத்து உள்ளே" உயர்ந்த ஆசனத்தின்மீது அடியார்களுக்குத் தீக்கை செய்து ஆட்கொள்ளும் குருமூர்த்தியாகித் தெற்குநோக்கி விற்றிருந்து, கழுநீர் மாலையும் சந்தனமும்அணிந்து, காலின்மேற் கால்வைத்து எழுந்தருளியிருந்துகொண்டு சீடராகிய பிரமராயரது ஒழுக்கத்தையும் அன்பின் பக்குவத்தையும் கண்டார். அவரது உடல் பொருள் ஆவி என்ற மூன்றையும் தத்தமாக அவர் தாரைவார்த்துக் கொடுக்கத் தாம் ஏற்றார். அவரைத் தமக்கு எதிரிலே வைத்துக்கொண்டு 11 மந்திரங்களும், 81 பதங்களும், 51 அக்கரங்களும், 224 புவனங்களும், 36 தத்துவங்களும், 5 கலைகளும் ஆகிய ஆறு அத்துவாக்களையும் சோதனை செய்து அவற்றை வேறு படுத்தினர்.

உள்ளக்கண்ணாகிய தமது திருநோக்கத்தினாலே அவரது அறிவை மறைத்த மலஇருளைச் சிதையுமாறு கண்ணால்பார்த்தலாகிய சாட்சுஷ தீட்சை என்னும் அருட்பார்வை செய்தார். அதன்பின் அவர் தலையின்மீது தமது திருக்கரத்தை வைத்து மாயாமலத்தையும் கன்மமலத்தையும் போக்கும் ஸ்பரிசதீட்சை என்கின்ற கையைத் தலையில் வைத்தலாகிய அஸ்தமஸ்தக சம்யோகமாகிய தீட்சையைச் செய்தார். கையை அதன்பின்பு அழகிய ஆடையால் மூடிக்கொண்டு அவருக்குத் திருவைந்தெழுத்து உபதேசஞ்செய்து அவருடைய ஆன்மாவைத் தாமாகும் வண்ணம்பாவனை புரிந்து உள்ளத்தோடும் உயிரை வெளவிப் பிரமநாடி வழியே போய்த் துவாத சாந்தத்தின் மேலாய் இரண்டற்று ஆனந்தம் அனுபவிக்கும்படி செலுத்தி அவரைப் போக்குவரவற்று உள்ளும் புறமும் இல்லாத சுத்த வெளியிலே நிறைந்த தனது பூரணவடிவமே ஆக ஆக்கினர்.

இவ்வாருக நமது பிரமராயர் தம்முடைய பசுகரணங்கள் கெட்டு முன்னை அறிவு இழந்து திருவருளினுலே சிவகரணங்களாகத் தோன்றலால் சுக அறிவு உண்டாக ஆசாரியமூர்த்தியினுடைய திருவடித் தாமரைகளை இரண்டு கண்களிலும் சேர்த்து ஒற்றிக்கொண்டு இரண்டு கைகளினுலும் இருதயத்திலே அணைத்துக்கொண்டார். கழுநீர்மாலை, சந்தனம், கத்தூரி முதலியவைகளால் அன்போடு ஆசாரியரது திருவடிகளைப் பூசித்துச் சாட்டாங்கமாக வணங்கி எழுந்து நின்ருர். ஆசாரியமூர்த்திகளும் அவருடைய தலையிலே தம் திருவடிகளைச் சூட்டித் திருவடி தீட்சைசெய்து தம் திருக்கரத்தாலே திருநீறு சாத்திக் கழுநீர் மாலையுஞ்சூட்டினுர்.

ஆசாரிய மூர்த்திகளது திருவடிகளிலே சூட்டப்பெற்ற மலர்மாலையைத் தம் முடியிலே சூட்டப்பெற்றுத் தம்மையும் மறந்து மெய்ஞ்ஞானமே வடிவமாகச் சிவானந்தத்திலே முழுகித் திளைத்து ஒன்றுமறியாது விளங்கினுர். பிரமராயர் தேனும் பாலும் தீங்கரும்பும் அமுதமும் ஆகித் தித்தித்து ஊனையும் உயிரையும் உருக்கும் தன்மையனவாய், உள்ளத்துள்ளே விளங்கும் சிதாகாசப் பரஞ்சுடரைத் தரிசித்து அவ்வானந்தம் தேக்குண்டு வெளியே கசிந்து வழிவதுபோலுள்ள திருவாசகங்கள் வெளிப்படும்படி அன்பருடைய திருநாவிலே ஞானவாணிவந்து குடிகொண்டாள். அன்பருக்கோ கைகள் தலைமீதேறித் தொழுது குவிந்தன; முடி துளங்கிற்று; கண்களிலே ஆனந்தக்கண்ணீர் பெருகிற்று; உடம்பெல்லாம் மயிர்க்கூச்செறிந்தது; நாக்குத் தழுதழுத்துக் குளறிற்று; அன்போடு கலந்து உள்ளூறிய சொற்கள் அமிர்ததாரையாகக் கிளம்பின; தம்மைமறந்து பரவசப்பட்ட நிலையிலே தழலிற்பட்ட மெழுகு போல உள்ளமுமுருகிற்று.

" தடக்கையின் நெல்லிக் கனியெனக் காயினன்
சொல்லுவ தறியேன் வாழி முறையோ
தரியேன் நாயேன் தானெனைச் செய்தது
தெரியேன் ஆவா செத்தேன் அடியேற்(கு)
அருளிய தறியேன் பருகியும் ஆரேன்
விழுங்கியும் ஒல்ல கில்லேன்
செழுந்தண் பாற்கடல் திரைபுரைவித்(து)
உவாக்கட லள்ளுநீர் உள்ளகந் ததும்ப

வாக்கிறந் தமுதம் மயிர்க்கால் தோறும்
தேக்கிடச் செய்தனன் கொடியேன் ஊன்தழை
குரம்பை தோறும் நாயுட லகத்தே
குரம்பைகொண் டின்றேன் பாய்த்தி நிரம்பிய
அற்புத மான அமுத தாரைகள்
எற்புத் துளைதொறும் ஏற்றினன் உருகுவ(து)
உள்ளங் கொண்டோர் உருச்செய் தாங்கெனக்(கு)
அள்ளூ றாக்கை அமைத்தனன் ஒள்ளிய
கன்னல் கனிதேர் களிறெனக் கடைமுறை
என்னையும் இருப்ப தாக்கினன் என்னிற்
கருணை வான்தேன் கலக்க
அருளொடு பராவமு தாக்கினன்
பிரமன்மால் அறியாப் பெற்றி யோனே''.

— திருவண்டப்பகுதி

என்று சுவாமிகள் தம் திருவாக்கிலேயே பாராட்டியபடி இத் தன்மையினராய்த் தம் ஆசாரியமூர்த்திகளைப் பணிந்து அருமை யாகத் தோத்திரித்தார். தோத்திரித்தலையே தமது கடமை யாகவுங் கொண்டார்.

'' புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்னெடுங் கோயிலாப் புகுந்தென்
என்பெலா முருக்கி எளியையாய் ஆண்ட
ஈசனே மாசிலா மணியே
துன்பமே பிறப்பே யிறப்பொடு மயக்காந்
தொடக்கெலா மறுத்துநற் சோதி
இன்பமே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே''.

இந்நிலையில் ஆசாரியமூர்த்திகள் உண்மை அன்பரை அழைத்து அவருக்குச் சிவாகமங்களினால் அறிதற்கரிய முடிந்த பொருளாகிய சித்தாந்தத்தை உபதேசிப்பாராயினர். சித்தாந்த மென்பது சைவசமயத்தின் முடிந்த முடிபு.

கரிய இருள்போன்ற பாசமானது செம்பிற்பற்றிய களிம்பு போல அநாதியே உன்னைப் பற்றியிருக்கும். ஆன்மாவாகிய உன்னுடைய தன்மையோ என்றால் எதைத் தான்சார்ந்ததோ

அதன் வண்ணத்தையே திரும்பக்காட்டும் பளிங்கைப்போன்றது. உன்னைப் பொருந்திய பாசத்தொடர்பினுலே அனேக பிறவிகள் எடுத்து அலைந்தாய். அப்படி எடுத்த பிறவிகள் தோறும் அந்தந்த உலகங்களிலே நீ செய்யும் கர்மவினைப் பயன்களை நாம் ஏற்படுத்திய முறைப்படி நீ அனுபவித்துக்கொண்டு அஞ்ஞானத்தினுலே ஆகாமிய வினையை விளைத்துக்கொண்டு திரிந்தாய். 'நான் செய்த வினைகளின் பயனை என்னிடம் வேருெருவர் இடையிலிருந்து சேர்க்கவேண்டியதில்லையே' என்று ஒருவேளை நீ கேட்கலாம். நீ சிற்றறிவுடைய ஆன்மாவாயிருக்கிறபடியால் மேல்வருவது இன்னதென்றும் அனுபவிப்பது இன்னதென்றும் அறிந்துசேர உன்னுல் முடியாது. நீ செய்த வினை தானே அறிந்து சேருமோ என்ருல் அது சடப்பொருளாதலின் தான் அறியாது. ஆகையால் உன்னையும் உன் வினைப்பயனையும் அறிந்து ஊட்டுவித்து இருள் மலத்தை ஒழித்து மோட்சமாகிய நித்திய ஆனந்தத்தை நாமே உனக்குக் குறைவின்றிக் கொடுப்போம்.

ஆனுல் ஏன் யாவரும் இப்பாசபந்தம் நீங்காமலிருக்கிருர்கள் என்று நீ சொல்லக்கூடும்: இருள்சேர் இருவினையும் தராசில் சமமாக நிறுத்ததுபோல ஒன்றுபோலக் காணும் பக்குவமடைந்த உத்தமர்களுக்கே நம் பதம்கொடுத்துப் பாசத் துன்பம் போக்கி இன்பமளிப்போம். அந்தப் பக்குவம் வரும் வரை ஆன்மாக்கள் பவக்கடலிலே வீழ்ந்து தடுமாறுவர்; தங்களையும் அறியார்; தங்களுடைய பக்குவத்தின் தருணம் பார்த்துக்கொண்டிருக்கும் பதியாகிய நம்மையும் பார்க்கமாட்டார்கள். ஆனுல் இந்த இருவினையொப்பு என்ற பக்குவம் எப்போது வரும் என்ருல் நாம் எழுந்தருளியிருக்கும் தலங்கள் தோறும் சென்று பணிந்து நல்ல சிவபுண்ணியங்கள் செய்யும் பண்பாடுடையவர்களுக்கு அது கிடைக்கும்.

" நல்லசிவ தர்மத்தால் நல்லசிவ யோகத்தால்
நல்லசிவ ஞானத்தால் நானழிய – வல்லதனுல்
ஆரேனும் அன்புசெயின் அங்கே தலைப்படுங்காண்
ஆரேனுங் காணு அரன்".

எம்முடைய இயல்பு கேட்பாயானுல் உருவம், அருவுருவம் அருவம் என்று மூன்று திருமேனிகள் எமக்கு உண்டு. இவற்றில் உருவத்திருமேனி என்றது உனக்கு அறிய உபதேசித்தருளிய இக்குருவடிவமேயாகும். அருவுருவத் திருமேனி

யானது யாவரும் வந்து வணங்குதற்கு எளிதான இலிங்க வடிவமே யாகும். அருவத் திருமேனியானது பாசமாகிய பலத்த இருளை நீக்குதற்காகக் கோடி சூரிய ஒளியோடும் அந்தர்யாமியாய் எல்லா உயிர்க்கும் உயிராய் ஆதியீது அந்த மிது என்று அளவிட்டறிதற்கரிய ஒளியாகி நிர்மலமாயிருக்கும் திருவடிவமேயாகும்.

இத்திருவடிவங்களிலே இறைஞ்சிப் பத்திசெய்து முத்தி அடையும் வழிகள் ஆன்மாக்களின் பக்குவத்திற்குத் தக்கபடி நான்காகும். அவற்றால் கிடைக்கத்தக்க பலன்களும் நான் காகும். அவையாவன :-

ஆர்வத்தோடுகூடி நமக்கு ஆகும் மலர் மரங்களை வைத்துப் பயிராக்குதல்; மலர் பறித்துக் கொடுத்தல்; பூமாலை தொடுத்தல்; எம்முடைய புகழினைச் சொல்லிப் பாடுதல்; நாம் அமரும் திருவாலயங்களிலே திருவலகு திருமெழுக்கு திருவிளக்கு இடுதல்; நம்முடைய அடியார்களுக்குப் பணி விடைசெய்தல் என்பன வாதிகள் சரியையென்று சொல்லப் பெறும். இது செய்தார்க்கு எம்முடைய உலகத்தில் இருப்ப தாகிய சாலோக பதவியைக் கொடுப்போம்.

திருமஞ்சனம், சந்தனம், தூபம், தீபம், புட்பம், பழம், பஞ்சகவ்வியம் முதலிய பூசா திரவியங்களைக்கொண்டு மயக்க குணங்கள் ஒன்றுமில்லாதவர்களாய் பூதசுத்தி, திரவியசுத்தி, மந்திரசுத்தி, ஆத்துமசுத்தி, இலிங்கசுத்தி என்ற பஞ்சசுத்தி களும் செய்து உட்பூசை புறப்பூசை என்ற இரண்டு பூசையும் செய்து அக்கினிகாரியம் முடித்துச் சிவாகமப்படி ஒழுகுதல் கிரியை எனப்பெறும். இது செய்ய வல்லவர்களுக்கு நமது சமீபத்தில் இருப்பதாகிய சாமீப பதவியைத் தருவோம்.

சத்துவம் இராசதம் தாமதம் என்னும் மூன்று குணங் களையும் ஐந்து இந்திரியங்களையும் அடக்கி, மூலவாயு என்னும் பிராண வாயுவை எழுப்புகிற இரண்டு வழிகளாகிய இடைகலை பிங்கலைநாடிகளையும் நன்றாக அடைத்துச் சுழுமுனைநாடி என்ற ஒருவழியைத்திறந்து, அங்கே அப்போது கேட்கப் பெறுவதா கிய தாண்டவச் சிலம்பொலியுடன் வழியே போய், தக்கதாகிய திருவைந்தெழுத்துக்களும் ஓரெழுத்துருவாகும் தன்மையைக் கண்டு தரிசித்து, அருளைத் தருகின்ற பரவெளியிலே புகுந்து

அழுந்தி நிற்றலே யோகம் எனப்பெறும். பூமியிலே குளவியானது புழுவைத் தன்னுருவமாகச் செய்வதுபோல் அவர்கள் நமது உருவம் பெறும்படிச் செய்வோம். அதாவது அவர்கள் சாரூபபதவியை அடைவார்கள்.

இதன்மேல் விரிவாகிய எல்லாக் கலைகளையும் ஆகமத்தின் பாகுபாடுகளையும் பற்பல சமய சாத்திரங்களையும் தெரிந்து ஆராய்ந்து அவ்வாராய்ச்சியின்பயனாய்ப் பதிபசுபாசமாகிய முப்பொருள்களின்செய்தியே உண்மைப்பொருளென்றும், முடிந்த பொருள் (சித்தாந்தம்) என்றும் தெளிந்து முன்செய்த கன்மவயமாய் வந்த சிற்றறிவெல்லாம் கெடுத்துப் போக்கிப் பேரறிவெனப்பட்ட சிவஞானம் விரிந்து தோன்றிப் ''பார்த்தவிடமெல்லாம் பரவெளியாய்த் தோன்று''ம் நிலைமை கைவந்த சதுரர்களே சிவஞானிகள் எனப்பெறுவர். அவர்கள் முடிந்த இடமும் ''ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்ப''மும் ஆகிய நம்முடைய சிவசாயுச்சியத்தை அடைவார்கள்.

இவ்வுலகத்திலே உருவாலும் குலத்தாலும் ஒழுக்கத்தாலும் குறைந்தவராயிருந்தபோதிலும் திருநீறு உருத்திராக்கம் அணியப்பெற்றவர்களானால் கண்ட அளவிலே அவர்களைச் சிவவடிவமாகப் பாவித்து எதிர்சென்று வணங்கித் திருவமுது செய்வித்து அவர்களுக்கு எளியராய் அடியார்க்கடியராயிருப்பவர்கள் யான் எனது என்று கூறும் அகங்கார மமகாரங்களை அறுப்பர். அவை அற்றொழியவே வானோர்க்குயர்ந்த உலகம் புகுவர். அதனால் அவர் பிறவாப் பெருநெறி அடைவர்.

இப்போது உனக்கிருந்த முன் சஞ்சிதமாகிய மூட்டை வினைகள் நாம் திருக்கண் சாத்திய அளவிலே வெந்து ஒழிந்தன. இந்தப் பிறவியிலே அனுபவிக்கும்படி உடலுடன் வந்ததும் அனுபவித்தன்றிக் கழியாததுமாகிய பிராரத்த வினைப்பகுதியானது இந்த உடலுடன் ஒழிந்துபோம். நீ இனிச் செய்து தேடிக்கொள்வதாகிய ஆகாமிய கர்மங்கள் என்ற வினைப்பகுதியானது நம்முடைய திருவருள் பதிந்து தங்கிய காரணத்தாலே இனியேற ஒட்டாமல் செயலற்றுத் தடைபட்டு நின்றுவிட்டது. துன்பத்துக்கே காரணமாகும் உன் பொருளும் உடம்பும் உயிரும் உன்னுடையன அல்ல. அவற்றை நீ நமக்குக் கொடுத்த காரணத்தால் அவை நம்முடையனவேயாகும்.

மான்காட்டி மான் பிடிப்பதுபோல மானிடங்காட்டி மானிடரை ஆட்கொள்ளவந்த இந்தக் குருவடிவாகிய நமது வடிவத்தை எப்போதும் உனது மனத்தில் பதியவைப்பாய். இதுவே பொருள் என்று சிவஞானபோதத்தின் முடிந்த பொருள்களைத் தெளிவுற உபதேசித்தருளினர்.

அனைத்து ஆன்மாக்களுக்கும் அனைத்து உலகங்களுக்கும் முதல்வனுகிய பதி ஒருவன் உண்டு. அனைத்து ஆன்மாக்களும் பாசபந்தப்பட்டவர்கள். ஆன்மாக்களுடைய கன்மத்துக்குத் தக்கவாறு முதல்வன் பிறவியைக் கொடுத்தருளுவன். கன்மத்துக்கிடாய் எடுத்த பிறவிகளிலே முன் வினைகளையும் இப்போது உள்ள வினைகளையும் இனிச் செய்யும் வினைகளையும் அனுபவித்துக்கொண்டு அதற்குத் தக்கபடி மேலும் மேலும் பிறவி எடுத்துத்திரிவான். ஆன்மா தன்னையும் அறியான். தன்னைக் கட்டிய பாசத்தையும் அறியான். அப்பாசத்தொடர்பால் பிறவி வருகிறதென்றும், பிறவியும் உலகும் தன்னைக் கட்டுப்படுத்துவன என்றும், இவற்றிலிருந்து விடுபடுவதே அடையவேண்டிய உறுதிப்பொருள் என்றும் அறியான். உலகத்தோடு ஒட்டி வாழும் தான் உலகத்தைவிட்டு இறைவனேடு ஒட்டி வாழ்தலே நிலைத்த இன்பப் பெருவாழ்வு என்பதையும் அறியான். தான் செய்யும் பதிபுண்ணிய மேலிட்டினுலே மெல்ல மெல்ல இவனுக்கு மேலே சொல்லிய அறிவு உண்டாகும். அப்போது நல்லாசிரியனை அடுக்கும் ஊழ் ஆன்மாவுக்கு உளதாகும்.

ஆசிரியனுடைய அருட்பார்வையாலும் உபதேசத்தாலும் இவன் தன் எளிமையையும், தன்னைக் கட்டிய பாசத்தின் வலிமையையும் அறிந்து அதை நீக்கித் திருவடிக்கீழ்ச் சேர்த்தி முடிவில்லா இன்பத்தில் இறுத்தவல்ல இறைவனை அடையும் முயற்சிகளில் புகுவான். அம்முயற்சிகள் நான்குவகை. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன. இம்முயற்சி உண்டாகவே இவ்வுலக இன்பமும் மறு உலக இன்பமும் இவனுக்கு வெறுப்பாகத்தோன்றும். இறைவனிடத்துப் பதிந்த அன்புண்டாகும். ஞானிகளுடைய சேர்க்கை உண்டாகும். இடையீடில்லாமல் பதிதரிசனம் செய்துகொண்டு நித்திய சுகத்தில் வாழ்வான். இந்த வேத வேதாந்தங்களின் முடிந்தபொருள் நமது பிரமராயருக்கு ஞானசாரியருடைய திருவருள் நோக்கத்தாலும், தீட்சா விசேடங்களாலும், உபதேசத்தாலும் தலைக்கூடியது. அந்த

நிலையில் நமது பிரமராயர் ஞான வடிவினராய் ஞான சூரியராய் விளங்கினர்.

உடனே தமது ஆசாரிய மூர்த்திகளுடைய திருவடித் தாமரைகளிலே விழுந்து எழுந்து நின்று கண்களிலிருந்து ஆனந்தக்கண்ணீர் தாரை தாரையாகப் பெருகத் தீயிடைப் பட்ட மெழுகுபோல மனங்கசிந்துருகி ஆசாரியமூர்த்திகளைத் துதிப்பாராயினர்.

"பத்தர் சூழப் பராபரன் பாரில்வந்து பார்ப்பா னெனச்
சித்தர் சூழச் சிவபிரான் தில்லை மூதூர் நடஞ்செய்வான் [வான்
எத்த னாகிவந் தில்புகுந்தெமை யாளுங் கொண்டெம் பணிகொள்
வைத்த மாமலர்ச் சேவடிக்கணஞ் சென்னி மன்னி மலருமே".(4)

"மாய வாழ்க்கையை மெய்யென் றெண்ணி
மதித்தி டாவகை நல்கினன்
வேய தோளுமை பங்கனெங்கள்
திருப்பெ ருந்துறை மேவினன்
காயத் துள்ளமு தூறவூறநீ
கண்டு கொள்ளென்று காட்டிய
சேய மாமலர்ச் சேவடிக்கணஞ்
சென்னி மன்னித் திகழுமே". (5)

"சித்த மேபுகுந் தெம்மை யாட்கொண்டு தீவினைகெடுத் துய்யலாம்
பத்தி தந்துதன் பொற்கழற்கணே பன்மலர் கொய்து சேர்த்தலும்
முத்தி தந்திந்த மூவுலகுக்கும் அப்பு றத்தெமை வைத்திடும்
அத்தன் மாமலர்ச் சேவடிக்கணஞ் சென்னி மன்னி மலருமே". 6

திருவாசகம்: சென்னிப்பத்து

இவ்வாறு அவர் செய்த தோத்திரமாகிய திருவாசகங்கள் மிக இனிமையோடும், கேட்போர் மனத்தையெல்லாம் உருக்கித் தன் வயமாக்கவல்ல அருள் ஒளியோடும் மாணிக்கம்போன்று விளங்கிய தன்மையினலே ஞானசாரியமூர்த்திகள் "உனக்கு மாணிக்கவாசகன்" என்று பெயர் தந்தோம்; என்று அவருக்குத் தீட்சாநாமம் சூட்டினர்.

ஆனல் இத்திருவாசக மணிகளைப்பற்றிச் சிறிது ஆய்வோமானல் உலகத்திலே மற்றைமணிகள் மண்ணீருமாகாத உவர்க் கடலிலேபடுவன; இம்மணிகளோ என்றல் நம்முடைய மூல நோயையும் மண்ணும் நீர்நிறை அருட்கடலிலேபட்டன.

ஏனைக் கடல்மணிகள் துறைகளிலே மூழ்கிக் குளித்து எடுக்கப் பெறும்; அத்துறைகள் வழுக்கும்துறை, படிகளில்லாத அபாயத்துறை, பொய்த்துறை, அசுத்தத்துறை, கராம் முதலிய இடையூறுள்ள துறை முதலாகப் பலபடப் பேதம் உண்டாக்கும். இம்மணியோ பேரின்பவெள்ளத்துள் மூழ்குவதாகி மிகு சைவத்துறைகளாகிய அருட்டுறை தவத்துறை முதலிய துறைகளிலும் மிக்கதாகிய பெருந்துறையிலே "பெருந்துறைப் பெருந் தோணிபற்றி யுகைத்தலும்" என்றபடி "அஞ்செழுத்தின் புணை பிடித்து"ம் தோணியப்பன் துணையை அடுத்தும் முகந்து கொள்ளப்பெற்றன. ஏனைய மணிகள் சடமாகிய பொருள் ஒளியை ஏகதேசத்தில் வாய்க்கப்பெற்றுச் சூரியன் முதலிய பூதவொளிகளாலும் புறவொளிகளாலும் மின்னுவன.

இம்மணிகளோ சேதனமாகிய அருளொளியோடு நிறைந்து சுயஞ்சோதி, பரஞ்சோதி, அலகில்சோதி என்று சொல்லப் படும் சிவசூரியனது சந்நிதானத்திலே மிளிர்ந்து அவ்வொளியை மாறுமல் பரப்பும் தன்மைவாய்ந்தன. ஆகையினுலே இத்திரு வாக்குக்களுக்கு இணை சொல்ல வேறு ஒளிப்பொருள்கள் எவ்வுலகிலும் இல்லாமையால் மணிகள் ஏகதேசத்திலே ஒரு புடையொப்பாக எடுத்து ஆளப்பட்டன என்பது கருத்து. சுவாமிகள் தம்மை ஆசாரியமூர்த்திகள் அந்தணராக இவ் வுலகத்தே எளிதாக எழுந்தருளி வந்து தம்மை ஆட்கொண்ட திருக்கோலத்தை அனேக இடங்களில் தாமே பாராட்டித் துதிக்கின்ருர்.

" அந்தண னாகி யாண்டுகொண் டருளி
இந்திர ஞாலங் காட்டிய இயல்பும்".

— கீர்த்தித்திருவகவல்

" மெய்தரு வேதிய னாகி வினைகெடக்
கைதர வல்ல கடவுள் போற்றி".

— போற்றித்திருவகவல்

" என்னே ரனையோர் கேட்கவந் தியம்பி
அறைகூவி யாட்கொண் டருளி
மறையோர் கோலங் காட்டி யருளலும்".

— திருவண்டப்பகுதி

"உருநாம் அறியவோர் அந்தணனாய் ஆண்டு கொண்டான்".

— திருத்தெள்ளேணம்

ஞானவாணியானவள் நமது சுவாமிகளது நாவிலே குடி கொண்டு விளங்கினாள். பதினாறுண்டிலே பார்வாய் எண் ணெண்கலையும் பயின்று கலைவாணி அருட்கண் பார்வையோடு விளங்கிய நமது பிரமராயர் ஞானாசாரியரது கருணை பெற்றபின் இப்போது எல்லாச் சத்திகட்கும் மேற்பட்ட ஞானவாணி யாகிய பராசத்தி அருள் விளக்கத்தோடு சிறந்து விளங்கினார். இவ்விருவகைச் சத்தி விளக்கங்களின் வியாபகத்தையும் அவை வியாபிக்கும் புவனங்களின் விசேடத்தையும் தத்துவ ஆராய்ச்சி யுள்ள பெரியோர் பலதிறமாக விரித்துப்பேசுவர். இந்த நூலிலே பிறிதோரிடத்தில் நாமும் அதைப்பற்றிச் சிறிது பேசுவோம். இவ்விளக்கம் காரணமாக,

“ உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனியமையும் [டேன்
குற்றாலத் தமர்ந்துறையும் கூத்தாவுன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே.”

என்ற உண்மைத் துறவாகிய ஞானமானது அப்பொழுது சுவாமிகட்குத் தலைக்கூடிற்று. தலைக்கூடவே ஆசாரியமூர்த்தி களிடம் ‘சுவாமி! அடியேன் கொண்டுவந்த உலகியலுக்குரிய இப்பொருள்கள் எல்லாம் தேவரீருக்கும் அடியார்களுக்குமாக உபயோகமாகும்படி அருள்புரிய வேண்டும்’ என்று குறை யிரந்து விண்ணப்பித்துக்கொண்டார். ஆசாரியமூர்த்திகளும் அவ்வாறே ஆகுக என்று அருள்பாலித்தார்.

அதன்படியே அப்பொருள்களைக்கொண்டு சுவாமிகள் இறைவனது திருக்கோயில் திருப்பணிகள் செய்தார்; இறைவ னுக்குத் திருவிழாச் செய்தார்; அடியார்பூசை மகேசுவர பூசை செய்தார்; தொண்டர்களுக்கு உறையுள், சைவ அடியார் களுக்குத் திருமடம், திருநந்தனவனம், நித்திய நைமித்திக பூசைகள் நடைபெற விளைநிலங்கள் முதலியவைகளைக் குறை வற ஏற்படுத்தினார்.

இவ்வாறு நம் சுவாமிகள் பரிகொள்ளத் தாம் கொணர்ந்த அரசனது பொருள்கள் அனைத்தையும் ஆண்டான் பணிக்கும் அடியார் பணிக்குமாகச் செய்து உண்மைத் துறவிலே தலை சிறந்து ஒழுகிவந்தார். ஞானாசாரிய மூர்த்திகளின் திருவருளி னாலே பிறப்பு இறப்புக்களாகிய இருமைவகையையும் தெரிந்து,

உடல் பொருள் ஆவி என்ற மூன்றையும் தம் ஆசாரியருடைய உடைமையாக்கித் துறந்து "ஏல என்னையீங் கொழித்தருளி" என்றும், "நான் கெட்டவா பாடி" என்றும் தமது திருவாக்கிலுலேயே பாராட்டுகிற நிலையாகிய பசுகரணங்கெட்டுச் சிவ கரணம் பெற்ற உண்மைநிலையினை அடைந்தார். அதனாலே சாமான்னிய உலகத்தைக்கடந்த தத்துவாதீத நிலையுற்றார்.

"சாதிகுலம் பிறப்பென்னுஞ் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை அல்லலறுத் தாட்கொண்டு
பேதைகுணம் பிறருருவம் யானெனதென் னுரைமாய்த்துக்
கோதிலமு தானானைக் குலாத்தில்லைக் கண்டேனே."

என்றபடி முழுத்துறவு அவர் தன்மையாயிற்று. இந்த நிலை உலகங்கடந்த உயர்நிலையாதலின் உண்மை அறிந்த உயர்ந்தோர் உறையும் உலகமுழுவதிலும் சிறந்து விளங்குவதாயிற்று.

பரிகொள்வதற்காக அரசர் தம்மிடம் ஒப்புவித்த பொருள்களை அவ்வுத்தேசத்திற்கு மாறுபாடாய்ச் செலவு செய்தது தகுதியா? இது நம்பிக்கைத் துரோகமும் ஒப்புவித்த பொருள்களை அபகரித்ததுமாகிய குற்றமாகாதா? என்று சிலர் கேட்கக் கூடும். சிறிது ஆராய்ச்சிசெய்யின் பற்றற்ற நிலையில் இது குற்றமாகாதென்பது ஆய்வார்க்குத் தெளிவுற விளங்கும்.

அரசன் பரிவாங்கற்கென்று ஒப்புவித்த பொருளைத் திருப்பணியில் செலவிட்டதோ எனின் அது பக்திமார்க்கத்தின்பாற் பட்டதாகும். அடி படியெடுத் தொழுகற்பாற்றன்று. அது சுவாமிகள் பக்திமுதிர்ச்சியால் தற்போதமிழந்து செய்த செயல். சுவாமிகள் திருவுள்ளத்தே தீங்கொன்றுமிருந்ததில்லை ஆதலின் அச்செயலால் அவர்கட்குக் கேடெய்தவில்லை. அப்பொருளைச் செலவழித்துச் செய்த அறங்களான்வந்த புண்ணியம் அப்பொருட்குடையானாகிய பாண்டியனிடத்திலேயே சேர்ந்தது என்பது தம் "மாணிக்கவாசகர்" என்ற நூலில் ஆசிரியர் ச. திருச்சிற்றம்பலம்பிள்ளை அவர்கள் கூற்று.

"மறந்தாறு கடந்த செங்கோல் வழுதிநின் பொருள்கள் எல்லாம்
அறத்தாற்றி னிட்டப் பட்ட அனையவை புரித மான
திறத்தாலே நமக்கும் நம்மைச் சேர்ந்தவர் தமக்கும் ஆர்வ
முறத்தாவில் வாத வூரன் உதவினன் ... ..."

என்றும்,

"......... வேட்கை என்பால் வைத்துனக் கிம்மை யோடு
மறுமையும் தேடித் தந்த உத்தமன் ....".

என்றும் வரும் திருவிளையாடற்புராணக் கருத்துக்களையும் காண்க. உண்மை உணர்வோடு செய்யும் அறம் எவ்வாறு யாரைச் சாரும் என்னும் உண்மை இதனுல் விளக்கப்பட்டு உள்ளது.

"ஒழித்த நோன்பினர் ஆடலர் பாடலர் உலகம்
பழித்த செய்கையர் அழுகையர் நகையினர் பாசங்
கழித்த கண்களால் அரனுருக் கண்டுகொண் டுலகில்
விழித்த கண் குரு டாய்த்திரி விரரும் பலரால்."

என்பது நமது சுவாமிகள் அப்போதடைந்தநிலை. இதனுட் கருத்தை ஓர்ந்துணர்க.

"முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி யவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்து மவனுக்கே பிச்சியானுள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றுள் அகலிடத்தார் ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள் தன் நாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் ருளே."

என்ற திருநாவுக்கரசர் அருள்வாக்கின்படி இறைவன்பால் ஈடுபட்ட ஆன்மா தன்னையும் உலகத்தையும் துறந்து அதனுல் உலக ஆசாரத்தையும் மறந்து அவன் பாதமே தலைக்கூடி நிற்ப தாகிய தன்மையை அடையும் என்ற உண்மை விளங்கும். இந்நிலை சிவனருள் பெற்ருர்க்கே கிட்டுவதொன்ரும்.

அன்றியும் மற்ருெருவகை நியாயத்தாலும் இதனைஆய்வோம். இவ்வுலகமும் இவ்வுலகிடையுள்ள அனைத்து ஆன்மாக்களும் பரமேசுவரனுக்கு அடிமையாயுள்ளன. அவனே உலகமும் உயிர்களும் ஆகிய எல்லாவற்றிற்கும் உடையவன். இவற்றை யெல்லாம் தன் உடைமைப் பொருள்களாகக்கொண்டு ஆள் பவன். இது அனைத்துச் சாத்திரங்களுக்கும் ஒத்த முடிபாகும் உண்மை. இதனை ஒத்துக் கொள்ளாத சமயம் சமயமாகா.

"எல்லாமுன் உடைமையே எல்லாமுன்
அடிமையே எல்லாமுன் னுடையசெயலே"

என்ருர் பெரியோரும்.

அடிமைகளுக்குச் சொத்தும் சுதந்தரமும் கிடையாது. ஆதலால் அரனுராகிய அடிமைதந்த சொத்துக்களை உண்மையில் அவற்றின் உடையானுகிய சர்வேசுவரன் என்ற தலைவனிடம்சேர்த்து அவன் கட்டளையிட்டபடி சுவாமிகள்செய்தார் என்பதில் என்ன விரோதம் அல்லது மாறுபாடு உண்டு?

"என்ன தாகமுன் நினைந்துள பொருளு
மில்ல தாகிய உடலமும் யானு
நின்ன வாகநின் னருள்கொடு நினைந்தேன்
நின்மலாவென நின்றுநின் றுருகா
மன்னு தானைதன் மேலணி கலன்கள்
மதுரை மினவன் வான்பொரு ளிறையோன்
முன்ன தாகவைத் திறைஞ்சினர் அறஞ்சேர்
முதல்வ னூர்முக மலர்வுகொண் டிருந்தார்."

"பெருந்துறை யுறைவா ரன்பு
பெறுந்திரு வடிய ராகி
இருந்தவர் தம்மின் மேன்மை
யெய்தினர் முகத்தை நோக்கித்
திருந்திய பொருளி தெல்லாந்
திருப்பணிக் களியும் மேலாம்
அருந்தவர்க் குதவும் இல்லாது
அலந்தவர்க் கருளும் என்றார்."

— திருவாதவூரர் புராணம் திருப்பெருந்துறைச் சருக்கம் 76, 77.

என்றபடி உடைமைகளை உடையான் கட்டளைப்படிச் சுவாமிகள் உபயோகித்தாரே அன்றி வேறில்லை.

"அத்தாவுனக் காளாயினி யல்லேனென லாமே"

என்ற சுந்தரமூர்த்திசுவாமிகள் திருவாக்கும் இங்கே ஒப்பு நோக்கிக் காணத்தக்கது.

அன்றியும் நமது சுவாமிகள் முன்பு ஒருகாலத்தில் திருக்கயிலாய மலைச்சாரலிலே தவம் செய்துகொண்டிருந்த ஒரு சிவசித்தராயிருந்தார். அவர் ஒருநாள் விண்வெளியிலே உலாவும் போது அவரிடமிருந்த கவன குளிகை ஒன்று பூமியில் நழுவி விழுந்தது. அதை ஒரு பாண்டிய அரசர் கண்டு எடுத்துக் கொண்டார். அதை மீட்டுப் பெறமாறு இவர் கேட்டார். அதற்காக அரசர் வேண்டுகோட்படி அவரை அழைத்துச்

சென்று கயிலாய மலையைக் காட்டினார். அப்போது அவர் வெள்ளிமாமலையினது பரிசுத்த வெண்மையையும் நயத்தையும் கண்டு வியந்து தம் கைவேலினை அதிலே ஊன்றினார். அம் மலையின் வெள்ளி அவ்வேலிலே படர்ந்து ஒட்டிக்கொண்டு வந்தது. அதனோடு மீண்டும் நகர்வந்து சேர்ந்தார். அவ்வேலினைத் தம் பண்டாரத்திலே இட்டார். அதனைத் தாம் அறியாதிருந்தார் என்றாலும் அதற்கு உடந்தையாயிருந்தமையின் இவர் உலகிலே அவதரித்து அப்பொருளை வாங்கி மீட்டும் உடையானிடம் சேர்ப்பித்தார். இவ்வாறு ஒரு பழையவரலாறு புராணங்களிலே கேட்கப்படுகிறது. இது ஆய்வுக்குரியது.

" ... ... வல்வினையேன் றன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே.

— திருவாசகம் சிவபுராணம்.

பரமா னந்தப் பழங்கட லதுவே
கருமா முகிலிற் றோன்றி
திருவார் பெருந்துறை வரையி லேறித்
திருத்தகு மின்னொளி திசைதிசை விரிய
ஐம்புலப் பந்தனை வாளர விரிய
வெந்துயர்க் கோடை மாத்தலை கரப்ப
நீடெழிற் றோன்றி வாளொளி மிளிர
எந்தம் பிறவியிற் கோப மிகுத்து
முரசெறிந்து மாப்பெருங் கருணையின் முழங்கிப்

பூப்புரை யஞ்சலி காந்தள் காட்ட
எஞ்சா இன்னருள் நுண்டுளி கொள்ளச்
செஞ்சுடர் வெள்ளந் திசைதிசை தெவிட்ட வரையுறக்
கேதக் குட்டங் கையற வோங்கி
இருமுச் சமயத் தொருபேய்த் தேரினை
நீர்நசை தரவரு நெடுங்கண் மான்கணம்
தவப்பெரு வாயிடைப் பருகித் தளர்வொடும்
அவப்பெருந் தாப நீங்கா தசைந்தன
ஆயிடை வானப் பேரியாற் றகவயின்
பாய்ந்தெழுந் தின்பப் பெருஞ்சுழி கொழித்துச்
சுழித்தெம் பந்தமாக் கரைபொரு தலைத்திடித்து
ஊழூ ழோங்கிய நங்கள்
இருவினை மாமரம் வேர்பறித் தெழுந்து
உருவ அருள்நீ ரோட்டா வருவரைச்
சந்திரன் வான்சிறை கட்டி மட்டவிழ்
வெறிமலர்க் குளவாய் கோலி நிறையகில்
மாப்புகைக் கரைசேர் வண்டுடைக் குளத்தின்
மிக்கொள மேன்மேன் மகிழ்தலி னோக்கி
யருச்சனை வயலுள் அன்புவித் திட்டுத்
தொண்ட வுழவ ராரத் தந்த
அண்டத் தரும்பெறன் மேகன் வாழ்க
கரும்பணக் கச்சைக் கடவுள் வாழ்க
அருந்தவர்க் கருளு மாதி வாழ்க".

— திருவாசகம் - திருவண்டப்பகுதி.

3. தொடர்பு நீத்தல்

"சுவைஒளி ஊறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு."

மேலதிகாரத்திலே நாம் கண்ட முறையாக நமது மணிவாசகப்பெருமான் ஆசாரியமூர்த்திகளுடைய கருணை விசேடத்தினலே கடைக்கணிக்கப்பட்டு,

"சித்தமல மறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தனெனக் கருளியவா ருர்பெறுவார் அச்சோவே."

என்றபடி சிவமாக்கப் பெற்றவராய் ஞானவடிவினராய்த் தம்மையும் உலகத்தையும் மறந்து சிவாநந்தத்திலே அமிழ்ந்த நிலையிலே வீற்றிருந்தார். தாம் கொண்டுவந்த பொருள்களையும் ஆசாரியருடைய ஆணையின்படி அரன்பணிக்கும் அடியார் பணிக்குமாகக் கொடுத்து உதவினர். கூடவந்த பரிசனங்கள் பலநாளும் இவர் செயலைப் பொறுத்துப் பார்த்தார்கள். இவர் திறம் வேறுபட்டு ஒழுகும் தன்மைகண்டு குதிரைகொண்டு மதுரைக்குச் செல்லவேண்டுமே என்னும் செய்தியை இவருக்கு நினைவூட்டப் பலமுறை முயன்ருர்கள். எந்த ஒன்றும் இவர்திறத்துப் பயன்படவில்லை. அவர்களது முயற்சி விழலுக் கிறைத்த நீராயிற்று.

அரசருக்கு நாம் இதனைக் கண்டபடி அறிவித்துவிடுவோம்; அதுவே நமது தலையாய கடமையுமாகும் என்று மனத்துள் துணிவு கொண்டார்கள். அப்பரிசனங்கள் சேனையுடன் கூடி மதுரைக்குத் திரும்பிச் சென்ருர்கள். அரசரை அடைந்து அடி வணங்கி நடந்தவற்றை அரசருக்கு விளங்க எடுத்துக் கூறினர்.

அரசர் பெருமானே! தேவரீர் அமைச்சர் பெருமானை அளவற்ற செல்வங்களுடனும் சேனை முதலிய பரிசனங்களுடனும் குதிரை கொள்வதற்காகக் கீழைக்கடல் துறைமுகத்துக்கு அனுப்பிய வரலாறு அது; ஆனல் அமைச்சர் பெருமான் திருப்பெருந்துறையிலே சென்று ஆசாரியரைப் பிடித்துக்கொண்டு தாம் கொணர்ந்த பொருள்களைச் சிவத்திருப்பணிகளிலே செல

விட்டுநிற்கும் வரலாறு இது; என்று தாங்கள் கண்டது கண்ட வாறே உற்ற செய்திகளையெல்லாம் விளங்க எடுத்துரைத்து வணங்கி எதிரில் அச்சத்துடன் நின்றார்கள்.

உடன் அரசர் மிகக் கோபங்கொண்டு, கொண்டுபோன பொருள்களையாவது அல்லது அவற்றால் கொள்ளப்பெற்ற குதிரைகளையாவது உடன்கொண்டு மேலும் காலம் தாழ்க் காமல் மதுரைவந்து சேரும்படி அமைச்சர் பெருமானுக்குத் திருமுகம் எழுதி விடுத்தார். அதனைக் கையேற்ற மாணிக்க வாசகர் அதன் பொருளை உணர்ந்து இறைவனிடத்தே குறை யிரந்து விண்ணப்பித்தார்.

" அன்றே யென்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே யனையாய் என்னையாட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ
எண்டோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே ".

ஆவணி மூலத்தன்று நாமே குதிரைகளைக் கொண்டுவரு வோம். நீ முன்னே சென்று அரசனுக்கு இச்செய்தியைச் சொல்வாயாக! என்று திரு ஆணை பிறந்தது. மணிவாசகப் பெருமான் அதனை ஏற்றுக்கொண்டார். ஆசாரிய மூர்த்திக ளிடம் பிரியாவிடைபெற்றார். உடன் மதுரையை அடைந்தார். திருவாலவாய்ப் பெருமானை வழிபட்டார். பின்னர் அரசரிடம் சென்றார். தாம் ஆசாரிய மூர்த்திகளுடைய ஆணையைப் பின் வருமாறு மன்னனுக்கு அறிவித்தார்.

கொற்றவர் பெரும! குதிரை வாங்குவதற்கு நாம் கொண்டு போன பொருள்களுக்கு அளவில்லை. கொண்ட குதிரைகளுக் கும் அளவில்லை. அவை ஆவணி மூலநாளன்று இங்கே வந்து சேரும். அவற்றின் பெருமையினால் உனக்குத் துரங்கபதி என்ற பேரும் பெரும்புகழும் வரப்போகிறது என்று உணர்த் தினார்.

அரசர் கேட்டவுடன் மனம் மிக மகிழ்ந்து வரிசைகள் பல சிறக்கச்செய்து மாணிக்கவாசகரை விடைகொடுத்து வீட்டிற் கனுப்பினார். அவரும் தம் இல்லம்போய்ச் சேர்ந்தார்.

சேர்ந்தவுடனே அவருடைய நண்பர்களும் சுற்றத்தார்களும் மற்றும் அவரைச் சார்ந்தவர்களும் பின்வருமாறு "இடிமழை வாய்விட்டாற்போல் புத்திகள்" சொல்ல ஆரம்பித்து விட்டார்கள். ஐயா! அமைச்சுத்தொழிலிலே அமர்ந்து அரசர்களிடம் சேவகம்செய்வது பிராமண அறமேயல்ல. அவ்வாறன்றி ஒருவேளை அத்தொழிலிலே அமர்ந்தாலும் அரசர்களுக்கு ஏற்ற காரியங்களையே செய்தல்வேண்டும் என்று இராசதந்திர நூல்கள் கூறுமே. அரசியலும் அமைச்சியலும் நன்றாக அறிந்த தங்களுக்கு நாங்கள் சொல்லவேண்டியது என்ன இருக்கின்றது? நீர் செய்வதொன்றும் நன்றாவதில்லை. குதிரைகள் இன்னநாள் வருமென்று அரசரிடம் அறுதியிட்டு இன்றைக்குச் சொல்லி விட்டீர். நாளைக்கு என்ன கூறப்போகிறீர். உங்களுடைய உறவினர்களையும் நண்பர்களையும் மற்றும் சார்ந்தவர்களையும் காப்பாற்றவேண்டும் என்ற கடமை உமக்கு இல்லைபோலும். உம்முடைய செயல் உமக்கே அழகாயிருக்கிறது என்று பல வாறாக எடுத்தும் இடித்தும் கூறினார்கள்.

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்."

என்ற வள்ளுவர் வாய்மொழியும் இதனையே வற்புறுத்துவது காண்க.

அதற்கு மாணிக்கவாசகர் உலகத் தலைவராகிய சிவபிரான் எம்மை என்றைக்கு வலியவந்து ஆட்கொண்டாரோ அன்றே நாம் இவ்வுலகத் தொடர்புகளையும் அது தொடர்பான உறவு முறைகளையும் நீத்துவிட்டோம். இன்பம் துன்பம் என்ற இரண்டுவகையான மாறுபட்ட அனுபவங்கள் எமக்கு இல்லை. இந்த உடம்பைப்பற்றியதாகிய உடலாசை எமக்குத் தீர்ந்து விட்டது. வெறுக்கை என்று பேர்பெற்ற செல்வம் வெறுக்கை (வெறுப்பு) ஆயிற்று. கோபத்தையும் அகங்காரத்தையும் கோபித்து நாம் நீக்கினோம். நல்வினை தீவினை என்ற இரண்டும் எமக்குச் சமமே. இப்படியானால் உமக்குத் தந்தை தாய்முதலிய சுற்றத்தார்களும் மனைவி மக்களும் யாவர் என்று நீங்கள் என்னைக் கேட்கலாம். அனைத்து உலகங்களுக்கும் சுகத்தைச் செய்கின்ற காரணத்தாலே இறைவர் சங்கரன் என்று பெயர் பெறுவார். சங்கரன் என்னும் சிவபெருமானே எமக்குத் தாயும் தந்தையும் குருவும் ஆசாரியரும் ஆவர். நிராசை எனப்பெறும்

மனோநிலையே எமக்குப் பெண்டிரும் மக்களும் மற்றும் உள்ள உயிர்ச்சார்புகளும் ஆகும். சிவனடியார்களே எமக்கு உறவினர்கள். எழுவகையாக வகுத்துச் சொல்லப்பெறும் பிறவியே நம்மால் பகைக்கப்படுவது அல்லது ஒதுக்கப்படுவது.

ஊரிலே விடுகள்தோறும் சமைக்கப்பெறுகின்ற சோறு எல்லாம் எம்முடையதே. எங்கே வேண்டுமென்றாலும் எமக்குப் பிச்சை உண்டி கிடைக்கும். உலகத்திலே உள்ள தரை முழுதும் எமக்குப் படுக்கும் பாயலாகும். எங்கு வேண்டினும் நாம் படுத்துக்கொள்வோம். கருந்துணிகள் பல தொடுத்து இசைத்த ஒரு துணியே எமக்குச் சிறந்த பட்டாடையாகும். களபகஸ்தூரியோடு கூடிய சாந்தமாக யாம் கருதிப் பூசுவது சிறந்த தெய்வத்திருநீறே ஆகும். உருத்திராக்கமே எமக்கு உற்ற ஆபரணம். இன்றைய நாளே எமக்கு மரணம் வந்து இறக்க நேரிட்டாலும் நல்லதேயாம். அல்லது என்றைக்கும் நிலையுடையதாக இருக்கும் வாழ்வு அடியேனுக்கு வந்தாலும் வரட்டும்.

அரசன் உம்மீது கோபித்தால் என்னசெய்வீர் என்று கேட்டீர்கள். அரசன் இந்த உடம்பின்மீது தானே தன் ஆணையைச் செலுத்துவான். உடலின்மீதாசையோ எமக்கில்லை. உடம்பின் மீது அரசன் விதிக்கக்கூடிய உயர்ந்த தண்டனையாவது உடலினின்றும் உயிரைப் பிரித்தல்தானே. மரணத்திற்கு நாம் என்றும் பயப்படுகிறதில்லை என்று முன்னமே சொல்லிவிட்டபடியாலே அரசனுடைய மூண்ட கோபந்தானும் எமக்குப் பயத்தை உண்டாக்காது. நமனையஞ்சோம். ஆதலால் நாம் யார்க்கும் குடியல்லோம். நரகமும் இனி என்றும் எமக்குக் கிடையாது.

ஆகையினாலே அரசன் ஒறுத்தாலும் சரியே; அது செய்யாமல் எமக்கு உவகை ஊட்டினாலும் சரியே. இம்மையிலே சுகமோ துக்கமோ, அல்லது அரசனது ஆணையோ வரிசையோ பெறுதல் நிற்க, இவ்வுலகை விட்டபின் மறுமையிலே தேவலோக போக இன்பம் வந்தாலும் சரியே; அல்லது நரகத் துன்பம் எமக்கு வந்தாலும் சரியே; யாம் எப்போதும் இடைவிடாது அனுபவிப்பது சிறந்த ஆனந்தமாகிய இன்பமே தவிரத் துன்பமில்லை. எம்மைப் பந்தம் நீக்கி ஆட்கொண்ட ஆசாரிய மூர்த்திகளாய சிவபெருமானைமட்டும் நாம் என்றும் மறக்கவே மாட்டோம்.

மெய்தரு வேதியனுகி வினைகெடக் கைதரவல்ல கழுநீர் மலேக் கடவுளாகிய, கோமாற்கே நாம் என்றும் மீளா ஆளாகி, அவன் கொய்ம்மலர்ச் சேவடியினையே குறுகி நின்றேம். அதுவே எமக்கு என்றும் ஆராத இன்பமுமாகும்.

"தேவர்கோ வறியாத தேவ தேவன்
செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்கு மற்றை
மூவர்கோ ஞய்நின்ற முதல்வன் மூர்த்தி
மூதாதை மாதாளும் பாகத் தெந்தை
யாவர்கோ னென்னையும்வந் தாண்டு கொண்டான்
யாமார்க்குங் குடியல்லோம் யாதும் அஞ்சோம்
மேவினே மவனடியா ரடியா ரோடு
மேன்மேலும் குடைந்தாடி யாடு வோமே."

—திருவாசகம் - திருச்சதகம் 30.

ஆனுல் சிவபெருமானைச் சேர்ந்த காரணத்தாலே இன்பமே, எந்நாளும் துன்பமில்லை என்கிற உமக்கு இம்மை மறுமை களிலே துன்பங்கள் விளைவானேன். இன்பமேயன்றே வருதல் வேண்டும்? என்று நீங்கள் வினவலாம். நம்முடைய பண்டைப் பழவினையாகிய பிராரத்தவினைகள் வருமாயின் அவற்றை நாமே அனுபவித்துக் கழிப்பதன்றி மாற்றுவார் யார்? ஆதலால் நீங்கள் சொல்வனயாவும் பயனில்லாத சொற்கள். உலகம் என்ன தன்மையுடையது? அதிலே வாழ்கின்ற ஆன்மாக்கள் என்ன தன்மையுடையன? உடையாஞகிய இறைவன் என்ன தன்மையுடையவன்? என்ற உண்மையை உணராதபடியி ஞலே நீங்கள்இவ்வாறு கூறத் துணிந்தீர்கள். உம்மால் இங்கு என்ன குறையுடையேன் யான்? அம்மானுக்காளாயினேன்; அலையேன்மின் நீர் என்று மறுத்து அந்தச்

"சுற்ற மென்னுந் தொல்பசுக் குழாங்கள்
பற்றி யழைந்துப் பதறினர் பெருகவும்"

அவர்களை ஒதுக்கினுர். அவர்களும் அஞ்சி ஒதுங்கிவிட்டார் கள். சுவாமிகள் தம் திருமாளிகையிலே இனிது வீற்றிருந்தார். அந்நிலையில் தன்னையே தான்மறந்தார்.

நமது மாணிக்கவாசகசுவாமிகள் இவ்வுலகினையும் அதிலே உள்ள உயிர்ச்சார்பு பொருட்சார்புகளையும் உள்ளபடியே

உணர்ந்து அவற்றின் தத்துவங்களை அறிந்து நின்றாராதலின் இவ்வாறு தாம் உலகின்வழியே சென்றுவிடாமல் தம்மை ஐந்து புலனும் பின்செல்லுந்தகையராய் விளங்கினர். அதாவது உலகம் போகும் வழியே தாம்போகாமல் தாம்போகும் வழியே உலகம் தம்மைப் பின்பற்றிப்போகும் நிலைமையை உற்றாராயினர். இதுவே அவர் உபதேசத்தால் அடைந்த உயர்வு.

உலகத்திலே ஓசை என்ற ஒன்றினாலே கேடு அடைவது அசுணம் என்ற பறவை. ஒளி என்ற ஒன்றினாலே கெடுவது விட்டில். இதுபோலவே தனித் தனியே ஏனைச்சுவை, ஊறு, நாற்றம் என்றவற்றாற் கெடுவனபிற. இவ்வாறு இவையைந்தில் ஒவ்வொன்றே உயிர்களுக்குக் கேடு நிகழ்த்தப் போதுமான தென்றால் இவ்வைந்தும் ஒருபொருளிலே தங்கி அப்பொருள் தானும் மனிதனைத் தாக்கினால் மனிதன் கேடடைவதற்குக் காரணம் வேறு கேட்பானேன்.

" கண்டுகேட்டு உண்டுஉயிர்த்து உற்றுஅறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள."

என்பது ஆதாரமாகையினாலே இவ்வைந்தும் ஒருங்கேவைத்த பெருந்தூண்டிலாகிய இப்பெண்மாயையிலே பட்டவன் அதிற் பட்டு நின்று உழன்று இறந்துபடுவன் என்பது திண்ணம்.

" செழிகின்ற தீப்புகு விட்டிலிற் சின்மொழி யாரிற் பன்னாள்
விழுகின்ற வென்னை விடுதி கண்டாய் ...." (5)

" வலைத்தலை மானன்ன நோக்கியர் நோக்கின் வலையிற் பட்டு
மிலைத்தலைந் தேனை விடுதி கண்டாய் ...... ". (40)

" உழைதரு நோக்கியர் கொங்கைப் பலாப்பழத்து ஈயின் ஒப்பாய்
விழைதரு வேனை விடுதி கண்டாய் ...... ". (46)

" காருறு கண்ணியர் ஐம்புலன் ஆற்றங் கரைமரமாய்
வேருறு வேனை விடுதி கண்டாய் ...... ". (3)

" ஆனைவெம் போரிற் குறுந்தா ரெனப்புல னாலைப்புண்
டேனையெந் தாய்விட் டிடுதி கண்டாய் ......". (21)

" எறும்பிடை நாங்கூ ழெனப்புல னாலரிப் புண்டலந்த
வெறுந்தமி யேனை விடுதி கண்டாய் ......". (25)

"புலன்கள் திகைப்பிக்க யானுந்திகைத் திங்கோர் பொய்ந்
விலங்குகின் றேனை விடுதி கண்டாய்.... ". [நெறிக்கே (28)

"மத்துறு தண்டயி ரிற்புலன் றிக்கது வக்கலங்கி
வித்துறு வேனை விடுதி கண்டாய் ......". (30)

—நீத்தல் விண்ணப்பம்.

இவ்வாறு பொய்ம்மாயப் புலன்களால் அடரப்பட்டவன்.

"............பெரும் பிறவிப் பௌவத் தெவ்வத்
தடந்திரையா லெற்றுண்டு பற்றொன் றின்றிக்
கனியைநேர் துவர்வாயார் என்னுங் காலாற்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்டு".

"வேனில்வேள் மலர்க்கணைக்கும் வெண்ணகைச்செவ்
வாய்க் கரிய
பானலார் கண்ணியர்க்கும் பதைத்துருகும்
பாழ்நெஞ்சு" உடையவனாய்,

மயங்கி அதனாலே உண்டாகிய சுற்றமென்னுந் தொல் பசுக்குழாங்களைப் பற்றிக்கொண்டு அவர்கள் காரணமாகப் பொன்னும் மண்ணும் போகங்களும் வேண்டி உடம்பை வளர்த்து உலகத்திலே தான் வந்த காரியத்தை மறந்து இறை உணர்ச்சி இன்றி உழன்று உழன்று இறப்பன். ஆனால் இப் படிப் பகையான இந்தப் புவனங்களையும், இப்புவனங்களிலே உள்ள போகங்களையும், அப்போகங்களை அனுபவிக்கும் கரணங் களையும், அவற்றைக்கொண்ட தனுவாகிய இவ்வுடம்பையும் இறைவன் ஏன் கொடுக்கவேண்டுமென்று கேட்கலாம்.

பிராரத்த வினைகளின் பயனாக வரும் நல்வினை தீவினைகளை அனுபவித்தே கழிக்கவேண்டுமாதலால் அப்பிராரத்த வினைப் பயன்களை அனுபவிக்கப் போகமும் புவனமும் கரணமும் தனுவும் வேண்டுவனவேயாம். இப்படிப் பிராரத்தமாக வரும் வினைகளை அனுபவித்துக் கழிப்பதற்கல்லாது மேலும் மேலும் இவற்றால் வினைகளைப் பெருக்கிக்கொண்டு கர்ம மூட்டை கட்டிப் பிறவிப் பிரயாணம் செய்துகொண்டே இருப்பதற்காக இவை நமக்குக் கொடுக்கப்படவில்லை. மேலும்,

"ஒருபுலன் நுகரும் போதங் கொன்றிலை
வருபயன் மாறி மாறி வந்திடும்."

என்றபடி சுவை முதலிய இவ்வைந்து புலன்களும் மாறி மாறி நின்று ஆன்மாவை மயக்கிவிடும் வழிகளாயுள்ளன.

" மாறுபட் டஞ்சென்னை வஞ்சிக்க யானுன் மணிமலர்த்தாள்
வேறுபட் டேனை விடுதி கண்டாய். "

இம்மயக்க வழிகள் ஐந்தையும் அடைக்கப்பெற்று வேறு ஒரு வழியிலே அவை செலுத்தப்பெறுதல் வேண்டும்.

" மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத் தமுதே
ஊறிநின் றென்னு ளெழுபரஞ் சோதி."

என்றும்,

" சிந்தனைநின் றனக்காக்கி நாயி னேன்றன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையு மம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கியைம் புலன்களார
வந்தெனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே யிரண்டுமிலித் தனிய னேற்கே."

என்றும் சுவாமிகள் இவ்வகையைத் தெரிவித்தருளினர். இப்படி உண்முகமாயுள்ள உண்மைவழியிலே ஐந்தினையும் செலுத்தப்பெறுவான் என்றால் அவ்வான்மாவானவன்,

" காட்டா தனவெல்லாங் காட்டிப் பின்னும்
கேளா தனவெல்லாங் கேட்பித்து
மீட்டேயும் பிறவாமற் காத்தாட் கொள்ள"ப் பெறுவன்.

சுவை ஒளி ஊறு ஓசை நாற்றமாகிய புலன்களைந்தும், இவற்றிலே தோன்றும் பூதங்களைந்தும், இவற்றை அறியும் மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஞானேந்திரியங்கள் ஐந்தும், இவற்றிலே தொழில் செய்யும் கன்மேந்திரியங்கள் ஐந்தும், இவ்வறிவை ஆன்மா உணர்தற்குக் கருவிகளாகிய மனம் சித்தம் புத்தி அகங்காரம் என்னும் அந்தக்கரணங்கள் நான்கும், அறியும் ஆன்மாவும் ஆக ஆன்மதத்துவங்கள் இவ் வகையே இருபத்தைந்தாகும் என்றும், இவ்வாறு உலகத்தை

யெல்லாம் இவ்வைந்தின் கூறுபாடுகளாகிய வகையாலே உணர்தல் வேண்டுமென்றும், இவ்வைந்தின்வழியே சென்ருல் இவை தன்னைப் பிறவித் துன்பத்துக்கே ஆளாக்குமென்றும், அவ்வழிச் செல்லாது அவற்றை இறைவன் வழியே செலுத்திஞல் இவையே தன்னைப் பிறவிநீக்கி மீளா இன்பத்தில்வைக்க ஏதுவாக ஆகுமென்றும்,

"பெற்றசிற் றின்பமே பேரின்ப மாமென்றும்
முற்ற வரும்பரி சுந்தீபற
முளையாது மாயைஎன் றுந்தீபற."

என்ற ஆன்ருேர் திருவாக்கின்படியே தெரிந்து ஆன்மாமேல் உள்ள வித்தியாதத்துவங்கள் ஏழனையுங்கடந்து,

"பேணுதத்துவங்கள் என்னும் பெருகு சோபானமேறி
ஆணையாஞ் சிவத்தைச்சார அணை"தல் வேண்டுமென்றும்,

இவ்வாறு ஏறிச் செல்லுவதைவிட்டு இறங்கிச் செல்லுதல் கூடாதென்றும் இதுவே இவ்வைந்தினது வகையென்றும் உணர்ந்தார் நமது மணிவாசகர். இவ்வாறு இவ்வைந்தின் வகையறியாது ஏனைய ஆன்மாக்கள் பொய்யுலகம் கண்டு அதன்வழியே சென்று அவ்வுலகத்தின் கண்ணே தாம் நிற்பர். நமது சுவாமிகள் அவ்வாறன்றி ஐந்தின்வகையை மேற்போந்தபடி அறிந்தாராதலின் உண்மை உலகம் அவர் கண்ணதாய் நின்றது. இதனையே வள்ளுவர் தலைப்பில்கண்ட குறளில் வலியுறுத்துகிருர். அவற்றின் உட்பொருளுக்கு உற்ற சான்ருக விளங்கியவர்களே நமது சுவாமிகள் ஆவார்கள்.

4. அருஞ்செயல்கள்

" செயற்கரிய செய்வர் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்."

குதிரைகள் வருமென்று சுவாமிகள் குறித்த காலம் கடந்தது. அவர் சொல்லியபடி குதிரைகள் வாங்கப் பெறவில்லையென்றும், அவை வருதல் கூடாதாகும் என்றும் அமைச்சர்களாலும் ஒற்றர்களாலும் அரசர் உணர்ந்தார். மிகுந்த கோபத்தோடு தண்டலாளர்களைக்கூவி 'இவரைக்கண்டித்துச்சிறையில் வைத்தேனும் என் பொருள்களை எல்லாம் வாங்குங்கள்' என்று ஆணை கொடுத்தார். அவர்கள் அப்படியே மிக்க கோபத்தை மேற்கொண்டவர்களாய் நமது சுவாமிகள்மீது சீறிச் சினந்து அவரைப் பிடித்து அவர்மீது பாரமாகிய கற்களை ஏற்றிச் சுமக்கச்செய்தும், வெயிலிலே நிறுத்தியும், கை கால்களிலே தளை பூட்டியும் பலவாறு மிகுந்த துன்பப்படுத்தினர்கள். ஆனல் அந்தப் பாரங்களையும் துன்பங்களையும் நமது சுவாமிகள் அனுபவிக்காமலும், அவற்ருல் வருந்தாமலும் அவர்க்குள்ளேயிருந்து உயிர்க்கு உயிராகிய பரமேசுவரன் தாங்கியாற்றினர்.

" ... ... அன்பர்,
தன்னெடும்பார மெல்லாம் தாங்குவா ரவரே யன்ருே ."

அன்பருடைய துன்பத்தைப் பார்க்கப் பொறுக்காதவன் போலவும், பார்த்திருத்தல் பாவம் என்று கருதினன்போலவும் சூரியன் மேல்கடலிலே குளித்து மறைந்தான். மாலை வந்தது.

" மாலையின், தாங்குருவே போலும் சடைக்கற்றை "

என்றபடி சிவபிரான் நேரே அன்பர் துன்பம் அகற்றவேண்டிச் செஞ்சடைதாங்கிச் செம்மேனித் திருவுருவம்கொண்டு எழுந்தருளியதுபோலச் செக்கர்வானம் பரந்தது. அதிலே விளங்கிய பிறைக்கோடானது பெருமானுடைய மார்பிலே ஆபரணமாக விளங்கும் பன்றிக் கொம்புபோலப் பிரகாசித்தது. நட்சத்திரங்கள் அவர் திருமேனியிலே தரித்துநிற்கும் பிரம விஷ்ணுக்களின் சிரமாலை வரிசைபோன்றன. பெரியோர்க்கு வரும் தீங்கைக் கண்டு சிரிக்கும் சிறியோர் செய்கைபோல முல்லைகள் மலர்ந்தன. பெரியோர்க்குற்ற தீங்கினை உணர்ந்த பெரியோர் மனம்

போலத் தாமரைகள் குவிந்தன. சிவனடியாரை அறியாது சிறையிட்ட மன்னவன் படுபுகழ்போல இரவானது இருளொடு படர்ந்தது. உலகத்தை இன்பத்தில்வைத்த அன்பரைச் சிறை வைத்தது பொருதவர்களாய் மதுரையில் உள்ள மன்னுயிர்கள் எல்லாம் நாயகனை அகன்ற நாயகிகள்போலத் துயிலிழந்து வருந்தின. இரவு கடந்தது. புலரியும் வந்தது.

அன்பருடைய துன்பத்தை உரிமையாலே இறைவனிடத்து அறிவித்து நீக்கித்தரும்படி இறைவனது புத்திரரும் தம் இறை வருமாகிய அறுமுகப்பெருமானுக்கு எடுத்துச் சொல்வன போலக்கூவினகோழிகள். இச்செய்தியைக்கருணையங்கடலாகிய சோமசுந்தரக்கடவுளிடத்தே முறையிட்டுக் கொள்வனபோலக் குருகுகள் இயம்பின. இயம்பின சங்கம். இவ்வகையே இரவு கழிந்து சென்றது. அன்பர் பெருமானும் தம்மையாண்ட பெருந்தகையை நினைந்து பாட்டும் பாடிப் பரவிப் பணிந்து நின்றார்.

"பூங்கமலத் தயனெடுமால் அறியாத நெறியானே
கோங்கலர்சேர் குவிமுலையாள் கூறு வெண்ணீறுடி
ஓங்கெயில்சூழ் திருவாரூர் உடையானே அடியேன்நின்
பூங்கழல்கள் அவையல்லாது எவையாதும் புகழேனே."

"சடையானே தழலாடி தயங்குமூ விலைச்சூலப்
படையானே பரஞ்சோதீ பசுபதீ மழவெள்ளை
விடையானே விரிபொழில்சூழ் பெருந்துறையாய் அடியேனுன்
உடையானே உனையல்லால் உறுதுணைமற் றறியேனே."

இளஞ்சிறார் அழுகைகேட்டு விரைந்துவரும் தாய்போல அனைத்துலக அன்னையாகிய ஆண்டவனும் அடியவர் துயர் நீக்கும்பொருட்டு அரசனுக்குக் கொடுக்கும் குதிரைகளின் சேவகனாய்க் கோலம் கொள்வானாயினான். காட்டில் திரியும் நரிகள் எல்லாம் கண்ணுதற்பெருமான் ஆணையினால் உத்தம இலக்கணங்களையுடைய பரித்திரள்களாய் வந்துநின்றன. கண நாதர்களெல்லாம் குதிரைகளைச் செலுத்தும் மள்ளர்களாயினர். எல்லாம்வல்ல இறைவன் இவர்கள் தலைவனாகக் குதிரைச் சேவகனாக எழுந்தருளினார்.

இவ்வண்ணம் குதிரைப்பந்திகளும் மள்ளர்களும் சேவகரும் மதுரையில் வந்து புகுந்தனர். வருகையினால் எழுந்த புழுதிப்

புயல் மண்ணும் விண்ணும் மறைத்து நின்றது. இதைக்கேள்வி யுற்ற அரசரும் அமைச்சரைச் சிறைவிடுவித்து அறியாதே நான் உம்மை வெறுத்து ஒறுத்தேன் என்று மன்னிப்புக் கேட்டுக் கொண்டு சிறப்புச்செய்து குதிரைகளின் வரவை எதிர்நோக்கிய வராய்த் தன் பக்கத்தில் இருத்திக்கொண்டார். சேவகரும் மள்ளர்களுமாகக் குதிரைகளுடனே வந்து அரசரிடம் சேர்ந் தார்கள்.

"கண்ணாரக் கண்டுமென் கையாரக் கூப்பியும்
எண்ணார எண்ணத்தா லெண்ணியும் - விண்ணோன்
எரியாடி என்றென்றும் இன்புறுவன் கொல்லோ
பெரியோனைக் காணப் பெறின்."

என்றமுறையில் நம் மாணிக்கவாசகசுவாமிகளாகிய அமைச்சர் குதிரைச் சேவகரைத் தம்மைக் குருந்தடியிலே ஆட்கொண் டருளிய குருமூர்த்திகளாகிய இறைவனுகவே தம் இரண்டு கண்களாலும் கண்ணாரக்கண்டு மனமார வாழ்த்தினர்.

"கொற்றக் குதிரையின் மேல்வந்து
கூடிடுமேற் குடிகேடு கண்டீர்."

என்றபடி குடிகெடுத்து "வாழ்வற வாழ்விக்கு மருந்து" வந்து கைகூடிற்று என்று மகிழ்ந்தார்.

"வெள்ளைக் கலிங்கத்தர் வெண்டிரு முண்டத்தர்
பள்ளிக் குப்பாயத்தார் அன்னே என்னும்
பள்ளிக் குப்பாயத்தார் பாய்பரி மேல்கொண்டென்
உள்ளங் கவர்வரா லன்னே என்னும்." என்று

உள்ளமள்ளூற வணங்கிக் களித்துத் திளைத்து நின்றார்.

"வந்தபடி யிவ்வுரு வணங்குமிது வல்லால்
அந்தவடி வாகிலுமே யாரறிய வல்லார்
இந்தவகை கண்டபடி யவர்க்கெளியை என்றே
சிந்தைதனி லன்பொடு தெளிந்ததுல கெல்லாம்."

திருவாதவூரர் புராணம், குதிரையிட்ட சருக்கம் - 25.

வந்த குதிரைவீரர்களில் தலைவர் யாவர் என்று மன்னன்கேட்ப மந்திரியார் அவரை இன்னார் என்று காட்டி அறிவித்தருளினர். "அவனருளே கண்ணாகக் கண்டு" அவனருளாலே அவன்றாள்

வணங்கிநிற்கும் அன்பர்பெருமானர் காட்ட இவன் இறைவன் என்று அரசரும் கண்டார். அரனைக் காட்டி அறிவித்தற்கு ஆசாரியமூர்த்திகளாகிய அவரேயல்லால் வேறு யாவர் வல்லார்? அவ்வுரிமைதான் வேறு யாவர்க்குளது? அவ்வாறு தலைவரைக் காட்டக் கண்ட அரசர் தன்னையறியாமலே எழுந்து கைகள் குவித்து வணங்கி உள்ளமுருகி நின்ருர். அங்கிருந்த ஏனை யோரும் வணங்கி நின்ருர்கள். ஆனுல் ஆணவ மறைப்பு அவர்களை உடனே முன்புபோல மூடவே,

> " .... என்னே யிந்தத்
> தெறுபரி மேல்வந் தாற்கண் டெழுந்தனம் செங்கை கூப்பி
> முறுவல் ஒன்னலர்க் குண்டாக என்றுஉளம் உன்னி உன்னி."
>
> — திருப்பெருந் - புராணம் - மதுரை - விடை - படலம் 35.

நாணமடைந்து நின்ருன். "மதுரைப் பெருநன்மாநகரிலிருந்து குதிரைச் சேவகனுகிய கொள்கையிலே" அத்தலைவரும் "பாவகம் பலகாட்டிக்" குதிரைகளை ஓட்டமும் ஆட்டமும் கண்டு வையாளித்தெருவிலே நடத்தி அரசனுக்குக் காட்டினுர். அரசரும் நூல் வல்லாரைக்கொண்டு குதிரைகளை எல்லாம் ஆராய்ந்து பார்த்துத் தக்கவாறிருக்கக் கண்டு பெருமகிழ்ச்சி யோடு சேவகராற் கயிறுமாறிக்கொடுக்க ஏற்றுத் தம் குதிரைப் பந்தியிலே அவைகளையெல்லாம் சேர்த்துவிட்டார். குதிரைச் சேவகருக்கு ஒரு நல்ல பொன்னுடையை அரசர் அளிக்க அவர் அதைத் தன் கையிலிருந்த செண்டினுலே ஏற்ருர். அது கண்ட அரசரிடத்தே சிறிது கோபக்குறியைப் பார்த்த அமைச்சர், பெருமானே! 'அது அவர்நாட்டு இயற்கை'என்றுசொல்லி அதை ஆற்றினுர். பின் குதிரைச் சேவகரும் மள்ளரும் வந்தவழியே சென்று மறைந்தனர். அரசர் அகமிக மகிழ்ந்து அமைச்சர் பெருமானுக்கு வரிசை மிகச்செய்து விடைகொடுத்தனுப்பினுர்.

அன்றிரவு நடுயாமத்திலே சிவபெருமானுடைய திருவருட் குறிப்பின்வழியே அக்குதிரைகள் யாவும் பழையபடி நரிகளாகி ஊளையிட்டு மதுரைமாநகரம் முழுதும் கலங்கச்செய்து அரச னுடைய பந்தியிலே நின்ற பழைய குதிரைகளையும் கடித்துச் சிதைத்து,தெருக்களிலே ஓடித்திரிந்து மறைந்துவிட்டன. நகரத் தினரும் ஆட்களும் அரசரிடத்தே சென்று முறையிட்டு நிகழ்ந் தனவற்றை அறிவித்து நின்ருர்கள். அரசருக்குவந்த கோபத் துக்கோ அளவில்லை. அமைச்சராகிய அந்தணர்செய்த மோசமே

இது. அவர் வஞ்சனையால் மூண்ட மாயமே இவை என்று துணிந்தார். மிகக் கனன்றார். காவலாளரைக் கூவினார். அவ் வஞ்சகனை மீளவும் சிறையிலிருத்தி வருத்தி என் பொருள்களை எல்லாம் வாங்குமின் என்று கொடிய ஆணைதந்தார்.

கயிறு மாற்றிப் பெற்றுக்கொள்ளும் முன்னமே எல்லாம் சரியாகப் பார்த்துக்கொள், கயிறு மாறிக் கொடுத்தபின் பேச்சு ஒன்றுமில்லை, குதிரைகள் உன்னுடையவை, பணம் என்னுடையதென்று குதிரைச்சேவகர் கூறியதற்கு உடன்பட்டுப் பெற்றுக்கொண்டதையும் மறந்தார். தனக்கு இம்மை ஊதியமும் பரகதியும் உறுதிஎன விளைவிக்கும்நீதியினுல் திருவருளால் அவதரித்த மந்திரியாரையும் கடிந்து கொடுந்தொழில் செய்வாராயினர். அரசருடைய ஆணையின்படியே காவலாளர்கள் அவரைக் கடுஞ்சிறை வைத்துவிட்டனர்.

" அரியொடு பிரமற் களவறி யொண்ணான்
நரியைக் குதிரை யாக்கிய நன்மையும்
ஆண்டுகொண் டருளிய அழகுறு திருவடி
பாண்டியன் றனக்குப் பரிமாவிற்று
ஈண்டு கனக மிசையப் பெறாது
ஆண்டா னெங்கோன் அருள்வழி யிருப்பத்
தூண்டு சோதி தோற்றிய தொன்மையும்."

தம்மனத்தே பதியவைத்து நினைத்து நினைத்துத் துதித்தார்.

" நரியைக் குதிரைப் பரியாக்கி ஞாலமெல்லாம் நிகழ்வித்துப்
பெரிய தென்னன் மதுரையெல்லாம் பிச்ச தேற்றும் பெருந்து [றையாய்
அரிய பொருளே யவிநாசி யப்பா! பாண்டி வெள்ளமே
தெரிய வரிய பரஞ்சோதி செய்வதொன்று மறியேனே."

" குழைத்தாற் பண்டைக் கொடுவினைநோய்
காவா யுடையாய் கொடுவினையேன்
உழைத்தா லுறுதி யுண்டோதான்
உமையாள் கணவா வெனையாள்வாய்
பிழைத்தாற் பொறுக்க வேண்டாவோ
பிறைசேர் சடையாய் முறையோவென்
றழைத்தா லருளா தொழிவதே
யம்மா னேயுன் னடியேற்கே."

என்று பலபலவும் எண்ணிப்பாடினார். பரவினார். பணிந்தார்.

அன்பருடைய துன்பத்தை நீக்குதல்வேண்டி ஐயன் முன்னாள் ஒரன்பர் பொருட்டாய்த் தங்குக என்று சடையைக் கொடுத்த கங்கைக்குப் பொங்குக என்று விடையைக் கொடுத்து வையையிலே சென்று பெருகி மதுரையின்மீது பரவும்படி விடுத்தார். வையை பெருகிற்று. மதுரைமாநகர மெங்கும் பெருவெள்ளம் பரந்தது. நகரம்முழுதும் கலங்கிற்று. உலகினை ஊட்டிவளர்க்கும் அன்னையே! நின்சினம் மாறுவதாக என்று யாவரும் வையையைத் தொழுது வரவேற்றனர். அரசரும் மற்றை மந்திரி முதலாயினோரும் நகரமாக்களும் மிகக் கவன்று வெள்ளத்தைத் தடுத்துத் தத்தம் உயிரையும் உடைமைகளையும் வீட்டையும் நாட்டையும் காவல்புரிதலை மேற் கொண்டனர். நமது சுவாமிகளைக் காவல் புரிதலைக் கை விட்டனர்.

அரசனது அரண்மனையைப் பாதுகாப்போர் சிலர்; மாடங் கள், கூடங்கள், உயர் தெற்றிகள், மதில் நெற்றிகள், கோபு ரங்கள் முதலிய உயர்ந்த இடங்களிலேசென்று நின்று உயிரைப் பாதுகாப்போர் பலர்; வீடுகளிற்சென்று மனைவிமக்கள் மற்றும் உடைமைகளைக் காக்கமுயல்பவர் பலப்பலர்; நகரத்திற்குக் காவல்புரிய முயல்வோர் வேறு சிலர்; என்றிப்படிப் பரந்து சென்று மதுரை மாந்தர்கள் எல்லோரும் மனக்கவலையோடு தொழில் புரிவாராயினர்.

அரசரும் ஏனை அமைச்சர்களை நோக்கி என்னே! எம் ஆலவாய், அண்ணலாய் எல்லார்க்கும் முன்னே தோன்றி முளைத்தானாகிய முன்னவனார் கோயிற் பூசைகள் முட்டுப்பட் டனவோ? மகாதவசிகளாகிய பெரியார்கள் மனது புண்படும் படித் தீமை ஏதாவது யாம் செய்ததுண்டோ? கூற்றுதைத் தான் கோபமும், குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி யும் அன்றி இப்பெரிய உற்பாதமும் தீமையும் நிகழாவே உணர்ந்துரைமின்! என்றார். அமைச்சர்களும் திருவாதவூரரைச் சிறையினின்றும் நீக்கி மகிழ்ச்சி செய்தால் இப்பெரும்புனல் எம்மைச் சிறைசெய்யாமல் அகல்வதும் ஆகும் என்று அளந்து அறிந்து கூறினார்கள். அரசரும் அவ்விதமே அவரை அழைத்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டனர். என்னுடைய பொருளினால் நீர் அறஞ்செய்தால் அதன் பயன் எனக்கே அன்றிப் பிறர்க் காகுமோ? இதை அறியாது அதற்காக உம்மை வருத்தினேன்.

இவ்வுணர்வு முன்னே கூடாதது என்மேல் குற்றமே. மேலே சொல்வதென்? தவத்தலைவரே! வையை நமது நகரைக் கொள்ளாமல் தவிர்க்கவேண்டிய கடமை உம்முடையதே என்று வேண்டினார். அரசர் முன்னே ஒறுத்தபோதும் இப்போது உவகையுடனே ஊட்டியபோதும் வெறுப்பும் விருப்புமின்றி ஒரே தன்மைத்தான மனத்தோடும் மாணிக்கவாசகர் தம்மை ஆட்கொண்டு குதிரைமேல்வந்த குருமூர்த்திகளின் பொன்னார்ந்த திருவடி மலர்களைத் தியானித்தார். வையைக்கரையிலே சென்றுநின்றார். நீரின் மேற்பெருக்கு ஒருவாறு மட்டுப்பட்டது.

பறைசாற்றி நகரத்தாரைக்கூவி எல்லிரும் கரைகளை அடைமின் என்று அவர்களுக்குரைத்து மனச்சாந்தி அடைந்தவராய் திருக்கோயிலை அடைந்து சுத்தவெளியிலே சிவயோகத்தில் அமர்ந்திருந்தார். கரைகளை அடைத்து வெள்ளத்தைத்தடுத்து வசப்படுத்த முயற்சிகள் நடந்தன. நகரத்தார் எல்லோருக்கும் இவ்வெள்ளமடைக்கும் வேலையிலே ஒவ்வோர் பங்கு பிரித்து அரசர் ஆணைப்படி தரப்பட்டது. நகரத்தார் யாவரும் அப்படியே தத்தமக்கு அளந்து தரப்பட்ட பங்குக் கரைகளை அடைக்கின்றார்கள். சேவகர்களும் மேற்பார்வையிடுகிறார்கள்.

அக்காலத்திலே மதுரை மாநகரத்திலே தென்கீழை மூலை மனைகளிலே ஒரு மனையிலே வந்தி என்ற பேரோடுங்கூடிய மூதாட்டியாகிய அம்மையார் ஒருவர் இருந்தார். அவருக்குச் செம்மனச் செல்வி என்ற சிறப்புப் பெயரும் வழங்கப்பெறும். ஆயிரம் பிறைகள் தொழுது பழுத்த மூப்புடையவர். அவருக்குச் சுற்றத்தார் முதலிய உலகப் பற்றுக்கோடானவர்கள் ஒருவருமில்லை. நாள்தோறும் பிட்டு விற்று வயிறு வளர்க்கும் தொழிலுடையவர். அங்கயற்கண்ணி மணாளனாகிய மதுரேசன் திருவடிகளிலே மாறாத அன்புவாய்ந்து எப்போதும் அவனடி மறவாது வந்தித்து அவ்வந்தனையின் பயனாகச் செம்மை பொருந்திய மனத்தையுடையவராய் அந்த நிரதிசய ஆனந்தமாகிய செல்வத்தினைப் பெரிதும் வாய்ந்தவர். தாம் நாளும் அவித்த பிட்டினைச் சோமசுந்தரக் கடவுளுக்கு அன்புடன் படைத்து அதனை விற்று அவ்வூதியத்தினால் அனுதினமும் வாழ்ந்துவரும் அக்கிழவியம்மையாருக்கும் வையைப் பெருக்கிலே கரையடைக்கும் வேலையில் ஒரு பங்கு ஏற்பட்டது. அதுதான் பழங்கால நீதிமுறைமை போலும்.

சாதாரணமாக விதைப்பு அறுப்பு உள்ள காலங்களிலேயும் கூலியாட்கள் அகப்படுகிறதில்லை. நகரம் முழுவதும் உள்ள எல்லா மக்களுக்கும் ஒரேகாலத்தில் கூலி ஆள்கள் வேண்டுமென்றால் எப்படிக் கிடைப்பார்கள்? அதிலும் அனாதையாகிய வந்தி அம்மையாருக்கு ஏவல்செய்ய எந்தக் கூலி ஆள் முன்னுக்கு வருவன்! கூலி ஆள் கிடையாமல் தன் கரை அடைபடாமல் நிற்குமே; அதனால் அரசன் கோபமும் தண்டமும் உண்டாகுமே என்று அம்மையார் அளவில்லாத கவலைக்குள்ளாகியவராய் அநாதையைக்காப்பவராகிய ஆலவாய் அண்ணலை நினைந்து செய்வதறியாது முறையிட்டார்.

" துணையின்றி மக்களின்றித் தமரின்றிச் சுற்றமாகும்
பணையின்றி யேன்றுகொள்வார் பிறரின்றிப் பற்றுக்கோடாம்
புணையின்றித் துன்பத்தாழ்ந்து புலம்புறும் பாவியேற்கின்
றிணையின்றி யிந்தத்துன்ப மெய்துவ தறனேவென்பார்."

— திருவிளை - மண்சுமந்தபடலம் - 12.

அடியார்க்கு எளியராகிய அண்ணலும் உடனே பழைய மண்வெட்டியும் கூடையும் சுமந்து 'அழுக்கடைந்த பழந்துணி ஒன் றரைக்கசைத்துக்' காலத்துக்கேற்ற கோலத்துடன் 'கூலி கொடுத் தென்வேலை கொள்வாருண்டோ' என்று ஓலமிட்டு வந்தி அம்மையார் மனையின் வீதிவழியே வந்தார். அவர் இட்ட ஓசையாகிய அமுதம் அம்மையாரின் செவிவழியாகப் புகுந்தது. புகவே அவரை அழைத்து 'நான் கூலியாகக் கொடுக்கக்கூடிய பிட்டினை ஏற்றுக்கொண்டு நீ எனது கரையை அடைப்பாயாக' என்று அம்மையார் ஏவ, அதற்கிசைந்து இறைவனாகிய மள்ளரும் 'அம்மே! பசித்துள்ளேன்; ஆதலால் எனக்குரிய கூலிப் பிட்டை முன்னதாகக் கொடு, அதைத்தின்று நான் இளைப் பாறிக்கொண்டு பின் உன்னுடைய கரையைக் கட்டிடுவேன்' என்று கேட்டுப் பிட்டினைப் பெற்று,

" அன்னைமுலைத் தீம்பாலி னரியசுவைத் திஃதந்தத்
தென்னவனை யுலகாண்ட திருவால வாயுடைய
மன்னர்பிரான் றனக்கேயா மென்றென்று வாய்மலர்ந்து
சென்னிவசைத் தமுதுசெய்தார்........."

பின்பு கரையை அடைக்கச்சென்றார். சென்று அரசருடைய ஏவலாளர்களிடம் நான் வந்தியின் ஆள் என்று அறிவித்து ஏட்டிலே பதிவும் செய்துகொண்டார். ஆனால் செய்த வேலையோ என்றால் ஒருகூடை மண்கொண்டுவருவர். சும்மாடு

விழும்படி தட்டுவர். மண்ணும் கூடையும் கவிழ்ந்துவிடும். ஓடுவார்; ஆடுவார்; பாடுவார். பின்னும் மற்றொரு கூடை மண் கொண்டுவந்து உடைப்பில் கொட்டுவார். மேலே மேலே மண் கொட்டப் பெருமையால் அஃது ஆற்றில் அடித்துக் கொண்டு போகப்பெறும்! இரண்டு கூடை மண் எடுத்ததும் இளைத்துப் போவார். கூடையைத் தலையணையாக வைத்து ஆற்றங்கரை மரத்து நிழலில் படுத்து உறங்குவார். பின் எழுந்து பாடுவர். தண்ணீரிற் குதிப்பர். அமிழ்வர். தூரத்தேசென்று முளைப்பார். இவற்றின் இடையில் இளைத்தார்போலச் சென்று பிட்டு அருந்திவருவர். இவ்வாறு எல்லாம் செய்து பக்கத்தே இருந்த மற்ற வேலையாட்களின் வேலையையும் கெடுப்பார். இவற்றை அரசரின் ஏவலாட்கள்கண்டு இவரதுஉருவஅழகைப் பார்த்து இவர் ஒரு அரசிளங்குமரனே என்று மயங்கிப்பயந்து இவரைக் கண்டிக்கவும் வேலைவாங்கவும் கூடாதவர்களாய் நின்றார்கள்.

அன்று மாலையில் கரைகள்யாவும் அடைபட்டமையை நேரிற்காண அரசர் ஆற்றங்கரைக்கு வந்தார். எல்லாக்கரை களும் ஒழுங்காய் அடைபட்டமையும் வந்தியம்மையார் கரை ஒன்றுமே அடைபடாது எஞ்சி நிற்கின்றமையும் அதுகாரண மாக அவ்வுடைப்பின் வழியே புதும் நீர்ப்பெருக்கானது மற்ற கரைகளையும் அழித்துச் செல்வதையும் அரசர்கண்டு இது என்ன? யாருடையகரை? என்று உசாவினர். ஏவலாளர் கள் பயந்து வந்தியம்மையாரின் ஆள் என்று ஒருவன் வந்து தானே கணக்கில் பதிவு செய்துகொண்டான். காமனும் விரும்பும் கட்டழகுடையவன். அரசகுமாரன் போல ஆனந் தந்திலே அமிழ்ந்து ஆடுவன், பாடுவன், காலத்தைப் போக்கு வன். 'வேலை ஒன்றும் நெஞ்சிலும் நினைதல் செய்யான்' அவனைப்பார்த்தால் அழகிய சொக்கப்பிரான் என்றே சொல்ல லாம். ஆதலால் எங்களால் அவரை அடித்து வேலைவாங்க முடியவில்லை என்றார்கள். அரசன் கோபித்து அவன்எங்கே! என்றுகேட்க அவர்கள்பயந்து அவரைக் கையைப்பற்றி இழுத்துவந்து,

"உள்ளொடு புறங்கீழ் மேலாய் உயிர்தொறு மொளித்து நின்ற."

உள்ளங்கவர் கள்வனை இவன்றான் வந்தியாள் என்று, சுட்டிக் காட்ட ஒண்ணாதவரைச் சுட்டிக்காட்டி நின்றார்கள்.

" கண்டனன் கனன்று வேந்தன் கையிற்பொற் பிரம்பு வாங்கி
யண்டமு மளவி லாத உயிர்களும் ஆக மாகக்
கொண்டவன் முதுகில் வீசிப் புடைத்தனன் கூடை யோடும்
மண்டனை யுடைப்பிற் கொட்டி மறைந்தனன் நிறைந்த சோதி."

அரசர் அவரைக்கண்டு கோபித்து எல்லா அண்டங்களும் உயிர்களும் நிறைந்து விளங்கும் அவர் முதுகிலே தன் கைப் பிரம்பினாலே ஒரு அடி அடித்தார். அவர் தம் கையிலிருந்த ஒரு கூடை மண்ணை உடைப்பிலே கொட்டி உடன் மறைந்தார். உடைப்பு அடைப்பாகி நிறைந்தது. அவர்மேல் இட்ட அடியே அரசர், அரசபத்தினி, அமைச்சர், ஆள்கள் முதலிய எல்லோர் மேலும் ஒரேகாலத்தில் பட்டது.

" யானை முதலாய் எறும்பி ருக
வூனமில் யோனியி லுள்ள. "

எல்லா உயிர்கள்மேலும் பட்டது. கருவில் அடைந்த உயிர்களும்பட்டன. நகரிலேயிருந்த வந்தி அம்மையாரைச் சிவபெருமானது ஆணையினாலே நந்திகணங்கள் வந்து 'அன்னை வருக' என்று விமானத்திலே ஏற்றிச் சிவபுரத்துக்கு அழைத்துச் சென்றனர். நிகழ்ந்த செய்திகளைப் பார்த்த அரசர்! என்ன ஆச்சரியம்; நின்ற ஆளைக்காணோம். மண் உயர்ந்தது. நாம் இட்ட அடியோ நம் எல்லோர் மேலுமே பட்டதே என்று திகைத்து நின்றார்கள்.

அரசனுடைய ஆசங்கையை நீக்கி அன்பர் பெருமையை அனைத்துயிர்களும் உணர்ந்து உய்யும்பொருட்டாய் விண்ணிலே நிறைந்த ஒலியாகிய தமது அருமைத் திருவாக்கினாலே ஐயன் அருட்போதந்தர அருள்வாராயினர். 'அநீதி வழிகளைக்கடந்த செங்கோலரசனே! உன்னுடைய செல்வங்கள் எல்லாம் அற வழியிலே ஈட்டப்பெற்ற நற்பொருள்கள். அதனால் அவை தூயதான தன்மையாலே நமக்கும் நம் அடியார்க்குமாக ஊழின் வயத்தனாய் நமது அன்பனாகிய திருவாதவூரன் உதவினான். அது காரணமாக நீ அவனைத் தண்டித்தாய். அதைப் பொறுக்காதவராய் நரிகளைக் குதிரைகளாக ஆக்கி நாமே நடத்திவந்து உமக்குக் கொடுத்தோம். அதன்பின் அவை மீளவும் நரிகளாக ஓடிப்போயின. அதனால் மீண்டும் அவனை மறுக்கஞ் செய்தாய். அதை நீக்கி அவனது உண்மையையும்

மேன்மையையும் உணர்த்தவும் வந்தியை ஆட்கொண்டு நம் உலகிலே சேர்த்துக்கொள்வதற்குமாக வையையைப் பெருகச் செய்தோம். நாமே ஆளாய் வந்து மண் சுமந்து நின்கைப் பிரம்படி ஏற்று மறைந்தோம். நாம் இத்தனை எல்லாம் செய்தது இந்த வேதவித்தகனாகிய திருவாதவூரன் பொருட்டேயாகும். சிவன் தன்மையொன்றும் நீ அறிந்தாயில்லை.

தன் ஆசை நம்பால் வைத்து உனக்கு இம்மை மறுமை இன்பங்களையும் அழியாத சிவபுண்ணியத்தையும் தேடித்தந்த உத்தமன். இவனைத் தன் இச்சைவழியே விடுத்து நீ குறையாப் பெருஞ்செல்வத்திலே நீடுவாழ்ந்து நீதியாய் அரசளிப்பாயாக என்றார்.

இவ்வாறு மெய்ம்மொழி வானிழல் கூறிய பொருளை அரசர் இருசெவி ஏற்று அச்சமும் அதிசயமும் ஆராமையும் உற்றவராய்த் திருவருளைப் பாராட்டிக்கொண்டு குற்றமற்று விளங்கும் அன்பர் பெருமானாகிய மாணிக்கவாசகர் எங்குற்றார் எனத் தேடி அடைவாராயினர்.

இனி இந்த அதிகாரத்திலே நாம் பார்த்த செய்கைகளை ஒருவாறு ஆராய்வோம். இவ்வாறு காட்டிலே வாழும் நரிகள் பரிகளாக உருக்கொண்டு வந்தன. சிவகணநாதர்கள் மானிட உருத்தாங்கி வந்தனர். அகண்டாகாரனாய், அந்தர்யாமியாய், அருபியாய்,அறிவே திருமேனியாயுடையவனாய் எங்கும்நிறைந்த இறைவன் அளவுபட்டுத்தோன்றும் மானிட உருவத்துடன் வந்தான். மதுரைநாதன் குதிரைநாதனாக எழுந்தருளிக் குதிரை கொண்டுவந்து நடத்திக் காட்டிக் கொடுத்துப்போனான். நரிக் குதிரைகள் மீள நரிகளாயின. மழைமாரியின்றி வையை பெருகிற்று. அகண்டனாகிய ஆலவாய்அமலன் கண்டன்போலக் குதிரைத்தலைவனாய் முன்னர் வந்ததுபோல மீளவும் மண் சுமக்கும் மள்ளனாகவும் வந்தான். அடியும் பட்டான். இப்படியும் நடக்குமா? இவைகள் எப்படி நடந்தன? ஏன் நடந்தன? என்று சிலர் கேட்கலாம். அதைச் சிறிது ஆராய்வோம்.

படாத பாடெல்லாம் பட்டுப் பரமன் திருவடிகளுக்குப் பண்டைநாள் ஒரு சிலர் தொண்டராயினர். ஆகவும்,

" முட்டாட் டாமரை முறுக்கவிழ் மலர்மேல்
வலம்புரி கிடக்கும் வாதவூ ரன்ப!

பாடும் பணிநீ கூடும் பொருட்டு
மதுரைமா நகரிற் குதிரை மாறியும்
விண்புகழ் முடிமிசை மண்பொறை சுமந்தும்
நீற்றெழின் மேனியின் மாற்றடி பட்டும்
நின்னைத் தொண்டன் என்னக் கொண்டனன்."

பரமன் என்கிறார் நமது சிவப்பிரகாசசுவாமிகள்.

'இத்தனை யெல்லாம் செய்தது இவன் பொருட்டு' என்று இறைவனும் அசரீரி வாக்கினாலே அருளினான். நரிகள் பரிகள் ஆவதும் மீண்டும் நரிகளாவதும் "கண்முதற்புலனால் காட்சியு மில்லோ"னாகிய கண்ணுதலிறைவன் மனிதர் ஊனக்கண்களினா லும் காணும்படி வெளிப்பட்டுவந்து குதிரை நடத்தியும் மண் சுமந்தும் செயல்புரிவதும் ஆறு பெருகுவதும் ஆகிய இவைகள் பொதுவாக யாவரும் செய்தற்கரிய செயல்களேயாம். ஆயின் இவற்றை இங்குச்செய்தார் இறைவனேயன்றி நமதுசுவாமிகள் அன்றே என்பீராகில், அற்றன்று. இறைவனை இவற்றைச் செய்யும்படிச் செய்தார் இவரேயாவர்.

இறைவனடியிணையை எப்போதும் பிரியாது தம் உள் ளத்தே பதியவைத்து உலகத்தையும் தம்மையும் மறந்து ஆனந் தத்தே அமிழ்ந்துகிடக்கும் சிவபோகங் கைவந்த பெரியா ராகலின் நமது சுவாமிகளுக்கு மன்னவரால் மறுக்கம் வந்த போது யோகத்திலே உடனிருந்த இறைவன் வெளிப்பட்டு வந்து உதவுவானாயினான். இவைகள் எல்லாம் இயல்பாகிய விரோதமான காரியங்களாயிற்றே என்று கேட்கலாம். இறை வன் திருவுள்ளமே நியதியாகும். தனது பின்ன அசேதனசத்தி யாகிய மாயையிலிருந்து உலகத்தையும் அதிலேயுள்ள பலவேறு வகைப்பட்ட உருவங்களையும் காலத்திற்கேற்பத் தோற்று வித்தும் வைத்தும் மறைத்தும் உள்ளிருந்து ஆட்டுவிக் கும் அமலன் ஏகதேசத்திலே சில நரிகளைச் சிலநேரத்திற்குப் பரிகளாக உருவெடுக்கச் செய்வதில் என்ன இயற்கை விரோத மிருக்கின்றது? "தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை" சிறியமீன் முட்டையினும் சிறிதேயாயினும் நால்வகைச் சேனை களுடன் அரசர்கள் தங்குவதற்கு நிழல் செய்யக்கூடிய ஆல மரத்தை உள்ளடக்கிக்கொண்டிருந்து அம்மரத்தைத் தோற்று விக்கிறது. பனியிலோர்பாதி சிறுதுளியாகிய விந்துவிலிருந்து மனிதனது நிறை உருவம் கிளம்பப்பெறுகிறது.

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்மிருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேய்ாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி மனிதராய்த் தேவராய்ச்
செல்லா நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைக்"

கின்றது ஒரு ஆன்மா என்பது சாத்திரம் சாற்றும் உண்மை. இவ்வாறு எல்லா உருவங்களையும் தோற்றுவித்து நிற்பித்து மறைப்பிப்பவனுக்குச் சிறிது நேரத்திற்கு ஒரு உருவத்தைத் தோற்றுவித்தலும் நிற்பித்தலும் மறைப்பித்தலும் செய்தல் கூடாததாமோ?

உலகம் தானே தோன்றுவது இயற்கை என்போர் கொள்கை இங்கு வலியுடைத்தாகாது. உலகம் சடமாகலின் தானே செயல் செய்யாது என்றமட்டிலே அக்கொள்கை மறுக்கப்படும்.

"சுந்தர வேடத் தொருமுதல் உருவுகொண்(டு)
இந்திர ஞாலம் போலவந் தருளி
எவ்வெவர் தன்மையும் தன்வயிற் படுத்துத்
தானே யாகிய தயாபர னெம்மிறை."

என்பது நமது சுவாமிகள் திருவாக்கு. சாமான்யமாக உள நூல் தத்துவசாத்திரிகள் வேறு ஒருவன் உளத்தை தாம் மேற்கொண்டு ஆச்சரியமான செயல்கள் நிகழ்த்துவதை உலகத்திலே நாம் கண்கூடாகக் காண்கிறோம். இந்திரசால வித்தைக்காரர் செய்கை இன்றும் பார்க்கிறது பொய்யா? விண்முதற் பூதம் ஐந்தினையும் வெளிப்பட வகுத்தோனைப் பிரளயத்தைத் தோற்றியும் கடந்தும் நிற்கும் இறைவனுக்கு நீராகிய ஒரு பூதத்தை ஏகதேசத்திலே ஒருநாள் ஒரு ஆற்றிலே ஒரு சிறிது தோற்றுவித்தலோ இயல்பான விரோதமெனப்படும்.

வான இடி ஒலி, பூகம்பம் மின்விழ்ச்சி போன்றவைகள் உலகத்திலே தீமையைக் குறிக்கும் உற்பாதங்கள் என்று சொல்லப்பெறுவன. அதுபோல இப்பிரளயமும் ஒருஉற்பாதமேயாகி, உத்தமரை அந்தமாய் அலைத்தலால் உளதாகும் பெரும் தீமையைக்குறித்து உண்டாயினதாகலாமே. காலக்கிரமத்திலே பிரளயமோ உலகப்படைப்போ அழிவோ நிகழ்தல் காலதத்து

வத்துக்கும் நியதிக்கும் ஏற்றதுதான். ஆனால் யாரோ ஒருவர் பொருட்டாய் அவை ஓரோர் காலத்து இறைவனால் நிகழ்த்தப் பெறும் என்பது யாங்ஙனம்? இதை நாம் ஒப்போம் என்று சிலர் சாதிப்பர். ஆனால் இறைவன் ஆணையாகிய சாத்திர விதி களுக்குமாறாக வினைமேலிட்டினாலே ஆன்மாக்கள் தலைதடுமாறி அந்திபுரியும் நாளிலே அவன் வெளிப்பட்டு முறைப்படுத்துவன் என்பது சாத்திர சம்மதம். எல்லாச் சமயவாதிகளும் இதை ஒப்புவர்.

"பத்தினி பத்தர்கள் தந்துவ ஞானிகள்
சித்தங் கலங்கச் சிதைவுகள் செய்தவர்
அத்தமும் ஆவியும் ஆண்டொன்றின் மாய்ந்திடும்
சத்தியம் ஈது சதாநந்தி தாளே."

என்றும்,

"ஈசன் அடியார் இதயங் கலங்கிடத்
தேசமும் நாடும் சிறப்பும் அழிந்திடும்
வாசவன் பீடமும் மாமன்னர் பீடமும்
நாசம தாகுமே நம்நந்தி ஆணையே."

என்றும் அருளினர் திருமூலர். எனவே இதுவும் ஒரு நியதியே யாகும். அங்ஙனமாகவே காலம் நியதி என்ற தத்துவங்கட்கு இந்த அற்புதச்செயல்கள் இழுக்கில்லாமை காணப்பெறும். அகண்டனாகிய இறைவன் கண்டன்போல உருவுகொண்டு அளவுக்கு உட்பட்டுச் சுட்டியறியும் அறிவுக்கு விடயமாக எம்மனோர் காண எழுந்தருளியதோ என்றால் இறைவனுக்கு உரியனவாகச் சொல்லப்பெற்ற மூன்று வடிவிலே உருவத் திருமேனியும் ஒன்றாகும். அங்கங்கே காலத்திற்கும் பக்குவத் திற்கும் தக்கபடி பெருமான் வெளிப்பட்டு அருளே திருமேனி யாய் உருவத்தோடு எழுந்தருளி அவ்வப்பெரியாரை ஆட் கொண்ட திருவுருவங்களே உருவத்திருமேனி எனப்பெறும்.

அன்றியும் இறைவன் குதிரைச் சேவகனாகிக் கொற்றக் குதிரையின்மேல் வந்துகூடிச் சதுர்படச் சாத்தாய் தான் எழுந் தருளியதும், அங்ஙனம் வந்து தம்முடைய பந்தம் பரியப் பரிமேற்கொண்டான் அந்தமிலா ஆனந்தம் தந்தமையும், (திரு வம்மானை - 3) பாண்டியன் தனக்குப் பரிமாவிற்றதும், அடிய வர்க்காகப் பாங்காய் மண் சுமந்தருளிய பரிசும், மாண்பார்

மதுரையிலே பிட்டமுது செய்தருளித் தண்டாலே பாண்டியன் தன்னைப் பணிகொண்டதும் (பூவல்லி - 16) மண்சுமந்து கூலி கொண்டு அக்கோவான் மொத்துண்டு பொன்மேனி புண்சுமந் ததும் (திருவம்மானை - 8) நரகொடு சுவர்க்க நானிலம் புகாமற், பரகதி பாண்டியற்கருளியதும் (போற்றித்திருவகவல்) ஆகிய திருவிளையாடல்கள் அவற்றை நேரேகண்டு அனுபவித்த சுவாமி கள் திருவாக்காகிய அகச் சான்றினாலேயும் நிலை நாட்டப் பெறுகின்றன.

" பண் சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண் சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண் சுமந்த கீர்த்தி வியன்மண் டலத்தீசன்
கண் சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண் சுமந்து கூலிகொண்டு அக்கோவான் மொத்துண்டு
புண் சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்."

" கோல வரைக்குடுமி வந்து குவலயத்துள்
சால அமுதுண்டு தாழ்கடலின் மிசையெழுந்து
ஞால மிகப்பரிமேற் கொண்டு நமையாண்டான்
சீலந் திகழுந் திருவுத்தர கோசமங்கை
மாலுக் கரியானை வாயார நாம்பாடிப்
பூலித் தகங்குழைந்து பொன்னூசல் ஆடாமோ."

" ....மன்னன் பரிமிசை வந்த வள்ளல் பெருந்துறை மேய
தென்னவன் சேரலன் சோழன் சீர்புயங்கன் வரக்கூவாய்."

— குயிற்பத்து - 7.

" நரியைக் குதிரைப் பரியாக்கி ஞால மெல்லாம் நிகழ்வித்துப்
பெரிய தென்னன் மதுரையெல்லாம் பிச்சதேற்றும்
பெருந்துறையாய்."

" ....நரிகளெல்லாம்
பெருங்குதிரை யாக்கியவா றன்றேயுன் பேரருளே."

" வெள்ளைக் கலிங்கத்தர் வெண்டிரு முண்டத்தர்
பள்ளிக் குப் பாயத்தர் அன்னே என்னும்
பள்ளிக்குப் பாயத்தர் பாய்பரிமேல் கொண்டென்
உள்ளங் கவர்வரால் அன்னே என்னும்."

— அன்னைப்பத்து - 7.

"மதுரைப் பெருநன் மாநக ரிருந்து
குதிரைச் சேவக ஞகிய கொள்கையும்
ஆங்கது தன்னி லடியவட் காகப்
பாங்காய் மண்சுமந் தருளிய பரிசும்."

"பிட்டு நேர்பட மண்சுமந்த பெருந்துறைப்பெரும் பித்தனே."

என்றிவ்வாறு சுவாமிகள் திருவாக்கிலே பலபடக்காணலாம்.

அன்றியும் மலரின் நாற்றம் போன்று எங்கும் ஒழிவற நிறைந்து உயிர்க்குயிராய் அறிவுக்கறிவாகிப் பரஞ்சோதியாய் உள்ள பரமன் தன்னேரில்லோன் தானேயாய தன்மையின் அந்நிலையிலேயே யாதொருசெயலுமின்றி நின்றிட்டானேயாகில் ஆன்மாக்களின் கதி என்னுகும். ஒருபுறம் மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச்செய்து மாறிநின்று மயக்கிடும். அவற்றின் மயக்கிற்கு ஒருவேளை தப்பினுலும் ஐந்து இந்திரியங்கட்கும் புலனுகாத பொருளை அறிய முடியாதனவாய் ஆன்மாக்கள் அலையும். அலைந்து அவைகளைக் கடந்து மேற்செல்ல முடியாதவைகளாய் இந்திரியவய மயங்கி இறப்பதற்கே காரணமாய், அந்தரமே திரிந்துபோய் அருநரகில் வீழ்வதற்கு உயிர்கள் ஒருப்படுவனவாம். ஆதலின் உயிர்கள் உய்யும்பொருட்டுத் தன் உன்னத நிலையினின்றும் போந்து கண்ணுற் காணவும் காதாற் கேட்கவும் கையாற் பரிசிக்கவும் இவ்வாறு இந்திரியங்களுக்கு விடயமாகக் கூடியபடி தானே உருவத்திருமேனிதாங்கி இலிங்கத்தினிடத்தும், குருவினிடத்தும், அடியார்களிடத்தும் நிறைந்துநின்று இறைவன் எழுந்தருளிவந்து என்னேரனையோர் கேட்கவந் தியம்பி, அறைகூவி ஆட்கொண்டு அருளுவன். முன்னே மதர்த்து நின்றனவாகிய பஞ்சேந்திரியக் குஞ்சரங்களை அடக்கியாளும் வழியைக்காட்டி ஆட்படுத்தி வழிப்படுத்துவன். இது எல்லார்க்கும் ஒப்ப முடிந்த துணிபாம்.

இவ்வாறு இறைவன் வெளிப்பட்டு அருளுவது பக்குவம் அடைந்த பெரியோர்களுக்கே யன்றி ஏனையோர்க்கல்ல. ஆகலின் அப்பக்குவத்தையடையும் வகையிலே சரியை கிரியைகளைக் கடந்து 'சிந்தையை அடக்கியே சும்மா இருப்பதாகிய' செயற்கரிய திறத்தினைச்செய்து கைவரும் ஒழுக்கத்திலே நிற்பர் பெரியோர். அவ்வொழுக்கத்தினுலே உலகானுபவநிலைமையைக் கடந்தவர்களாய்ப் பாசங்கழித்த கண்களால் அரனுருக் கண்டு கொண்டு உலகில் விழித்த கண் குருடாய்த் திரியும் வீரராய்

நிற்பர். அவர் ஆணையின் வழி உலகம் நடைபெறும். அனைத்துலகமும் ஆடற்குரியார் அவ்விறைவரேயாகலின்,

" பூத மைந்து நிலையிற் கலங்கினும்
மாதொர் பாகர் மலர்த்தாண் மறப்பிலார்
ஓது காத லுறைப்பின் நெறிநின்றார்
கோதி லாத குணப்பெருங் குன்றனர்."

" கேடு மாக்கமுங் கெட்ட திருவினர்
ஓடுஞ் செம்பொனு மொக்கவே நோக்குவார்
கூடு மன்பினிற் கும்பிட லேயன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினர்."

" ஆரங் கண்டிகை யாடையுங் கந்தையே
பார மீசன் பணியல தொன்றிலார்
ஈர அன்பினர் யாதுங் குறைவிலார்
வீர மென்னால் விளம்பும் தகையதோ."

என்று இப்பெரியார் திறங்களைப் பலவாறு எடுத்தேத்தினர் அருண்மொழித்தேவர். சிவயோகமாவது இறைவனோடே எப்பொழுதும் கூடி நிற்கும் நிலையாதலின் சிவயோகிகளிடம் இறைவன் உடன்கூடி நிகழ்கின்றான். அவர்கள் தமக்கென்று யாதொரு செயலுமற்று நிற்பர். அதனால் அவர்கள் செய்கை அவன் செய்கையும், அவன் செய்கை அவர்கள் செய்கையுமாய் நிகழ்வனவேயாகும். அடியார்கள் வழியே அரனும் நிற்பன்.

" நஞ்செய லற்று நாமற்றபின் னாதன்
தன்செயல் தானேயென் றுந்திபற
தன்னையே தந்தானென் றுந்திபற."

— திருவுந்தியார் - 6.

" செய்தற் கரிய செயல்பலவுஞ் செய்துசிலர்
எய்தற் கரியதனை எய்தினர்கள் — ஐயாநாம்
செய்யாமை செய்து செயலறுக்க லாயிருக்கச்
செய்யாமை செய்யாத வாறு."

— திருக்களிற்றுப்படியார் - 61.

என்று இவர்களுடைய அரிய திறத்தைப் பாராட்டினர்கள் பெரியார்கள். ஆதலினாலே செயற்கருஞ்செய்கைசெய்த தீரர்கள் என்றும் சிவயோகம் கைகூடுவர். அந்தயோகம் காரணமாக அவர்களோடு உடன் கலந்து நின்ற இறைவன் வெளிப்பட்டு

அவர்கள் பொருட்டுத் திருவிளையாட்டினை நிகழ்த்துவன். இவர்கள் பொருட்டு இறைவன் செய்வன் என்பதன்றி இறைவன் செயல்களையும் இவர்கள் செய்வர். இறைவன் செய்விப்பன்.

"துரியங் கடந்தசுடர்த் தோகையுடன் என்றும்
பிரியாதே நிற்கின்ற பெம்மான் — துரியத்தைச்
சாக்கிரததே செய்தருளித் தான்செய்யும் தன்மைகளை
ஆக்கியிடும் அன்பர்க் கரன்."

— திருக்களிற்றுப்படியார் - 60.

இவர்கள் செய்வார்கள் என்பது எங்ஙனம் எனின் அவர்களது கண் வாக்கு முதலிய கரணங்கள்யாவும் நம்போலப் பாசபந்தப் பட்டன அல்லவாகிச் சிவத்துவம் பதிந்த காரணத்தாலே சிவ கரணங்களாய் நிகழ்கின்றமையாலே அவை சீவச்செயலன்றிச் சிவச்செயலே செய்யவல்லனவாம்.

"பாலைநெய்தல் பாடியதும் பாம்பழியப் பாடியதும்
காலனையன் றேவிக் கராங்கொண்ட — பாலன்
மரணந் தவிர்த்ததுவும் மற்றவர்க்கு நந்தம்
கரணம்போ லல்லாமை காண்."

— திருக்களிற்றுப்படியார் - 12.

என்றிவ்வாறு ஞானசாத்திரம் வலியுறுத்தும். இறைவனது யோகத்திலே நிகழ்வனவாதலின் இச்செயல்கள்பிறரால் செய்தற் கரியனவேயாம். "செயற்கரிய செய்வார் பெரியர்" என்ற இவ் விலக்கணத்திற்கு இலக்கியமாக விளங்கும் நமது சுவாமிகளை,

"பாய்பரியோன் றந்தப் பரமானந் தப்பரனைத்
தூயதிரு வாய்மலராற் சொற்செய்து — மாயக்
கருவாதை யாமறியா வாறுசெய்தான் கண்டாய்
திருவாத வூராளுந் தேன்."

— திருக்களிற்றுப்படியார் - 73.

என்று துதிப்பாராயினர் ஞானசாத்திரமுடையாரும். ஆக, சாத்திரதோத்திர நூல்கள் உடன்பாடுடையன என்ற உண்மை இதனால் விளங்கும்.

5. அரசும் வேண்டாமை

" உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து. "

மதுரைமாநகர மாந்தர் அனைவர்களும் காவலாளர்களும் வையைக்கரையை அடைத்து நகரத்தைக் காவல் செய்யும் தொழிலிலே நின்றார்களாக. நமது சுவாமிகள் சிவயோகத்திலே அமர்ந்து சிவஞான அனுபூதிநிலையில் விற்றிருந்தார். அவரை அடைந்து அரசர் அடிபணிந்து பரவிநின்றார். நிகழ்ந்த வரலாறு முழுமையும் அறிந்தவராய் நமது சுவாமிகள் மதுரை எம்பெருமானை வாயார வாழ்த்தி வணங்கினார்.

" என்புநைந் துருகி நெக்குநெக் கேங்கி
யன்பெனு மாறு கரையது புரள
நன்புல னொன்றி நாதவென் றரற்றி
யுரைதடு மாறி யுரோமஞ் சிலிர்ப்பக்
கரமலர் மொட்டித் திருதய மலரக்
கண்களி கூர நுண்டுளி யரும்ப."

நின்று மனம் கசிந்துருகிச்

" சாயா அன்பினை நாடொறும் வளர்ப்பவர்
தாயே யாகி வளர்த்தனை போற்றி
மெய்தரு வேதிய னாகி வினைகெடக்
கைதர வல்ல கடவுள் போற்றி
ஆடக மதுரை அரசே போற்றி
கூட லிலங்கு குருமணி போற்றி
தென்றில்லை மன்றினு ளாடி போற்றி
இன்றெனக் காரமு தானாய் போற்றி."

என்று பன்முறையும் போற்றிப் பணிந்து துதிப்பாராயினார்.

பெருமானே! உனது அருமைத் திருமேனியிலே பிரம்படி பட்டபோது அத்திருமேனியில் ஒரு கூறுடையளாகிய உமாதேவியாரின் மனங்குழையாதா? அன்பின் மிகுதியாலே அணைத்துக்கொண்டு உனது திருமார்பிலே முலைத்தழும்பும், வளைத் தழும்பும் பொறித்த அம்மையார் இப்பொழுது நீ மண் சுமக்க நினைந்திருந்தாளோ? பிரமதேவனும் அறியாத திருமுடியாயிற்றே. இதன்மீது மண் சுமத்தல் தகாது என்று அங்கே

இருந்த கங்கையானவள் தன் அலைக்கரங்களினாலே அம்மண்ணைக் கரைத்துவிடவில்லையா? பிரமன் திருமால் முதலிய தேவர்கள் அருச்சனைசெய்த கற்பகப் புதுநறும் பூவா? அல்லது அன்பர்கள் இட்ட பச்சிலையா? அல்லது முறுக்குடைய செஞ்சடையா? அல்லது இளம்பிறைச் சந்திரனா? அல்லது ஆயிர வாய்ப்பொறி அரவின்படமா? இவைகளில் எது நீ மண் சுமக்குங்காலத்தில் சும்மாடாய் வந்தது? வையைத் திருஆற்றின் கரையே சிதம்பரமாகவும்; அதன் வெள்ளம் புரளும் ஓசையே தேவதுந்துபி முழக்கமாகவும் ஆயினவோ? அங்கு மண் சுமக்கும் மள்ளர்களே உனது திருநடனங்கண்டு தரிசித்த பதஞ்சலி வியாக்கிரபாத மகாமுனிவர்களாக ஆயினார்களோ? அரசன் கண் எதிரே காட்சிதந்து குதிரையேறி எழுந்தருளியபோது அவன் கொடுத்த பொன்னாடையைச் செண்டிலே ஏற்றுநின்ற பெருமானே! உனது அருமைத் திருமேனியிலே மண் ஏறச்செய்த பாவமுடையேனாதலின் யான் இனி அடையக்கூடியதாயுள்ள சிவபதவியும் எனக்குத் துன்பத்தையே தருவதாயிருக்கும். இறையவனே! நீ "தேவரையும் மாலயன் முதல் திருவின் மிக்கார் யாவரையும் வேறடிமையாவுடைய எம்மானாக இருந்தும்" இவ்வந்தியம்மையாருக்காளாகி மண்சுமந்து வையைக்கரையை அடைத்து அடியும்பட்டு அடியேனை அருளினாலே ஆட்கொள்ளவும் மனம் வைத்தனையே! என்னே உன்கருணை.

திருஅரையிலே அணிந்த அழுக்கடைந்த பழந்துணியும், திருத்தோளிலே ஏற்றிய மண்வெட்டியும், தலையிலே கவிழ்த்த கூடையும் உடையவன் ஆகி அந்தத் தவமுதியாளின் முன் நீ வந்த திருக்கோலத்தைக்கண்டு வணங்கும் பேறுபெற்றேனில்லையே! பெருமானே! வையையாற்றங்கரையிலே நின்ற மக்களா! அல்லது பண்டியமன்னனா? அல்லது மதுரை நகரத்தார்களா? அல்லது பிட்டிட்ட பெருமூதியவளா? இவர்களில் யாவர் மிகத்தவம் செய்தவர்கள்? அடைப்பதற்குக் கோலினால் அளந்துவிட்ட பங்கு நிலமும், வையை யாறும், இறைவன் குதிரையின்மேல் வந்துகூடும் மதுரைமா நகரும் ஆகிய இவைகளல்லவோ சிவலோகம்? இவ்வாறு அப்பாண்டிநாட்டைச் சிவலோகமாக்குவித்த அப்பார் சடையப்பனே! உனது பெருங்கருணைத் திறத்தை என்னென்று புகழ்வது? என்று பலவாறும் தோத்திரித்து மனமுருகி நின்றார் நமது மணிவாசகப் பெருமானார். அப்போது சுவாமிகளை 'தில்லையில் நம்பால் வருக' என்று பெருமானுடைய திருவாக்கு ஒன்று உண்டாயிற்று.

அரசரோ சுவாமிகளது திருவடித் தாமரை மலர்களிலே விழுந்து வணங்கி எழுந்து தம் இரு கைகளையும் தலைமேல் குவித்து நின்று,

" தொல்லைநீ ருலக மாண்டு சுடுதுயர் நரகத் தாழ
வல்லஎன் அறிவுக் கேற்ற வண்ணமே செய்தேன்; நீர் என்
எல்லைதீர் தவப்பே ருய்வந்து இகபர ஏது வாகி
அல்லல்வெம் பிறவி நோய்க்கும் அருமருந் தானீர் ஐயா! "

என, பலவாறு துதித்துநின்று பின்வருமாறு சொல்லுவாரானார்.

ஐயரே! இவ்வுலகத்தை அரசாள்பவன் அதிலே வருகின்ற குற்றம் அறிவரிது என்ற அச்சத்தையே மேற்கொண்டவனாய்ச் செங்கோலரசு செலுத்துதல்வேண்டும். தன்னாலும், தன் பரிசனங்களாலும், கள்வர்களாலும், பகைவராலும், மற்றும் உயிர் திறந்தாலும் வரும் ஐந்து பயங்களையும் மன்னுயிர்க்கு வராமல் காத்தலும்வேண்டும். இப்படிச் செய்யாமல் நரகத்திற்கு ஏதுவானபடி அரசபோகத்திலே மயங்கி நடக்கும் என் கேவலமான அற்ப புத்திக்குத் தக்கபடியே நான் செய்துவிட்டேன். தேவரீரோ எனது முன்னோர்கள்செய்த தவமெல்லாம் திரண்டு உருவெடுத்தாற்போல வந்து இவ்வுலகத்தில் அரசாங்க அபிவிருத்திக்கான செய்கைகளையும், மறு உலகத்திலேயும் எனக்கு நன்மை உண்டாக்கும் செய்கைகளையும் செய்து உபகரித்தீர்கள். நான் தேவரீருக்குச் செய்த தீமைகட்கெல்லாம் மாறாக இகத்திலும் பரத்திலும் சாதகமாகிய உபகாரங்கள் தேடித்தந்ததோடு என்னைச்சிறிதும் வெறுத்து ஒதுக்கிவிடாமல் பிறவிக்கடலிலே பட்டு நான் அலையாதபடி பிறவிநோய்க்கு மருந்தாகிய சிவபுண்ணியத்தைத் தேடித்தந்த வகையினாலே பரமர் நேரேபரிமீது எழுந்தருளியும் மண்சுமந்தும் காட்சிதந்து மீளா நற்கதியாகிய சிவகதியை அடியேனுக்கு அருளுவதற்கும் காரணராயினீர்கள். தேவரீருடைய பெருமையைச் சிறிதும் அறியாதவனாய் நான் தங்களிடத்தேசெய்த தவறுகளைஎல்லாம் பொறுத்தருளல் வேண்டும். முன்போல் உங்கள் அரசினை எல்லாம் கைக்கொண்டு காவல் பூண்டு இந்த அரசபாரத்தை வகித்து என்னையும் அடிமையாகக் கொண்டு காத்தருள வேண்டும் என்று வேண்டினார்.

அதற்கு மண்முதலிய மூன்று ஆசைகளையும் வெறுத்த மாதவராகிய சுவாமிகள் அரசனே! இந்த உலகம் எல்லாம்

தேவேந்திரன்போல் அரசுசெய்வீராக. இந்த உலகபாரமும் ஆட்சியும் எனக்கு எதற்காக வேண்டும்? உம்முடைய பக்கத்தைச் சார்ந்து ஒழுகவல்லவர்கள் மிகத்தூய்மையுள்ள வர்களல்லவா? உம்மை நான் அடுத்த காரணத்தாலே உலக இயல்பும் வேத நீதியும் ஆகிய இரண்டும் செம்மையாகத் தெரிந்தன. அது தெளிந்தமையாலே உண்மையான மனத் தூய்மை விளைந்தது. அதுவிளையவே பொய்யான இவ்வுலக ஆசையெல்லாம் போய், நித்தியமாகிய சிவத்தினிடத்திலே பத்திவிளைந்தது. அந்தப்பத்தியினுலே மாயாவடிவமான இந்த உலகத்திலே பிறவியெடுத்துப் படும் துன்பங்கள் எல்லாம் ஒழிந்தன. திருவருளினுலே அச்சிவமானது உண்மையும், அறிவும், ஆனந்தமும் ஆகிய மூன்றையும் கொடுத்து தன்திரு வடி சூட்டித் தன்மயமாகச் செய்தது. ஒப்பற்ற பரமசிவனே! தன் திருவருளாகிய இச்சாசத்தியினுலே உலகமெல்லாம் படைத்தும் காத்தும் அழித்தும் மறைத்தும் அருளுவான். அவனே தேவர்களைப் படைத்தவன்.

"எந்தனைநான் சென்மமெடுத் தெத்தனைநான் பட்டதுயர்
அத்தனையும் நீயறிந்த தன்ருே பராபரமே."

"வஞ்சநமன் வாதனைக்கும் வன்பிறவி வேதனைக்கும்
அஞ்சி யுனையடைந்தேன் ஐயா பராபரமே."

என்று எண்ணிறந்த பிறவிகளிலேயும் பட்ட துன்பங்களை எல்லாம் எண்ணிப் பயந்து வந்து தன்னை அடைந்தவர்களுக்கு என்றும் குறைவில்லாத நித்திய சுகமாகிய மோட்சத்தை அப் பரமனே கொடுத்தருளுவன். திருக்கயிலாயம், காசி முதலிய திருத்தலங்களிலே எல்லாம் அவன் வெளிப்பட்டு எழுந்தருளித் தன்னை அடைந்து வழிபட்டோர்க்கு இகபர சுகங்களைக் கொடுப்பன். ஞானமே வடிவமாய் நின்று எம்போன்றவர் களின் மனத்தைப் புறத்தே போகவிடாமல் செய்து திருத்தி நிற்பன். தனக்கு உவமையில்லாதவனுய் எங்கும் ஒளிவடிவாக நிறைந்தவனுய் ஆனந்த வடிவமான அப்பரஞ்சுடரே இங்கே திருவாலவாயில் எழுந்தருளியிருக்கும் சொக்கலிங்கமூர்த்தி. தன் அருள்வடிவமாய் சிதாகாசமாய் விளங்கும் திருத்தில்லை யிலே என்னை வரும்படியாக இறைவன் ஆணையிட்டுள்ளான்.

"நாயி னேனை நலமலி தில்லையுட்
கோல மார்தரு பொதுவினில் வருகென
ஏலஎன்னை யீங்கொழித் தருளினன்."

நீரும் அதற்கிசைந்து என்னை விடுப்பீராக, என்று பணித்து அங்கயற்கண் அம்மையாரையும், ஆலவாய் அடிகளையும் பணிந்து அரிதின் விடைபெற்று மதுரையை நீங்கிப் புறப்படுவாராயினர். அரசரும் மற்ற அமைச்சர்கள் முதலாயினேரும் அவரைப் பின் தொடர்ந்தனராக நின்மின்! நின்மின்! என்று அவர்களை நிற்கப்பணித்து வழிச் செல்கின்றார் நமது சுவாமிகள். எல்லோரும் காண அரசர் செல்வத்தே கொண்ட அமைச்சர் கோலத்தை எல்லாம் அவக்கோலமென்று களைந்து விட்டு ஐயன் திருநீறும் கண்டிகையும்கொண்டு ஒற்றைக் கோவணந்தரித்த தவக்கோலமாகிய சிவக்கோலத்தைத் தாங்கிப் புறப்பட்டார்.

அரசர் முதலாயினேரும் அவரது பிரிவாற்றாது மிக்க மனக் கவலையோடும் நெடுந்தூரம்வரை சென்று,

"......முன்னேன்
அன்பருக்கரசர் வாழ்வில் ஆசையிங்குளதோ என்று "

ஒருவாறு மனந்தேறித் துணிந்து அவர் திருவடிகளிலே வணங்கி விடைபெற்றுத் திரும்பினர்கள். அரசர் நேரே திரு ஆலவாயமர்ந்த தேவதேவன் திருச்சந்நிதியிற்சென்று அடியற்ற மரம்போல் விழ்ந்து விழ்ந்து எழுந்து பரவசனாய் நின்று தமது குலதெய்வமாகிய அச்சோமசுந்தரக்கடவுள் தமக்கு எளியராய் வந்த எளிமையை நினைந்து நினைந்து பதைத்துருகினர்.

பெருமானே! எளியேன் பொருட்டாக நீ குதிரைச் சேவகனாக எழுந்தருளினை. மண்ணையும் சுமந்தனை. அடியும் பட்டனை. அருந்தவராகிய அமைச்சரைக் கொடுத்தனை. நான் ஒன்றும் அறியாது மாயையில் மயங்கிக்கெட்டேன். அவரை வெறுத்தேன். நின்னையும் ஒறுத்தேன். இவையெல்லாம் பொறுத்தருள்.

"கைக்குமருந் தின்சுவையின் காட்டுமாறெனவிளக்கும்
பொய்க்குமருங் கலநகி மண்ணறண்டு புலைநரகந்
துய்க்குமருந் துயர்களைவான் மாருய்நின் துணையடிக்கே
யுய்க்குமருந் தவரிவரென் றறியாமை யொறுத்தேனே."

"பாதியுமை யுருவான பரமேட்டி எனக்கிம்மை
பூதியமும் பரகதியு முறுதியென விளைவிக்கும்
நீதியினன் மந்திரியாய் நின்னருளா லவதரித்த
வேதியரை யறியாதே வெறுத்துநான் ஒறுத்தேனே."

" மாயா விருத்தியினுன் மாழாந்து மாதவரை
ஆயா தொறுத்தே னருநரகத் தாழ்ந்துநான்
வீயாம லின்றனையார் மெய்மைஎலாந் தேற்றியவென்
தாயாருய் தண்ணளிக்கென் தமியேன்செய் கைம்மாறே."

என்று பலவாறு நைந்துருகித் துதித்து விடைபெற்று அரண்மனை சேர்ந்தார். அமைச்சர் பெருமானுயிருந்த அன்பர் பெருமானுடைய பேரருள் நோக்கத்தின் பயனுகப் பன்னுள் சுகவாழ்விலிருந்து அரசரும் சிவகதி அடையப்பெற்றுர்.

நம் மணிவாசகப்பெருமானே அன்பு பூரித்த அருந்தவ வேடத்தோடும் மதுரையை நீங்கித் தம் குருநாதனைத் தரிசிக்க வேண்டும் எனும் ஆசையினுலே திருப்பெருந்துறையை நோக்கி மிக விரைந்து வருகின்றுர்.

இவ்வாருக அரசர் தமது அரசினையும் தம்மையும் கைக்கொண்டு ஆட்கொள்ளும்படி நமது சுவாமிகள் திருவடிகளில் வீழ்ந்து வேண்டிய நிலையில் அதை விரும்பாத நிலையை

" இந்திரச் செல்வமு மெட்டுச் சித்தியும்
வந்துழி வந்துழி மறுத்தனர் ஒதுக்கி
சின்னச் சீரைத் துன்னற் கோவணம்
சிதவல் ஒடொன்று உதவுழி எடுத்தாங்கு
இடுவோ ருளரெனின் நிலையினின் றயின்று
படுதரைப் பாயலிற் பள்ளி மேவித்
தகவெனு மரிவையைத் தழிஇப்
பல்லுயி ரனைத்தையும் ஒக்கப் பார்க்குநின்
தெய்வக் கடவுட் டொண்டர் வாழ்வு."

என்றபடி இம்மண்ணுலக ஆட்சியானது தம் காலடியின் கீழ் வந்துகிடந்ததாகவும் அதை மணிவாசகர் வெறுத்துஒதுக்கினுர்.

" யானோதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக் கென்கடவேன்
வானேயும் பெறில்வேண்டேன் மண்ணுள்வான் மதித்துமிரேன்
தேனேயும் மலர்க்கொன்றைச் சிவனே யெம்பெருமானெம்
மானேயுன் னருள்பெறுநாள் என்றென்றே வருந்துவனே."

என்பது அவர் தன்மையாயிற்று. அரசர் செல்வம் தம் அடியிணைக்கீழ் வந்தகாலத்து 'அடற்கரிபோல் ஐம்புலன்களையும்' உரன் என்னும் தோட்டியால் அடக்கிக்காத்துத் தம் வழியிலே

அவை செல்லும்வண்ணம் செலுத்திக்கொண்டார். மதர்த்த யானைகள் ஊரை நாசமாக்கும். அவற்றின் வழியே சிக்கிய ஆன்மாக்களும் நாசமாகும். அவ்வாறின்றி அவற்றை அங்குசத்தால் அடக்கி வசப்படுத்திச் செலுத்தினுல் மிக்க பலன்களை மனிதர் அடைவர். அதுபோல ஆன்மாக்கள் தங்கள் ஐம்புலன்களாகிய மதர்த்த யானைகளை அடக்கி ஆளாமல் அவற்றின் வழிச் சிக்கிக்கொண்டு 'ஆனைவெம் போரிற் குறுந்தூ றெனப் புலனுலலைப்புண்டு' அலைந்து, மனமெனும் புலத்தை வெறும் பாழாக்கிப் பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றுர்கள். நமது சுவாமிகள் தம் அறிவின் திண்மை என்னும் அங்குசத்தினுல் ஐம்புல யானைகளை அடக்கி ஆண்டுகொண்டதுமன்றி எல்லா நிலத்திற்கும் மேலாகிய விட்டுநிலத்தில் பேரின்ப முத்திப்பெரும் பயன் தரும் வித்தாயினுர். இதினின்று ஐம்புல அடக்கமே ஆன்மாக்கட்கு முத்தியைத் தரும் அரியபெரிய வழியாகும் என்ற உண்மை விளக்கப்பட்டுள்ளது.

6. அருந்தவமும் ஆரருளும்

"அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்."

மதுரைமா நகரத்தினின்றும் புறப்பட்ட நம் மணிவாசகப் பெருமானுர் தம்மை ஆட்கொண்டருளிய ஆசாரியமூர்த்தி களைக் கடிது சென்று கண்டு தொழுதல் வேண்டுமென்னும் ஆசையினுலே 'பள்ளந்தா முறுபுனலிற் கீழ்மேலாகப் பதைத் துருகி' விரைந்து சென்று பல பல காடும் நாடும் நகரும்கடந்து திருப்பெருந்துறையை வந்தடைந்தார். அங்கே முன்புபோல் முனிவர் கூட்டங்கள் தம்மைச் சூழ்ந்துநிற்க அழகு பொருந்த வீற்றிருந்த ஆசாரியமூர்த்திகளைக் கண்டார். தம் மனத்துள் கழிபேருவகை கொண்டார்.

கண்டவர் கடிது அவர் திருவடிகளில் விழுந்து வணங்கித் துதித்துநின்ருர். அவர் திருக்கையினுலே திருநீறு நெற்றியில் சாத்தப்பெற்ருர். அடியார் திருக்கூட்டத்துள் தாமும் ஒருவ ராக உடன் எழுந்தருளியிருந்தார். சிலகாலங்கழித்து ஆசாரிய மூர்த்திகள் நாம் வந்தகாரியம் நிறைவேறியது, திருக்கயிலாயத் திலே நம் கணங்கள் நம்மைக்காண ஆவல்கொண்டுள்ளார்கள், நாம் அங்கே போதல்வேண்டும். நீவிர் இங்கேயே தங்கியிருங்கள் என்று ஆணைதந்தார். திருவருளை எண்ணி மணிவாசகர் அமைதி யுற்ருர்.

அதனைக்கேட்டு அடியார்கள் யாவரும் அவரைச்சூழ்ந்து கொண்டு எங்களை விடுதியோ? என்று மிகத் துன்பத்தோடு அவர் திருவடிகளில் வீழ்ந்து அழுது அரற்றினுர்கள். ஐயர் அவர்களை நோக்கி அருட்பார்வை செய்து நீங்கள் வருந்த வேண்டா. இக்குருந்தமரத்தின் நிழலிலே யோகபீடம் தாபித்து அப்பீடத்திலே நம்முடைய திருவடிகளைத் தீட்டி அதிலே நாம் என்ற தன்மையைக்கண்டு துன்பம் நீங்கி நாள்தோறும் பத்தி யோடு பூசைசெய்து இங்கே தங்கியிருங்கள். பின்னெருநாளிலே இப்பொய்கையினிடத்து அக்கினியுண்டாகும். அந்த அக்கினி தோன்றியவுடனே எல்லோரும் அத்தடாகத்திலே மூழ்கி நமது

தானே வந்துசேர்ந்து உங்கள் மனக்கவலையை மாற்றுங்கள் என்று கூறியருளி ஐயர் கயிலைக்கு எழுந்தருள்வாரானுர்.

இவ்வாறு இவர்கள் அனைவரும் நின்ற பின்னரும் நமது மணிவாசகப்பெருமானுர் விடாது ஆசாரிய மூர்த்திகளைத் தொடர்வாரானுர். இடைவிடாது நினைந்துவரும் அவருடைய வரவை ஐயர் பார்த்து அங்கே ஒரு கொன்றைமரத்தடியினிலே தங்கினுர். நமது சுவாமிகளும் அவர்திருவடிகளிலே வணங்கிக் கண்ணீர் வடித்துத் துதித்து நின்ருர். பின் செய்வதறியாது திகைத்தார்.

அவர்மேல் வைத்த கருணையினுலே ஆசாரியமூர்த்திகள் அவரை நோக்கி அன்பனே! நாம் உலகிலே எங்கும் நிறைந்து அனைத்துமாகி விளங்குவோமாயினும் மனக்கோட்டமில்லாத பரிசுத்த ஆன்மாக்கட்குக் கருணை காட்டவேண்டி முதன்மையாக எழுந்தருளிய இந்த திவ்விய திருத்தலமாகிய திருப்பெருந்துறையிலே குருந்தினடியிலே அடைந்தார்களது வினையைப் போக்கி ஆட்கொள்ளும்படி நிலையாகத் தங்குவோம். ஒளிவடிவாகிய சுழுமுனை நாடியிலே ஒலிக்கின்ற அடையாளமான சங்கொலி அல்லாமல் மற்ற ஒலிகள் ஒன்றும் இத்தலத்தில் நமக்கு ஆகா. ஓசை அடங்கிய இடமே இது. அன்றியும் உமாதேவியார்கான நாம் நடனஞ்செய்யும் இடமும் இது. ஆதலால் இங்கு பிறவாத்தியங்கள் கூடா. இக்குருந்தின் நிழலிலே நீயும் பத்தியோடு நமது திருவடிசேவை செய்துகொண்டு அமைதியுடன் இரு. தடாகத்தினிடத்திலே அக்கினி உண்டாகுங்கால் மற்ற யாவரும் அதிலேசென்று முழுகும்பொழுது நீயும் உடன் மூழ்காமல் இதைவிட்டு விரைவாய் நீங்கிப்போய்த் திருஉத்தரகோசமங்கை என்னும் தலத்தையடைந்து இறைவனை வழிபடு. சகலசித்தியும் அங்கு உனக்குக் கிட்டும் என்று கூறியருளினுர்.

அதன்பின் நாம் இலிங்கத் திருமேனிகொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலங்கள்தோறும் சென்று எம்மை வணங்குவாய். சென்ற சென்ற தலங்கள்தோறும் இங்கே காணும் இக்குருமூர்த்தமான திருவுருவத்தையே நீ காண்பாய். அப்படியே உனக்கு நாம் காட்டி அருளுவோம். இத்தலத்தை அகன்று போய்த் திருக்கழுக்குன்றத்தையடைந்து அங்கே குருதெரிசனம் கண்டு வணங்கிப் பின்னும் இங்கே வந்து அதன்பின் சிதம்பரமாகிய திவ்விய திருத்தலத்தையடைவாய். அங்கே நீ புத்தர்களை வாதில் வெல்வாய். அதன்பின் எம்முடைய திருவடி நிழலாகிய

சிவசாயுச்சியப்பதவி உனக்குக்கிட்டும் என்று திருவருள் பாலித்தார். நமது சுவாமிகள் ஆசாரியமூர்த்திகளை வணங்கி நின்று பெருமானே! அடியேனுக்கு ஒரு ஐயம் உளது. அதனைத் தெருட்டி அருளல்வேண்டும். அதாவது இத்திருப்பெருந்துறையாகிய திவ்விய திருத்தலத்திலே அன்றி தில்லையிலே முத்தி தருவதாக ஆணைதந்தீர்கள். அதன் காரணம் யாது? என்று பணிவுடன் விண்ணப்பித்தார். ஐயரும் அருள்சுரந்து தவத்தில் சிறந்தவனே! கேட்பாயாக. குளவியானது தான் எடுத்த புழுவைத் தான் எடுத்த இடத்தே அன்றிக் கொண்டுபோய் வைக்கும் இடமாகிய தன் கூட்டிலேயே அதனைத் தன் வடிவமாகச் செய்கின்றது. அதுபோல இங்கே உன்னை எடுத்து உனக்கு உண்மைநிலையை உரைத்தோம். உன்னைக் கொண்டு போய்த் திருவம்பலத்திலே வைத்து முத்திதருவோம். அத்திருவம்பலத்தின் தன்மையை இப்பொழுது கூறுவோம் கேள்.

அண்டம் பிண்டம் என்று உலகத்திலே இரண்டு பொருள்கள் உண்டு. இவை இரண்டிலும் தத்துவங்கள் சமமாக விளங்கும். அண்டமாகிய இந்த உடம்பிலே மூலாதாரத்திலிருந்து எழுந்த சுழுமுனைநாடி நிறைந்த மின்னல்போலப் பிரகாசிக்கிற ஒளியாகி, அந்த ஒளியிலே திருவைந்தெழுந்துக்களும் ஒன்றிலொன்று அடங்குமுறையாலே முடிவிலே ஒன்றாக நிற்க, குழலோசையாக நிற்கின்ற அவ்வோசை தானும் அடங்கிநின்ற இடம் எதுவோ அதுவே நாம் திருநடனஞ்செய்யும் சிதம்பரம் என்று சொல்லப்பெறும். சிதம்பரம் என்றால் அறிவு மயமாகிய ஆகாயமென்று பொருள். பஞ்சபூதத் தலங்களுள் தலையாய தலம் இதுவே.

சடமாகிய ஐந்து பூதங்களிலே முதலாவதாய், வெளியிடை ஒன்றாய்விளைந்த ஒலி என்ற ஒரு குணம்மட்டும் கொண்டதாய் உள்ளது ஒரு ஆகாயம். இது கேவலம் சடமானது. அதன் குணமாகிய ஒலியும் பொருளற்றதாகிய ஓசையேயாகும். அது அழியும் தன்மைவாய்ந்தது. ஆனால் இந்த ஆகாயம் அதுபோல் அல்லாமல் அறிவாகிய உருவமுடையதாதலால் சித்து என்று சொல்லப்பெறும். சொற்பிரபஞ்சத் தொகுதியிலடங்கி மற்ற எல்லாவற்றுக்கும் இடம் தருதலால் அது நிறைவுள்ளது. இதிலே நிறைந்த நாதமோ ஒலி என்று பேர்பெற்று மொழிகட்கெல்லாம் முதற்காரணமாகிய தன்மை வாய்ந்தது. இது என்றும்அழியாதது. பெருஞ்சிறப்பினையுடையது.

நிலன் நீர் நெருப்பு வளி நீள்விசும்பு என்று சொல்லப் பெறும் பூதங்களைந்தும், இடைகலை பிங்கலை சுழுமுனை என்ற நாடிகள் மூன்றும், சோமன் சூரியன் அக்கினி என்ற மண்டலங்கள் மூன்றும் ஆகிய இவற்றின் தொடர்பாலே அண்ட பிண்டங்கள் உண்டாவன. திருமால், பிரமன், உருத்திரன், மகேசுவரன், சதாசிவன் என்று ஐந்து வகையாகக் கண்டவர் நிற்கின்ற விதமும் இவையிரண்டிலும் காணலாம். இப்பிண்டமாகிய உடம்பிலே அறிதற்கரிய மூலாதாரத்தைப் பார்த்தால் ஒளிபொருந்திய சிவலிங்கமேனியாம். மேலாகிய அந்த நாத வெளியின்மேல் ஒளியாகிய சிதாகாசம் என்னும் சிதம்பரம் உளது. உலகமாகிய அண்டத்திலே 'இருவருங்கண்ட மன்றம் இதயமாம்' என்றபடி பிண்டத்திலே இதுவே இருதயத்தானம்.

அதிலே நாம் உமாதேவியார் காண என்றும் திருநடனஞ் செய்வோம். அத்திருநடனமாவது யாதெனில் உலகத்தைத் தோற்றி ஒடுக்கி அனுக்கிரகிக்கும் என்கின்ற ஐந்தொழில் செய்தலேயாகும்.

> " தோற்றம் துடியதனிற் றோன்றும் திதியமைப்பிற்
> சாற்றியிடு மங்கியிலே சங்காரம்—ஏற்றமாம்
> ஊன்று மலர்ப்பதந்தே யுற்ற திரோதமுத்தி
> நான்ற மலர்ப்பதத்தே நாடு. "

ஆன்மாக்களுக்குப் பாசநீக்கம் செய்து முத்தி கொடுக்கும் அத்திருவடிவம் இவ்வடிவமேயாம். உலகத்திலே யாவராயினும் கண்டு தரிசனம் செய்வாராகில் என்றும் நீங்காது நிலை பெற்ற முத்திதரும் தெய்வசபையோடு கூடிய தலம் அத்தலமேயாகும்.

> " புரங்கடந் தானடி காண்பான் புவிவிண்டு புக்கறியா(து)
> இரங்கிடெந் தாயென் றிரப்பத்தன் னீரடிக் கென்னிரண்டு
> கரங்கடந் தானொன்று காட்டமற் றாங்கதுங் காட்டிடென்று
> வரங்கிடந் தான்றில்லை யம்பல முன்றிலம் மாயவனே. "
>
> — *திருக்கோவையார்.*

பிரமனும், திருமாலும், பதஞ்சலி வியாக்கிரபாதர்களும், திரிபுரஞ் செற்றஞான்று உய்ந்தமூவரும், தில்லை மூவாயிரவர்களும், தேவர்களும், முனிவர்களும், நாளும் வணங்கும் தலமும் இதுவே. இவைகளைத் தெளிய அறிவாயாக என்று கருணை பாலித்து நமது சுவாமிகளது திருநெற்றியிலே திருநீறு சாத்தி

அவரை நிற்கப் பணித்து அவர் காணச் சிறிதுதூரம் நடந்து சென்று அவரது கண்முன்னே மறைந்து அந்தர்த்தானமாயினர். நமது ஆசாரிய மூர்த்திகளும் தமது ஆசாரியமூர்த்திகளைக் காணப்பெறாமல் இரங்கினர்; தொழுதார்; அழுதார்; மிகவும் வருந்தி ஒருவாறு தேறி மீண்டும் அன்பர் கூட்டத்திலடைந்து குருந்தின் நிழலிலே தெய்வபீடம் அமைத்து அதிலே குரு பாதத்தைத் தாபித்து வணங்கி அங்கே எழுந்தருளியிருந்தார். அக்காலத்தே குருமூர்த்தியின் பிரிவாற்றாமையால் மிக வருந்திப் பன்னாள் இரங்கிநின்றார். பல பலவாறும் பாடினர்; பரவினர்.

" அறுக்கி லேனுடல் துணிபடத் தீப்புக்
கார்கி லேன்றிரு வருள்வகை யறியேன்
பொறுக்கி லேனுடல் போக்கிடங் காணேன்
போற்றி போற்றியென் போர்விடைப் பாகா
இறக்கி லேனுனைப் பிரிந்தினி திருக்க
என்செய் கேனிது செய்கவென் றருளாய்
சிறைக்க ணேபுன லிலவிய வயல்சூழ்
திருப் பெருந்துறை மேவிய சிவனே. "

— செத்திலாப்பத்து - 6.

" பண்ணினேர் மொழியாள் பங்கநீ யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
திண்ணமே யாண்டாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
எண்ணமே யுடல்வாய் மூக்கொடு செவிகண்
என்றிவை நின்கணே வைத்து
மண்ணின்மே லடியேன் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே."

— வாழாப்பத்து - 5.

" திருந்துவார் பொழில்சூழ் திருப்பெருந் துறையிற்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
இருந்தவா றெண்ணி ஏசறா நினைந்திட்
டென்னுடை யெம்பிரா னென்றென்
றருந்தவா நினைந்தே யாதரித் தழைத்தால்
அலைகட லதனுளே நின்று
பொருந்தவா கயிலை புகுநெறி யிதுகாண்
போதரா யென்றரு ளாயே."

— அருட்பத்து - 10.

அக்காலத்தே சுவாமிகள் அருளிய திருவாக்குகள் பல. அன்பில்லாராயினும் தம்மைப் பாடுவார்களானால் பரமேசுவரன் அவர்கள்மீது இரக்கங்கொள்வார் என்ற கருத்துக் கொண்ட 'நமச்சிவாய வாழ்க' என்று தொடங்கும் சிவ புராணம் பாடி ஞானவாசகமாகிய திருவாசகத்தைச் சொல்லுவாரானார்.

மலரடியிணைகாட்டி அப்பன் என்னைவந்து ஆண்டுகொண்டருளிய அற்புதமறியேனே என்ற கருத்துடைய அற்புதப் பத்து, அப்பன் ஆண்டு தன்னடியரிற் கூட்டிய அதிசயங் கண்டாமே என்ற உள்ளுறையை உடைய அதிசயப்பத்து, பெருமானே என்னெஞ்சம் குழைத்தனை என்ற குழைத்தபத்து, அத்தன்மாமலர்ச் சேவடிக்கணம் சென்னிமன்னி யலருமே என்ற கருத்துடைய சென்னிப்பத்து, அப்பா காண ஆசைப் பட்டேன் கண்டாயம்மானே என்ற கருத்துடைய ஆசைப் பத்து, உனைப்பிரிந்து உலகில் வாழ்கிலேன் கண்டாய் வருக வென்றருள்புரியாயே என்ற வாழாப்பத்து, எனைச்செத்திடப் பணியாய் என்ற செத்திலாப்பத்து, நான் ஆதரித்தழைத்தால் அதெந்துவே என்றருளாயே என்ற அருட்பத்து, திருவெண்பா, திருப்பள்ளி எழுச்சி, திருவேசறவு, மின்னேரனைய பூங்கழல்கள் என்று தொடங்கி மனவருத்தம் நீங்கப்பாடும் ஆனந்தமாலை, உயிருண்ணிப்பத்து, பிரார்த்தனைப்பத்து, திருப்பாண்டிவிருத்தம் ஆகிய திருவாசகங்கள் திருவாய் மலர்ந்தருளினார்.

இவ்வாறு அடியார் கூட்டத்துடன் கூடிச்சுவாமிகள் பலநாள் அத்தலத்தில் எழுந்தருளியிருந்தார். அதன்பின் ஓர்நாள் ஆசாரிய மூர்த்திகள் அருளிப்பாட்டின்படியே பொய்கையிலே அக்கினி தோன்றிற்று. பேரன்புடைய அன்பர்கள் அனைவரும் திரு ஆணையின்படியே திருவைந்தெழுத்தை ஓதிக்கொண்டு அதிலே புகுந்து முழுகினார்கள். அப்போது விண்வெளியிலே உமாதேவியாருடன் பரமேசுவரன் இடபவாகனத்தே எழுந்தருளினார். அக்கினியிலே மூழ்கிய அடியவர்கள் அனைவரும் சிவகணங்கள் ஆகி அவர் திருமுன்பு வந்தார்கள். பெருமான் அவர்களை நோக்கிப் புத்தரைவாதில்வென்று சைவசமய உத்தாரணம்செய்யும் பொருட்டு மணிவாசகனை நாம் இந்தப் பூமியிலே சிலகாலம் தங்கும்படி வைத்திருக்கின்றோம். நாம் நீங்கினால் அவன் மனம் வாடி வருந்துவானாதலின் உங்களையும் சிலநாள் எம்முடன்வராமல் அவனோடு உறையும்படி இங்கே தங்கியிருக்க ஏவினோம்.

மலநீக்கம் பெற்றுப் பக்குவம் பெற்ற ஆன்மாக்களுக்குங்கூட அவர்கள் மானிடராகிச் சில நாளாவது பூமியிலே வாழ்ந்து தங்குவார்களானால் மலவாசனை வந்து தாக்கும்; ஆதலால் இந்தத் தடாகத்தினிடத்தே ஞானாக்கினியைச் சேர்த்து அதிலே மூழ்கிய உங்கள் மாயாதேகத்தைத் தகித்துப் பின்னர் கணநாயகர்களான இந்தத்திவ்விய உடலை உங்கட்குதவினோம். நீவிர் எம்முடன் வருக என்று ஆணையிட்டு அவர்களுடனே எழுந்தருளிப்போயினார். இந்தச்சமயத்திலே தனியாக வேறொரு செழுங்கொன்றை நறுநீழலிற் சிவயோகத்திலே அமர்ந்திருந்த மணிவாசக மூர்த்திகள் இவ்வரலாறுகள் அனைத்தையும் தமது இன்பமிக்க உண்மை ஞானத்தைத் தருகின்ற சிவயோகத்தின் கண்ணே நிலைத்திருந்து அறிந்துகொண்டார். அன்பர் கூட்டத்தின் பிரிவாற்றாது துன்புற்று மனமிக நொந்தார்.

"செழுக்கமலத் திரளனநின் சேவடி சேர்ந்தமைந்த
பழுத்தமனத் தடியருடன் போயினர் யான்பாவியேன்
புழுக்கணுடைப் புன் குரம்பைப் பொல்லாக் கல்விஞானமிலா
அழுக்குமனத் தடியே னுடையாய்உன் அடைக்கலமே." 1

"பொழிகின்ற துன்பப்புயல் வெள்ளத்தின் நின்கழற் புணைகொண்
டிழிகின்ற அன்பர்கள் ஏறினர் வான் ...." 4

"பிறிவரியா அன்பர் நின் னருட்பெய் கழற்றாளிணைக்கீழ்
மறிவறியாச் செல்வம் வந்து பெற்றார்......" 9

என்று மிகப் பரிந்துருகி அடைக்கலப்பத்து அருளிச்செய்தார்.

பின்னர்த் திருக்குருந்த நீழலில் வீற்றிருக்கும் குருபாத பதுமங்களைப் பற்றிக்கொண்டு விழுந்து எழுந்து நின்று கைதானெகிழவிடேன் உடையாயென்னைக் கண்டுகொள்ளே என்ற கருத்தோடு அனைத்துயிர்களும் உய்தற்குச் சதானமாக மெய்தானரும்பி என்று தொடங்கும் திருச்சதகத்தை அருளிச்செய்தார். பின்னர் ஆசாரிய மூர்த்திகளுடைய ஆணையானது அவருக்கு நினைவிற்கு வரவே அத்தலத்தை இறைஞ்சி விடைபெற்று அரிதாகநீங்கித் திருவுத்தரகோசமங்கை என்கிற திருத்தலத்தை வந்தடைந்தார். அங்கே திருக்கோயிலை அடைந்த காலத்து ஆசாரியர் கருணை காட்டியதுபோலத் தம்மை ஆட்கொண்டருளிய சற்குருநாதன் திருவடிவத்தைக் காணாராய் மயங்கி வெய்துயிர்த்து.

"கடையவனேனைக் கருணையினற் கலந்தாண்டுகொண்ட
விடையவனே விட்டிடுதி கண்டாய்."

என்று நீத்தல்விண்ணப்பம் அருளிச்செய்யவே ஐயரும் இரங்கிக் குருந்தமர்கோலம் அங்குக் காட்டியருளினுர். அத்தலத்தில் சில காலம் தங்கி சிவசித்திகள் அடைந்து அதன் பின்னர் நமது சுவாமிகள் ஆசாரியரது ஆணையின்படியே பல திருத்தலங் களையும் வழிபட்டுக்கொண்டு பாண்டிநாட்டைக் கடந்து சோழவளநாட்டை வந்து அடைந்தார். அங்கு வினைதீர்க்கும் திருவிடைமருதூரை அடைந்து,

" மருவினிய மலர்ப்பாத மனத்தில்வளர்ந் துள்ளுருகத்
தெருவுதொறு மிகவலறிச் சிவபெருமா னென்றேத்திப்
பருகியநின் பரங்கருணைத் தடங்கடலிற் படிவாமா
றருளெனக்கிங் கிடைமருதே யிடங்கொண்ட அம்மானே."

— திருவேசறவு - 10.

இடைமருதீசனைப் பாடிப் பணிந்து புறப்பட்டுத் திருவா ரூரை அடைந்து திருப்புலம்பல் அருளிச்செய்து இறைவரைப் பணிந்து புறப்பட்டுச் சீகாழியை அடைந்து பிடித்த பத்துக் கட்டளையிட்டு அங்கே சிலகாலம் எழுந்தருளியிருந்தார். பின்னர் அங்கு நின்றும் புறப்பட்டு வழிச்செல்வார் சோழநாடு நீங்கி நடுநாட்டை அடைந்து திருமணிமுத்தாறு வலஞ்செய் முதுகுன் றடைந்து வணங்கித் திருவெண்ணெய்நல்லூர் திரு வருட்டுறையை அடைந்து வழிபட்டுத் துதித்துப் புறப்பட்டு நடுநாட்டைக் கடந்து பல காடும் மலையும் கடந்துசென்று திருவண்ணுமலையைச் சார்ந்தார்.

" அன்றிருவர் தேடஅழ லானதொரு வெற்பாய்
நின்றவடி வோமன நிறைந்தபெரு வாழ்வோ
என்றுமலை யண்ணலை இறைஞ்சியருள் கொண்டே
சென்றருணை யாகிய செழும்பதி புகுந்தார்."

திருக்கோயிலிலே சென்று தரிசிக்கப் பெருமான் தம்மை ஆட்கொண்டருளிய குருந்தமர் திருக்கோலங்காட்டக் கண்டு தொழுது பரவசராய்த் துதித்தார். அத்திருத்தலத்தே சிலகாலம் வாசம் செய்கின்ற காலத்து மார்கழித்திங்கள் வந்தது. திருவா திரைக்கு முன் பத்துநாளும் விடியற்காலத்தே விடுகள்தோறும் பெண்கள் ஒருவரை ஒருவர் அழைத்துக்கொண்டு கூடிச்

சென்று நீராடி வருவதைக் கண்டு அவர்கள் வாய்மொழியாக வைத்து அப்பருவத்திற்கு ஏற்பப் படைப்புக் கிரமத்திலே சத்தியின் தொழில்களை விளக்குவதாயும், சத்தியை வியந்த தாயும் உள்ளுறையோடுகூடிய திருவெம்பாவையைக்கட்டளை யிட்டார். அவ்வாறே அம்மானை விளையாடும் பெண்கள் கூற்ருகத் திருவம்மானையை அருளினர். அதன்பின் திருவண்ணு மலையை நீங்கிப் புறப்பட்டுக் காஞ்சிமாநகரை அடைந்து,

" ஏகம் பத்தி னியல்பா யிருந்து
பாகம் பெண்ணே டாயின பரிசும்."

வணங்கிக்கொண்டு தெய்வத்தன்மைவாய்ந்த வேதகிரி என்னும் திருக்கழுக்குன்றத்தை அடைந்தார். அங்கே சர்வேசுவரனுகிய பெருமான் தம் குருமூர்த்தியின் திருக்கோலத்தைக் காட்டக் கண்டு அடியனேன் கலங்காமலே வந்து எனையாண்ட அருட் டிருமேனி காட்டினுய் கழுக்குன்றிலே என்று திருக்கழுக் குன்றப் பதிகத்தைக் கட்டளையிட்டருளினுர்.

பிணக்கி லாதபெருந்துறைப்பெருமானுன் னுமங்கள்பேசுவார்க்
கிணக்கி லாததோர் இன்ப மேவருந் துன்ப மேதுடைத் தெம்பிரான்
உணக்கி லாததோர் வித்து மேல்விளை யாம லென்வினை யொத்த
கணக்கி லாத்திருக் கோல நீவந்து காட்டி னுய்கழுக் [பின்
குன்றிலே.

அத்தலத்திலிருந்து புறப்பட்டுத் திருத்தில்லையைச் சார வழிக் கொள்வாராய் இடையிலே உள்ள நதிகள், காடுகள், மலைகள், சோலைகள், தடாகங்கள் முதலியவற்றை எல்லாங்கடந்து திருத் தில்லையின் எல்லையை அணுய எழுந்தருளி வருகின்ருர் நமது சுவாமிகள். திருத்தில்லை எல்லையை நெருங்க, நெருங்கி நீண்ட மரங்கள் அடர்ந்த சோலைகள் நிழல்செய்து குளிர்ச்சி தந்தன. பொன்னுலகம் வந்ததுபோலப் பொன்மலர்ந்து பொலிந்தன பூங்கொன்றைமலர்கள். வண்டுகள் சிவபெருமான் பெயராகிய தமிழின் இன்னிசைபாடின. அத்திருப் பெயர்களுக்குக் கை நீட்டிப் பொருள் விரிப்பார் போலத் தோன்றித் தோன்றிப் பூக்கள் மலர்ந்தன. சிவஞான மில்லாதார் தவவேடங் கொண் டதையொத்து முருக்க மலர்கள் வாசனையற்று ஒளிவிட்டு நின்றன. பள்ளத்திற் செல்லும் புனல்போலப் புலன்கள்வழியே செல்லும் சிறியோர் மனங்களேபோற் கறுத்து மிளிர்ந்தன

காயாமலர்கள். தேன்கூடுகளோடு கூடிய புன்னைகள் பொன் னுதிர்த்துப் பூத்து மணந்தன. பூங்கமுகம் பாளைகள் விரிந்து குளிர்ந்த மணத்தொடு முத்துச்சாமரை யிரட்டின.

> " பாறுறு மலர்ச்சூதப் பல்லவங்க ளவைகோதி
> யேனோர்க்கு மினிதாக மொழியுமெழில் இளங்குயிலே."

என்று ஞானசம்பந்தப் பெருமான் இனிமையாய் வருணிக்கும் எழிற்குயில்கள் இளமாந்தளிர் கோதுகின்ற தம்வாயினுற் கூவுதல் காளமூதுதல் போன்றிருந்தது.

சண்பகச் சோலையில் மலர்கள் சொரிவது தேவர்கள் பொற் பூமாரி சொரிவது காட்டிற்று. இவையேயன்றி மா, நரந்தம், பாதிரி, கோங்கு, மகிழ், தெங்கு, பலா, வாழை, மந்தாரம், வன்னி, கூவிளம் முதலிய நிலையிற் பெருகுந் தருமிடைந்த நெடுந்தண் கானமேயாகிச் சோலைகள் குளிர்ந்து மிளிர்ந்தன. பெரியோராகிய சுவாமிகள் வரவைக்கண்டு உருகி ஆனந்தித்து அரகர முழக்கம் செய்வனவாகி அச்சோலையில் நிறைந்த தேன் களும் குயில்களும் கிளிகளும் புட்களும் கூவின. மூங்கில் போல் வளர்ந்த கரும்புகள் முத்து முத்தாய் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தன.

> " கலவ மென்மயி லினங்களித்
> தழைத்திடக் கடிமணக் குளிர்கால்வந்
> துலவி முன்பணிந் தெதிர்கொளக்
> கிளர்ந்தெழுந் துடன்வருஞ் சுரும்பார்ப்ப
> இலகு செந்தளி ரொளிநிறந்
> திகழ்தர விருகுழை புடையாட
> மலர்முகம் பொலிந் தசையமென்
> கொம்பர்நின் றுடுவ மலர்ச்சோலை."

பெரியபுராணம் - திருஞா - புரா - 158.

இவ்வாறு வனப்புடைய சோலைகளையும் நந்தனவனங் களையும் எதிர்கண்டாராகிய நமது சுவாமிகள் அவற்றையெல் லாம் சிவவடிவமாகவே கண்டு முன் பணிவோடு தொழுது அங்கு மேற்சென்று திருத்தில்லை மல்லலம்பதியைச் சார்ந்தார். அத்திருநகரின் புற விதிகளையும், தேர் விதிகளையும், நீண்ட மாளிகை வரிசைகளையும், ஆகாயத்தை அளாவிய திருமதில் களையும், மேல் விளங்கும் கோபுர வரிசைகளையும் கண்டு

மகிழ்ச்சியோடு வணங்கிக்கொண்டு செல்கின்றார் நமது பரமாசாரிய மூர்த்திகள்.

" குன்றனைய மாளிகைகள் தொறுங்குலவும் வேதிகைகள்
ஒன்றியமூ வாயிரமங் குளவென்பா ராகுதிகள்."

என்றபடி தில்லைவா ழந்தணர்களது மூவாயிரம் வேதிகைகளினின்றும் வெளிவரும் ஓமப்புகை அந்நகரத்தை மழைமேகஞ் சூழ்ந்ததாகச்செய்தன. வேதவொலியும், தேவகானங்களின் ஓசையும், மண்ணவர் முழக்கும்முழவோசையும், சிவஞானிகள் சொல்லும் ஆகம வசனங்களின் ஒலியும், தமிழ் ஓதும் ஒலியும் மிக்கு விரவிக் கடல் ஒலிபோல முழங்கின. எங்கும் சிவ ஒலியே மிக்கு விளங்கின.

இவ்வாறு மாளிகை வரிசைகள் சூழ்ந்த திருவீதிகளை வணங்கி எழுந்து மலைபோல வானுற வளர்ந்த வடக்குத் திருவாயிலை வணங்கி அதன் வழியாய் மணிவாசகப் பெருமானார் திருக்கோயிலினுள்ளே புகுந்து சிவகங்கையிலே நீராடித் திருமாளிகைப் பத்தியை வலமாகவந்து உள்ளே போய்ப் பொன்னம்பலத்தை வலம்வந்து சிற்சபையிலே அற்புதப் பஞ்சகிருத்தியமாகிய ஆனந்தநடனம் செய்தருளுகின்ற களனிற் பொலிவிட முடையார் நடநவில் கனகப் பொதுவெதிர் கண்ணுற்றார்.

" காண்டலுந் தொழுது விழ்ந்துடன் எழுந்து
கரையிலன் பென்பினை யுருக்கப்
பூண்டவைம் புலனிற் புலப்படா வின்பம்
புணர்ந்துமெய் யுணர்வினிற் பொங்க."

" ஆடுங் கழல்புரி அமுதத் திருநடம்
ஆரா வகைதொழுது ஆர்கின்றார்."

" கையுந் தலைமிசை புனையஞ் சலியன
கண்ணும் பொழிமழை யொழியாதே
பெய்யும் தகையன; கரணங் களுமுடன்
உருகும் பரிவின; பேறெய்தும்
மெய்யும் தலமிசை விழுமுன் பெழுதரு
மின்றாழ் சடையொடு நின்றாடும்
ஐயன் திருநடம் எதிர்கும் பிடுமவர்
ஆர்வம் பெருகுதல் அளவின்றால்."

இவ்வாறு ஆர்வம்பெருக, அம்மையார் காண நடஞ் செய்யும் அம்பலத்தமுதை 'ஆரா அன்பினிற் கண்டு கொண்டு' பருகிய நமது சுவாமிகள் அவ்வமுதன் தம்மை ஆட்கொண் டருளிய குருநாதனைக் காட்சி கொடுக்கக் கண்ணுறக்கண்டு என்மன்னே! உயிரே! மணியே! என்று பலவாறு துதித்துப் பலகால் அன்பொடு தொழுதார். கண்களினின்றும் ஆனந்தக் கண்ணீர் மழைபோலப் பெருக நின்று குருவாய்வந்து என்னை ஆண்ட பெருமானைத் தில்லையிலே கண்டேன் என்ற கருத்தை யுடைய 'கண்டபத்து' என்னும் திருவாசகத்தை அருளிச் செய்தார்.

" ... ...
சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அந்தமிலா ஆனந்தம் அணிகொள்தில்லை கண்டேனே."

" ... ...
பல்லோருங் காணவென்றன் பசுபாச மறுத்தானை
எல்லோரு மிறைஞ்சுதில்லை யம்பலத்தே கண்டேனே."

" பத்திமையும் பரிசுமிலாப் பசுபாச மறுத்தருளிப்
பித்தனிவ னெனவென்னை யாக்குவித்துப் பேராமே
சித்தமெனுந் திண்கயிற்றாற் றிருப்பாதங் கட்டுவித்த
வித்தகனார் விளையாடல் விளங்குதில்லை கண்டேனே."

" பாங்கினொடு பரிசொன்று மறியாத நாயேனை
ஓங்கியுளத் தொளிவளர வுலப்பிலா அன்பருளி
வாங்கிவினை மலமறுத்து வான்கருணை தந்தானை
நான்குமறை பயில்தில்லை யம்பலத்தே கண்டேனே."

என்றிவ்வாறு தில்லை இறைவன் குருவாய் எழுந்தருளித் தன் தொல்லை யிரும்பிறவிச் சூழும் தளைநீக்கி யதையும் அவனே அத்திருக்கோலத்தை மீண்டும் திருவம்பலத்தே காட்டி அருளி னமையும் தோன்றத் தோத்திரித்து நின்றார். உருவமாகிய சபா நாயகர் திருமேனியும், அருவுருவாகிய அருண்மூலத்தானத்தே விளங்கும் அமலமூர்த்தமும், அருவமாகிய சிதாகாசவெளி நின்ற சோதியுமாகிய மூன்றும் ஒன்றேயாகிப் பரமாசாரியர் கட்டளையிட்டபடி அமலன் திருமேனிகள் என்ற உண்மை யினை அனுபூதிநிலையிலே உள் உணர்ந்து செயலற்றுச் சித்திரம் போலாயினார்.

பெருமான் திருமுன்பு நிகழ்தற்பாலனவாகிய வழிபாட்டு முறைகளும் மறந்தவராய்க் கைகால் அசைவற்றுக் கண்ணிமை யாமல் இறைவனது ஞானநடனத்தின் 'தொன்மைக்கோலமே நோக்கி' அதிலே ஈடுபட்டுத் துரியாதீதப் பிரகாசத்திலே முழுகி ஒரு தூண்போல நெடிதுநேரம் நின்றுவிட்டார். பின்பு முன்னுணர்வு வந்துகூடச் சிவ சிவ போற்றி எனப் போற்றிசைத்துச் செம்பொன் அம்பலத்தை மும்முறை வலஞ்செய்து திருமூலத்தானநாதரையும் அம்பிகையையும் இறைஞ்சித் தரிசித்துக்கொண்டு அரிதாக வெளிப்போந்தார். பதஞ்சலி வியாக்கிரபாதர் என்ற முனிவர்கள் பூசித்த திருநாகீச்சரம், திருப்புலீச்சரம் ஆகியவைகளையும் சென்று தரிசித்தார். திருவீதியிலே செல்லும் காலமெல்லாம் திருவாக்கிலே 'ஈறின்றி எழுந் திருவாசகங்'கள் அமிர்ததாரையாகப் பொழிந்தன.

அக்காலத்திலே திருக்குலாப்பத்து, கோயின் மூத்த திருப்பதிகம், திருக்கோயில் திருப்பதிகம், கீர்த்தித்திருவகவல், திருவண்டப்பகுதி, போற்றித் திருவகவல் என்ற திருவாசகங்களை அருளிச்செய்தார். ஆடிளம் பெண்கள் அமர்ந்து நின்று தம்மிற் பாடிக்கொண்டு சுண்ணமிடித்தாராக அதுகண்டு அவர் இசைத்ததாகக் கருத்துக்கொண்ட திருப்பொற் சுண்ணத்தை அருளினார். பெண்கள் தம்முளே குழுமி விளையாடும் வேறு சில விளையாட்டுக்களைக் கண்டு அவர் கூற்றாக 'எம்பெருமான் திருப்புகழ் விளங்கப்பாடுமின்' என்று திருத்தெள்ளேணம், திருவுந்தியார், திருத்தோணோக்கம், திருப்பூவல்லி, திருப்பொன்னூசல் என்ற திருவாசகங்களைக் கட்டளையிட்டார்.

தலைவன் தன்மையில் ஈடுபட்ட ஒரு தலைவி தன் தாயை நோக்கிச் சொன்னதாக அன்னைப்பத்து அருளினார். தும்பிகள் முரல்வன பார்த்து 'சேவேறு சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ' என்று அவற்றை அளியோடு வழிப்படுத்தித் திருக்கோத்தும்பி அருளினார். சோலைக்குயில்கள் கூவக்கேட்டு அவற்றைக் கீதமினிய குயிலே! நீலவுருவிற் குயிலே! தேன் பழச்சோலை பயிலுஞ் சிறுகுயிலே! சுந்தரத்தின்பக் குயிலே! காருடைப் பொன்றிகழ் மேனிக்கடிபொழில் வாழுங்குயிலே! கொந்தணவும் பொழிற்சோலைக் கூங்குயிலே! என்று இனிமையாகவும் இயல்பாகவும் அழைத்துக் 'கொம்பின் மிழற்றுங் குயிலே கோகழிநாதனைக் கூவாய்' என்று அவைகளையும் வழிப்படுத்திக் குயிற்பத்து அருளிச்செய்தார். கிளிகள் பேசுவன

கேட்டு, ஏராரிளங்கிளியே! ஏதமிலா இன்சொல் மரகதமே! தாதாடு பூஞ்சோலைத் தத்தாய்! செய்யவாய்ப் பைஞ்சிறகிற் செல்வி! கிஞ்சுகவா யஞ்சுகமே! கோற்றேன் மொழிக் கிள்ளாய்! சோலைப்பசுங்கிளியே! எனது ஐயன்பேரும், நாடும், நகரும், ஆறும், மலையும், பரியும், படையும், பிறையும், தாரும், கொடியும் ஆகிய பத்தங்கங்களும் இன்னின்னவை என்று இவ்வாறு சொல்க என்று திருத்தசாங்கம் அருளிச்செய்தார்.

எம்பெருமானைக் கற்றிலாதவர், அன்பிலாதவர், அகநெகாதவர், வெண்ணிறணிகிலாதவர் என்றிவர்களைக் கண்டால் அம்ம! நான் அஞ்சுமாறன்றி அரவு, பிணி, படையாதி வேறெதற்கும் நான் அஞ்சேன் என்று அச்சப்பத்து அருளினர். பின்பு திருத்தில்லை நகர்ப்புறத்திலே கீழ்த்திசையிலே ஒரு பன்னசாலையியற்றி அதிலேயிருந்துகொண்டு சிவயோகம் பயின்று அங்கே அமர்ந்திருந்தார். தினமும் சென்று பொன்னம்பலநாதன் ஆனந்தநடனம் கண்டு தரிசித்து ஒழுகிவருவாராயினர்.

“ குறிகுணங்கள் கடந்ததனிக் கூத்தனுரு
வெழுத்தஞ்சின் கொடுவா ளோச்சிப்
பொறிகரணக் காடெறிந்து விசிமனப்
புலந்திருத்திப் புனிதஞ் செய்து
நிறைசிவமாம் விதைவிதைத்துப் பசுபோதங்
களைந்தருணன் னீர்கால் பாய
அறிவுருவாய் விளைந்ததனிப் பரானந்த
வமுதருந்தா தருந்தி நின்றார்.”

திருவிளை - மண்சுமந்தபடலம் - 96.

இவ்வாறு நமது சுவாமிகள் அனைத்துயிர்க்கும் கருணை காட்டுபவராகிய பெருமானது ‘பரங் கருணைத் தடங்கடலிற்’ படிந்து கருணையே வடிவமாய் விளங்கி,

“ எவ்வுயிரு மென்னுயிர்போ லெண்ணி யிரங்கவுநின்
றெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே.”

என்ற கொள்கை கைவந்தவராய் விளங்கினர். அவரது கருணைத் திருநோக்கத்துட் படாத உயிர் வருக்கங்கள் இல்லை. உலகமெல்லாம் ஓதி உய்யட்டும் என்ற தம்முடைய பெருங் கருணையினாலே திருவாசகம் ஆகிய அருட்பாக்களை ஓதினர். அவைகளைஓதிய அன்றமுதல் இன்றளவும் எண்ணற்றஉயிர்கள்

'கருமாறிக் கதியடை'கின்றன. அழியுந்தன்மையுடைய உலக விடயங்களை முன்னிட்டுப்பலவாறு ஆடிச்செல்லும் அணியிழை யார் ஆடல்கள் எல்லாம் நமது ஐயருக்கு ஐயன் ஆடல்களைக் குறிக்கும் ஆடல்களாகவே தோற்றப்பட்டு, அவ்வாறே ஐயனைப்பாடி நீவிரும் ஆடுக என்று அவ்வணியிழையார்களை நோக்கி அளியோடு ஆணையும் இட்டார்.

" அண்ணா மலையா னடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போற்
கண்ணா ரிரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணா ரொளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி யாணா யலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்."

— திருவெம்பாவை 18.

" கையார் வளைசிலம்பக் காதார் குழையாட
மையார் குழல்புரளத் தேன்பாய வண்டொலிப்பச்
செய்யானை வெண்ணீ றணிந்தானைச் சேர்ந்தறியாக்
கையானை யெங்குஞ் செறிந்தானை யன்பர்க்கு
மெய்யானை யல்லாதார்க் கல்லாத வேதியனை
ஐயா றமர்ந்தானைப் பாடுதுங்கா ணம்மானாய்."

— திருவம்மானை - 13.

" மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை யாரமு தெங்களப்பன்
எம்பெரு மானிம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்றகப்பன்
தமையனெம் மையன்றன் றாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே."

— திருப்பொற்சுண்ணம் - 13.

" திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை
உருநா மறியவோ ரந்தணனா யாண்டுகொண்டான்
ஒருநாம மோருருவ மொன்றுமில்லாற் காயிரம்
திருநாமம் பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ."

— திருத்தெள்ளேணம் - 1.

" என்றும் பிறந்திறந் தாழாமே யாண்டுகொண்டான்
கன்றால் விளவெறிந் தான்பிரமன் காண்பரிய
குன்றாத சீர்த்தில்லை யம்பலவன் குணம்பரவித்
துன்றார் குழலினீர் தோணோக்க மாடாமோ."

திருத்தோணோக்கம் - 2.

" சீரார் பவளங்கான் முத்தங் கயிறாக
வேராரும் பொற்பலகை யேறி யினிதமர்ந்து
நாரா யணனறியா நாண்மலர்த்தாள் நாயடியேற்
கூராகத் தந்தருளு முத்தர கோசமங்கை
ஆரா வமுதி னருட்டா ளிணைபாடிப்
போரார்வேற் கண்மடவீர் பொன்னூச லாடாமோ."

— திருப்பொன்னூசல் - 1.

" கண்ணஞ் சனத்தர் கருணைக் கடலினர்
உண்ணின் றுருக்குவர் அன்னே என்னும்
உண்ணின் றுருக்கி உலப்பிலா ஆனந்தக்
கண்ணீர் தருவரால் அன்னே என்னும்."

— அன்னைப்பத்து - 2.

என்றபடி மகளிர் விளையாடல்கள் யாவும் இறைவன் திருவிளையாடல்களைப் புலப்படுக்குமாறே அவர்க்குப் புலப்பட்டனவே அன்றி மற்றில்லை.

மண்ணியாற்றங்கரையிலே சேய்ஞலூர்ப் பிள்ளையாரை அருகுசார்ந்து பசுக்கள் "கனைத்துச் சுறந்து முலைக்கண்கள் கறவாமே பால்பொழிந்தன" கண்டு அப்பிள்ளையார் அந்தப் பால் எம்பெருமானுக்குத் திருமஞ்சனமாகுந் தகுதி உண்மை உணர்ந்து ஒழுகியதுபோல இங்கே நம் ஐயரும் அணியிழையார் ஆடல்களை ஐயன் ஆடல்களைக் கருதிய ஆட்டாகவே கண்டார். தாம் இன்புறக் கண்டவாறே உலகமும் கண்டு இன்புற்று வழிபடவேண்டும் என்ற கருணையினாலே இப்படி நீங்கள் இறைவனைப் பாடி ஆடுங்கள் என்று ஆன்மாக்களை நோக்கி ஆணைதந்தார். பகுத்தறிவுள்ள மக்கள் வருக்கம் மட்டுமா? ஓரறிவுயிர் முதலாயுள்ள மற்ற உயிர் வகைளும் அவர் கருணை நாட்டத்தின் உட்படாதிருக்கவில்லை. கோத்தும்பியும் குயிலும் கிளியும் முதலிய சிற்றுயிர்க்கும் உற்ற துணையாக அவர் உறுதிகூறுவாராயினர் திருக்கோத்தும்பியும்,

குயிற்பத்தும், திருத்தசாங்கமும் இச்சிறிய பிராணிகளையும் வழிப்படுத்தும் அருள்நோக்கத்தோடு எழுந்தன.

இவ்வாறு நமது பரமாசாரியமூர்த்திகள் அருட்பார்வையாலே எல்லா உயிர்களும் இறைவனுடைய இன்பத்தை அடைக என்று அவைகள்மேல் செவ்விய தண்ணளிபூண்டு நின்றூர். பெருமானையே பாடி இவைகள் உறுதிபெறுக என்று எல்லா உயிர்களிடத்திலும் கருணை காட்டுவாராயினர். அறத்திலே சிறந்து விளங்கிய நமது சுவாமிகள் இவ்வாறு ஒழுகிய ஒழுக்கத்திஞலே அழகிய தட்பத்தையுடையவராய் அந்தணராய் விளங்கினூர். அவர் தவஞ்செய்து சிவயோகத்திலே வீற்றிருந்த இடமோ அக்காரணத்திஞலே புலப்பகைமை எல்லாந் தீர்ந்த இடமாகி ஒன்றற்கொன்று பகையான விலங்கினங்களும் நட்புப் பொருந்தும்படி இறைவனது சந்நிதானத்தினும் மிக்கதாய் ஒளிவிட்டு விளங்கியது.

"மானிரையுங் குயவரியும் வந்தொருங்கு
நின்றுரிஞ்ச வயங்கு கானத்
தானிரைகன் றெனவிரங்கி மோந்துநக்க
ஆனந்த அருட்கண் ணீரைக்
கானிரைபுள் ளினம்பருகக் கருணைநெடும்
கடலிருக்கும் காட்சிபோலப்
பானிறவெண் ணீற்றன்பர் அசைவின்றிச்
சிவயோகம் பயிலு நாளில்."

— திருவிளை - மண்சுமந்த படலம் - 97.

---

7. புத்தவாதம்

"குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது."

மேலதிகாரத்திலே கூறிய முறையிலே நமது சுவாமிகள் அரிதாகிய சிவயோகத்திலே இனிதாக அமர்ந்து வீற்றிருந்தார். அதன் தன்மையாவது,

"முக்குணம்புல னைந்துட னடக்கி
மூல வாயுவை எழுப்பிரு வழியைச்
சிக்கெ னும்படி யடைத்தொரு வழியைத்
திறந்து தாண்டவச் சிலம்பொலி யுடன்போய்த்
தக்க வஞ்செழுத் தோரெழுத் துருவாந்
தன்மை கண்டருள் தரும்பரு வெளிக்கே
புக்க முந்தினர் எமதுருப் பெறுவார்
புவியில் வேட்டுவ னெடுத்தமென் புழுப்போல்."

என்று முன்னமேயே நமது சுவாமிகளுக்கு ஆசாரியமூர்த்திகள் உபதேசித்தபடி நிற்குமியல்பினை இவ்வாறு இங்கே நமது சுவாமிகள் பயின்றுவரும் காலத்திலே சைவத் திருநெறி வல்ல சிவயோகி ஒருவர் சோழநாட்டுத் தலங்களை வழிபட்டுத் தில்லையைப் பணிந்து யாத்திரையாகத் தென்னாடு சென்றவர் ஈழநாட்டிற்குப் போயினார். ஈழநாட்டில் அதுபோது புத்த சமயம் பெருகிப் பரவியிருந்தது. ஈழமன்னனும் பௌத்தன். போதி நிழலிற் புத்தர் சொல்லிய பிடக மூன்றும் பயின்று குற்றம் நான்கும் நீங்கிச் சீலமைந்தும் தரித்துக் காமாதியாறும் ஐந்து இந்திரியமும் அடக்கும் இயல்பு பூண்டோனாய்ப் பஞ்ச கந்தமும் கெடுவதே முத்தி என்ற கொள்கையை உடைய பௌத்தாசாரியன் அரசன் அவையிலே நிலையாக எப்போதும் இருப்பன்.

தில்லைச் சிவயோகி அந்நாட்டில் அக்காலத்தே காணாத கோலத்தை உடையவராய்த் திருநீறு உருத்திராக்கம் அணிந்தவராய்க் காமனை முனிந்து நெடுஞ்சடை தரித்துக் கவின்ற கல்லாடை மேற்புனைந்த தூய திருக்கோலத்தை உடையவராய்

மனைக்கடைதோறும் பிச்சை ஏற்று உண்டு திரிந்தனர். எப்போதும் தம் திருவாக்கிலே செம்பொனம்பலம், பொன்னம்பலம், திருச்சிற்றம்பலம் என்று சொல்லும் இயல்புடையவராய் அவ்வாறு சொல்லிக்கொண்டே அந்நாட்டிடை உலவிவந்தார். இவருடைய செய்தியை அறிந்த சிலர் அரசனிடத்தே சென்று,

"ஒற்கமில் திருத்தனுமொ ருத்தனிந் நகர்க்குளான்
நற்கலன்க ளக்குமாலை நாளுமுண்ப தையமே
நிற்கினும் மிருக்கினுந் நிலாவுசெம்பொன் மன்றெனுஞ்
சொற்கிளர்ந் துரைக்குமென்று சொல்லிமுன் வணங்கினர்."

அரசன் அதுகேட்டு அச்சிவயோகியைத் தனது அவைக்கு அழைத்துவரும்படித் தக்கவர்களை அவர்பால் அனுப்பினன். அவர்களும் சென்று அவரை அரசன் அவைக்கு வருமாறு அழைக்க அதுகேட்டு அவர் நன்மைதீமை என்ற பகுப்பின்றிப் பிச்சை எடுத்துண்டு ஒரு கருமமும் கருதாதவர்களிடத்து அரசனுக்கு என்ன காரியமுண்டு? என்று வர மறுத்தார். பிச்சை ஏற்றுண்டு ஒரு கருமமுமில்லாதார் என்ற போதிலும் உலகிலே உள்ள எல்லா உயிர்களையும் காப்பாற்றுவது அரசனுடைய கடன் ஆதலால் வருதல்வேண்டுமென்று அவர்கள் வருந்தி வேண்டுதலும் அதற்கிசைந்து அவரும் வந்து அரசன் அவையிலே சென்று செம்பொனம்பலம், திருவம்பலம் என்று சொல்லி அமர்ந்தனர். அதுகேட்டுப் பொருதானுகி அரசன் இதன் பொருள் என்ன என்று வினவினன்.

சிவயோகி, ஏ! அரசனே! விராட்புருடனுக்கு இருதயத்தானமாகித் தில்லைமாநகரத்திலே விளங்குவது செம்பொனம்பலம். அதுவே உலகுக்கெல்லாம் தெய்வீகத்தலம். எல்லா ஆன்மாக்களும் உய்யும்பொருட்டு உமாதேவியார் காணத் தேவ தேவராகிய எங்கள் கண்ணுதற்பரமனுர் அங்கே ஐந்தொழில் ஆனந்தநடனஞ்செய்தருளுவர். அந்நடனம் கண்டவர்கள் முத்தியடைவது திண்ணம். எல்லாச் சமயத்தெய்வங்கட்கும் நானே தலைவன் என்று திருக்காலிலே வீரக்கழல்கட்டி வெற்றிபொருந்திய இடபக்கொடியை உயர்த்தி ஆடுவர் எம் இறைவர். அந்நடனமே ஐந்தொழிலினைச் செய்யும்.

சிவபெருமானை நினையாதகொடுமனமும் வாக்கும்செயலும் உடையதீயவர்களும் ஒருதரம் செம்பொன் அம்பலம் என்று

சொன்னுர்களானுல் திருவைந்தெழுத்தை 21600 தரம் செபித்த தற்குச் சமானமாகும் என்று சிவயோகி உரைத்தார். இது கேட்டுப் பௌத்தாசாரியன் கனன்று "பிடகமூன்றும் அருளிய எங்கள் புத்ததேவனைத் தவிர வேறு தெய்வமும் உண்டோ?" இன்றைக்கே புறப்பட்டுத் தில்லையை அடைந்து, சைவத்தை வென்று, அவர்கள் தேவரின் காலிற்கட்டிய வீரக்கழலையும், உயர்த்த கொடியையும் அறுத்துப் புத்ததேவனே கடவுள் என்று நாட்டி அவ்வம்பலத்தைப் புத்தர் கோயிலாக்கித் திரும் பினுலல்லது வேறு செய்யேன் என்று சூளுரைத்து எழுந்தான். அவன் வழியிலேபட்ட ஈழ மன்னனும் அவ்வாறே ஆகுக என்று தன் ஆசாரியனைப் பின்பற்றியவனுய், தனது ஊமைப் பெண்ணையும், இவள் ஊமைத்தன்மை தில்லையிலாவது நீங்குவ தாக என்னும் உட்கருத்தோடு உடன்கொண்டு மந்திரி பிரதானி முதலிய பரிசனங்களுடனும், சேனைகளுடனும் தில்லையை நோக்கிப் புறப்பட்டான். இவ்வாறு ஈழமன்னனும் பரிசனங் களும் பௌத்தாசாரியனும் தில்லையை வந்து சார்ந்து, திருப் புலிச்சரத்தை அடைந்து அக்கோயிலிலுள்ள மண்டபத்தில் தங்கினுர்கள்.

தில்லையுள்ளார்கள் அவர்களைநோக்கி. நீவிர் இங்குத் தங்கு தல் தகாது; போமின் என்று கூறினுர்கள். கூறியவர்களைப் பார்த்து பௌத்தாசாரியன் "யாம் உங்கள் சமயத்தைவென்று, எங்கள் சமயத்தையும், புத்ததேவனையும் இங்கு தாபிக்கும் பொருட்டு வந்திருக்கிறேம்" என்று கூறி வாதுக்கு அவர்களை அறை கூவினுன்.

அதுகேட்ட தில்லைவாழந்தணர்களும் அவ்வாறே நாளை வாதுசெய்வோம் என்று கூறிச் சோழ அரசனுக்குத் தெரிவித்து விட்டு, அன்றிரவு மனக்கவலையுடன் அவர்கள் உறங்கும்போது சபாநாயகர் அவர்கள் கனவில் எழுந்தருளித் 'தில்லைவனத்திலே சிவயோகத்தமர்ந்து தவஞ்செய்யும் நம் அடியவன்பாற்சென்று புத்தரை வாதுசெய்து வெல்லுமாறு கூவுமின், அவன் வந்து அவர்களை வெல்வன் என்று ஆணைதந்தார். விடிந்தபின் அவர் கள் ஒருவர்க்கொருவர் கனு நிகழ்ச்சியைச் சொல்லிக்கொண்டு ஆச்சரியமுடையவர்களாய் ஆனந்தநடேசருடைய திருவருளை வியந்துசென்று தில்லைவனத்திலுள்ள பன்னசாலையையடைந்து ஐயரே! மெய்ச்சமயமாகிய நமது சைவசமயத்தை அழித்துத்

திருமன்றிலே புத்த மதத்தைத் தாபிக்கும் எண்ணத்துடன் ஈழ அரசனோடு பௌத்தாசாரியன் இங்கு வந்து எங்களை வாதுக்கு அழைத்துள்ளான். பெருமான் பணித்தபடி தாங்கள் அங்கு வந்து அவர்களை வாதிலேவென்று நம் சைவ மெய்ச்சமயத்தை நிலைநிறுத்தவேண்டும் என்று அவரை அழைத்தார்கள். பெருமான் பணித்தவழியே நின்று போகத்தமர்ந்த சுவாமிகள் மாறுபடும் தர்க்கவாதத்துக்கு இசைவரோ? இசையாமல் மறுத்தார். அவர்கள் வருந்திமீண்டும் கவலையுடன் துயில்கொள்ளும்போது அம்பலத்தாடுமையர் மீளவும் அவர்கள் கனவிலே எழுந்தருளி மணிபோன்ற வாசகங்களைப் பாடும் காரணத்தாலே அவனுக்கு நாம் குருந்தினடியிலே ஆட்கொண்டபோது கொடுத்த தீட்சா நாமமாகிய மாணிக்கவாசகன் என்ற பெயரால் அழையுங்கள் வருவன் என்று பணித்தருளினர்.

அவர்களும் வியப்படைந்தவராய் அவ்வாறே சென்று மீளவும் அவரை அடைந்து 'மாணிக்கவாசகராகிய மாதவரே! தாங்கள் எழுந்தருளி மன்றிறைவன் திருவருளை விளக்குதல் வேண்டும் என்று வேண்டினர்கள். தம் ஆசாரியமூர்த்திக்கும் தமக்குமன்றி உலகத்திலே மற்றையோருக்குத் தெரியாததாகிய 'மாணிக்கவாசகர்' என்ற தம் தீட்சாநாமத்தைச் சொல்லி அவர்கள் அழைத்த அளவிலே 'இது ஐயன் திருவாணையே' என்று நிச்சயித்தவராய் திருவருள் இதுவாயின் அவ்வழியே நிற்பன் என்று துணிந்து நமது சுவாமிகளும் இசைந்து எழுந்தருளி வந்து சபாநாயகரை வணங்கித் தில்லைவாழ் அந்தணர்களுடனே சபைக்கு வந்து சேர்ந்தார். சோழ அரசரும் பரிசனங்களுடனே வந்து மணிவாசகரையும் மன்றவாணரையும் தொழுது மன்றத்தில் இருந்தார். அனேக மடாதிபதிகளும், புலவர்களும், மற்றும் பெரியோர்களும் அக்கூட்டத்தே நிறைந்திருந்தார்கள். சிவநிந்தை செய்யும் கொடியோரைக் காணத்தகாது என்று கருதி,

"புற்றில்வா ளரவு மஞ்சேன் பொய்யர்தம் மெய்யு மஞ்சேன்
கற்றைவார் சடையெம் மண்ணல் கண்ணுதல் பாத நண்ணி
மற்றுமோர் தெய்வந் தன்னை யுண்டென நினைந்தெம் பெம்மாற்
கற்றிலா தவரைக் கண்டால் அம்மநா மஞ்சு மாறே."

என்றபடி அஞ்சி அப்பௌத்தர்களைப் பார்த்து நேரேவாது செய்ய இசையாது அவர்களுக்கும் தமக்கும் நடுவே திரையிடுவித்து நமது சுவாமிகள் இப்புறம் எழுந்தருளியிருந்தார்.

அப்போது சோழ அரசன் சுவாமிகளை அடிபணிந்து சுவாமி! புத்தர்களை வாதில்வென்று சைவத்தை நிலைக்கச் செய்வது தங்கள் பாரம். அதன்பின் தோல்வியுற்ற பௌத்தர்களை முறை செய்வது அடியேன் பொறுப்பு என்று விண்ணப்பித்தார். பின் சுவாமிகள் பௌத்தாசாரியனை விளித்து 'நீ இங்குவந்த காரியம் என்ன' என்று வினவ அவன் 'எங்கள் புத்ததேவனைத் தவிர வேறுகடவுள் இல்லை என்றுதாபித்து இந்தப் பொன்னம் பலத்தினிடமாக எங்கள் புத்த தேவனைத்தாபிக்கும் பொருட்டு வந்தேன்' என்று கூறினன். சுவாமிகள் புன்முறுவல் செய்து, முயலானது யானைபாகிற துண்டோ? அதுநிற்க, உன்சமயக் கொள்கையின்படி உன்தெய்வத்தின் இலக்கணமும், அதனைச் சேர்தலாகிய முத்தியினிலக்கணமும் இன்ன என்று சொல்வாய் என்றார்.

அதற்கு அறத்தை விளக்கும் பிடகாகமத்தைச் சொல்லி அன்புடையவனாய் அனேகயோனிகள் தோறும் பிறந்து ஆன்மாக்களுக்கு நன்மையைச் செய்து கொலை, களவு, காமம், பொய்கள் என்ற நான்கு குற்றங்களினின்றும் நீங்கிப் போதி என்ற அரசமரநிழலிலே விளங்குவான் எங்கள் தேவாகிய புத்த தேவன். கருவின் உருவாகி வருவதாகிய உருவம், வேதனை, சமஸ்காரம் என்னும் குறிப்பு, சமஞ்ஞை என்னும் பாவனை, விஞ்ஞானமென்று கூறப்படும் ஐந்து கந்தங்களும் கூடி ஓயாத அனேக அறிவுகள் உண்டாகி யொழிவது பிறவித் துன்பமாம். அதுநீங்க ஐந்துகந்தமுங்கெடுவதே முத்தியாமென்று பௌத்தா சாரியன் விடைபகர்ந்தான்.

அதைக்கேட்டு அறங்கள் உண்டென்று திரிபிடகங்களை உங்கள் தலைவன் சொன்னான் என்று கூறினாய். உங்கள் சமயக் கோட்பாட்டின்படி உணர்ச்சியானது கணந்தோறும் உண்டாகி மறைந்திடுகிறதென்றும் அதனாலே அது கணபங்க மென்று சொல்லப்படும் என்றும் கொள்ளுகிறீர்களே. இப்படி உணர்வு கணபங்கமாக ஒழியுமானால் சொல்ல வேண்டிய உறுதிப்பொருளையும் அதனைச் சுட்டிக் கூறும் சொல்லையும் தேடி, சொல்லும் முன்னமேயே முன் கணத்திலேயே அந்த அறிவானது அழிந்துபோமல்லவா? அப்படி மாறியழியுமாயின் உன் சாத்திரத்தைச் சொல்வதெப்படி? முடியாதே. ஆகையால் அறநூல் உனக்குச் சொல்லப்பட்டது என்பது பொருந்தாத தாய் முடியும்.

உயிர்கட்காக அனேக யோனி பேதங்கள்தோறும் உங்கள் இறைவன் பிறந்தான் என்று சொன்னாய். பிறவி என்பது அறிவு உண்டாகி மயங்குவது என்றும் சொன்னாய். இப்படி மற்ற ஆன்மாக்களின் மயக்கமாகிய பிறவியைப் போக்கவந்த உங்கள் தேவன்தானே அந்தப் பிறவியாகிய மயக்கத்தில் படுவானானால் அவன் ஏனையவர்களின் மயக்கத்தைப் போக்குவ தெப்படி? எங்கள் தேவன் கொலையைத் தவிர்ந்தான் என்று சொன்ன நீயே அவன் பற்பல யோனிகளிலேயும் பிறந்தான் என்றும் சொன்னாய். ஆயின் புலியாகவும், நரியாகவும் பிறந்த போது பசிவந்தால் கொலைசெய்யாது புல்லும் தழையும் தின்பானோ? உருவம்முதலாக உள்ள ஐந்து கந்தங்களும் கெடுவதே முத்தி என்றால் அப்படி முத்தியடைந்த உங்கள் தேவன் ஆன்மாக்களின் பொருட்டு யோனிகள்தோறும் பிறந்து பின்னும் வடிவம் முதலிய கந்தங்களைக் கொண்டான் என்பதெப்படி? காரணமாகிய உயிருடனே கூடுகின்ற காரியமாகிய உருவமும் இல்லாமல்போகும் என்றால் உங்கள் தலைவனுக்கு உருவமு மில்லையாய்விடுமே.

ஆயின் ஐந்து கந்தமும் கெடுதலே முத்தி என்று சொல்லு கின்ற உங்களுடைய பிடகநூலைச் சொன்னான் யாவன்? இருபத்தொருவர் என்று எண்ணப்பட்ட உனது புத்தர்கள் பிறர்போல யோனியின் வாய்ப்பட்டு வாராமல் தங்கள் தங்கள் தாயாருடைய வயிற்றைப் பீறி வெளிவந்தார்கள் என்று சொல்லப்படுகின்றது. அன்புடனே ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்து சுமந்து பேருதவிசெய்த தாயாருடைய உயிர்க்குப் பிறக்கும்போதே கேடுவிளைவித்தல் பெரும்பாதகம் அல்லவா ?

ஆகாயமொழிந்த மற்ற நான்கு பூதங்களே உள்ளன என்றும் அவற்றின் கலப்பினாலே பேதமேயல்லாமல் இந்தத் தேகமாகிய உருவத்துக்கு வேறாய் உயிர் என்ற ஒரு பொருள் இல்லையென்றும் உங்கள் சமயநூலிற்சொல்லப்படும். அஃது உண்மையாயின் ஒருவன் உறங்குங்காலத்தில் ஒரு பாம்பு முகத்தின்மேல் ஏறிச்சென்றால் அவன் உணருகிறானா! பூதக் கலப்பாகிய உருவம் அப்போதும் உள்ளதாயிருக்க உணர்ச்சி மட்டும் ஏன் இல்லாமற்போயிற்று? வடிவத்தோடு பொருந்திய ஆத்மா என்ற அறிவு உனக்கு இல்லை என்று சொன்னாய்.

உருவம் இறந்தபோது உயிரும் உடனே கடிதாக நீங்கிப் போகும். உருவமும் உயிரும் கூடிப்பிறக்கும் என்பது ஒன்று உண்டானால் அப்படிக் கூடுகின்ற உயிர்வேறு, அது புகும் உருவம் வேறு என்று சொல்லவேண்டுமல்லவா ?

ஐந்து பூதங்களிலே ஆகாயம் என்ற ஒரு பூதமும் அதன் குணமாகிய ஒலி என்பதும் உங்கள் சமயக்கொள்கைகளில் இல்லை என்றாய். அது ஒழிந்து நீங்கள் உண்டென்று கூறும் மண்ணும் நீரும் தீயும் காற்றுமாகிய மற்ற நான்கு பூதங்கட்கும் இடங்கொடுத்து நிற்பது எது? அது ஆகாயமல்லவா? நீ சொல்லி வரும் சொற்களின் ஓசையானது அந்த ஆகாயத்தில் உண்டான தல்லவா? இடம் மிகுந்த திசை என்று சொல்வது இல்லாத வழக்கு ஆகும் என்று சொன்ன நீ வடதிசையிலே போதிநிழல் இருக்கிறதென்று வணங்குகிறாயே; அதன் பொருள் என்ன ? மரம் முதலிய தாவரங்கட்கு உயிர் இல்லை என்று சொல்வாய். உயிருண்டென்பது தற்கால விஞ்ஞானிகள் முடிபு. பூதக் கலப்பால் ஆகிய தேகத்தை உடையவர்கள்போல இம்மரங் களும் நீருண்டால் தழைக்கிறதையும் நீரில்லையானால் வரண்டு சருகாதலையும் காண்கின்றாய்.

ஆகையால் பிறவி பேதங்களுக்கு ஏற்றபடி கன்மங்களை அனுபவிக்கிறதற்காக ஈசன் அமைத்த உருவங்களே இவை என்று துணிவாயாக. காரணமானது நாசமடையாமலிருக்கவும் காரியமாகிய நாமரூபம் முதலியவை கெடுவதுதான் விடுபடுதல் என்று சொல்லப்படுகின்ற மோட்சமாகும் என்பது இறைவன் நூலாகிய வேதாகமமுணர்ந்த பெரியோர் துணிபு. உயிரும் இறந்துபட்டுக்கெடுவதே முத்தி என்பது இதன் உண்மைப் பொருள் அறியாதார் கொள்கை.

ஐந்துகந்தமுங் கெடுவது முத்தி என்றாய். ஐந்தும் கெட்டுப் போனால் அதன்பின் முத்தியடைந்தவர் யாவர் என்று கேள்வி பிறக்கும். அப்போது அழிந்த அந்த ஐந்து கந்தங்களில் உண்டான அறிவு முத்திபெற்றது என்று ஒருவேளை நீ சொல்ல லாம். அப்படிச் சொன்னால் அறிவுமிதமாக உண்டாயின் ஐந்து கந்தமுங் கெடவில்லை என்று ஏற்படும். அவைகெடுதலினாலே உளதாகும் உன்முத்தியும் இல்லையாய் முடியும் என்று நமது மணிவாசகப்பெருமான் மறுத்துக் கூறினார்.

இவற்றைக்கேட்டுக் கோபமுடையவனுய்ப் பௌத்தா சாரியன் ஐயா! எங்கள் சமயக் கடவுள் நிலையும் முத்திநிலையும் உண்மையில்லை என்று சொன்னீரே. உங்கள் சமயத்தின் தெய்வ இலட்சணமும் முத்தி இலட்சணமும்தான் என்ன? உரைப்பீராக என்று கூறினுன்.

அதுகேட்டு நமது சுவாமிகள் எங்கள் கடவுள் கல்லால விருட்சத்தினடியிலேயிருந்து அறமுரைத்தார்; அத்திருக்கோலத்தை எல்லோரும் கண்டு கும்பிட்டுய்யும்படி திருமன்றிலே நடனம் செய்தருளுவர்; திருநீற்றை அணிந்த திருமேனியுடையவர்; பார்வதிபாகர்; அருளே வடிவமாக உடையவர். ஆன்மாக்கள் பாசமகன்று எம்மிறைவன் திருவடிகளிலே இரண்டறக்கலந்து ஆனந்தம் அனுபவிப்பதே முத்தியாகும். இன்னதன்மையன் என்று அறியொண்ணு எம்மானை இன்னனென் றியம்புதல் எளிதோ? என்று சொல்லுமளவில் பௌத்தாசாரியன் மேலும் கூறலானுன்.

ஐயா! நில்லும் உங்கள் கடவுள் வடவாலநிழலிலே யோகத்தில் இருந்து அறஞ்சொன்னுர் என்றீர்களே. ஆயின் அவரால் தியானிக்கப்பெற்ற வேறு ஒரு கடவுள் உண்டென்று எண்ணியோ அவ்வாறு அவர் செபமாலைதாங்கி யோகத்திலிருந்தார்.

உலகத்தார் கண்டு வணங்கும்பொருட்டு உங்கள் கடவுள் திருநடனம் செய்வார் என்று சொன்னீர்கள். நல்லறிவுடைய வேறு சிலர் பார்க்க உண்டானுலல்லது தாமாகவே தம் இச்சையினுலே ஆடுகின்றவர்களும் உண்டா? இல்லையே. உங்கள் இறைவர் திருமேனியிலே திருநீற்றைத் தரித்தார் என்று கூறினீர்கள். திருநீறுனது பரிசுத்தமானதென்றும் அதனுல் தான் பரிசுத்தத்தை அடையலாம் என்றும் கருதி அணிந்துகொண்டாரா? உங்கள் தேவர் பாரவதி அம்மையாரை ஒரு பங்கிலே உடையவர் என்றீர்கள். ஒரு தேகத்திலே பாதிவடிவம் ஆண் வடிவும் பாதிபெண் வடிவுமாயிருப்பதோர் உருவம் உலகத்திலே உண்டா? உங்கள் இறைவன் அவ்வாறு மங்கையைப் பங்கில் வைத்தாரானுல் நீர் ஏன் துறவியாயிருக்கவேண்டும் என்று மறுத்துக்கூறினுன்.

இதனைக்கேட்ட மணிவாசகப் பெருமான் இகழ்ச்சி நகை செய்து இச்செய்திகள் சிவனடியார்களாகிப் பெருவாழ்வுபெற

வந்த உத்தமர்களுக்கல்லாமல் உன்போலியர்களுக்குச் சொல்லத் தகுந்தவையல்ல. ஆயினும் சிலசொல்வேன் கேட்பாயாக.

இறைவன் செபமாலையோடு இருப்பது உலகத்துயிர்கள் எல்லாம் தவஞ்செய்து உய்யவேண்டும் என்னும் கருத்துப் பற்றியேயாம். ஆயுதத்தொழில் கற்பிக்கும் ஆசிரியன் படைக் கலத்தைத் தன்கையிலே தாங்குதல்போல் என்று காண்பாயாக. அவர் நடனஞ் செய்தலைப்பற்றித் தவப்பேறில்லாமல் ஊனக் கண்ணாலே பார்க்கின்றவர்கள் காண நடிப்பதாக நினைத்துச் சொன்னாய். விறகிலே உட்கலந்து நிற்கும் தீயைப்போல் உட் கலந்து உயிர்க்குயிராய் நின்று எல்லாவுயிர்களையும் ஆட்டுவிக் கும் ஒரு நட்டுவன்போல உளன் எங்கள் பெருமான் என்று அறிவாயாக. குழந்தைகளுக்கு நோய் வந்தால் அதற்குத் தாய் மருந்துண்பது போல ஆன்மாக்களுக்கு உண்டாகிய பிறவிப் பிணியைத் தவிர்ப்பதற்காக இறைவர் திருநீற்றை அணிவது என்பதை அறியாதவனாயினாய். அன்றியும் உலர்ந்த கோமயத்தைத் தீயில் சிவக்க வெதுப்பிப் பின்வைத்தால் முன்னர்ச் சிவந்த நெருப்பும் பின்னர் அதன்மேல் மூடிய வெள்ளைநீறும் காண்பதுபோலத் திருநீறும் எங்கள் இறைவ ருக்கு இயல்பில் பொருந்துவது என்றும் அறிவாயாக. உலகத் துயிர்கள் போகங்களை அனுபவித்தற்பொருட்டே இறைவர் பாகத்தில் பெண்ணைவைத்தார். உயிர்களுக்கு யோகங்கொடுத் தருள யோகவுருக்கொண்டார். இறைவன் யோகியானால் உயிர் களும் யோகியாகும்; அவர் போகியானால் அவையும் போகம் துய்க்கும். இது சாத்திர நூல்கள் கூறிடும் உண்மை.

> " வில்லாடன் மார விருப்பவும் யோகம் விளைத்தவந்நாள்
> புல்லா திருந்தன எல்லா வுயிருந்தம் போகத்தையே."

என்னும் உண்மையை நீ உணர்ந்தாயில்லை. குருடன் தன் கைத் தடியை அன்றி மற்றவைகளைக் காணமாட்டான். அதுபோல நீயும் உலகத்திலே பூவிலேநிறைந்த மணம்போலக் கலந்தவனாய் நிற்கின்ற இறைவன் நிலையை அகக்கண் இல்லாதபடியால் உணர்ந்தாயில்லை. ஆதியாயும், யோகியாயும், போகியாயும், அருவமாயும், சோதிவடிவாகிய அருவுருவமாயும், அனேகமான உருவமாயும், இன்பக்கடலாயும் உள்ள இறைவர் இப்பொன் னம்பலமாகிய சிதம்பரத்திலே நின்றநிலையை அல்லாமல் அவர் முடி எது? அடி எது? என்று யார் அறிய வல்லவர்கள்.

"பாதாள மேழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருண்முடிவே
பேதை யொருபாற் றிருமேனி யொன்றல்லன்
வேதமுதல் விண்ணோரு மண்ணுந் துதித்தாலும்
ஓத வுலவா வொருதோழன் றொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற்பிணாப் பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசு."

இவற்றையெல்லாம் அறிந்து அடங்குவாயாக என்பதாய் எடுத்துக்காட்டி இனிது கூறினார்.

இதன்பின் பௌத்தாசாரியன் ஒன்றுங்கூற மாட்டாதவனாய் நின்றாலும் பின்னும் பலவாறு பிதற்றிச் சிவநிந்தை செய்யத் தொடங்கினான். அதுகண்டு நமது மணிவாசக மூர்த்திகள் அவர்கள் வாக்கிலே இருந்து பேசும் வாக்குத்தேவியாகிய நாமகளைப் பார்த்து, ஏ! நாமகளே! முன்ஒருகாலத்திலே சிவநிந்தை செய்த தக்கன் யாகத்திலே நீயும் உடனே சேர்ந்திருந்த பாவத்திற்காக மகாவீரபத்திரர் சத்தியாகிய காளியம்மையாரால் உன்மூக்கு அறுபட்டது மறந்துவிட்டாயோ? வேதசாத்திரங்களைச் சொல்லும் வாக்குகளிலே இருந்து ஒலிக்கின்ற நீ சர்வலோக நாயகனாகிய சிவபெருமானது திருவருளை நிந்தை செய்யும் இவர்கள் வாக்கிலும் இருந்து கொண்டு இவர்களது சொல்லுக்கும் துணையாகி இருக்கின்றாயே. எம்பெருமானுடைய ஆணை. நீ இவர்கள் வாக்கைவிட்டு நீங்கிப்போ என்று ஆணையிட்டார். உடனே பௌத்தாசாரியனும் அவனுடன் சேர்ந்து அங்குச் சிவநிந்தை செய்த பாதகர்களாகிய மற்றைப் பௌத்தர்களும் விடத்தை உட்கொண்டவர்கள் போல நடுநடுங்கி ஊமர்களாயினார்கள்.

இவ்வாறு சமயவாதம் செய்வது சரியானதாகுமா? அது சமய ஒற்றுமைக்கும் பரந்ததான சமரச நோக்கத்திற்கும் பிற சமயங்களைச் சகித்தலுக்கும் விரோதமல்லவா என்று இக்காலத்து நவீனசமய உணர்ச்சிச் சீர்திருத்தக்காரர்கள் சினந்து கூறலாம். அதுவன்றி 'யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வமாகியாங்கே, மாதொருபாகனார்தாம் வருவர்' என்றும், 'எந்தமதமும் சம்மதமாய் இயலும் எங்கள் தம்மதமே' என்றும் சொல்லியபடி சர்வசமய சம்மதமாக உள்ள சைவசமரசக் கொள்கைக்குச் சமயவாதம் விரோதமானதென்று சமய ஆராய்ச்சிக்காரர்களும் குறைகூறலாம். ஆனால் எல்லாச் சமயங்

களும் இறைவனுற் படைக்கப்பட்டவையே. அந்தந்த மதங்களும் தாம் போகும் அளவிலேமட்டும் போந்த உண்மையை விளக்கிப்போகும். அவ்வவையும் சிலசில முறைமையாக உண்மை காட்டுவனவேயல்லாமல் முழு உண்மையையும் எடுத்துக் காட்டுவன அல்ல.

யானையின் காலையும் வாலையும் துதிக்கையையும் தனித் தனியே தடவிக்கண்ட குருடர்கள் யானை உரல்போலும், யானை துடைப்பம்போலும், யானை உலக்கைபோலும் என்று சொன்னது அவரவர் கண்டமட்டில் உண்மையேயானுலும் யானையை முழுதும் பார்த்துக் கண்டவன் சொல்வதனேடு ஒப்பிடும் போது முழுவுண்மையல்லாது போவதுபோலவே இதுவுமாகும். வைதிக சைவமார்க்கமானது படிப்படியாக எல்லாச் சமயங்களையும் தன்னுள்ளே அடக்கி அவ்வவற்றின் உண்மைகள் எல்லாம் தன்னுள்ளே காட்டி, தான்அவற்றின் ஒன்றினுள்ளேயும் அடங்காது முதன்மையாய் விளங்கி 'மௌனமோலி அயர்வறச் சென்னியில் வைத்து அரசாங்கத்தமர்ந்து' விளங்குவது. 'மேற் சமயங் கடந்த மோன சமரசம்' விளங்குவதாகவும் உள்ளது இதுவே. இவ்வுண்மைகளை நமது சாத்திரங்கள் முடித்துக் காட்டும். மேலே கூறிய சமயசமரசம் என்பதன் உண்மைப் பொருளை அறியாமையாலேயே இந்தத் தடைவிடைகள் எல்லாம் உலகில் உண்டாகின்றன.

சமரசம் என்முல் எல்லாம் ஒன்றே என்றுபொருள் அல்ல. உதாரணமாகக் கடவுளே இல்லையென்ற சமயமும் உயிர் இல்லை என்ற சமயமும் உலகம் இல்லையென்ற சமயமும் எப்படி ஒன்ருகும்? அவ்வவைகளை அந்தந்த வகையில் தத்துவ முறையினையோட்டி, இது தாழ்ந்தபடி; இது உயர்ந்தபடி; இது அதனினும் உயர்ந்தபடி; என்று அளந்தறிந்து கொண்டு அவ்வவையும் கர்மத்தாலே பலதிறப்பட்ட ஆன்மாக்களின் தத்துவ உணர்ச்சிக்கு இன்றியமையாமல் வேண்டப்பெற்ற பலபடிகள் என்று கொள்வதே உண்மையான சமரசம்.

பத்து என்ற எண்ணிற்கு ஒன்று, இரண்டு, மூன்று என்று ஒன்பதுவரை எண்கள் வேண்டும். ஆயினும் ஒன்று முதல் ஒன்பதுவரை உள்ள எண்கள் பத்துக்குச் சமம் என்பது கூடாதன்றே? இதுபோலவேதான் சமய சமரசமும் எண்ணப்படும். அளவற்ற புறச்சமயங்கள் அகச்சமயங்கள் எல்லாம் ஏன்

உண்டாயின என்றல் 'சைவ முதலாமளவில் சமயமும் வகுத்து' என்றபடி இறைவனுடைய ஆணையின்படியே உண்டாயின.

அவன் ஏன் இவ்வாறு பலபடச் சமயங்கள் வகுக்க வேண்டும்? ஒன்ருகவே வகுக்கலாகாதோ? எனின் உயிர்களின் உடம்பு வளர்ச்சிக்குப் பருவமும் பக்குவமும் நோக்கி உலகிலே தாய் உணவளித்தல்போல இறைவனும் ஆன்மவளர்ச்சிக்கு உரிய உணவாகிய சமய ஞானத்தை அவ்வவற்றின் பக்குவ பேதம் நோக்கியே உபகரிக்கின்ருன். குழந்தைக்குரிய பால் பெரியவனுக்குப்போதாது. முதியோன் உணவை இளஞ்சிருர் உண்டால் இறந்து படுவார்கள். அதுபோலவே ஆன்மாக்களும் அனந்தம் பக்குவர்களாய் இருக்கக்காண்கிருேமாதலால் அதற் குத்தக்கபடி கீழ்த்தரம் முதல் மேல் தரம்வரை சமயங்களும் அவசியம் இருத்தல் வேண்டும் என்பது விளங்கும். ஆனல் இப்படி ஆராய்வதிலே விரோத பாவனையாவது இகழ்ச்சி யாவது ஒருவருக்கும் உண்டாதல் கூடாது.

" ஓதுசம யங்கள்பொரு ளுணரு நூல்கள்
ஒன்ருேடொன் ருெவ்வாம லுளபலவு மிவற்றுள்
யாதுசம யம்பொருணூல் யாதிங் கென்னில்
இதுவாகும் அதுவல்ல தெனும்பிணக்க தின்றி
நீதியினு லிவையெல்லா மோரிடத்தே காண
நின்றதுயா தொருசமயம் அதுசமயம் பொருணூல்."

என்பது ஆன்ருேர் வாக்காகும்.

இவ்வாருயின் வாதம்செய்து ஒருசமயம் மற்ருென்றை வெல்வதும் அழிப்பதும் எதற்காக? அது சைவசமய சமரசத் திற்கு விரோதமல்லவா? சைவ சமயமானது பௌத்தர்களை வாதத்தில்வென்று அழிக்கத் தொடங்கியது யாதுபற்றி? என்று கேட்கலாம். பிறசமயங்கள் தம்மிற்ருமே வளர்ந்து பரவுதலை மேற்சென்று சைவம் அழித்ததாக எங்குங்கேட்டதில்லை. சைவ சமயமே சமயம். 'பொய்வந்துழலும் சமயநெறி புகுதவேண் டாம் முத்திதரும், தெய்வசபையைக் காண்பதற்குச் சேர வாரும் சகத்தீரே' என்று ஒரு பெரியார் விளித்தவாறும்.

" காலமுண் டாகவே காதல்செய் துய்மின் கருதரிய
ஞாலமுண் டானெடு நான்முகன் வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப் பிரான்றன் னடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின் ருன்வந்து முந்துமினே."

என்று நமது சுவாமிகள் அழைத்தவாறும், பெருங் கருணை யினால் "தாமின்புறுவது உலகின்புறக் கண்டு காமுறுவர் கற்ற றிந்தார்" என்ற நியாயத்தையும் சைவத்தின் மேன்மையையும் நன்கு எடுத்து விளக்கும்.

இதுவேயன்றித் தற்காலம் மதம் மாற்றும் முயற்சிபோலச் சைவமானது பிற மதங்களை அழித்தது என்ற வரலாறுயாண்டும் கேட்டதில்லை. இங்கே பௌத்தாசாரியன் ஈழநாட்டை விட்டு வந்து சோழநாட்டில் புகுந்து தெய்வச்சபையிலே நியதியின்றி தன்னதாக்கிச் சைவத்தைஅழிக்கவும் புத்ததேவனைச்சபையிலே நாட்டவும் எண்ணி அறைகூவிச் சண்டைக்கு அழைத்தான். அவனை வாதுசெய்து வெல்லாமல் நமது சுவாமிகளும் மற்றைச் சைவசமயிகளும் வாளா இருந்திருப்பார்களானால் சைவ இராச தானியை இழந்துபோக நேர்ந்திருக்கும். அதுவன்றி உலகிற்கு உபகாரமாக விளங்கும் சைவமாகிய முதற்சமயத்தை உலகத் திலே காப்பாற்றி வைக்கவேண்டிய தங்கள் முதற்கடமையி லிருந்து தவறியதாக சைவர்கள் எண்ணவும் பெறுவார்கள்.

தன் சொந்த சமயத்தைத் தன் உடைமையாகக் காப்பாற்றிக் கொள்ள யாருக்கும் உரிமையுண்டு. தன்னை அழிக்க வந்தவர் களை அழித்தல் எப்போதும் எங்கும் அடாத காரியமாகாது. அன்றியும் ஆன்மாக்களின் கருமயோக நுகர்ச்சிக்கு வேண்டிய காலத்தில் அதற்குத் தக்கவாறு சமயங்களைப் பெருகவிடுவதும் வேண்டாத காலத்தில் அவற்றைப் பூர்வபக்கமாக்குவிப்பதும் இறைவன் இச்சையாதலின் ஆன்மாக்களும் அதன் வயமாகி அவ்வாறே உலகில் ஒழுகுவர்.

இதுபற்றியே திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் மதுரை யிலே பரவிய சமண சமயத்தை வென்று அழித்துச் சைவத்தை நிலைநாட்டினுர் என்று வரலாறு கூறுகிறது. சைவசமயத்தை யும் அதனுடைய இடங்களையும் தன்னதாக்கி சைவர்கள் இருந்த திருமடத்திலே தீ வைத்தும் இவ்விதமான அனேக தீயவாகிய செயல்களாலே உத்தமமான சைவ மார்க்கத்தை அழிக்க முயன்றுர்கள். அதை நீக்கிச் சைவத்தை மீட்டுத் தம் உரிமைகளைத் தாபித்தலையே புரிந்தாரன்றி எமது சம்பந்தப் பெருமான் வேறு செய்தாரில்லை. கழுவேற்றியது முதலியவை நீதிபற்றி அரசாங்க முறையிலே அரசர் செய்த காரியங்கள். அதன் பின்னர் பிறிதோரிடத்திலே பௌத்தர்கள் எதிர்த்து

வந்து பரிசனங்களையும் சுவாமிகள் ஊர்ந்துவரும் சிவிகையினை யும் வழியிலே தடுத்து வலிய வாதுகூறி வன்மை செய்யவே அவர்கள் தலைவன் தலையிலே இடி விழுந்தது. அதன்மூல மாகவும், அதன்பின்னர்ச் சாத்திரவாதத்தின் மூலமாகவும் அந்தப் பரமகருணாநிதியாகிய ஞானசம்பந்த பரமாசாரிய மூர்த்தி களின் சந்நிதானத்திலே பரசமய நிக்கிரகம் நிகழ்ந்ததே தவிர அக்காலத்தும் சைவர்கள் தாமாக வாதுக்கும் போருக்கும் எவருடனும் போகவில்லை.

திருவாரூரிலே பிறவிக் குருடராகிய தண்டியடிகள் திருக் குளம் தூறு எடுத்துப் பெரிதாக்கிச் செய்ததாகிய சிவ கைங்கரி யத்துக்கு இடையூறு செய்தும், இகழ்ச்சி செய்தும், வன்புரை உரைத்துவைதும், அத்திருப்பணிக்காக அவர்கையிற்கொண்ட கூடையையும் மண்வெட்டியையும் கயிறு கோல்களையும் பிடுங்கி எறிந்தும், சமணர்கள் மேற்சென்று மிகைபுரியவே அதுகாரணமாக அவர்மனம் புலர்ந்து 'என்கண்காணவும் இவர் கள் கண்போகவும் அருள்க' என்று இறைவனை வேண்டினார். அவ்வாறே அவனருளாலே அவர்களும் குருடர்களானார்கள்.

பின்னர் அரசன் அவர்கள் செய்த தீச்செயல் காரணமாக அவர்களை நகரைவிட்டு ஓட்டித் 'தொக்க அமணர் தூர றுத்து' தியாகேசப்பெருமான் ஆட்சியுரியும் அந்தப் பழம்பதியைப் புனிதமாக்கிச் சிறப்புற முறைசெய்தான்.

நமது வாகீசப் பெருந்தகையாரோ அமண்குண்டர் தம்மைத் தீயமிறைகள் பல செய்தகாலத்தும் தாம் மாறாக அவர்கட்குத் தீமை ஒன்றுஞ்செய்யாமல் வாளா இருந்து அந்த நாணில் அமண்பதகருடன் ஒன்றிய மன்னவன் சூழ்ச்சிகளைத் திருத் தொண்டின் உறைப்பாலே வென்று நின்றார். அதுகண்டு மன்னவன்றானே சமணை அழித்து முறைசெய்தான்.

இவ்வரலாறுகளால் யாண்டும் சைவர்கள் தாமாக மேற் சென்று பிற மதங்களை அழிக்க முன்வரவில்லை என்பது தெளி வாகும். தங்கள் சமயத்துக்குப் பிற மதங்களால் இடையூறு களும் அழிவுமுண்டாகும் காலங்களிலே அதனைக்காக்கவே முன் வந்தார்கள். அப்படிச் செய்வதிலும் எந்தம்பெருமக்கள் சமய வாதமாகிய காரியத்தைத் தற்போதங்கொண்டு செய்தாரல்லர்.

" தோல்வியும் வெற்றியும் சொன்மதங் கட்கெலாம்
காலபே தத்ததென் றுந்திபற
கருத்தன் செயலதென் றுந்திபற."

என்றபடி இறைவன் திருவுள்ளக்கிடையை உணர்ந்து அதன் வழியே செய்தார்கள். ஞானசம்பந்தமூர்த்திகள் சமணர்களுடன் வாதுக்குச் செல்லுமுன்னர் 'தேனலர் கொன்றையார்தந் திருவுள்ள மறியேன்' என்று சென்று சொக்கலிங்கப் பெருமானைப் பணிந்து,

" அமண்கையரை ஓட்டி வாது செயத் திருவுள்ளமே."

என்றும்,

" ஞால நின்புகழே யாகவேண்டும்."

என்றும் துதிசெய்து அவர் திருவுள்ளமறிந்ததன் பின்சென்று வென்றார். நமது மாணிக்கவாசகமூர்த்திகளும் மேற்கூறியபடி தில்லைவாணருடைய திருவருளே இவ்வாணை நிகழ்ந்தது என்று உணர்ந்து சென்று அவரைப் பணிந்து அனுமதிபெற்றுச் சென்று வென்றார். தண்டியடிகளும் திருவாரூர்ப்பெருமானை வேண்டியே தம் கண் பெற்றார். சமணர்கள் அத்திருவாணையின் படியே கண் போகவும் பெற்றார்கள். தற்காலப் புதுமைக் கிளர்ச்சிகளிலே சமாதான எதிர்ப்பு என்று கூறப்படும் முறையிலே வாளா இருந்து வென்றருளிய நமது வாகீசப்பெருந் தகையாரும்,

" ஈச னெந்தை யிணையடி நீழலே
மாசில் வீணையும் போன்றது."

என்றும்,

" வஞ்சனைப் பாற்சோருக்கி மதியிலா வமணர் தந்த
நஞ்சமு தாக்கு வித்தார் நனிபள்ளி யடிக ளாரே."

என்றும்,

" திண்ணைன் கெடிலப் புனலு முடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவ தியாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை."

என்றும்,

" கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சிவாயவே."

என்றும் கொண்டு திருவருட்டுணையே வேண்டி நின்று வென்றார். அதனால் உயர்வும் பெற்றார்.

ஆகவே இவ்வாதமானது சமய சோபானக் கிரமத்தை விளக்கும் வகையால் எல்லா உலகத்திற்கும் உபகாரமாகவும், இவ்வாறு வாதம்செய்த புறச்சமயிகளைத் தண்டித்துத் தேற்றி ஆட்கொள்ளுவதினாலே அவர்களைச் சிவநிந்தையாகிய அதிபாதகத்தினின்றும் உய்வித்து ஈடேற்றுவதால் அவர்களுக்கு உபகாரமாகவும், தில்லைவாழ் அந்தணர்கள் முதலிய அடியார்கள் மனக்கவலையை மாற்றி மகிழ்ச்சி ஊட்டுதலால் அவர்களுக்கு உபகாரமாகவும், இறைவன் திருவருளைக் கண்ணாரக் கண்டு அதன்வழி நின்று அவன் அருளையும் ஆணையையும் விளக்கிப் போற்றி அவன் சீர்கள் பரவச்செய்தலால் தமக்கும் உபகாரமாகவும், நின்று நிலவும் பேருபகார காரியமே அன்றிச் சைவ சமய சமரசத்திற்கு எந்த வகையிலும் விரோதமாக மாட்டாது.

நமது சுவாமிகள் உலகத்தை முற்றுந்துறந்து எண்குணப் பெருமையும் நிறைந்தவராய் எல்லா உயிர்க்கும் தண்ணளி பூண்டொழுகி அச்சற்குணங்களையும் கடந்து ஏறி நின்று செயலற்றுச் சிவயோகத்திலே வீற்றிருந்து அதில் விளைந்த சிவஞானானந்தத்திலே முழுகினார் என்பதை,

" மங்கையைப் பொன்னை மண்ணை மனத்திடை மருவா ஞானி
மங்கையைப் பாக மாக உடையவர் மலர்த்தாள் சேர்வ
தங்கையி னெல்லி யென்ப தணிமணி வாச கன்றன்
பங்கமில் துறவு தானே பகன்றிடும் சான்று தானே."

—பதிப்பாசிரியன்.

" குணங்குறி கடந்தபே ரானந்த வெள்ளக்
கொழுங்கடல் திளைத்தாடி."

நின்ற பெரியோராவர். குணங்கடந்த இறைவனை யோக பாவனையால் கூடிநிற்கும் துறவோராகிய அறவோர்தாமும் அவன் போலவே குணங்கடந்தவர்கள் ஆவார்கள். முக்குணவயத்தாலே கருமமுண்டாகி அதுவே பிறப்புக்கு ஏதுவாகுமாதலால் அக்குணங்களின் வசப்படாது கடந்து அவற்றை அடிப்படுத்தி ஏறி நிற்பர் பெரியோர். அன்றியும் கருணையாதி நற்குணங்களையெல்லாம் குன்றுபோல அடுக்கினால் அக்குன்றத்தின் உச்சியிலே ஏறி நிற்பவர்களும் இத்தகைய சிவஞானிகளே ஆவர். ஆனால் தாமத குணத்தின்பாற்படாது கருணையின் காரணமாக ஒரோவழிச் சினம் என்பது கணமாத்திரமாய் நிகழலாம். அதுவும் அருளின் வழித்தாகவே உளதாகும். இவ்வெகுளி

தாமதகுணமாகிய கோபமாகமாட்டாது. கைக்கும் மருந்து போல் அருட்சொரூபமாதலின் கைக்கு மருந்தின்சுவை நோய் நீங்கிப் பின்காட்டுமாறு, இங்குப் புத்தர்கள் குற்றம்நீங்கி நலம் பெற்றதாகிய உபகாரத்தினுல் நம் சுவாமிகள்மாட்டு நிகழ்ந்த இது அருட்கோபமே அன்றி மருட்சினமாகாது.

குணங்குறி கடந்து இன்பமே வடிவமாக உள்ள கடவுள் இடத்தும் அருள்காரணமாகச்சிலபோது கோபம் உண்டாகும். சிவபெருமானுர் செய்த அட்டவீரங்களும் அவர் திருக்குமரனுர் செய்த சூரசம்மாரமும் ஆகியவை அந்த அந்த ஆன்மாக்கள் உய்யும்படிவைத்த கருணைகாரணமாய்த் தோன்றிய கோபத்தா லேயே நிகழ்ந்தன.

"நிக்கிர கங்க டானும் நேசத்தா லீசன் செய்வன்
அக்கிர மத்தாற் குற்ற மடித்துத்தீர்த் தச்சம் பண்ணி
யிக்கிர மத்தி னுலே யிண்டற மியற்றி டென்பன்
எக்கிர மத்தி னுலு மிறைசெய லருளே யென்றும்."

"நந்தைதாய் பெற்ற தத்தம் புதல்வர்கள் தஞ்சொ லாற்றின்
வந்திடா விடினு றுக்கி வளாரினு லடித்துத் தீய
பந்தமு மிடுவர் எல்லாம் பார்த்திடிற் பரிவே யாகும்
இந்தநீர் முறைமை யன்றோ ஈசனுர் முனிவு மென்றும்."

— சிவஞானசித்தியார் - இரண்டாஞ்சூத்திரம் - 15-16.

ஆண்டாளைப் போன்றவர்கள் தாம் அடியவர்களும். ஆதலால் இவர்கள் முனிவும் அத்தன்மையானதேயாகி அரு ளால் வருவதன்றி மறத்தால் வருவதல்ல. மறத்தாலும் மாறு பாட்டாலும் இகலாலும் வரும் சினமே தீக்குணம். இவர்கள் வெகுளியோ அப்படிக்கல்லாது, அருளின் திறத்ததாய் நற் குணமேயாம். ஆதலின் இதனுல் அவர்கள் குணப்பெருமைக்கு ஒரு சிறிதும் குறைவில்லை. இவ்வெகுளிதானும்,

"... ... ... விற்பிடித்து
நீர்கிழிய வெய்த வடுப்போல மாறுமே
சீரொழுகு சான்ரேர் சினம்."

என்றபடி கணந்தான் நிற்கும். அப்படி அது நிற்பது ஒரு கணமே. அதனை வாராமற் காப்பது தேவர்க்கும் மூவர்க்கும் யாவர்க்கும் அரிதாகும். மேலே காட்டியவாறு பேருபகாரத் தொழிலாகிய இச்சமய வாதத்தைச் சுவாமிகள் நிகழ்த்திய போது வாதத்தில் தோற்றுப்போயின பின்னும் சிவநிந்தை

செய்த புத்தர்கள் மேலும் சிவாபராதத்துக்காளாகி நரகில் வருந்தாமல் தடுக்கும் கருணையினாலும், அவர்கள் வாக்கில் இருந்து சிவநிந்தைக்கு உடந்தையாயிருந்தது பற்றி முன்னொருகாலம் மூக்கறுபட்டதுபோல மேலேயும் நாமகள் தண்டனையடைந்து வருந்தாமல் தடுக்கும் கருணையினாலும், குணமென்னுங் குன்றேறி நின்றாராகிய நமது சுவாமிகளிடத்து வெகுளி நிகழ்ந்தது. அது ஒரு கணமாத்திரம் நின்றது. அப்போது நாமகளை நீ இவர்கள் வாக்கினின்றும் அகலப்போ என்று ஆணை பிறந்தது. தான் மும்மூர்த்திகளில் ஒருவராகிய பிரமதேவர் மனைவியாயிருந்தும் அதனை ஒரு கணமுங் காக்க வல்லமையில்லாதவளாய் நாமகள் அஞ்சி அந்தக் கணமே அவர்கள் நாவை விட்டு அகன்றாள் ஆதலின்,

"குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது" ஆக விளங்குவதாயிற்று.

8. கோபப்பிரசாதம்

> "ஐந்தவித்தா னாற்றல் அகல்விசும்பு ளார்கோமான்
> இந்திரனே சாலுங் கரி."

இவ்வாறு பேசவல்ல புத்தர்கள் ஊமர்களாயினார்கள். அவர்கள் சமயச்சார்புகொண்ட ஈழமன்னன், அதுகண்டு தானும் உய்ந்து தன் ஊமைப்பெண்ணையும் உய்விக்கும் கருத்துக்கொண்டோ அன்றிச் சைவத்திறத்தை மேலும் வெளிப்படுத்த இறைவனது சங்கற்பத்தினால் ஈடுபட்டோ அறியோம். எழுந்து வந்து சுவாமிகளை வணங்கி சுவாமி! இப்போது செய்த இந்தச் சாத்திர வெற்றிமட்டும் போதாது. சாபமும் அனுக்கிரகமும் ஆகிய கோபப் பிரசாதம் எந்த மதச்சார்பிலே வெளிப்படக் காண்போமோ அதுவே மெய்ச்சமயமாம் என்று நான் கொள்வேன். இதுவரை பேசிய புத்தர்கள் ஊமையானது கோபத்திறத்தை வெளிப்படுக்கும். இனி இதுவரை பேசாத பிறவி ஊமை பேசுமாயின் அதுவே பிரசாதமாகி அனுக்கிரகத் திறத்தினை வெளிப்படுத்தி அற்புதத்தைப் பூர்த்தியாக்கும்.

இதோ நிற்கும் என் பெண் ஊமை; இவளைப் பேசும்படி செய்வீர்களாயின் நான் தங்களுக்கு அடித்தொண்டனாகித் தங்கள் சமயத்தையே சார்ந்து வாழ்வேன் என்று கூறினான். மன்னவன் தங்கள் சமயத்தைவிட்டு நீங்காதிருக்கவேண்டும் என்னும் கவலையினாலே புத்தர்கள் மணி மந்திர அவுடதமாகிய மூன்றும் தங்கள் புத்ததேவனே என்று கருதித் தியானித்துச் செபித்துப் பார்த்தார்கள். ஒன்றும் பயன்படவில்லை.

நமது சுவாமிகளோ தில்லை வாணனைத் தியானித்துக் கொண்டு அப்பெண்ணின்மேல் தமது திருக்கடைக் கண்ணோக்கம் வைத்துச் சாட்சுதிட்சை செய்து அப்புத்தர்கள் முன்னமே நிகழ்த்திய ஐயங்களையெல்லாம் ஒவ்வோர் கேள்வியாக அப் பெண்ணைக் கேட்டருளுவாராயினார். அப்பெண் ஊமைத் தன்மை நீங்கப்பெற்றவளாய் அந்த வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் எம்பெருமானது திருப்புகழ்கள் விளங்கும் வண்ணம் வாய்திறந்து விடை பகர்வாளாயினாள். ஊமை நீங்கிப் பேசினதினாலே இறைவனது அருட்பெருமை விளங்குவதாயினதோடு அவ்விடைகளிற் பொருந்திய விடயங்களிலே அவனது பேரருட்

பெருமைகளும் விளக்கமுற்றன. அவ்வினுவிடைகளைக் கீழ்க் காண்போம்.

மணிவாசகரால் வினு விடையாகப் பாடிய திருப்பதிகம் திருச்சாழல் என்பதாகும். இது நாலடித்தரவு கொச்சகக் கலிப்பா பத்தொன்பது கொண்டது. இது பல்வரிக்கூத்துள் ஒன்று என அடியார்க்கு நல்லார் குறிப்பிடுகிருர். இது இக் காலத்து நடைமுறையில் வழங்கும் ஏசல்பாட்டுக்களை ஒத்தது. ஒரு தலைவனை ஒருவர் இகழ்ந்தும், மற்ருெருவர் அந்த இகழ்ச் சிக்கு அமைதி கூறிப் புகழ்ந்தும் வினுவிடையாகப்பாடி கை கொட்டி ஆடும் விளையாட்டுச்சாழல் என்று மணிவாசகர் காலத்து வழங்கி இருத்தல்வேண்டும்.

திருச்சாழலில் சிவபெருமானைப்பற்றி வழங்கும் பல புராணக் கதைகளின் செய்திகளை ஒரு பெண் இகழ்ந்து கூறுவதாகவும் மற்ருெருபெண் அச்செய்திகளின் உட்பொருளான உண்மை களை எடுத்துரைத்துப் புகழ்வதாகவும் அமைந்து விளங்குவது. மேலும் பல சமய உண்மைகளையும் தத்துவத்தையும் எளிமை யாக எவரும் தெரிந்துகொள்ளும் முறையில் எடுத்துரைக்கப் பெற்றிருக்கின்றது. தில்லையில் புத்தர்களை வாதில் வென்ற போது ஈழத்தரசன் மகளாகிய ஊமைப்பெண் திருவருளால் பாடியதாகவும் அப்பாட்டுக்களின் கருத்துக்களை அடிகள் சாழல் விளையாட்டில் அமைத்துப் பாடியதாகவும் பழங்கதை கள் வழங்குகின்றன. இதில் 10வது பாடல் வினுவிடையாக அமையப்பெருமல் அடிகள் பெற்ற அந்தமிலா ஆனந்தத்தைப் போற்றுகின்றது. இனி வினு விடையைக் காண்போம்.

இறைவன் வெண்ணீறுபூசி அரவம் அணிந்து மறை பேசுவன்போலும் என்பது வினு. அவன் எதைப்பூசி எதைப் பூண்டு எதைப்பேசினுலும் அதனுல் எமக்கென்ன? அவன் எல்லாவுயிர்களிடத்தும் இயல்பிற் பொருந்தி உலகத்தை நடத் துவன். அவன் தன் பெருமை தானறியாத் தன்மையன் என்பது விடை.

எனக்கு அப்பனும் என் இறைவனும் எல்லார்க்கும் ஈசனு மாகிய அவன் தைக்கப்பட்ட உடையைக் கோவணமாகக் கொள்ளக்காரணம் என்ன என்புது வினு.

பலகலைகளும், கலைகள்கூறும் பொருளும், வேதம்நான்கும் நூற்சரடாகத் தன்னையே கோவணமாகத் தான் அணிந்து கொண்டான் அதனால் அவன் பெருமை அறியவொண்ணாது என்பது விடை..

இறைவன் விரும்பும்கோயிலோ இடுகாடு. அவன் அணியும் ஆடையோ புலித்தோல் ஆடை. அவனே தாயும் தந்தையும் இல்லாதவன். தான் தனித்து வாழ்பவன் என்பது வினா.

இறைவன் தாயும் தந்தையும் இல்லாதவனாயிடினும் அவன் கோபிப்பானானால் இவ்வுலகமுழுவதும் பொடிப் பொடியாகி விடும் என்பது விடை.

அவன் அயனையும் அனங்கனையும் அந்தகனையும் சந்திரனை யும் வடுச்செய்ததேன் என்பது கேள்வி.

நாயகனே தண்டிப்பானானால் அது வானவர்க்குச் சய மாகுமே அன்றி வடுவாகுமோ என்பது விடை.

தக்கனையும் யாகம் செய்வோனையும் தலையை அறுத்து ஏனைய தேவர் கூட்டங்களையும் தொலைத்தது என்ன பயன் கருதி என்பது வினா.

அவ்வாறு தொகுதியாகவந்த தேவர்களை அழித்து அவர் களுக்கு அருள்செய்து யாகம் செய்தவனுக்கு அவன் செய்த மிகைக்காக வேறு தலையாகிய ஆட்டுத்தலையை அருளினான் என்பது விடை. இது மறக்கருணை.

பிரமனும் திருமாலும் அறியமுடியாதவண்ணம் செந்தீயின் உருவாக நிலமுதலாகக் கீழண்டங்களைக் கடந்து நின்றது என்னகாரணம் என்பது வினா?

இவ்வாறு இறைவன் நின்றிலனேல் இருவரும் கோபத் தால் விளைந்த ஆங்காரம் தவிரார்களாய் அழிவர். அவர்களைக் காக்கவே இறைவன் அழலுருவானார் என்பது விடை.

வினா: இமயமலையரசன் மகளாகிய உமாதேவியாரைத் தம் திருமேனியில் இடப்பாகத்தே வைத்துக்கொண்டிருக்கவும் சலமுகத்தால் ஒருத்தி அவன் சடையில் பாயுமது ஏன்?

விடை: அவள் அங்ஙனம் பாயாவிட்டால் இந்தப் பூமி முழுவதும் பாதாளத்தில் பாய்ந்து பெரிய அழிவினை விளைத்திருக்கும்.

வினு: இறைவன் கோலாகலமாய் ஒலிக்கின்ற பாற்கடலிலிருந்து உண்டான ஆலாலமுண்ட சதுர் என்ன?

விடை: இறைவன் அங்ஙனம் உண்டிலனேல் பாற்கடல் கடைந்த அன்றே அயன் மால் உள்ளிட்ட தேவர் அனைவரும் அழிவர். இந்த உண்மையை அறிவாயாக.

வினு: தென்பால் உகந்தாடும் தில்லைச் சிற்றம்பலவன் பெரும் பித்தனுய், பெண் ஒருபால் உகந்தது என்ன?

விடை: அறிவில்லாப் பேதையே! அவன் அங்ஙனம் ஒரு பால் பெண் உகந்திலனேல் இருநிலத்தோர் யோகெய்தி வீடுவர்.

வினு: தனக்கு முடிவில்லாத பரமேசுவரன் தன்னை அடைந்த நாயை ஒத்த தமியேனைச் சிவானர்தக்கடலில் அழுத்தியதன் காரணம் என்ன?

விடை: இறைவன் இவ்வண்ணம் ஆனந்த வெள்ளத்து அழுந்தச்செய்தது மணிவாசகர் தமக்கு அருளிய சிறப்பாகும் என்கின்ருர். இது வினுவிடையில் அமைந்த திருப்பாடலன்று. இறைவன் அருட்பெருமையை விளக்கும் திருப்பாடல்.

வினு: பெண்ணே! நரம்போடு எலும்புகளையும் அணிந்து கங்காளம் தோள்மேலே காதலித்த இது என்ன தவமாம்?

விடை: கற்பாந்தமாகிய காலாந்தரத்து அயன் மாலாம் இருபெருந் தேவரும் தம் காலம் முடிந்தது என்பதை அவர்களுக்கு அறிவிக்க அவர்களது கங்காளத்தையே தரித்தான்.

எடுத்துக்காட்டு:

"பெருங்கடன் மூடிப் பிரளயங் கொண்டு பிரமனும்போய்
இருங்கடன் மூடி யிறக்கு மிறந்தான் களேபரமும்
கருங்கடல் வண்ணன் களேபர முங்கொண்டு கங்காளராய்
வருங்கடன் மீளநின் றெம்மிறை நல்வீணை வாசிக்குமே."

— வாகீசர்: திருவிருத்தம்.

வினா: காட்டில் வாழுகின்ற புலித்தோலாகிய உடையையும் இறந்தவர் மண்டை ஓட்டில் உணவையும் சுடுகாடாகிய நகரத்தையும் உடைய அவனுக்கு இவ்வுலகத்தில் யார் அடிமை யாவர்.

விடை: ஆனாலுங்கேள். அயனும் திருமாலும் தேவர்கள் அரசனாகிய இந்திரனும் அவனுக்கு வழிவழியான அடியவர்கள் ஆவார்கள்.

வினா: மலையரசன் மகளாகிய பாவையை உலகறிய மணஞ் செய்துகொண்டான் என்பது என்னையோ!

விடை: அவன் அங்ஙனம் மணவானாயின் உலகங்கள் அனைத்தும் கலைகள் நிறைந்த பொருள்கள் அனைத்தும் கலங்கிப் போகும்.

வினா: தேன்பாயும் வயல்சூழ்ந்த தில்லைச் சிற்றம்பலவன் நடனத்தை இடைவிடாமல் பயிலக் காரணமென்ன?

விடை: அவன் அவ்வாறு நடனஞ் செய்திலனாயின் பூமியெல்லாம் ஊன்தங்கியிருக்கின்ற வேலையுடைய காளிக் கூட்டங்களுக்கு உணவாகும்.

வினா: மதம் நிறைந்த யானையையும், விரைந்து ஓடும் குதிரையையும், தேரையும்விரும்பி ஏறாமல் இடபத்தைவிரும்பி ஏறியதன் காரணம் என்ன?

விடை: பரந்த மூன்று மதில்களையும் தழலாக எரித்த அக்காலத்துத் திருமால் இடபமாகத் தாங்கினான்; அதனால் என்று அறிவாயாக.

வினா: அன்று அவன் ஆலின்கீழ் நால்வருக்கும் அறஞ் சொன்னான் என்பது என்ன?

விடை: அறஞ் சொன்னானாயினும், மறத்தை யழிக்க மறமுமுடையனாய்ப் புரமூன்றும் கூட்டோடே கொன்றான். அன்றியும் அவன் அறமுரைத்திலனேல் அவர்கட்கு உலகின் இயற்கை தெரியா.

வினு : திருச்சிற்றம்பலத்தில் திருநடனஞ் செய்து உண்பதற்காகப் பிச்சையேற்றுத் திரிகின்ற சிவனையும் ஒரு தேவனுக எண்ணி அடைவது என்ன?

விடை : சிவன் அவ்வாறு ஆனவகையைக் கேட்பாயாக. நான்கு வேதங்களும் தமக்குத் தெரியாமலே அவனை எம்பெருமான் என்றும் இறைவன் என்றும் துதித்தன. அதனுலேயாம் அறி.

வினு : வஞ்சனையையுடைய சலந்தரனுடைய உடலைக் கொன்ற நல்ல சக்கரப்படையை நன்மையமைந்த நாராயணனுக்குக் கொடுக்கக் காரணமென்ன?

விடை : நாராயணன் தன் கண்ணைத் தோண்டிச் சிவபெருமான் திருவடியின்கீழ் தாமரை மலராகச் சாத்தியதால் அவ்வாறு அருளினன் என்க.

வினு : புள்ளிகளையுடைய புலித்தோலை ஆடையாக உடைய இறைவன் நஞ்சை அமுதாக உண்ட காரணம்என்ன?

விடை : எம்பெருமான் எதனை உடுத்து எதனை உண்டாலும் தன் பெருமை தானறியாத தன்மையை உடையவன் காண்பாயாக.

வினு : கல்லாலின்கீழ் இறைவன் சனகாதியர்க்கு அறம் உரைத்தவகையை அறியச் சொல்லுக ?

விடை : முனிவர்கட்கு அறம் முதல் நான்கும் அன்று அருளிச் செய்யாவிடில் திருந்த விரும்பும் அவர்கட்கு உலக இயற்கையே தெரியாமற் போகும்.

என்று இவ்வாறு இறைவனது பெருமைகளைச் சிறிதும் உணராத பௌத்தாசாரியன் கேட்டவைகளையே கொண்டு நமது சுவாமிகள் அப்பெண்ணை நோக்கி நீ இவற்றிற்குவிடை சொல்க என்று வினுவிவர அவளும் அவற்றிற்கு ஏற்ற விடைகளைப் பகர்ந்தாள். அவ்வினு விடைகளைச் சுவாமிகள் தமது திருவாசகத்திலே திருச்சாழல் என்ற பகுதியாகத்தொகுத்துக் கட்டளையிட்டருளினர்.

ஈழமன்னனும் அதுகண்டு அற்புதமும் அதிசயமும் உடையனுய்ச் சுவாமிகள் திருவடிகளிலே விழுந்துபணிந்து எழுந்து அவர் திருவருளினுலே சைவத்திறத்தை அடைந்தவனுகித் தொண்டனுக ஆயினுன். அவன் பெண்ணும் ஊமைத்தன்மை நீங்கி நமது சுவாமிகளின் கருணையினுலே தூய்மைபெற்று அவரைப் பணிந்து உய்ந்தாள்.

சோழவரசனும் தில்லைவாழந்தணர்களும் மற்றும் அடியவர்களும் 'நாதன்றுள் வாழ்க' 'இறைவனடி வாழ்க' திருத்தில்லையம்பலம் வாழ்க என்று வாழ்த்தி மணிவாசகப் பெருமானைத் துதித்தார்கள். புத்தனுய் வந்தவனுகிய ஈழமன்னன் திருநீறு உருத்திராக்கமணிந்து சைவனுகிச் சுவாமிகளைப் பணிந்து 'இந்தப் புத்தர்களும் ஊமை நீங்கிப் பேசுந்திறம் பெற்றுய்யும்படித் திருவருள் புரியவேண்டும்' என்று விண்ணப்பித்தான். அவ்வாறே சோழமன்னனும் ஏனைய அடியவர்களும் வேண்டினுர்கள். சுவாமிகளும் அவர்கள்மேல் தமதுதிருவருட் பார்வையைச் செலுத்தினுர்.

அவர்கள் ஊமை நீங்கப்பெற்றவர்களாய்ச் சுவாமிகளை வணங்கிக் குற்றமற்ற மனத்தோடு கூடிய சுவாமி! எங்கள் தீவினையினுலே இதற்கு முன்னமே நாங்கள் திருநீற்றையும் உருத்திராக்கத்தையும் தரிக்கும் பேறு இல்லாதவர்களாய் அவற்றை இகழ்ந்து திரிந்தோம். இன்று தேவரீரது திருவருளினுல் தண்டிக்கப்பெற்றுத் தூய்மைகள் செய்யப்பெற்றேம். ஆகையினுலே தேவரீரது அருமையான திருக்கையினுலே அடியேங்களுக்குத் திருநீறு உருத்திராக்கங்களையும் காவி உடையையும் தந்தருளல் வேண்டும். நாங்கள் முன் அணிந்திருந்த புத்த சின்னங்களாகிய துவராடை முதலியவற்றைச் சுட்டெறிக்குமாறு அருள்புரியவேண்டும் என்று குறையிரந்து விண்ணப்பித்து நின்றுர்கள். சுவாமிகளும் அவ்வாறே 'ஆனநீற்றுக் கவசமடையப் புதுமின்கள்' என்று,

"கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்விரே யாமாகில்
தங்கா வினைகளும் சாரும் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே."

என்றபடி ஆசிகூறித் திருவருள் புரிந்தார். அவர்களும் சைவர்களானுர்கள்.

அனைவரும் சபேசனது திருமுன்பு சென்று 'அண்டரே போற்ற அம்பலத்தாடு மையனே! உய்யுமா றருளே' என்று பலவாறு துதித்து அவரை அடிவணங்கி மகிழ்ச்சியோடு தத்தம் இடம் சென்ருர்கள். சுவாமிகளும் சபாநாயகரை வணங்கிக் கொண்டு திருப்புலீச்சரத்தை அடைந்து புலீச்சரநாதரைப் பணிந்து தமது பன்னசாலையை அடைந்து முன்போலச் சிவ யோகத்திலே அமர்ந்திருந்தார்.

இவ்வாறு நமது சுவாமிகளது சாபமும் அனுக்கிரகமு மாகிய இரண்டும் வெளிப்படக் கண்டோம். குணமென்னுங் குன்றேறி நின்றவராகிய அவர் வெகுளி தானுள்ள அளவு கணப் பொழுதேயாயினும் அதைக் கலைமகள் தானும் கணமேனும் ஆற்றமாட்டாளாய் அஞ்சிப் புத்தர்கள் நாவைவிட்டு நீங்கிப் போக அவர்கள் ஊமர்களாய்நின்ற மேல் வரலாற்ருலே, அவர் வெகுளி கணமேயும் காத்தல் அரிதென்பது கண்டோம். இங்கே ஆசாரியமூர்த்திகளின் அந்தப் பெருமையிலே மற்ருெரு பகுதியாகிய அருளின் ஆற்றலைக் காண்கிருேம்.

ஓசையே, பரிசமே, பார்வையே, உருசியே, கந்தமே என்ற ஐந்து புலன்களின் இன்பங்களிலேயும் கொண்ட அவா ஐந்தி லேயும் செல்லாதபடி அடக்கி மனதைச் சிவபெருமானை அடை தலாகிய ஒருவழிச் செல்லவைத்த ஆசாரியமூர்த்திகளின் அள வற்ற ஆற்றலுக்குப் பிரமாணம் நாம் வேறு காணவேண்டிய தில்லை.

முன் ஒருகாலத்தே கௌதம முனிவரது பத்தினியிடத்தே தகாத செயல் செய்யத் துணிந்தானய் இந்திரியவய மயங்கி இந்திரன் செய்த தீய செய்கைபற்றிக் கௌதமர் அவன் உடல் முழுமையும் வடுக்குறிகளாகுக என்று சாபமிட்டார். அவன் பயந்து அவரைப் பணிந்து சாபநீக்கமா்குமாறு வேண்டிஞனுக, அவரும் இரங்கி அக்குறிகள் அவன் காட்சிக்குமட்டும் வடுக் குறிகளாகவும், பிறர்காட்சிக்கெல்லாம் கண்களாகவும் தோற்று மாறு தீர்வும் வகுத்தார். அவையும் அவ்வாறேயாயின. தான் ஐந்தவியாது நின்று ஐந்தவித்தானது ஆற்றல் உணர்த்திஞனாத லின் இந்திரன் ஐந்து அவித்தாரது ஆற்றலுக்கு அமையுஞ் சாட்சியாஞன்.

இங்கே நமது சுவாமிகள் ஐந்தவித்தாரின் மேம்பட்டு விளங்கிய அருந்தவராதலின் கலைமடந்தையை 'இந்தப் புத்தர்

நாவினின்றும் பேர் என்று கட்டளையிட்டுப் புத்தர்களை ஊமராக்கினர். ஊமைப்பெண்ணின் வாக்கிலே அக்கலைவாணியை வா என்று ஆணையிட்டார்; வந்தாள். அவளும் பேசினள். புத்தர்களும் உய்க என்று கருணையினல் அவர்கள் நாவில் வாணியை வரும்படி விளித்தார். அவள் வரவே அவர்கள் மீண்டும் பேசினர்கள்.

இவ்வாறு போகவும் வரவும் ஆணையிடப்பெற்ற கலைமடந்தையும், சாபமும் நீக்கமும் பெற்ற புத்தர்களும், அருளப்பெற்ற ஈழமன்னன் புதல்வியும், ஐந்தவித்த ஆசாரியமூர்த்திகளின் ஆற்றலைவிளக்கும் சாட்சிகளாயினர்கள். இந்திரனுக்குக் கௌதமரிட்ட சாபமானது முழுதும் நீங்காமல் ஏகதேசக் காரணத்தாலே நீக்கமுற்று அவ்வாற்றலை ஒருவாறு விளக்கும்.

இங்கே நம் சுவாமிகளின் வரலாற்றுப்பகுதியிலோ என்றல் ஐந்தவித்தானுற்றல் முற்றும் அதனினும் மேம்பட்டு விளங்கும் வகை காணலாம். கௌதமர் மனையாளோடு காட்டில்வசித்துத் தவஞ்செய்யும் நிலைமையினர். அவர் சாபநிகழ்ச்சியும் பாசத் தொடக்காயின உணர்ச்சியின்வழித்தாய் நிகழ்ந்தது. அவராலே சபிக்கப்பெற்ற அவர் மனைவிக்கும் இந்திரனுக்கும் அச்சாப நீக்கம் பெற்றவழியும் உய்தி என்பது ஒன்றும் கிடைத்திலது. இங்கே சுவாமிகள் வெகுண்டபோது கலைவாணி அஞ்சி அகன்றள். நமது சுவாமிகள் உலகைமுற்றும் துறந்தவர். பதார்த்தங்கள் பாரார். பரமே பார்த்துச் சிவபோகத்திலே நின்ற நிலையினர்.

இந்நிகழ்ச்சியிலே பாசத்தொடக்காயின செய்திகள் ஒன்றுமில்லை. பேசும் புத்தர்கள் சிவநிந்தைக்கு ஆளாகாது உய்யும் பொருட்டுச் சுவாமிகள் வைத்த கருணையினல் ஊமராயினர். ஈழமன்னன் புதல்வியோ பிறவியிலேயே ஊமை. சாபத்தால் வந்த ஊமையல்ல. பரமேசுவரனது உண்மையும், அவனது மெய்ந்நெறியாகிய சைவத்தின் உண்மையும், அடியார்களது ஆற்றலும் வெளிப்படும் வண்ணம் சுவாமிகள் வைத்த அருளினல் அவள் பேசினள்.

கலைவாணியும் இவ்வாறு சுவாமிகள் ஏவல் வழி நின்று சிவ ஆணையின் வெற்றியையும் ஆற்றலையும் வெளிப்படுத்தினள். அன்பர்மூலம் இறைவன் தனது புகழ் விளங்கும்படி நினைப்பான் என்ற இக்கருத்துப் பற்றியே,

"எனதுரை தனதுரையாக."

என்று அருளினர் ஞானசம்பந்தப் பெருந்தகையாரும்.

"தோற்றவர் கழுவி லேறித் தோற்றிடத் தோன்றும் தம்பம்
ஆற்றிடை யமணர் எல்லே யழிவினு லார்ந்த தம்பம்
வேற்ருெரு தெய்வ மின்மை விளக்கிய பதாகைத் தம்பம்
போற்றுசீர்ப் பிள்ளை யார்தம் புகழ்ச்செயத் தம்பமாகும்."

என்று அருண்மொழித்தேவர் எடுத்துப் பாராட்டி அருளினர்.

ஈண்டு முடிவிலே புத்தர்களும் பெண்ணும் திருவருட் செயலாற் பேசும் திறம்பெற்று இறைவனுடைய திருவருட் பெருமையை உணர்ந்தும் பேசியும் ஒழுகி உய்தி பெற்றூர்கள். "சமயங்களானவற்றின், நல்லாறு தெரிந்து உணர நம்பரரு ளாமையினுல், கொல்லாமை மறைந்துறையு மமண்சமயங் குறுகினுர்" என்றபடி கருமவயத்தால் புத்தராயின இவர்களும் கருமவயத்தாலே ஊமையாயின பெண்ணும் இறைவன் ஆணை யாகிய அந் நியதியின்படி அவ்வாறு தத்தம் கருமங்களை அனுப வித்துக்கொண்டு உழன்றூர்கள்.

சிவமாந்தன்மை நிறைந்து அறிவால் சிவனேயாகிப் "பொறி வாயிலைந்தவித்தான் பொய்தீ ரொழுக்கநெறி நின்ருராகிய" நமது சுவாமிகளின் அறிவு இச்சை செயல்கள் இறைவனுடை யனவாய் நிகழ்ந்தமையாலும் இறைவனுடைய நினைப்பின்றி இவர் நினைப்பு நிகழாமையாலும் இறைவன் பணித்த திருவருட் குறியினின்றே இவ்வாதமும் நிகழ்ந்தமையானும் இவர்கள் கருமவயந்தானும் மாறி, நல்லுணர்வு உதித்து, உண்மை நெறியை அடைந்து உய்ந்தார்கள். இறைவன் புகழும் விளங்க ஏது உண்டாயிற்று.

9. நிறைமொழியும் மறைமொழியும்

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்."

ஆசாரியமூர்த்திகள் சிவயோகத்திலே அமர்ந்து தில்லை மல்லலம்பதியிலே எழுந்தருளியிருந்தார். வேறுபாடு சிறிதுமில்லாத தெளிந்த உணர்ச்சியோடு கூடிய ஆனந்தப் பெருவாழ்விலே இன்புற்று விற்றிருந்தாராய் மேலான சிவசாயுச்சிய வீடானது திருவம்பலமே என்றுணர்ந்து,

"மின்னிலவுஞ் சடைமுடியார் மெய்ப்பொருள்தா னெய்தவரும்
அந்நிலைமை யணித்தாகச் சிலநாள்அங் கமர்ந்திருந்தார்."

அந்நாள்களிலே அவ்வுணர்ச்சியோடு கூடி,

"சொல்லிய வாறெழு தூமணி யோசை சுவைதரு மாகாதே
துண்ணென என்னுள மன்னிய சோதி தொடர்ந்தெழு [மாகாதே
பல்லியல் பாய பரப்பற வந்த பராபர மாகாதே
பண்டறி யாத பரானு பவங்கள் பரந்தெழு மாகாதே
வில்லியல் நன்னுத லார்மய லின்று விளைந்திடு மாகாதே
விண்ணவ ரும்மறி யாத விழுப்பொருள் இப்பொரு ளாகாதே
எல்லையி லாதன வெண்குண மானவை எய்திடு மாகாதே
இந்துசி காமணி எங்களை யாள எழுந்தருளப் பெறினே."

என்ற கருத்துக்கொண்ட திருப்படையாட்சி கட்டளையிட்டருளினர்.

"ஞானவா ளேந்துமையர் நாதப் பறையறைமின்
மானமா வேறுமையர் மதிவெண் குடைகவிமின்
ஆனநீற் றுக்கவச மடையப் புகுமின்கள்
வானவூர் கொள்வோம்நாம் மாயப்படை வாராமே."

"... ... ...
அண்டர்நாடு ஆள்வோம்நாம் அல்லற்படை வாராமே."

என்ற திருப்படை எழுச்சி வகுத்தருளினர்.

"நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும்வண்ணம்
குறியொன்று மில்லாத கூத்தன்றன் கூத்தையெனக்கு
அறியும் வண்ணம் அருளியவா றார்பெறுவார் அச்சோவே."

" ... ... அடியேனை வருகவென்று
அஞ்சேலென் றருளியவா றுஆர்பெறுவார் அச்சோவே."

என்று அச்சோப்பதிகத்தை அருளிச்செய்து ஆனந்தித்தார்.

" தாமே தமக்குச் சுற்றமும்
தாமே தமக்கு விதிவகையும்
யாமார் எமதார் பாசமார்
என்ன மாய மிவைபோகக்
கோமான் பண்டைத் தொண்டரொடும்
அவன்றன் குறிப்பே குறிக்கொண்டு
போமாறு அமைமின் பொய்நீக்கிப்
புயங்க னுள்வான் பொன்னடிக்கே."

" ... ... பின்னைநீர் அம்மா அழுங்கி அரற்றுதே
திருமா மணிசேர் திருக்கதவந் திறந்த போதே சிவபுரத்துத்
திருமா லறியாத் திருப்புயங்கன் திருத்தாள் சென்று
[சேர்வோமே."

என்ற கருத்தோடு சிவலோக யாத்திரைப்பத்து அருளிச் செய்து காலம் வந்ததென்று ஒருப்பட்டிருந்தார். இப்படி எழுந்தருளியிருந்த நாளிலே நமது சுவாமிகளுடைய திருவாசக மாகிய அருட்பாவை ஆன்மாக்கள் ஓதியுய்யும்படி சேமித்து வைக்கவும், திருக்கோவையார் என்ற தெய்வ அகத்தமிழ் ஞானநூலை ஆக்குவித்தருளவும் பேரருள் வைத்தவராய்ச் சருவேசுவரராகிய சிவபெருமானுனவர் ஒரு அந்தண வடிவங் கொண்டு மார்பிலே தூயதான முப்புரிநூலும், கையிலே புத் தகமும் விளங்கித் தோன்றும்படி திருவடித்தாமரைகள் நோவ நடந்துசென்று நமது சுவாமிகளது பன்னசாலைக்கு எழுந் தருளினர்.

அவரைப் பார்த்து நமது சுவாமிகள் ஐயரே; வீற்றிரும். நீவிர் இருப்பது எவ்விடம்? என்று கேட்டலும் அவர் 'நாம் இருப்பது பாண்டியநாடு' என்று விடைபகர்ந்தார்.

பாண்டியநாடு என்று கேட்டமட்டிலே சுவாமிகள் மிகவும் அன்பு கூர்ந்து உபசரித்து நீவிர் இங்கே வந்த காரியமென்ன? என்று வினவினர். அதற்கு அம்மறை முனிவர் சர்வேசுவர னுடைய சங்கற்பத்தின்படி நாம் வந்த கருத்து உம்மைக் காணும் பொருட்டேயாம். பிரம விட்டுணுக்களாலும் காணு தற்கரிய கண்ணுதற் பரமனைப் பரியேறி வெளிவரப் பண்ணிய

உம்முடைய பெருமையினுலே பாண்டியநாடு பெருவாழ்வு அடைந்தது. நீர் திருப்பெருந்துறையிலே குருநாதனுடைய திருவடிகளைச் சேவித்துச்சென்று அதன்பின் திருக்கழுக்குன் றிலே சற்குரு திருவடி தரிசனம் செய்து, இங்குப் பொன்னம் பலத்திலே புத்தரை வாதில் வென்று சைவத்தாபனம் செய்தீர் என்ற மங்கலமானசெய்திகள்கேட்டு எல்லோரும் மகிழ்ச்சியை அடைந்தார்கள்.

சர்வலோக நாயகராகிய சபேசமூர்த்தியை அன்போடு துதித்து நீர் செய்த பாடல்கள் மிக இனிமையாயிருத்தல் கேட்டு அவற்றை எழுதிக்கொள்ளவேண்டி வந்தோம். ஏ! பிராமணுேத்தமரே! அப்பாடல்களைச் சொல்லவேண்டும் என்று விடைபகர்ந்தருளினுர். நமது சுவாமிகளும் எம்பெருமானுரது தோத்திரங்களாகிய அப்பாசுரங்கள் அவன் பெருமைகளை உலகிலே பரப்பி உலகிற்கு உபகரிப்பனவாம் என்ற கருத்தினுல் அதற்கிசைந்து தாம் வகுத்தருளிய திருவாசகமாகிய ஞான சாத்திரத்தைச் சொல்லிக்கொண்டு வந்தார். அம்மறையவரும் தாம் கையிற்கொண்ட ஏட்டிலே அதனை எழுதிக்கொண்டார்.

இவ்வாறு ஞானவாசகம் எழுதி முடிந்த பின்னர் வந்த ஐயர் சுவாமிகளைப் பார்த்து, ஐயரே! உமது வாக்கு மிக இனிமையாய் இருக்கிறது. நடராஜமூர்த்தியின்பேரில் அகப் பொருட்கோவை ஒன்று சொல்லவேண்டும் என்று கேட்க, அவரும் அதற்கிசைந்து திருச்சிற்றம்பலத் திருக்கோவையார் என்ற சாத்திரத்தைப் பாடி அருளினுர். அதையும் வந்த மறையவர் எழுதிக்கொண்டார்.

முடிந்த பின் ஏட்டுச் சுவடியைச் சேமித்துக்கொண்டு அந்த ஐயர் முன்போல எழுந்தருளி மறைந்தனர். நமது சுவாமிகள் அவரைக்காணுது திகைத்துப் பலஇடமும் தேடியும் காணப்பெருமையினுலே வந்தவர் தில்லைவாணராகிய எம் பெருமானே என்று தெளிந்து நாய்சிவிகை ஏற்றுவித்ததுபோல் என் அம்மை எனக்கு அருளியவாறு ஆர் பெறுவார் என்றபடி ஐயன் தம்மிடத்தே செய்தருளிய பெருங்கருணையை நினைந்து நினைந்து ஆனந்த வெள்ளத்தழுந்தி "நாய்வயி னுள்ள குணமு மில்லேனைநற் றொண்டுகொண்ட தீவயின் மேனியன்" என்று உருகிக் கண்களினின்றும் மழைபோல ஆனந்தக்கண்ணீர் பெருக மண்மேல் விழுந்து எழுந்து பரவசராகித் துதித்தார்.

ஏட்டுச் சுவடியை எடுத்துக்கொண்டு மறைந்தருளிய ஐயரோ அச்சுவடியின் இறுதியிலே மாணிக்கவாசகன் சொல்ல அழகிய திருச்சிற்றம்பல முடையார் எழுதியது என்று கைச் சாத்தும் வைத்து மையிட்டுத் தம்முடைய இருப்பிடமாகிய பொன்னம்பலத்திலே பஞ்சாக்கரப்படியிலே வைத்தருளினர். மறுநாள் காலையிலே திருப்பள்ளி யெழுச்சியிலே பூசை செய்யும் தில்லைவாழந்தணர் தாம் முன்பு காணாத புத்தகத்தைக் கண்டு இது தெய்வீகமான செயலே என்று மனமுருகி அச் செய்தியை ஏனைத் தில்லைவாழந்தணர்கள் முதலிய அனைவர்க்கும் அறிவித்தார். எல்லோரும் இது என்ன அதிசயமென்று அற்புத மெய்திப் புத்தகத்தைக் கண்டுகளித்தார்கள். அத்திருவேட்டினை ஆதிமுதல் அந்தம்வரை படிக்கச்செய்து பார்க்கும்பொழுது 'நமச்சிவாய வாழ்க' என்று தொடங்கும் கலிவெண்பாவும் அடுத்த மூன்று அகவல்களும் அவற்றின் மேலே 652 திருப் பாசுரங்களும் அடங்கிய ஞானத்திருவாசகமும் அடுத்து 400 திருப்பாசுரங்கள் அடங்கிய திருக்கோவையார் என்ற அகப் பொருள் நூலும் அந்த நூலின்மேல் அம்பலவர் அரிய கைச் சாத்துமாயிருக்க அவர்கள் கண்டார்கள்.

கண்டு புளகாங்கிதமுடையராய்க் கண்ணீர் பெருக மன முருக நின்று மெய்த்தவர் சொன்ன இந்நூலையன்றி வீட்டு நெறி அடைவிக்கும் சிலநூல் வேறுமுளதோ என்று வியந்து பாராட்டினர்கள். இதனை அருளிய மாமுனிவரிடமே சென்று இதன் பொருளைத் தெரிவோம் என்று துணிந்து எல்லோரும் அத்திருமுறையைச் சிவிகைமீது ஏற்றிக்கொண்டு பலவகை வாத்திய முழக்கங்களுடனே அதனைத் தாங்கிச்சென்று சுவாமி களை அடுத்து அவர் முன்னே அத்திருமுறையை வைத்து 'அண்டர் பெருமானுடைய அருட்செய்கை இது' என்று சொல்லி வணங்கி எதிரே நின்றார்கள்.

சுவாமிகள் இதுவும் நான் பெறுந்தரத்ததோ! இது பெறு தற்கு நான் எத்தவஞ் செய்தேன் என்று அழுதார்; தொழு தார்; பரவசப்பட்டு நின்றார். அவர்கள் அவரைத்தொழுது சுவாமி? இத்திருப்பாசுரங்களைத் தேவரீரிடத்தே எழுதிக் கொள்ளும் வகையிலே எம்பெருமானுர் நிகழ்த்திய திருவிளை யாடல்கள் யாவை? அருளல் வேண்டும் என்ன அவரும் நிகழ்ந்தவைகளைச் சொல்லி அருளினர். எல்லோரும் கேட்டு ஆனந்த பரவசரானர்கள்.

இனி இத்திருவாசகம் திருக்கோவையார் என்கிற ஞான சாத்திரங்கள் மறைமொழியே யாதலேயும், அவற்றையருளியவர் நிறைமொழி மாந்தராதலேயும், அம்மறைமொழியினுலே அவர் பெருமை நிலத்திலே காட்டப்பெறுதலேயும் இங்கு சிறிது ஆராய்வோம்.

நிறைமொழியாவது அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப்பயன்களைப் பயந்தேவிடும் மொழி என்ருர் ஆசிரியர் பரிமேலழகர். ஏனைய மொழிகள் எல்லாம் நிறைமொழியாகாது குறைமொழிகளேயாம் என்பதும் இதனுலே பெறப்படும். இவ்வாறு தாம்தாம் கருதிய பயனைப் பயந்தே விடவல்ல நிறைமொழியைக் கூறவல்லவரே நிறைமொழி மாந்தர் எனப் பெறும் பெரியார்களாவார். அவர்களுடைய பெருமையை உலகத்திலே காட்டி நிற்பன எவை என்ருல் அவர் ஆணையால் சொல்லிய மந்திரவடிவ்மான மொழிகளே. காட்டி நிற்றலாவது அவர்கள் மொழிந்த அக்காலத்து மட்டுமே யன்றி எக்காலத்தும் அவை குறித்த பயனைக்கொடுப்பது. அதனுல் அவர்கள் நிறைமொழி மாந்தராகும் பெருமையை உடையவர்கள் ஆனுர்கள்.

> *" நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த*
> *மறைமொழி தானே மந்திர மென்ப."*

என்ற தொல்காப்பியமும் இதனையே வலியுறுத்தும்.

இங்கே நமது சுவாமிகள் கலேமகளை நோக்கிச் 'சிவநிந்தை புரியும் இப்புத்தர்கள் வாக்கிலும் இருப்பாயோ? சிவநிந்தைக்கு உடன்பட்டமைக்காக முன்னே மூக்கறுபட்டதுபோல இப் போது நாக்குமறுபடும் அகன்றுபோ' என்று வெகுண்டு கூறினுர். அவளும் அகன்று போயினுள். புத்தர்கள் சிவநிந்தை செய்யும் ஆற்றல் சிந்தி ஊமர்களாகி வாய்பேசாதிருக்கக் கடவர் என்று வெகுண்டார். அவ்வாறே அவர்கள் மூங்கை யாயினர்.

பின்பு ஈழத்தரசன் புதல்வியாகிய இந்த ஊமைப் பெண் பேசி எங்கள் இறைவனுடைய உண்மைப்புகழை வெளியிடும் படி கலேமகளே! இவள் வாக்கில்வா? என்று அருளிக்கூறினுர். அவ்வாறே வந்தாள். அவளும் பேசினுள். இப்புத்தர்களும் மீண்டும் உய்தியடைக என்று அருண்மொழி புகன்ருர். அவர் கள் பேசி உய்ந்தனர்.

இவ்வாறு அருண்மொழியும் சினமொழியும் தாம் தாம் கருதிய அவ்வப்பயன்களைப் பயந்தே விட்டமையின் அதனால் நமது சுவாமிகளே நிறைமொழி மாந்தர் எனப்பெறுவர். அவர் ஆணையிற்கிளந்த மந்திர வடிவாகிய ஞானத் திருவாசகமே அந்நிறைமொழி மாந்தர் பெருமையைத் தனது பயனாலே நிலத்துக் காட்டி நின்றது. எவ்வாறெனின்; இத்திருமுறைகளை சர்வேசுவரனையும் உருவெடுத்து வந்து ஏட்டில் எழுதி உலகத்திலே உள்ள சருவான்மாக்களும் ஓதி உய்வதன் பொருட்டு உபகரிக்கும்படிச் செய்தன.

இத்திருவாசகமானது மனங்கரைந்து மலங்கெடுக்கும் தன்மை வாய்ந்ததாகையால் இதை ஓதினால் வரும் பயன் முத்தியேயாம். மந்திரம் என்ற பதத்துக்கு எங்களைக்காப்பது என்று பொருள் கூறுவர். ஓதினார் யாரையும் கருங்கன் மனமும் கரைந்துருகும்படி உருக்கி மலங்கெடுத்து முத்தி கொடுத்துக் காப்பதால் இது மந்திரமேயாகும். இப்பயனை இக்காலத்தும் விளைத்துக் கொடுத்தலினாலே இத்தமிழ் மறைமொழி நமது சுவாமிகளின் பெருமையை நிலத்திலே இன்றைக்கும் காட்டி நிற்கின்றது; என்றும் நிற்பதாகும்.

இதுபோலவே நம் வன்றொண்டப் பெருந்தகையாரது திருநொடித்தான்மலைத் (தேவாரத்தை) 'ஆழிகடலரையா! அஞ்சையப்பர்க் கறிவிப்பதே' என்ற அவர் ஆணையால் தன் சிரமேலே கடலரசன் தாங்கித் திருவஞ்சைக்களத்திலே அறிவித்தும், 'சொற்றுணை வேதியன்' என்று தொடங்கும் பஞ்சாக்கரத் திருப்பதிகமாகிய தமிழ் மறைமொழியைக் கட்டளையிட்டருளிய வாகீசப் பெருந்தகையாரை,

> '' அருணயந் தஞ்செழுத் தேத்தப் பெற்றவக்
> கருணைநா வரசினைத் திரைக்க ரங்களாற்
> றெருணெறி நீர்மையிற் சிரத்திற் றங்கிட
> வருணனுஞ் செய்தனன் முன்பு மாதவம்.''

என்றபடி வருணன் தன்சிரமேல் வகித்துத் தாங்கிச்சென்று திருப்பாதிரிப்புலியூரிலே கரையிலே விடுத்ததும், ''இந்திரன் மால் பிரமர் எழிலார்மிகு தேவரெல்லாம், வந்தெதிர்கொள்ள மத்தயானை''யின் மீது ஆரோகணித்து நமது வன்றொண்டப் பெருந்தகையார் கயிலையை அடைந்ததும் ஆகிய நிகழ்ச்சிகள் இங்கே நாம் கண்ட உண்மையினையே வற்புறுத்தி அவர் மறை

மொழிகளை நிலத்து அந்நிறைமொழி மாந்தர் பெருமையைக் காட்டிவிட்டதை நினைவுபடுத்திக் கொள்வோமாக.

திருவாசகமானது தொடக்கம் முதல் முடிவுவரை மந்திர வடிவமே யாதலினாலும் அது மறைமொழியேயாம். மந்திரங்களுக்கெல்லாம் மகாமந்திரமாவது பஞ்சாக்கரமேயாம். நமச்சிவாயவாழ்க என்று தொடங்குவதினாலே நகாரம் ஆதியாக ஓதப்பெறும் பஞ்சாக்கரத்தை முதலிலே கொண்டுநின்றது. அன்றியும் நானேயோ தவஞ்செய்தேன் 'சிவாயநம' எனப் பெற்றேன் என்று சிகார ஆதியாக ஓதப்பெறும் பஞ்சாக்கரத்தை இடையிலே கொண்டு விளங்குகின்றது. மேலும்.

"உடையா ளுன்றன் நடுவிருக்கும் உடையாள்
நடுவுள் நியிருத்தி."

என்ற திருப்பாசுரத்திலே சூட்சும பஞ்சாட்சரத்தையும் விளக்கி நிற்கின்றது என்று பெரியோர் கூறுவர். எனவே திருவாசகமானது முழுமையும் பஞ்சாக்கர வடிவமாகவே விளங்கி மறைமொழி என்னும் மந்திரமேயாகும்.

மேலும் வேதங்கள் மொழிந்தபிரான் சுவாமிகளை நோக்கி நாமிருப்பது பாண்டியநாடு உமதுபாடல்கள் மிக இனிமையாயின; அவற்றைச்சொல்க. நாமதனை ஏட்டில் எழுதிக்கொள்வோம் என்று மொழிந்த மறைமொழியினாலும், அம்பலவனைத் தலைவனாகக்கொண்டு ஒரு அகப்பொருட்கோவை சொல்க என்ற மறைமொழியினாலும், புத்தகத்தைப் பொன்னம்பலத்தே வைத்து அந்தணர் முதலியோர்க்கு 'நீவிர் இவ் வரும்பாடல்களைக் கேண்மின்' என்று மொழிந்த மறைமொழியினாலும், மற்றும் பிறவாற்றானும் இந்நிறைமொழி மாந்தர் பெருமையை நிலத்தே காட்டிவிட்டான் என்பதும் காணத்தக்கது.

மேலும் பஞ்சாக்கரத் திருப்படியின்மேலே இறைவன் இத்திருமுறையை வைத்துக் காட்டினான். அத்திருப்படிகள் ஐந்தும் திருவைந்தெழுத்தை விளக்குதலாலே அவை பஞ்சாக்கரப்படி என்று பேர்பெறுவன. அவற்றிலே முதற்படி சிகாரத்தைக் குறிக்கும். இப்படிகள் தம்மேலே சிகாரவாச்சியராகிய நடராசரைக் காட்டிக்கொண்டு தம்மை அடைந்தால் இறைவனைக் காணலாம் என்ற உண்மையைக்காட்டி நிற்கும். அந்த ஐந்தாம்படிச் சிகரத்திலே இறை வெளிப்பட்டு விளங்குகிறான்

என்பதும் காணலாம். இவ்வாறு விளங்கும் பஞ்சாக்கரப்படியிலே இத்திருமுறையை வைத்தமையால் சிவசொரூபத்திலே இலட்சியம் உள்ளதாய்ச் சிவத்தை உணர்த்தும் சிகரத்தில் சிவசொரூபத்தை உணர்த்தும் திருவாசகமாகிய சிகாரவாசகம் இருக்கும் என்ற உண்மை வெளிப்படுமாறு இறைவன் வைத்துப்போந்தது ஒரு மறைமொழியாகும் என்பதும் இவ்விடத்து ஊகிக்கற்பாலது.

இதுபோலவே திருக்களிற்றுப்படியார் என்ற சைவ சித்தாந்த ஞானசாத்திரத்தை இப்படிகளிலே வைத்தமாத்திரத்தில் அங்குத் தீட்டியிருக்கும் யானையானது கைநீட்டி எடுத்து மேலே விளங்கும் நடராசர் திருவடிகளிலே நீட்டி, அந்தச் சாத்திரத்தினது சிவமாந்தன்மையைக் காட்டியதென்றும் அது காரணத்தால் அது அப்பெயர் பெற்றதென்றும் உள்ள சரித்திர வரலாறும் இங்கு நாம் காணற்பாலது.

10. திருவடிக் கலத்தல்

> " துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
> திறந்தாரை எண்ணிக்கொண் டற்று."

சபாநாயகர் கட்டளையின்படி பன்னசாலையிலே வந்த தில்லைவாழந்தணர்களும், மற்றையோரும் சுவாமிகளை நோக்கி ஐயன்மீர்! தேவரீரால் அருளிச் செய்யப்பெற்று அம்பலவாணர் திருக்கையினாலே எழுதப்பெற்று, பஞ்சாக்கரத் திருப்படியிலே ஏற்றப்பெற்ற இத்திருமுறைக்குத் தேவரீரே பொருள் விரித்து உரைசெய்து எங்களை உய்விக்க வேண்டும் என்று விண்ணப் பித்தார்கள் சுவாமிகளும் திருவம்பலத்திலே சென்று இதற்குப் பொருள் காண்போம் வம்மின் என்று சொல்லி அவர்கள் எல்லோரும் ஆர்வத்தோடும் தம்மைப் பின்பற்றிவரத் தாம் முன்னே சென்று 'எல்லோரு மிறைஞ்சு தில்லை யம்பலத்தே' சென்று அந்தமிலா ஆனந்தத்தைக் கண்ணாரக் கண்டு பருகினை வராகி, அங்குக் கூடியிருந்த அனைவரையும் நோக்கி, இத்திரு முறைக்குப் பொருளாவார் இவ்வம்பலவாணரே என்று சபா நாதரைச் சுட்டிக்காட்டிக்கொண்டு பொன்னின்செய் அம்பலத் துள்ளே புகுந்து புவனியெல்லாம் விளங்கும்படி சபாநாதரை அணுகி மறைந்து அவரது இணையார் திருவடிகளிலே இரண் டறக்கலந்து என்றும் மாளாமலும் மீளாமலும் குறைவிலா நிறைவாகியும் அறிவு மயமாகியும் ஆனந்தம் அனுபவிக்கும் பேரொளி ஆகிய சிவசாயுச்சியப் பெருவாழ்வை அடைந் தருளினார்.

> " மெய்காட்டுங் கழகடவித் தில்லையுளார் பொருள்கேட்பக்
> கைகாட்டித் தம்முருவங் காட்டாமல் மறைந்தாரைப்
> பைகாட்டும் பேரரவப் பணியுடையார் தமக்கன்பு
> மெய்காட்டிப் பாலுடனே மேவியநீ ராயினர்."

இதைக் காணப்பெற்றவர்கள் எல்லோரும் ஆனந்த பரவசர் களாகிக் கைகளைச் சிரமேற்கொண்டு அற்புதமெய்தி அம்பல வாணர் திருவருளையும் அன்பர் பெருமையையும் துதித்து வணங்கி அரகர முழக்கம்செய்து வாழ்ந்தார்கள்.

தும்புரு நாரதாதிகளும் பாடுவார்களாயினர். பூதகணங் கள் ஆடின. கணநாதர்கள் புகழ்ந்து கொண்டாடினர்.

ஆகாயத்திலே வேதங்கள் தேவதுந்துபிகள் முழங்கின. எல்லா உலகங்களிலுமுள்ள எல்லா ஆன்மாக்களும் தம்மை அறியாமலே பெருமகிழ்ச்சியைத் தலைக்கூடின. எங்கும் ஒளிவடிவாய் ஆனந்த பூர்த்தியாகி அருளோடு நிறைந்தவனாகிய சருவேசுவரன் தனது சங்கற்பத்தாலே உலகோபகாரமாக அரும்பெருஞ் செயல்களை அவ்வப்போது நிகழ்த்துவன். அவன் அருள் நிரம்பப்பெற்று அறிவினால் அவனேயாகிய பெரியவர்கள் உலகத்திலே அவன் ஆணையின்வழியே வருவார்கள். வந்து அவன் அருட்டன்மையை உலகத்துக்கு விளங்க உபகரிப்பார்கள். பின்னர் அவனுடைய பூரணத்திற் பூரணமாய் ஒளியோடு ஒளியாய் ஆனந்தத்தோடு ஆனந்தமாய் அவனிலே கலப்பார்கள்.

இப்படி வருவதும் பின்னர்க் கலப்பதுமாகிய அருட்செய்கைகள் எல்லா உயிர்க்கும் உயிராய் அங்கங்கே நின்று நிறைந்திருக்கின்றவனுடைய செய்கைகளானபடியினாலேயும், அவை உலகத்தார் இன்பமடைவதற்காகவே அவன் செய்வானாபடியினாலேயும், அக்காலங்களிலெல்லாம் அப்பரிபூரணம் நிறைந்த உயிர்கள்தோறும் தம்மை அறியாதபடி மகிழ்ச்சி தலைக்கூடி எல்லா உயிர்களும் இன்பமடையுமென்பது சாத்திர சம்மதமான உண்மையாகும்.

நமது ஆளுடைய பிள்ளையாராகிய ஞானசம்பந்தப் பெருந்தகையார், திசைவிளங்கப் பரசமயத் தருக்கொழியச் சைவ முதல் வைதிகமும் தழைத்தோங்கத் திருவவதாரம் செய்த காலத்திலே இதுபோலவே மக்கள் தேவர் முதலிய சேதனர்களும், பறவைகள், மரம், கொடி, காற்று, வானம் முதலிய அசேதனங்களுமாகிய எல்லாமும் மகிழ்ச்சி அடைந்து நின்றன என்று நாம் காண்கின்றோம்.

" அப்பொழுது பொற்புறு திருக்கழு மலத்தோர்
எப்பெயரி னோருமய லெய்துமிடை யின்றி
மெய்ப்படு மயிர்ப்புகை மேவியறி யாமே
யொப்பில்களி கூர்வதொ ருவப்புற உரைப்பார்."

" பூமுகைய விழ்ந்துமண மேவுபொழி லெங்குந்
தேமருவு தாதொடு துதைந்ததிசை யெல்லாந்
தூமருவு சோதிவிரி யத்துக ளடக்கி
மாமலைய மாருதமும் வந்தசையு மன்றே."

"பயன்றருவ பஃறருவும் வல்லிகளும் மல்கித்
தயங்குபுன லுந்தெளிவு தன்மையுட னண்ணும்
வயங்கொளி விசும்புமலி னங்கழியு மாறு
நயம்புரிவ புள்ளொலிக ணல்லதிசை யெல்லாம்."

என்று இதனைச் சுவைபெற விரித்தோதி அருளினர் நமது சேக்கிழார் சுவாமிகள்.

இவ்வாறே நமது வாகீசப் பெருந்தகையார் இறைவனோடு இரண்டறக்கலந்த நன்னாளிலேயும் எல்லாவுயிர்களும் மகிழ்ச்சி அடைந்தன என்று நாம் காண்கின்றோம்.

"வானவர்கண் மலர்மாரி மண்ணிறைய விண்ணுலகின்
மேனிறைந்த வைந்துபே ரியவொலியும் விரிஞ்சன்முதல்
யோனிகளா யினவெல்லா முன்னிறைந்த பெருமகிழ்ச்சி
தானிறைந்த சித்திரையிற் சதயமாந் திருநாளில்."

என்பது பெரியபுராணம்.

சுவாமிகள் அருளிச்செய்த திருமுறைகளை ஓதி உணர்பவர்களும் கேட்பவர்களும் ஆகிய சகலரும் அன்றுமுதல் இன்றளவும் குறையாத இன்பத்தையனுபவப் பெறுகின்றார்கள் என்று அனுபவசித்தமாக நாம் காண்போமானால் அந்நாளிலே தாம் அருளிச்செய்த "திருவாசகமே வாசகம்" அதற்கு வாச்சியம், "தூசகல் அல்குல் வேய்த் தோளிடத் தவனே" என்றபடி சுவாமிகள் நேரே நிருபித்துக்காட்டி யருளியபோதும் அப்படிக் காட்டியபின் ஆனி மாமகத்திலே முத்தமிழ் வாதவூரராகிய முனிவரர் பெருமான் அத்தன் திருவடி நீழலிற் கலந்து நித்தியானந்தப் பெருவாழ் வடைந்தருளிய போதும், உடனிருந்து காணும்படியான பெரும்பேறுபெற்ற தில்லைவாழ்வாராகிய பாக்கியவாளர்கள் மாறுப்பெரு மகிழ்ச்சியும் அற்புதமும் அடைந்தார்கள் என்பது சொல்லவும் வேண்டுமா? அவர்களது பாக்கியமே பாக்கியம்.

சுவாமிகள் தமது திருமுறைக்குப் பொருளுரைக்குமாறு தில்லைவாணர்கள் கேட்டதற்கு உரைசொல்லாது "இதற்குப் பொருளாவார் இவரே" என்று சபேசரைக் காட்டி மறைந்துவிட்டாராதலின் திருவாசகத்திற்குப் பொருள் காணப்புகுதல் சரியன்றென ஒரு கொள்கை உலாவுகின்றது. அக்கொள்கை சரியன்று. எதையும் பொருளறிந் தோதலே சிறப்புடைத்தாம்.

பொருளறியா துரைப்பினும் புண்ணிய மெய்தும் என்பாருள ராயினும் பொருளறிந்துரைத்தலில் ஆனந்தமதிகம் என்பதில் என்னதடை? தில்லைவாழந்தணர்கள் கேட்டபோது சுவாமிகள் கருத்து அவ்வந்தணர்கட்குப் பொருளுரைத்துக் கொண்டிருத் தலினுஞ் சிறந்த ஒன்றினிடத்தே தீவிரங்கொண்டிருந்தமையின் இவற்றிற்குப் பொருளாவார் சிவபரஞ்சுடரே எனச் சுருக்கத் தில் விளக்கியருள நேர்ந்ததேயன்றி வேறன்று. பொருளறிந் துரைத்தலால் ஆனந்தமதிகம் என்பதனோடு மற்றொரு பெரும் பயனும் சித்திக்கிறது. அவ்வாறு பொருளினை அறியும் அந்த அறிவின் மூலமாய் ஆன்மாவும் ஒத்தியங்கி அனுபவிக்கின்றது. அதனால் அனுபவப்பலனும் ஆன்மாவுக்குக் கிட்டுகிறது.

அன்றியும் சுவாமிகள் தமது திருமுறைக்குத் தில்லைவாணர் கேட்டபடி பொருள் உரைத்தாரே தவிர உரைக்காமலிருக்க வில்லை. வாழைப்பழமென்ற தொடருக்குப் பொருள்கேட்டால் கதலிப்பழம் என்றுவது அல்லது உருண்டு நீண்டு மேலே தோலும் உள்ளே சுளையுமுடையதாய் இனிய சுவையுடையது என்றுவது ஒருவன் பொருள் சொன்னால் அது அதற்குப் பிரதி பதம் அல்லது வேறுபதங்களாற் சொல்லிய விவரணம் என்று ருமே தவிர உண்மைப் பொருளாக மாட்டாது. அப்படிச் சொல்லாமல் வாழைப்பழத்திற்குப் பொருள் கேட்டபோது ஒருவாழைப்பழத்தையே கொண்டுவந்து வைத்து இதுதான் இதற்குப் பொருள் என்று ஒருவன் காட்டிவிடுவானேயானால் அவனே உண்மைப்பொருள் கண்டவனும் காட்டியவனும் ஆவான். ஒருசொல்லுக்குப் பொருளாவது அதனாற் சுட்டப் படும் பொருளேயாகும். மற்றொரு சொல் அதற்குப் பொருள் ஆகாது. இதனாலேதான், சொல்லும் அதனால் சுட்டிய பொருளும், என்று சொற்பிரபஞ்சம் பொருட்பிரபஞ்சம் எனப் பிரபஞ்சத்தை இரண்டாகப் பகுப்பர் பெரியோர்.

" *உரையின் அளவும் பொருளின் வரைப்புமென்று*
இருவகைப் பட்ட எல்லை."

என்பது பட்டினத்தடிகள் திருவாக்கு. எனவே நமது சுவாமிக ளுடைய திருவாசகம், திருக்கோவையார் ஆகிய திருமுறை களுக்குப் பொருள் அவற்றால் கருதப்பெறும் சபாநாயகரே யாவர். இக்கருத்துப்பற்றியே சுவாமிகளும் பொருள் காண் போம் வம்மின் என்று தில்லை வாணர்களை அழைத்துக்

கொண்டு திருச்சிற்றம்பலத்திலே வந்து சபாநாயகரைப் பொருளாவார் இவரே என்று காட்டி,

" போதநிலை முடிந்தவழிப் புக்கு ஒன்றி உடனாகி."

மறைந்தருளினார்.

இத்திருமுறைகளை நல்லாசிரியரை அடைந்து அவர்பால் பொருளுணர்ந்து ஆன்மாக்கள் ஓதி உய்ய வேண்டுவதுதான் பெரியோர் கருத்தாம் என்பது பேராசிரியர் திருக்கோவையாருக்கு அரும்பெரும் உரையியற்றியுள்ளார் என்பதனாலும், திருவாசக விரிவுரை, திருக்கோவையார் உண்மை விளக்கம் என்னும் திருவாவடுதுறை ஆதீனத்தின் உரை நூல்களாலும் மற்றும் பல பேராசிரியர்கள் இந்தத் திருமுறைகளின் திருப்பாட்டுக்களைத் தத்தம் உரைகளில் மேற்கோள் காட்டி அரிய பொருள்களை விளக்கம்செய்து போந்திருப்பதனாலும் பெறப்படும்.

நமது சுவாமிகள் திருப்பெருந்துறையிலே ஆசாரியமூர்த்திகளினாலே ஆட்கொள்ளப்பெற்ற அந்நாள் முதலாக அந்த ஆசாரிய மூர்த்திகளேயாகிய நடராசரடியிலே திருத்தில்லைச் செம்பொன்னம்பலத்திலே இரண்டறக் கலந்தருளிய அந்நாள் வரையில் உலகத்திலே வெளிப்பார்வைக்கு உலகினர்போலவே சஞ்சரிப்பவராய் இருந்தார்கள். அப்படியிருந்தும் உலக அதீதமான நிலையிலே ஒழுகிவந்தவராதலின் பார்வைக்கு மட்டும் உலகத்தவர்போல இருப்பார்கள்.

" பார்த்தா லுலகந் தவர்போ லிருப்பர் பற்றற்றவரே."

என்பது ஆன்றோர் வாக்கு.

ஆனால் உலகமானது அவர்களுக்குத் தோற்றமாகாது. பாசங்கழிந்த தம் கண்களால் அரனுருவமே கண்டுகொண்டிருத்தலால் வேறொன்றும் தோற்றப்படாமல் விழித்த கண் குருடாத்திரியும் விரர் எனப்பெறுவர். 'சொரியினுந் தாக்கினுந் துன்னென்றுணரார்' உலகத்திலே திரிதல் இருத்தல் முதலாகிய செய்கைகளினாலே சஞ்சரிப்பவர்கள் ஆயினும், 'செத்தாரைப் போலே திரி' என்றபடி வையகத்திலே இருந்தும் வையகத்தை நோக்க இறந்தார்களேயாக இவர்களை வைத்து எண்ணவேண்டியதே முறைமையாகும்.

ஆயின் இவர்கள் பெருமைக்கு இணைகூற வேண்டுமானால் எப்படி இறைவன் தனக்கு உவமையில்லாமல், தனக்குத் தானே இணையாகி விளங்குகிறானோ அதுபோல அவனுடைய திருவடி ஞானத்தை இப்பிறவியிலேதானே கைகூடப்பெற்ற சீவன் முத்தர்களாய் உலகத்திலே நின்றும், உலகத்தை இறந்து பிராரத்த வினைக்கீடான உடம்பு அழியும்வரை அதனைத்தாங்கி நின்றும் இறைவனோடு கலந்துதிரியும் உத்தமர்களும் தமக்குத் தாமே இணையாவார்களேயல்லாது வேறொருவரையும் அவர்க்குத் துணைகூற இயலாது. சிவயோகத்திலே எழுந்தருளியிருந்து சுழுமுனையிலே ஏற்றப்பெற்ற உடனே உணர்ந்து விடய நிகழ்ச்சிகளை அறிந்தவராய்,

"... ... ... பிறப்பதற்கு,
முன்செய்த தீவினையோ விங்ஙனே வந்து மூண்டதுவே."

என்று அருளிச்செய்து உலகத்தைத் தெருட்டிய உத்தமராகிய பட்டினத்தடிகள் வரலாற்றை இங்கே நினைவுபடுத்திக் கொள்ளலாம். இன்னோர்களுடைய பெருமைக்குத் துணையாகக்கூறின் வையத்திலிருந்தும் உலகிறந்தவராக எண்ணப்படும் இவர்கள் தம்மையே எண்ணிக்கொண்டாற் போலுமேயன்றி வேறொன்றினாலும் இணைகூற இயலாது.

அன்றியும் இறைவனை அடையும் வழிகள் பெரியோர்களால் நான்காக வகுக்கப்பெறும். அவை தாசமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கமென்பன. இவைகளை முறையே உலகிற்கு உள்ளவாறு விளக்கத் திருவவதாரம் செய்து தம் வாழ்க்கையிலே வழிப்படுத்திக் காட்டுதலினாலே பரம ஆசாரியர்களாய் விளங்குபவர்கள் சைவ சமயாசாரியர்களான வாகீசத் திருவடிகள், ஞானசம்பந்தப் பிள்ளையார், வன்றொண்டராகிய தம்பிரான் தோழர், வாதவூர்ப் பெருந்தகை என்ற எந்தம் பெருமக்களே யாவர்.

இந்த முறையிலே ஞானமாகிய முடிந்த இடத்திலே செல்லும் சன்மார்க்கத்தை விளக்க அவதரித்தவர் நமது திருவாதவூர்ப் பெருந்தகையாராகையினாலேயும், இந்தச் சிவ ஞானிகள் எப்பொழுதும் சிவத்தோடொன்றிய சிந்தையை உடையவர்களாய் உலகம் தோற்றாததனால் அதனைத் துறந்து சிவானந்தத்தையே அனுபவித்துக்கொண்டு சிவவடிவினர்களாக வீற்றிருப்பார்கள். ஆகவே அவர்களது பெருமையை

எண்ணி அளவிடமுடியாது. இவ்வுலகத்திலே இதுவரை இறந்துபட்ட ஆன்மகோடிகளை எண்ணிக்கை செய்ய முயன்ருல் எப்படி அது முடியாத காரியமாகுமோ அவ்வாறே இவர்கள் பெருமைகளும் எண்ணிக்கையிலே அடங்காமல் நம்மால் பிரித்தளவிட்டிவ்வளவெனப் பேசலாகாது என்று சொல்லலாம். 'தொண்டர்தம் பெருமை சொல்லவும் அரிதே' என்று மாதவ நரைமூதாட்டியாராகிய ஔவைப் பிராட்டியார் சொல்லியமுறையில் பெருந்தொண்டராகிய நமது சுவாமிகளின் பெருமையைத் துணைக்கூறி எண்ணி அளவிடல் அரிதேயாகும்.

இளவயதிலே தானே அரசனிடத்து முதன்மந்திரியாரா யிருந்து அவர் குதிரை கொள்வதற்காகக் கொடுத்த பெரும் பொருள்களையெல்லாம் குருந்தடியிலிருந்த பெருந்தகையின் ஆணைப்படி அடியார்க்கும் அரனுக்கும் ஆக்கியிட்ட அருமை யும், அதன்பின் அரசன் கேட்ட வழி ஆவணி மூலத்தன்று அரும்பரிவரும் என்று ஆண்டான் ஆணையின்படியே அரசன் முன் சென்றறிவித்த ஆற்றலும், ஆசாரிய மூர்த்தியின் திரு வடிக்கே பதித்த நெஞ்சின் ஊக்கமான உறுதிப்பாடும், அந்த உறுதிப்பாட்டிலே உலகமிறந்து 'அவனே தானேயாகி' நின்று அரசன் செய்த 'தீயமிறைகளை' எல்லாம் அஞ்செழுத்தின் புணை பிடித்துத் திருத் தொண்டினுறைப்பாலே வென்ற பெரு வெற்றிமையும், அரியொடு பிரமற்களவரியொன்ஞன்,நரியைக் குதிரையாக்கிய நன்மையும், அவனைப்பாண்டியன் தனக்குப் பரிமா விற்கச் செய்தபண்பும், உலகத்திலுள்ள சகல ஆன்மாக் களாகிய நம் இல்லங்கள்தோறும் எழுந்தருளிச் செங்கமலப் பொற்பாதந் தந்தருளும் சேவகனுய் வாழ்நாள் வழியடைக்கும் ஐயனையே கூலியாளாய் வருவித்து வையையின் பெருக்கிலே வந்தி என்னும் அடியவட்காகப் பாங்காய் மண்சுமந்தருளிக் கரையடைப்பித்ததும் வந்திப்பிராட்டியை அந்தமில் இன்பத் தழிவில் வீட்டினை யடையச்செய்ததும், வந்தியம்மைபொருட்டு நிகழ்ந்த திருவிளையாடல்களினுலே வந்தியம்மையாரின் பெருமை யும் அடியார் பெருமையும் அரசனுக்கு அறிவிக்கக் காரணராக விருந்த அருமைப்பாடும், பின்பு உலகத்தைக் கைக்கொண்டு தன்னையும் ஏவல் கொள்ளும்படி அரசன் வேண்டினுகவும்,

"இந்திரச் செல்வமும் எட்டுச் சித்தியும்
வந்துழி வந்துழி மறுத்தனர் ஒதுக்கிச்
சின்னச் சீரை துன்னற் கோவண

மறுதற் கிளொடு பெறுவது புனைந்து
சிதவ லோடென் றுதவுழி யெடுததாங்கு
இடுவோ ருளரெனின் நிலையினின் றயின்று
படுதரைப் பாயலிற் பள்ளி மேவி யோவாத்
தகவெனு மரிவையைத் தழீஇ மகவெனப்
பல்லுயி ரனைத்தையு மொக்கப் பார்க்குநின்
செல்வக் கடவுட் டொண்டர் வாழ்வும்."

என்றபடி அதை மறுத்து ஒதுக்கித் தவக்கோலந்தாங்கிய திண்மையும், அதன்பின் உலகவர்போல உலகத்திலே சரித்துக் கொண்டிருந்தாராயினும் "மனநினைவில் ஒத்தன ஒத்தன சொல்லிட ஊரூர் திரிந்தெவரும், தத்தம் மனத்தன பேசவெஞ்ஞான்று கொல் சாவதுவே" என்றபடி உலகத்தை நோக்கச் செத்துத் திரிந்த ஞானநிலையும் அதன்பின்னர்த் தலங்கள்தோறும் சென்று குருநாதனைக்கண்ட காட்சியும், திருத்தில்லையிலே இறைவன் ஆணையின்படி புத்தர்களை வாதில்வென்று சைவத்தாபனம்செய்தும், ஊமைப்பெண்ணைப் பேசுவித்தும், சைவ உண்மையை உலகிற்குத் தெருட்டியும் இயற்றிய பெருமையும், ஸ்ரீ நடேசப் பெருமானே உருக்கொண்டு வந்து தமது திருவாக்குகளை ஏட்டில் எழுதிக்காட்டித் தம்பெருமை ஏட்டிலடங்காத் தன்மையை உலகத்திற்குக் காட்டி அருளச்செய்த பேருபகாரமாகிய அற்புதமும், பின்பு முடிவிலே பொருளாவார் இவரே என்று காட்டிச் சிவத்தைமேவிய அரும்பெரும் கீர்த்தியும் ஆகிய இத்தகைய புகழ்களும் பெருமைகளும் எம்மனோரால் இயம்பற் கெளிதாமோ?

"அவனருளே கண்ணாகக் காணினல்லால் இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவனிறைவன் என்றெழுதிக் காட்டொணாதே" என்று வாகீசப் பெருந்தகையார் ஆண்டானைச் சொன்ன திருவாக்கின்படியே, ஆண்டானிலக்கணம் அடியவருக்கும் அமைவதாகையினாலே நமது சுவாமிகள் பெருமையும் அவ்வாறே நம்மால் எழுதிக்காட்டொணாததேயாம். அதனைக் காட்டுவித்து நம்மை உய்விக்கும் வண்ணம் அவர் திருவருளையே வணங்கித் துதிப்போமாக.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருவளர் தாமரை சீர்வளர்
காவிகள் ஈசர்தில்லைக்
குருவளர் பூங்குமிழ் கோங்குபைங்
காந்தள்கொண் டோங்குதெய்வ
மருவளர் மாலையோர் வல்லியி
னொல்கி அனநடைவாய்ந்(து)
உருவளர் காமன்றன் வென்றிக்
கொடிபோன் றொளிர்கின்றதே.

காரணி கற்பகங் கற்றவர்
நற்றுணை பாணரொக்கல்
சீரணி சிந்தா மணியணி
தில்லைச் சிவனடிக்குத்
தாரணி கொன்றையன் தக்கோர் தஞ்
சங்க நிதிவிதிசேர்
ஊருணி யுற்றவர்க் கூரன்மற்
றியாவர்க்கும் ஊதியமே.

திருச்சிற்றம்பலம்

—திருக்கோவையார்.

ஆராய்ச்சிக் குறிப்புகளும் பின்னுரையும்

நமது சுவாமிகள் வரலாற்றை ஒருவாறு திருக்குறள் கொண்டு ஆராய்ந்தோம். திருக்குறளிலும் நீத்தார் பெருமைத் திருக்குறளோடு ஒப்பிட்டு வைத்துப் பார்த்தோம். சுவாமிகள் வாக்கிலிருந்து சிற்சில மேற்கோள்களையும் கண்டோம். வேறு சில நூல்களிலிருந்தும் இடத்திற்கு ஏற்ப மேற்கோள்கள் காட்டினோம்.

சுவாமிகள் அருளியன திருவாசகம், திருக்கோவையார் என்ற இரண்டு சாத்திரங்களுமேயாம். இவை சைவத் திருமுறைகள் பன்னிரண்டுள் எட்டாவது திருமுறையாக வகுக்கப் பெற்றுச் சைவர்களால் பாராட்டப்பெற்று வருகின்றன. திருவாசகம் மட்டுமே எட்டாவது திருமுறையாகும் என்ற ஒரு கொள்கையுமுண்டு.

திருவாக்குகளின் இயல்பும் யாப்பும்

திருவாசகமானது உள்ளத்திலே பதிந்து நிறைந்த அன்பிலே ஊறி வெளிப்போந்த அமுதவாக்கியங்களானபடியினாலே இன்றைக்கும் படிப்போரை மனங்கரைத்து மலங் கெடுக்கும் தன்மைவாய்ந்து விளங்குகிறது.

திருவா சகமிங் கொருகா லோதிற்
கருங்கன் மனமுங் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்து நீர்பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்ப ராகுந ரன்றி
மன்பதை யுலகில் மற்றைய ரிலரே.

என்று துதிக்கிறார் ஸ்ரீ சிவப்பிரகாசசுவாமிகள். இதில் 51 பகுதிகள் உள்ளன. மொத்தப் பாடல்கள் 656. இது கலிவெண்பா, வெண்பா, அகவல், கலித்தாழிசை, கட்டளைக் கலித்துறை, கலிநிலைத்துறை, கலிவிருத்தம் முதலிய பலவகை விருத்தங்கள் முதலிய பாட்டுக்களாலே அமைந்தருளப் பெற்றிருக்கின்றது. வெண்டளையான் வந்த விருத்தங்களாகிய திருவெம்பாவை, திருவம்மானையும், கலித்தாழிசையிலே அருளப் பெற்ற திருவுந்தியாரும், கலவைப் பாட்டிலே அமைந்த அடைக்கலப்பத்தும் அருமையான சொற்பிரயோகங்களாகும்.

திருக்கோவையார் முழுமையும் தமிழ் அகப்பொருள் இலக்கணத்துக்கு இலக்கியமாய் அகப்பொருளின் துறைகளோடு கட்டளைக் கலித்துறை வகையாலே அமைந்தது.

திருச்சதகம், பிரார்த்தனைப்பத்து, கோயின் மூத்ததிருப்பதிகம், கோயிற்றிருப்பதிகம், குழைத்தபத்து என்பன அந்தாதித்தொடையாக அமைந்துள்ள இயல்பும் அழகும் கவனிக்கற்பாலனவாம். முதற்பாட்டாகிய சிவபுராணத்தைச் சிலர் தவருக அகவல் என்று எழுதியிருக்கின்ருர்கள். அது கலிவெண்பா ஆகும்.

நுதலியபொருள்

வாசகத்தாற் கருதப்படும் பொருள் வாச்சியம் என்று சொல்லப்பெறும். இத்திருவாசகத்திற்கு வாச்சியமாவார் சிவபெருமானே என்பது தில்லை வாழ்வார்கள் அத்திருமுறைக்குப் பொருள் கேட்டபோது இதற்குப் பொருளாவார் இவரே என்று சுவாமிகள் நடராஜமூர்த்தியைக் காட்டியருளினமையாலேயே கண்டோம்.

மொழிந்த வாசகமே, வாசகம் அதற்கு வாச்சியம்
தூசகல் அல்குல்வேய்த் தோளிடத் தவனே.

என்று துதித்தார் சிவப்பிரகாச சுவாமிகள். இக்காரணம் பற்றியே எப்படி யாதொரு அடைமொழியுமில்லாது பூ என்ருல் தாமரைப்பூவையே குறிக்குமோ அதுபோல யாதொரு அடைமொழியுமில்லாமல் திருவாசகம் என்ருல் பரமேசுவரனையே வாச்சியமாகவுடைய காரணத்தாலே இத்திருவாசகத்தையே குறிக்கும்.

சுவாமிகள் உலகிற் சரித்தநிலை

நமது சுவாமிகள் உலகத்திலே வரலாற்றுக்காலத்திலே உலகத்தார் அவரை உண்மையாக உணரவில்லை. அவர் அமைச்சராயிருந்த காலத்தே அந்தரங்கமாகச் செய்துவந்த ஆன்மவிசாரணையை அரசரும் உலகத்தவர்களும் அறியாராயினர். குருமூர்த்தியினலே ஆட்கொள்ளப்பெற்ற நிலையையும் உண்மையையும் அதனல் அவர் அடைந்த ஆன்ம நிலையையும் ஒருவரும் அறிந்தாரல்லர். அது காரணமாக மதுரைத் திருவிளையாடல்கள் நிகழ்ந்தபின் அவர் செய்த சிவத்தல யாத்திரைகளும் சிவயோகமும் உலகினர்க்கு உண்மை தெரியாவாயின. உலகத்தார் அவரைப் பித்தரென்றே கொண்டு இகழ்ந்தார்போலும்.

...........பசுபாச மறுத்தருளிப்
பித்தனிவ னெனவென்னை ஆக்குவித்து கண்ட 7
நாட்டார் நகைசெய்ய நாமேலை விடெய்த அம் 6
சகம்பே யென்று தம்மைச் சிரிப்ப
நாணது வொழிந்து நாடவர் பழித்துரை
பூணது வாக....,.... போற்றி
பித்த னென்றெனை யுலகவர் பகர்வதோர் காரண
மிதுகேளீர் அதி 4
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமு மவர் தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப பொற் 17
உருக்கும் பணிகொள்ளு மென்பதுகேட் டுலகமெல்லாம்
சிரிக்கும் திறம்பாடி....... தெள் 3
மருளார் மனத்தோர் உன்மத்தன் வருமா லென்றிங்
கெனைக்கண்டார்
வெருளா வண்ணம் பிரார்த்தனை 3
பேசப் பட்டே னின்னடி யாரிற் றிருநீறே
பூசப் பட்டேன் பூதல ராலுன் னடியானென்
றேசப் பட்டேன்....... சத 82
ஏசா நிற்பர் என்னை யுனக்கடி யானென்று. கோ. மூத். ப. 6

உபதேசத்தின் பின் சுவாமிகள் சீவன் முத்தநிலைமையை அடைந்து பிராரத்தவினையின் அனுபவ மாத்திரையிலே உலகிலே சஞ்சரித்துச் சிவயோகம் பயின்றுவந்தார். உலகத்தோடு காண்கையில் பாலர், பித்தர், பிசாசர் குணமருவி நிற்பதே ஞானிகள் இயல்பன்றோ? நீண்டகாலம் தில்லையிலே தங்கித் தவஞ்செய்து கொண்டிருந்தும் சுவாமிகளைத் தில்லை வாழ்வார்கள் ஒருவரும் அறிந்தாரில்லை. இப்படித்தான் பெரியோர் உலகிலே சரித்து நிற்பார்கள். முதன்மந்திரி வேலையை விட்டுச் சுற்றம் துறந்து குருவின் பின்னே சென்றுவிட்ட சுவாமிகளை உலகம் பித்தனென்னுது வேறென்ன சொல்லும்?

வரலாற்றுப் பகுதிகளும் திருவாக்கும்

திருவாசகத்திலே சுவாமிகள் வரலாற்றுப் பகுதியாகிய சற்குருதரிசனம்; ஆசாரியமூர்த்திகள் வேதியராக வந்து ஆண்டமை; திருவடிதீட்சை முதலிய தீட்சைகள் செய்தமை; பெருமானே மறையோர் கோலங்கொண்டு குருநாதராய் வந்து அருளிய அருமைப்பாடு; சுவாமிகளின் பொருட்டுக் குதிரைச் சேவகனுய்ப் பரிப்பாகனுய் வந்த அருங்கோலம்; அவ்வாறு வருவதிலே நரிகளைக் குதிரைகளாக ஆக்கிக்

கொணர்ந்தமை; அடியவருக்காக மண் சுமந்து பிட்டுக்கூலி கொண்டு பாண்டியரால் பிரம்படிபட்டமை; தம்மைத் தில்லைக்கு வரப்பணித்து ஆசாரியரும் மற்ற அடியார்கள் பலரும் தில்லை சென்றமை எஞ்சிய சில அடியார்கள் தீப்பாய்ந்து அடியடைந் தமை; பிரிவாற்றுமை; தாம் திருப்பெருந்துறை நீங்கி யாத்திரை சென்ற தலங்கள்தோறும் குருவுருவங்காட்டக்கண்டமை; ஈழ அரசன் பெண்ணைப் பேசுவிக்க நிகழ்ந்த வினாக்கள்; முதலிய பலவற்றிற்கும் ஆதாரங்கள் காணலாம். திருக்கோவையாரிலும் சிற்சில வரலாற்றுப் பகுதிகட்கு ஆதாரங்கள் உண்டு.

சைவசித்தாந்தக் கருத்துக்கள்

சைவசித்தாந்தக் கருத்துக்கள் தொட்டதொட்ட இடங்கள் தோறும் இவ்விருசாத்திரங்களிலும் காணலாம். பதி ஒருவன் உண்டு. அவன் நமது சொல்லுக்கும் நினைப்புக்கும் மற்ற காரணங்களுக்கும் எட்டாதவன்; எல்லாப் பொருள்களும் அவனே. ஆனால் அவை ஒன்றும் அவனல்ல. எல்லாம் வல்ல வன். கருணைக் கண்ணினால் எல்லா உயிர்களுக்கும் எல்லாம் காட்டுகிறான். அவன் நமக்கு மாலுங்காட்டி, வழிகாட்டி, வாராவுலக நெறியேறக் கோலங்காட்டி யாட்கொள்வன். காயத்துள் அமுதூற ஊற நீ கண்டுகொள் என்று காட்டுவன். அப்போது பத்திநெறியை ஆன்மா கடைப்பிடித்துப் பசுபாச மறவும் சித்தமல மறுவித்துச் சிவமாக்கியாட் கொள்ளவும் பெறுவன். ஆண்டான் திருவடிக் கலப்பும் அடியார் கூட்டமு மாகிய நித்தியானந்தம் இவனுக்கு வாய்க்கும். இறைவனை அடைதற்குச் சாதனங்கள் சரியை முதலாயின. அடியார் தன்மை இன்னின்ன இலக்கணமுடையது. பரமேசுவரன் ஆட்கொண்ட பின்னரும் அடியார் கூட்டம் வேண்டப்பெறுவது என்பன வாதி அருமையான முடிந்த உண்மைகள் சுவாமிகள் திரு வாக்கிலே எங்குங்காணலாம்.

ஒருநாமம் ஒருருவமில்லான் — தெள் 1

நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப் பகலோன்
புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்து நின்றான்
— தோணு 5

ஒன்றுநீயல்லை அன்றி ஒன்றில்லை — கோயிற்பதிகம் 7

சொற்பதங் கடந்த தொல்லோன்
பூவினாற்றம் போன்றுயர்ந் தெங்கும்
ஒழிவற நிறைந்து மேவிய பெருமை
இத்தந்திரத்திற் காண்டுமென் றிருந்தோர்க்
கத்தந் திரத்தி னவ்வயி னொளித்தும் — திரு அண்டப்பகுதி

யானெனதென் றவரவரைக் கூத்தாட்டுவான் சத 15
மனவாசகங் கடந்தான் உயிரு 3
மெய்ப்பொருட்கட் டோற்றமாய் மெய்யே நிலைபேருய்
எப்பொருட்குந் தானேயாய் யாவைக்கும் விடாகும்
அப்பொருளா நஞ்சிவனை அம் 12
செம்பொருட்டுணிவே பிடி 1
இருளிடத்துன்னைச் சிக்கெனப் பிடித்தேன் பிடி 4
இறவிலே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன் பிடி 6
திறவிலே கண்டகாட்சியே பிடி 6
மூவராலு மறியொணுமுதல் சென்னி 1
உரையுணர் விறந்துநின் றுணர்வதோ ருணர்வே கோயிற் 3
மறை பயின்றவாசகன் திருவார்த்தை 1
நாதமுடையதோர் நற்கமலப் போதினின் நண்ணிய ஷை 7
பேசும்பொருளுக் கிலக்கிதமாம் பேச்சிறந்த மாசின்மணி
பண்டாய 7
எல்லையி லாதன எண்குண மானவை எய்திடும் படையா 7
குறியொன்று மில்லாத கூத்தன் அச்சோ 2
தம்பெருமை தானறியாத் தன்மையன் சாழல் 19
வான்கெட்டு மாருதமாய்ந் தழனீர் மண்கெடினும்
தான் கெட்டலின்றிச் சலிப்பறியாத் தன்மையன் தெள் 18
சேர்ந்தறியாக் கையானை அம் 13
என் றெல்பிறவி ஏழு மெழுதாவகை சிதைத்தோன் கோவை 79
அளவியை யார்க்கு மறிவறியோன் கோவை 10

இவை முதலாயின திருவாக்குகள் பதியிலக்கணம் காட்டு வனவாம்.

இந்திர ஞாலஇடர்ப்பிற வித்துயர் படையாட்சி 3
இரும்பாசம் தீர இகபர மாயதோர் இன்ப மெய்த திருவார் 10
வெய்யவினையிரண்டும் வெந்தகல திருவெண்பா 1
முன்னைவினையிரண்டும் பிடி 4
உள்ளமல மூன்றுமாய பண்டாய 2
மும்மைமல மறுவித்து அச்சோ 9
சாதல் பிறப்பென்னும் தடஞ்சுழியிற் றடுமாறி ஷை 8
ஆனையாய்க் கீடமாய் மானுடராய்த் தேவராய்
ஏனைப் பிறவாய்ப் பிறந்திறந் தெய்த்தேனை அம் 14
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்

செல்லா நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் சிவபுராணம்

கல்லிலும் உயிர் உண்டு என்பது நமது பெரியோர் கண்ட உண்மை.

சாதிகுலம் பிறப்பென்னும் தடஞ்சுழியிற் றடுமாறு
மாதமிலி நாயேனை கண்ட 5
மரணம் பிறப்பென் றிவையிரண்டின் மயக்கறுத்த கோத் 9
எனை நா னென்பதறியேன் பகலிரவாவது மறியேன் உயிரு 3

இவை முதலாயின திருவாக்குகள் பிறவித்துன்பங்களையும் பாசவியல்பையும் வலிமையையும் குறிக்கின்றன. பாசத்தாற் கட்டப்பட்டமை குறிக்கவே கட்டுப்பட்டு நிற்கும் ஆன்மாவின் பெத்த நிலையும் குறிக்கப்பட்டதாம். ஆன்மாவானது கட்டுப் பட்ட நிலையிலே பாசத்தோடொன்றாய் நிற்கிறது. சிவசத்தி யின் உபகாரத்தாலே விடுபட்ட நிலையிலே சிவத்தோடு ஒன்றி நிற்கிறது.

ஆணவத்தோ டத்துவித மானபடிமெய்ஞ்ஞானத்
தாணுவினோடத்துவிதம் சாருநா ளெந்நாளோ

என்றார் தாயுமானசுவாமிகள். இவ்வுண்மையை நமது சுவாமி கள் அனேக இடங்களில் எடுத்துக்காட்டி இருக்கின்றார்கள்.

மாலுங்காட்டி வழிகாட்டி வாராஉலக நெறியேறக்
கோலங்காட்டி யாண்டாயை ஆனந்த 3
முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தமல மறுவித்துச் சிவமாக்கி ... ... அச்சோ 1
பந்தமறுத் தெனையாண்டு பரிசறவென் றுரிசுமறுத்து அச் 6
பையவே கொடுபோந்து பாசமெனுந் தாழுருவி
உய்யுநெறி காட்டுவித்திட்டு ஓங்காரத்துட் பொருளை
ஐயனெனக்கு அருளிய வாறு அச்சோ 7

இவையும் இன்னும் இவைபோன்ற பிறவும் ஆன்மா பாசத்தாற் கட்டுப்பட்டிருந்த நிலையும், அதினின்றும் இறைவனாலே விடு விக்கப்பெற்று அடையும் நிலையும் விளக்குகின்றன. அதற்கு உரிய சாதனங்களும் சிறப்பாகக் கூறப்பட்டன.

இவை முதலாயின திருவாசகங்கள் சிவஞானபோதம் முதல் ஏழு சூத்திரங்களின் உண்மையை விளக்குவன.

இப்பிறப்பினிலிணை மலர் கொய்து

என்ற திருப்பாட்டிலே 'நான்' என்னும் ஆன்மாவைக் குறிக்கும் பதம் உலகச்சார்பிலே ஒரு முறையும், சிவச்சார்பிலே ஒரு முறையுமாக இருமுறை வைக்கப்பெற்ற வகையாலே,

இருதிற னறிவுள து இரண்டலா ஆன்மா

என்ற சிவஞானபோதம் ஏழாவது சூத்திரக் கருத்து உணர்த்தப் பெற்றது.

கொடுமா நரகத் தழுந்தாமே காத்தாட்
கொள்ளும் குருமணியே ஆன 4
... ... இருவினையை ஈடழித்து
துன்பங்கள் களைந்து துவந்துவங்கள் தூய்மை செய்து
முன்புள்ளவற்றை முழுதழிய ... ... குலா 3
இணையார் திருவடி என்றலைமேல் வைத்தலுமே
... ... தேவானவா பாடி தெள் 7
என்னையு மொருவனுக்கி யிருங்கழற்
சென்னியில் வைத்த சேவக போற்றி போற்றித் திருவகவல் 1
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கு மாரியனே சிவபுராணம்
அருபரத் தொருவன் அவனியில் வந்து
குருபர னாகி அருளிய பெருமை
கீழ்ச்செய் தவத்தாற் கிழியீடு நேர்பட்டுத்
தாட் செய்ய தாமரைச் சைவனுக்கு ... ... குலா 9

இன்னோரன்ன திருவாக்குகள் சற்குரு உபதேசமாகிய சாதனமும் அதன் இலக்கணமும், அவ்வுபதேசம் நிகழும் முறையும் தீட்சாவிசேடங்களையும், அது தவத்தால் வருவதென்பதையும் காட்டுவனவாம். இவை சிவஞானபோதம் எட்டாஞ் சூத்திரக் கருத்தை வெளிப்படுத்துவன.

ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்
தம்முதல் குருவுமாய்த் தவத்தினி லுணர்த்தவிட்டு
அண்ணரிய மின்மையி லரன்கழல் செலுமே. (8-ம் சூத்திரம்)

இச்சூத்திரத்தாற் காட்டப்பெற்ற இந்த உண்மையை உலகிற்கு விளக்கி உபகரிக்கிறதற்காகவே திருவவதாரம் செய்தார் போன்று அவதரித்தருளியவராகிய நமது சுவாமிகள் சற்குரு உபதேசத்தால் வழிப்படுத்தப் பெற்றுச் சிவமாய் விளங்கினர். இக்காரணம்பற்றி நமது சுவாமிகள் திருவாக்குகளாகிய திருவாசகமும் திருக்கோவையாரும் சைவத்திருமுறைகளிலே எட்டாந் திருமுறையாக வைத்தெண்ணப் பெறுவதும்

ஒரு நியாயம் போலும். பன்னிரண்டாவது சூத்திரமாகிய அடியார் கூட்டத்தின் விசேட உண்மைபொருளை விளக்கவந்த திருத்தொண்டர் புராணம் பன்னிரண்டாம் திருமுறையாக அமைந்துள்ள அழகும் பொருத்தமும் இங்கே கவனிக்கற்பால தாம்.

பசுத்தன்மை கெடுதல்

குருநாதனுல் உபதேசித் தாட்கொள்ளப் பெற்றபின் பசு போதங்கெட்டு ஆன்மா சிவபோதமடைகுவன். இவ்வாறு பசுத்தன்மை கெடுவதைச் சுவாமிகள் மிக உருசியாக அருளிச் செய்வார்கள்.

கயன்மாண்ட கண்ணிதன்பங்க னெனைக்கலந் தாண்டலுமே
யயன்மாண் டருவினைச் சுற்றமுமாண் டவனியின்மேன்
மயன்மாண்டு மற்றுள்ள வாசகமாண் டென்னுடைய
செயன்மாண்டவா பாடித் தெள்ளேணங் கொட்டாமோ. 11

ஊன்கெட் டுயிர்கெட் டுணர்வுகெட்டென் னுள்ளமும்போய்
நான்கெட்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ. 18
திருவார் பெருந்துறை மேயபிரா னென்பிறவிக்
கருவே ரறுத்தபின் யாவரையுங் கண்டதில்லை. தெள் 2

நவமாய செஞ்சுடர் நல்குதலு நாமொழிந்து
சிவமான வாபாடி. தெள் 4

என்றித்திறத்த பாசுரங்கள் ஆன்மா தன்னுடைய பசுத்தன்மை கெட்டுப் பதித்தன்மை அடைகின்றதை விளக்குவன.

குருவின் உபகாரம்

சற்குருவாய் வரும் இறைவன் ஆன்மாக்களைப் பாசக் கட்டிலிருந்து எடுத்து அவற்றின் கன்மத்துக்கீடான உடம்பையும் மற்ற அனுபவப் பொருள்களையும் கொடுத்துத் தனது கருணைக்கண்ணேக்கம் செய்து அறிவுறுத்திப் பாசநீக்கம் செய்து சிவத்தன்மை அடைவித்து அடியார் கூட்டத்தை அடையும்படிச் செய்கின்றதாகிய பேருபகாரத்தைத்தான் சைவ சித்தாந்த சாத்திரங்கள் விதந்துபேசும். இறைவன் 'உயிர்க் குயிராய் அங்கங்கே' அந்தந்த ஆன்மாக்கள் தோறும் எழுந்தருளியிருப்பன்; அவ்வாறு உயிர்களைத் 'தாவியவனுடனிருந்தும் காணாத' தன்மையன் இவ்வாறு உள்ள - பாசங்களின்

தன்மை - பசுத்தன்மை பதியின் நிறைவும் அருளும் ஆகிய இவற்றைக் குருநாதன் காட்டியருளவே, ஆன்மாவுங் கண்டு கொண்டு இன்பமனுபவிப்பான்.

நீக்கி முன்னெனைத் தன்னொடு
நிலாவகை குரம்பையிற் புகப்பெய்து
நோக்கி நுண்ணிய நொடியன
சொற்செய்து நுகமின்றி விளாக்கைத்துத்
தூக்கி முன்செய்த பொய்யறத்
துகளறுத் தெழுதரு சுடர்ச்சோதி
யாக்கி யாண்டுதன் அடியரிற்
கூட்டிய அதிசயங் கண்டாமே. அதி 8

உற்றவாக்கையின் உறுபொருள் நறுமல ரெழுதரு
நாற்றம்போற்
பற்றலாவதோர் நிலையிலாப் பரம்பொருள் அதி 9
காயத் துள்ளமு தூற வூறநீ கண்டுகொள் ளென்று காட்டிய
சேய மாமலர்ச் சேவடிக் கணம் சென்னி 5
காட்டா தன எல்லாம் காட்டிச் சிவங்காட்டித்
தாட்டா மரை காட்டித் தன் கருணைத் தேன்காட்டி அம் 6

என்பனவாதி திருவாக்குகள் குருவின் உபகாரத்தையும் தச காரியங்களையும் குறிப்பனவாம்.

அந்தமிலாத அகண்டமு நம்மு ளகப்படு மாகாதே
திருப்படையாட்சி 3
நன்மணி நாத முழங்கிஎன் னுள்ளுற நண்ணுவது டி. 4
சங்கு திரண்டு முரன்றெழு மோசை தழைப்பன டி. 8
பேய்த்தேர் முகக்குறும் பேதை குணமாகாதே தீர்த்தாய்
தோணோ 1
நமச்சிவாய வாழ்க சிவபுராணம்
நமச்சிவாய வென்றுன் னடிபணியாப் பேயன் செத் 7
எண்ணரிலேன் திருநாம வஞ்செழுத்தும் அதி 6
நானேயோ தவஞ்செய்தேன்
சிவாயநம எனப்பெற்றேன் திருவேசறவு 10
உடையா ளுன்ற னடுவிருக்கும் உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியே னடுவுள் இருவீரு மிருப்பதானுல் கோ. மூத்த 1

என்பனவாதி திருவாசகங்களும், மேலே தசகாரியத்தைச் சுட்டு வனவாகக் காட்டியவையும் ஒன்பதாம் சூத்திரக்கருத்தை விளக்கி இறைவனை ஞானக் கண்ணாலே ஆன்மநாயகனாக

உள்ளே காணுமாறும், பாசங்கள் பேய்த்தேர்போல அகன்று விடுமாறும்,

வெந்துயர்க் கோடை மாத்தலை கரப்ப

அடித் தொண்டர்க்குக் குளிர்ந்த நிழலை இறைவன் செய்யு மாறும், விதிப்படி சிபஞ்சாக்கரத்தை எண்ணுவது பெருஞ் சாதனமாகுமாறும் விளக்கி நிற்பனவாம்.

போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின் சிவபுரா.
சித்தம் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கும், அத்தன்
தோணு 6
உயிருண்கின்ற வெம்மானே எண் 3
பேதைகுணம் பிறருருவம் யானெனதென் னுரை மாய்த்துக்
கோதிலமு தானன் கண்ட 5

என்பனவாதி அருளிப்பாடுகள் இறைவன் பாசச்சேதம் செய்யு மாறு காட்டிப் பத்தாஞ் சூத்திரக் கருத்தை விளக்குவன.

விடு தந்தென்றன் வெந்தொழில்
விட்டிட மென்மலர்க் கழல் காட்டி
ஆடு வித்தென தகம்புகுந் தாண்டதோ
ரற்புத மறியேனே அற் 5

அறவு தந்தெனை யாண்டுகொண் டருளிய அற்புதம் 10
அடித்தடித்து வக்கார முன் றீற்றிய அற்புதம் 3
நிச்சம்மென நெஞ்சின் மன்னி யானுகி நின்றுனே உயிரு 9

என்பனவாதி திருவாசகங்கள் மேலே கூறியவாறு பாசநீக்கம் பெற்ற ஆன்மாக்கள் பரமேசுவரனது சிபாத மணையு மாற்றை யும், ஏகனுகி இறைபணி நிற்றலையும் விளக்கிப் பதிஞேராஞ் சூத்திரக்கருத்தை எடுத்துக் காட்டுவனவாம்.

அற்புதமும் அதிசயமும்

அற்புதமும் அதிசயமும் ஒன்று போலவே உள்ளத்தின் கண்ணே நிகழ்ந்து ஆன்மாவினலனுபவிக்கப்பெறும் ஆனந்த மயமான பெருமித உணர்ச்சிகளாம். ஆயினும் அவ்வுணர்ச்சி இன்னதென்றும் யான் அனுபவிக்கின்றேனென்றும் அறியாது அனுபவிப்பது அற்புதமாம். அது இன்னதென்று உணர்ந்து அனுபவிப்பது அதிசயமாம். இதுவே இவை தம்முள் வேறு பாடாம் என்று பெரியோர் கூறுவர். இக்கருத்துப்பற்றியே சுவாமிகள் அற்புதப்பத்து என்று ஒன்றும், அதிசயப்பத்து

என வேறு ஒன்றும் ஆக இரண்டு பதிகங்கள் வகுத்தருளினர். இவ்வாறு சிவப்பேற்றை உணர்த்திய அற்புதபத்து அற்புதம் விளம்பேனே 'அற்புத மறியேனே' என்றுகாட்டி ஆன்மா ஈசுவரானுபவத்திலே இன்னதென்று பகுத்தறிவின்றித் தான் அற்ற நிலையிலே கேவலம் ஆனந்தானுபவம் மட்டும் அனுபவித்து நிற்கும் நிலையை உணர்த்துகின்றது.

இவ்வாறன்றி அறிந்து அனுபவிக்கின்றதாகிய அதிசய உணர்ச்சியின் அனுபவமானது இதற்குவேருய் மேற்பட்ட நிலையிலே உள்ளது. இதனையே அதிசயப்பத்திலே 'அதிசயங் கண்டாமே' என்று முடித்துக் காட்டியருளினர் நமது சுவாமிகள். இம்முறையிலே அற்புதமாவது ஆண்டான் கூட்டமும் அதிசயமாவது அடியார் கூட்டமும் ஆம் என்பதும், சிவ வழிபாட்டின் பயன் அடியார் கூட்டமென்பதும், சிவப்பேறு கூறும் பதினேராஞ் சூத்திரத்தின் பின்னர் அணைந்தோர் தன்மை என்ற உள்ளுறையுடைய பன்னிரண்டாஞ் சூத்திரம் வைக்கப்பெற்று அதில் அடியார் கூட்டம் பேசப்படுகின்ற வைப்புமுறையாலும் விளங்கும். இக்கருத்துப்பற்றியே,

.................இறைவர் திருமுன்பெய்தித்
தொழுதுதலை மேற்கொண்ட செங்கை போற்றி
வீழ்ந்தெழுவார் கும்பிட்ட பயன் காண்பார்போல்
மெய்வேடர் பெருமானைக் கண்டுவிழ்ந்தார்.

பெரிய. ஞான. 1023

என்று சேக்கிழார் சுவாமிகள் அருளிச் செய்துள்ளார்கள் போலும். ஆண்டான் வழிபாட்டினும் அடியார் கூட்டத்தினை அடைந்திருத்தலால் பெரும்பயன் உண்டென்று அதற்கு அடுத்த பாசுரத்தில் குறித்தருளினர்.

உள்ளத்திற் றெளிகின்ற மெய்ம்மை யன்பின்
உருவினையும் அவ்வன்பி னுள்ளே மன்னும்
வெள்ளச்செஞ் சடைக்கற்றை நெற்றிச் செங்கண்
விமலரையும் உடன்கண்ட விருப்பும் பொங்கி.

டி. 1024

... ... தன்சீரடியார்
குலம்பணி கொள்ள வெனைக் கொடுத்தோன் கோவை 67
உள்ளு முருகி யுரோமஞ் சிலிர்ப்ப வுடையவனுட்
கொள்ளு மவரிலொர் கூட்டந் தந்தான் கோவை 185
அத்தன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய அதிசயம் கண்டாமே

அதி 4

கட்டறுத்தெனை...... நிறீட்ட...... அன்பரொடு......
பட்டி மண்டப மேற்றினை சத 49
தன் அடியாரடி யென்றலைமீது தழைப்பன படையாட்சி 6
ஆசையெலா மடியாரடி யோமெனு மத்தனை ஷை 8
இணங்கத்தன் சீரடியார் கூட்டமும் வைத்து பூவல் 7
... ... உன் பழவடியார் கூட்டம்
அடியேன் காண ஆசைப்பட்டேன் ஆசை 9
பேரா யிரமும் பரவித் திரிந்தெம் பெருமா னெனவேத்த
ஆரா அமுதே ஆசைப்பட்டேன் ஆசை 7

என்றிவ்வாறு அனேக திருவாக்குகளிலே அடியார் கூட்டத்தின் பெருமையும் பன்னிரண்டாஞ் சூத்திரக் கருத்தையும் சுவாமிகள் விளக்கி அருளினர்கள்.

அடியார் இலக்கணம்

அடியாரியல்பு இன்னின்னபடி என்று பலவிடத்தும் சுவாமிகள் விளக்கி இருக்கின்றார்கள்.

மெய்ம்முழுதும் கம்பித், தழுமடியாரிடை யார்த்துவைத்து
ஆட்கொண் டருளி என்னைக், கழுமணியே நீத் 27

தப்பா மேதாம் பிடித்தது சலியாத்
தழலது கண்ட மெழுகது போலத்
தொழுதுள முருகி யழுதுடல் கம்பித்
தாடியு மலறியும் பாடியும் பரவியும்
கொடிறும் பேதையும் கொண்டது விடாதெனும்
படியே யாகிநல் லிடையறு வன்பிற்
பசுமரத் தாணி யறைந்தார் போலக்
கசிவது பெருகி
... ...
என்புநைந் துருகி நெக்குநெக் கேங்கி
யன்பெனு மாறு கரையது புரள
நன்புல னொன்றி நாதவென் றரற்றி
யுரைதடு மாறி யுரோமஞ் சிலிர்ப்பக்
கரமலர் மொட்டித் திருதய மலரக்
கண்களி கூர நுண்டுளி யரும்பச
சாயா வன்பினை நாடொறுந் தழைப்பவர்
தாயே யாகி வளர்த்தனை போற்றி.

போற்றித்திருவகவல்

... ...
மெய்த்தழையா நின்ற வன்பினர் போல விதிர் விதிர்த்துக்
கைத்தழை யேந்திக் கடமாவினுய் கையில் வில்லின்றியே
பித்தழையா நிற்பரால். கோவை 102

இனி இவ்விவ்விலக்கண மில்லாதவர்கள் அடியவர்கள் அல்லரென்றும், அவர்களைக் காணவும் அஞ்சுதல் வேண்டு மென்றும், கூறும் வகையாலும் அன்பிலக்கணத்தைக் காட்டி யருளுகின்ருர்.

... ... கண்ணுதல் பாதநண்ணி
மற்றுமோர் தெய்வந்தன்னை யுண்டென நினைந்தெம் பெம்மாற்
கற்றிலா தவரைக் கண்டா லம்மநா மஞ்சுமாறே
அச்சப்பத்து 1
திருவுரு வன்றி மற்ருேர் தேவரெத் தேவரென்ன
அருவரா தவர் 2
ஏத்தி யினிதருள் பருகமாட்டா அன்பிலாதவர் 3
வெளியநீ ருடு மேனி வேதியன் பாத நண்ணித்
துளியுலாங் கண்ண ராகித் தொழுதழு துள்ள நெக்கிங்
களியிலாதவர் 4
வெண்ணீ றணிகிலாதவர் 5
மலர் புனைந்து நையு மாளலாதவர் 6

என்றின்னவாறு எதிர்மறை முகத்தாலும் அடியாரிலக்கணம் இன்னதென்று விளக்கியருளினுர்.

உத்த மனத்த னுடையா னடியே நினைந்துருகி
மத்த மனத்தொடு மாலிவ னென்ன மனநினைவி
லொத்தன வொத்தன சொல்லிட வூருர் திரிந்தெவருந்
தத்த மனத்தன பேச வெஞ்ஞான்று கொல்சாவதுவே சத 3

என்று தாம் அவ்வுத்தம அடியார் இலக்கணத்தைப் பெற் றிருந்தும் 'பெருநீரின் அமுங்கி நெஞ்ச நெக்குருகி நிற்' கும் வகையாலே சிவன் முத்தராகி அணைந்தோராம் அடியாரிலக் கணத்தை வற்புறுத்தியருளினுர்.

குறிக்கோள்

அடியார் கூட்டமே நமக்குக் குறிக்கோள். அதாவது இலக் கியமாகும் என்பதும் அதுவே பாச நீக்கத்துக்கு ஏதுவாகும் என்பதும் அதுதான் இறைவனது ஆணை என்பதும் சுவாமிகள் கருத்தாகும்.

நெறிசெய் தருளித்தன் சீரடியார் பொன்னடிக்கே
குறிசெய்து கொண்டென்னை யாண்டபிரான் பூவல் 8
குறிக்கொள் கென்றுநின் றொண்டரிற் கூட்டாய் செத் 8

இருவினை ஒப்பு

இனி, மாயப் பிறவி யுன்வசமே வைத்திட் டிருக்கு மதுவன்றி
ஆயக் கடவே னானேதான்? என்னதோ விங்கதிகாரம்
காயத் திடுவா யுன்னுடைய கழற்கீழ் வைப்பாய்
கண்ணுதலே குழை 8
நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ விதற்கு நாயகமே
குழை 1
ஆருற வெனக்கிங் காரய லுள்ளார் கோ - பதி 8

இவைகள் சுவாமிகளின் இருவினை ஒப்பு ஆகும் பரிபக்குவ நிலையையும் இறைவனிடத்தில் தம்மைமுழுதும் ஒப்புக்கொடுத்த நிலையையும் எடுத்துக் காட்டுவனவாம்.

அருஞ்சொற் பிரயோகங்கள்

இனிச் சுவாமிகள் திருவாக்கில் அருமையான சொற்பிரயோகங்களையும் காணலாம். சாமானிய உலகவழக்குச் சொற்களையும் சுவாமிகள் குறிப்பிட்டு வழங்கியுள்ளார்.

நரிப்பாய் (கோ. மூ. ப. 9) வினைக்கேடன் சத 22
சிறவே செய்து (சத - 86) சிறவே போற்றி போ - அக
குமண்டை குலா 1
அனுகுலமாய், பைதலி, குதுகுதுப்பு, விதுவிதுப்பு நீத் 34
உள்ளிட்ட சாழ 8
கறங்கோலை (தெள் - 8) பொந்து பூவ
உவலைச்சமயங்கள் - சவலைக்கடல் தெள் 17
சவலையாய் (ஆன 5) புயங்கன் யாத்
எத்துக்கு ஊட்டாம் (சாழ - 14) சாத்து
என்றாழ் கோவை 159
முதுக்குறைந்தாள் கோவை 249
தவல், சுவல் கோவை 389
கலர் கோவை 259
போதரவு கோவை 318

என்பனவாதி அரும்பிரயோகங்களுக்கும் உலக வழக்குச் சொற்பிரயோகங்களுக்கும் உதாரணமாம்.

அதெந்துவே (அருட்பத்து)
குப்பாயம் (அன்னே) அச்சன் (அற்)

போன்ற சில திசைச்சொற்களேயும் காணலாம்.

நயங்கள் அணிகள்

சாதுரியமும் மாதுரியமும் ஆன உரைகளும், மற்றும் அடுக்கு முதலிய சொன்னயங்களும், பொருணயங்களும் அங்கங்கே மிகவும் அருமையாக வழங்கப்பெற்றவற்றைக் காணலாகும். நகை வீரம் முதலிய சுவைகட்கும் உதாரணங்கள் பார்க்கலாம். மிகச் சுவையான பிரயோகங்களேயும் கருத்துக்களேயும் அளவு கடந்த நிலேயிலே கிடைக்கப்பெறலாம். உவம விசேடங்களும், மற்றும் வருணனே முதலிய கவி நயங்களும் பலவுண்டு. ஆனுல் எல்லாம் பத்திச் சுவையை விளேப்பன வாகவே இருக்கும்.

மறுமையோ டிம்மையுங் கெடுத்த பொருளனே அருட் 9
நள்ளுங் கீழுளு மேலுளும் யாவுளும்
எள்ளு மெண்ணெயும் போனின்ற வெந்தை சத 46
யாவர்க்குந் தந்தையாய் தம்பிரான் த்னக்கஃ்நல்லான் சத 47
எவ்வுயிர்க்குந் தோற்றமாகி நீதோற்ற மில்லாய் சத 70
ஈசனே நீயல்லதில்லே யிங்குமங்கும் (பந்தம் - முத்தி) சத 78
பொய்யர்தம் பொய்யனே மெய்யர் மெய்யை பொற் 12
தம்பெருமை தானறியாத் தன்மையன் சாழ 19
முன்னேப் பழம் பொருட்கு முன்னேப் பழம் பொருளே
பின்னேப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே திருவெம் 9
மெய்ந்நெறி பொய்ந்நெறி நீக்கிய அதிசயம் அதி 10
பேதகங்கள் அனேத்துமாய் பேதமிலாப்பெருமையன்
கண்ட 10
பேராசை வாரியனே அம் 2
சீயேது மில்லாதென் செய்பணிகள் கொண்டருளும்
தாயான ஈசன் கோத் 12
உள்ளத் துறுதுயர் ஒன்ருெழியா துள்ளவெலாந்
தெள்ளுங் கழல் கோத் 19
பூமே லயனெடு மாலும் புகலரிதென்
றேமாறி நிற்க அடியே ஸிறுமாக்க கோத் 20
ஆனந்தத் தேனிருந்த பொந்தைப் பரவி பூவல் 2
வல்வினேயின், வாயிற் பொடி யட்டிப் பூவல்லி கொய்யாமோ
பூவல் 3
என்னேயோர் வார்த்தை யுட்படுத்து செத் 2

நீருறுதியே கோ. ப. 8
களித்துத் தலையினு னடந்தேன் செத் 3
கயிலை மாமலை மேவிய கடலே செத் 10
ஆட்டுத்தேவர் செத் 5
... ... அமுதத்தைவாரிக் கொண்டு
விழுங் குகின்றேன் விக்கினேனென் விதியின்மையால்
தழங்கருந் தேனன்ன தண்ணீர் பருகத்தந்து
உய்யக் கொள்ளாய். அடை 10
பொய்யர் பெறும்பே றத்தனையும் பெறுதற்குரியேன்
மான மழிந் தோம் மதி மறந்தோம் தோணே 8
வாழ்வற வாழ் வித்த மருந்தே பிடி 1
குடி கெடு கண்மீர் பாண்டி 2
குழலார் திறத்தே நின்று குடிகெடுகின்றேனை அதி 6
வினைக் கேடனேன் திருக்கழு 2
வினைக் கேடா உயிருண் 1
மாலயன் பாலிருளா யிருக்குமொளி கோவை 73
ஓராதா ருள்ளத் தொளிக்கு மொளியான் சிவபுரா.
இன்பமுந் துன்பமு இல்லானே உள்ளானே
வினைக் கேடரு முளரோ பிறர் சொல்லீர் உயிரு 4
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும் பிடி 3
ஐவர் கண்டர்தம் வல்லாட்டு குலா 8
கூடு முயிருங் குமண்டையிட குலா 1
என்னுலறியாப் பதந்தந்தாய்
இருந்தேன் நோய்க்க விருந்தாயே ஆன 2
ஒருவன் என்னு மொருவன் காண்க அண்டப்.
ஊனை நாடகமாடுவித்தவா
ஞான நாடக மாடுவித்தவா சத 95
கல்லைப் பிசைந்து கனியாக்கி அம் 5
கல்லை மென் கனியாக்கும் விச்சை சத 94
விச்சதன்றியே விளைவு செய்குவாய் சத 96
நுகமின்றி விளாக்கைத்து அதி 8

உடம்பின் தன்மை

1. மெய்ப்பா னரம்பு கயிருக மூளை என்பு தோல்போர்த்த
குப்பாயம் புக்கு ஆசை 2
2. மிடைந் தெலும் பூத்தை மிக்கழுக் கூறல்
விறிலி நடைக்கூடம் ஆசை 1
5. அளிபுண் ணகத்துப் புறந்தோல் மூடி யடியே
னுடை யாக்கை
புளியம்பழ மொத்திருந்தேன் ஆசை 5

4. பொத்தை யூன்சுவர் புழுப்பொதிந் துளுத் தசும்பொழுகிய
பொய்க்கூறை அதி 7
... ...
புரத்திற் றிவினை யாட நின் றேவினையாடி திருமலைகோவை 133
அருக்கண் குருட்டிற்புக 270
குறுகலரூர், தீங்கிற்புகச் செற்ற கோன் 270
பகல் குன்றப் பல்லுகுத்தோன்
என்னைத்தன் மொய்கழற்காட் செய்யென்பதே செய்தவன்
கோவை 277
... ... நள்ளாரரணந் தீங்குவளைத்த வில்லோன் டி 357
புனலூரனைப் பிரியும் புனலூர் கணைப் பூங்கொடியே 372
இறுமாப் பொழிய விறுமாப் பொழிந்த விணைமுலையே 373
தேனமர் சொல்லி சொல்லார் செல்லல் செல்லல்
திருநுதலே 274

சொற்களிற் பொருளாழமுடைமை

1. விண்ணோர் முழுமுதல் பாதாளத் தார்வித்து
மண்ணோர் மருந்து அடியேனுடைய வைப்பு தெள் 19
2. மனத்தான் கண்ணி னகத்தான் மறுமாற்றத்
திடையான் உயிரு 4
ஊனுருடல் புகுந்தான் உயிர் கலந்தான் உளம் பிரியான்
உயிரு 2
காட்டகத்து வேடன் கடலில் வலைப்பாகன்
நாட்டிற் பரிப்பாகன் பண்டாய 3
யாவர்க்கு மேலா மளவிலாச் சீருடையான்
யாவர்க்குங் கீழா மடியேனை திருவெண் 8

அறமுதனுன்கின் பயன்

அறமுதனுன் கன்றருளிச் செய்திலனேல்
திருந்தவருக் குலகியற்கை தெரியாகாண் சாழ 20

கரணங்கள் பெற்றபயன்

சிந்தனை நின் றனக்காக்கி நாயினேன்றன்
கண்ணிணை நின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையு மம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கியைம் புலன்க ளார
வந்தனை ... ... சத 26
காணுங் கரணங்களெல்லாம் பேரின்பமெனப்
பேணுமடியார் பிறப்பகல பண்டாய 6

வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்த வைத்து
பூவல்லி
தன்னிரடிக் கென்னிரண்டு கரங்கள் தந்தான் கோவை 68

தம்மைக் கீழ்நிலையில் வைத்துக்கூறல்

கீழான நிலைமையில் உள்ள நம்போலியர்களிடம் வைத்த பெருங்கருணையினாலே, இவர்கள் இப்படி எண்ணியும் சொல்லியும் பழகி உய்யட்டுமென்று கருதி மிக உயர்ந்த நிலையில் உள்ள தம்மை மிக இழிந்த நிலையில் வைத்துக் காட்டிவிடுவது சுவாமிகள் வழக்காம். இதுவே பெரியோரியல்புமாம்.

... . வன்பராய் முருடொக்குமென் சிந்தை
மரக்கண் என்செவி இரும்பினும் வலிது செத் 4
நெஞ்சம் கல்லாம் கண்ணிணையும் மரமாந்தி
வினையினேற்கே சத 21
நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனை அச் 2
முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனை அச் 1
தையலார் மையலிலே தாழ்ந்துவிடக் கடவேனை அச் 7
ஊர் நாயிற் கடையானேன் சத 56
யாவர்க்குங் கீழா மடியேனை திருவெண் 8
கண்கெட்ட ஊரேறாய் சத 53
உன்னைவந்திப்பதோர், நெறியறியேன் நின்னையே அறியேன்
நின்னையே அறியும் அறிவறியேன் அடை 10

என்றிவ்வாறு அநேக திருவாக்குகள் உலகத்திற்கு உபகாரமாக அருளப்பெற்றவை அங்கங்கே காணலாம். இவற்றின் உண்மைப் பொருளுணராது மயங்கிப் பலப்பலவாறு அபசாரத்திற் படுவாருமுளர்.

சுவைகள்

அற்புதம் முதலிய பலசுவைகட்கும் உதாரணம் சுவாமிகள் திருவாக்கிலே காணலாம். அற்புதம், அதிசயம் என்ற இரண்டு பகுதிகளிலே அற்புதச்சுவை விளங்குவதை மேலே கண்டோம்.

... ... வேலை நஞ்சுண்
மழைதரு கண்டன் குணமிலி மானிடன் தேய்மதியன்
பழைதரு மாபரனென்றென் றறைவன் பழிப்பினையே நீத் 46
... ... வெங்கரியின்
உரிப்பிச்சன் றோலுடைப் பிச்சனஞ் சூண்பிச்ச னூர்ச்சுடுகாட்
டெரிப்பிச்சனென்னை யாளுடைப் பிச்சனென்
றேசுவனே நீத் 49

கழுதொடு காட்டிடை நாடக மாடிக் கதியிலியாய்
உழுவையின் ரேலுடுத் துன்மத்த மேல்கொண் டுழிதருமே சத 7
தேவர்குழா நாணுமே ஊச 5
நாயகனே தண்டித்தாற் சயமன்றே வானவர்க்கு சாழல் 4
குன்றே யனைய குற்றங்கள் குணமாமென்றே நீகொண்டால்
என்றான் கெட்டது குழை 3
கூவிப் பணிகொள்ளா தொறுத்தா லொன்றும் போதுமே
குழை 2
எண்ணிலி யிந்திரர் எத்தனையோ பிரமர்களும்
மண்மிசை மால்பலர் மாண்டனர் காண் தோணோ 9
காம னுடலுயிர் காலன் பற்காய் கதிரோன்
நாமகணுசி சிரம்பிரமன் கரமெரியைச்
சோமன் கலைதலை தக்கனையு மெச்சனையும்
தூய்மைகள் செய்தவா தோணோக்க மாடாமோ 1
எனையாண்ட பேதாய் புணா 9
தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச் சங்கரா
ஆர் கொலோ சதுரர் கோ ப 10
... ... விண்ணோர் தக்கன் வேள்வியின் வாய்ப்
பாயினை சீர்த்திய னம்பலத் தானைப் பழித்து மும்மைத்
தீயின தாற்றல் சிரங்கண் ணிழந்து திசை திசை தாம்
போயின வெல்லையெல் லாம்புக்கு நாடுவன் பொன்னினையே.
கோவை 234
... ... துயர்கவென்று பெற்றவளே எனைப்பெற்றாள் 320
இப்பாற் பிறவற்க வேழையர் வாழி யெழுமையுமே 208

என்றித் திறத்த திருவாசகங்கள் சிங்காரம், இகழ்ச்சி, நகை என்ற சுவைகளைக் காட்டுவனவாம். அச்சப்பத்து முழுதும் அச்சம் என்ற சுவையை நன்கு விளக்கும்.

அயன்றலை கொண்டுசெண் டாடல் பாடி
அருக்க னெயிறு பறித்தல் பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடிக்
காலனைக் காலா லுதைத்தல் பாடி
யியைந்தன முப்புர மெய்தல் பாடி
யேழை யடியோமை யாண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடி யாடி
நாதற்குச் சுண்ண மிடித்து நாமே. பொற் 18

இதில் முதல் இரண்டு அடிகளும் மூன்றாமடியின் முற்பகுதியும் வீரச்சுவையையும், மூன்றாமடிப் பிற்பகுதியும் நான்காவதடியும் கருணைச் சுவையையும் காட்டும்.

பணிவார் திறையும் பகைத்தவர் சின்னமுங் கொண்டு வண்டே
ரணிவார் முரசிறை டாலிக்கு மாவொடணுகினரே கோவை 330

இதுவும் அப்படியே இருசுவைகளையும் காட்டுகின்றது.

திருவுந்தியார் முழுமையும் இரௌத்திரத்தையும் வீரத்தையும் நன்கு விளக்கும்.

என்னையு மொருவ னாக்கி யிருங்கழற்
சென்னியில் வைத்த சேவக போற்றி
கனவிலுந் தேவர்க் கரியாய் போற்றி
நனவிலு நாயேற் கருளினை போற்றி

போற்றித்திருவகவல்

என்றித் தொடக்கத்த எண்ணிறந்த திருவாக்குகள் கருணைச் சுவை பயப்பனவாம்.

மறுத்தனன் யானுன் னருளறி யாமையி லென்மணியே
வெறுத்தெனை நீவிட் டிடுதிகண் டாய்வினை யின்றொகுதி
பொறுத்தெனை யாண்டுகொ ளுத்தர கோசமங் கைக்கரசே
பொறுப்பரன் றேபெரி யோர்சிறு நாய்கடம் பொய்யினையே. நீ6

இத்தொடக்கத்த திருவாசகங்கள் சாந்தச் சுவையைக்காட்டும்.

உவமைகள்

நமது சுவாமிகள் காட்டும் உவமைகளின் அருமைப்பாடு குறிக்கத்தக்கது.

அன்னத்தின் மேலேறி யாடுமணி மயில்போல் ஊச 7

... ... அகன்றது உதயநின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரிய னெழவெழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணலங் கண்ணாந்
திரளிரை யறுபத முரல்வன ... ... திருப்பள்ளி 2

முலைக்கண்க டோய்சுவடு, பொடிகொள்வான் றழலிற்
புள்ளிபோ லிரண்டும் பொங்கொளி தங்குமார் பினனே அரு 5

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள் திருவெம் 16

இத்திருவாக்கு முழுமையும் மழையின் செயல்களுக்கு எம்பிராட்டியின் திருவருட் செயல்கள் உவமை காட்டப்பெற்றிருப்பது குறிக்கத்தக்கதாம்.

'ஈசற்குயாம் வைத்த' என்னும் கோவை 109 பாடலும், 'கொண்டற் கண்டன்' என்னும் 325-ம் செய்யுளும் பத்திச் சுவையையே பயக்கும் உவம விசேடங்களுக்கு எடுத்துக் காட்டுகளாம்.

பழமொழிகள்

உலக வழக்கத்திலே பழகி வழங்கிவரும் உவமானங்களே பழமொழிகள் எனப்படும். பழமொழிகளை நமது சுவாமிகள் மிக இனிமையாய் எடுத்தாளுவர். அவர்கள் எடுத்தாண்ட பழமொழிகளும் சுவையுள்ளன. அதைவிட அவற்றை வைத்துக் காட்டி விளக்கும் கருத்துக்கள் மிகச் சுவையையும் பயனையும் தருவனவாம். இவை எண்ணிறந்தன சுவாமிகள் திருவாக்கிலே உண்டு. விருப்பு வெறுப்பற்ற சுவாமிகளுக்கு இவைகளை வழங்குவதிலே விருப்பமுண்டு என்றும் சிலர் சொல்லத் தக்கபடி அத்தனை பழமொழிகள் வழங்கியிருக்கிறார்கள். ஒருசிலவற்றை இங்கே உதாரணம் காட்டுவேன்.

கண்கெட்ட ஊரேறுயிங் குழல்வேனே	சத 53
பசுமரத்தாணி அறைந்தாற்போல்	போற்றி
கொடிறும் பேதையுங் கொண்டது விடாது	போற்றி
ஊரா மிலைக்கக் குருட்டா மிலைத்து	சத 57
மழக் கையிலங்கு பொற்கிண்ணம்	சத 92
ஆற்றங்கரைமரம்	நீத் 3
தீப்புகுவிட்டில்	,, 15
இருதலைக் கொள்ளியி னுள்ளெறும்பு	,, 9
கடலினுள் நாய்நக்கி யாங்கு	,, 13
வெள்ளத்துள் நாவற்றியாங்கு	,, 14
பெறுநீரறச் சிறுமீன் றுவண்டாங்கு	,, 28
மத்துறு தண்டயிரில்	,, 30
பொதும்புறு தீப்போல்	,, 36
பலாப்பழத்து ஈயின்	,, 46
இரைதேர் கொக்கொத்து	கோ மூத் பதி 5
பிரைசேர் பாலினெய்போல	பதி 5
ஆள்வாரிலி மாடு	பதி 7
பாவிடை யாடு குழல்	அடை 8
கொடுங்குன்றி நீள்குடுமி மேற்றேன் விரும்பு முடவனைப் போல்	கோவை 150
விசும்புற்ற திங்கட் கழுமழப்போல்	198
வறியா ரிருமையுமறியார்	333
பேய்வயினும் மரிதாகும் பிரிவு	345

ஊசி கொற்சேரியில் விற்று கோவை 386
நெருப்புறு வெண்ணெயு நீருறு முப்புமென 315
புகழும் பழியும் பெருக்கிற் பெருகும் 175

திருப்பள்ளி எழுச்சியிலே,

"கூவின பூங்குயில்" என்ற திருவாக்கின் இயற்கை வருணனை யின் பொலிவு வேறெங்கும் காண்டல் அரிதாம்.

'பிழைப்பு வாய்ப்பொன் றறியா நாயேன்'
'திணிந்ததோர் இருளிற் றெளிந்ததூ வெளியே'
'கண்டங்கரியன் செம்மேனியான் வெண்ணீற்றன்'
'மெய்ம்மையும் பொய்ம்மையு மாயினர்'
'மூப்பா னிளையவன் முன்னவன் பின்னவன்'

இவைபோல்வனவைகளை எதிரெதிரான பொருள்களை உடனே வைத்துக்காட்டும் சுவையான வழக்குக்கு உதாரணங்களாகக் கொள்ளலாம்.

ஒருபொருள் அடைக்குப் பல மொழிகளை அடுக்கி வழங்கும் அழகும் அங்கங்கே காணலாம்.

'பேரா வொழியாப் பிரிவில்லா
மறவா நினையா வளவிலா மாளா இன்ப மாகடலே'
'கோலப், பொங்கரா வல்குற் செவ்வாய்
வெண்ணகைக் கரியவாட்கண் மங்கை'
'வெண்ணகைச் செவ்வாய்க்கரிய பானலார் கண்ணியர்'

பொருளுறுதிப் பாட்டிற்காகச் சொல்லடுக்குகள் வைத்தருள் வதும் சுவாமிகள் இயல்பாம்.

நெக்குநெக்குள்ளுருகி உருகி நின்று மிருந்து கிடந்து
நக்கு மழுதுந் தொழுது வாழ்த்தி புணர் 8
கூடிக்கூடி வாடிவாடி ஊடிஊடி ஆடிஆடி பிரா 11

என்பன சொல்லடுக்குச் சுவையையும் பொருளின் உறைப்பை யும் விளக்குவனவாம்.

சமயவேறுபாடுகளையும், அவற்றின் உயர்வு தாழ்வுகளை யும், அவற்றிலே சைவத்திறம் உயர்ந்த தன்மையையும், ஞான நிலையின் பெருமையையும், ஆன்மாவானது பிறவிப் பிரயா ணத்திலே படிப்படியாகக் கடந்துசென்று அம்முடிந்த நிலையை அடையும் வகையையும், மிக அழுத்தமாகப் போற்றித் திருவக வல் தொடக்கத்தில்,

யானை முதலா எறும்பி றுய
ஊனமில் யோனியி னுள்வினை பிழைத்தும்

என்பது முதல்

சாயா அன்பினை நாடொறுந் தழைப்பவர்
தாயே யாகி வளர்த்தனை போற்றி

என்பதுவரையுள்ள அடிகளால் நன்கு விளக்கியிருக்கிறார்கள்.

சமய வாதிகள் தத்த மதங்களே
அமைவ தாக அரற்றி மலைந்தனர் எனவும்

புத்தர் முதலாய புல்லறிவிற் பல்சமயம்
தத்த மதங்களிற் றட்டுளுப்புப் பட்டுநிற்க எனவும்

ஆறு கோடி மாயா சத்திகள்
வேறு வேறுதம் மாயைகள் தொடங்கின எனவும்

உவலைச் சமயங்கள்
மிண்டிய மாயாவாதம் நாத்திகம்
உலோகாயதன் விரதமே பரம் எனவும்

வரும் திருவாக்குகளால் சமயகோடிகளின் கொள்கைகளையும் நிலைகளையும் சுவாமிகள் உணர்த்தியருளினர்.

அறுவகைச் சமயத் தறுவகை யோர்க்கும்
வீடுபேறாய் நின்ற விண்ணோர் பகுதி ... ... எனவும்
இருமுச் சமயத் தொருபேய்த் தேரினை ... ... எனவும் வரும் திருவாசகங்களாலே ஆறு சமயங்களைக் குறித்தருளினர்.

ஆறுசமயத் தவரவரைத் தேற்றுந் தகையன என்றும்
விரிவிலா அறிவினர்கள் வேறொரு சமயஞ் செய்தே
எரிவினாற் சொன்னா ரேனும் எம்பிராற் கேற்ற தாகும்

என்றும் திருநாவுக்கரசர் அருளியுள்ளகருத்துக்கள் சுவாமிகள் திருவாக்கிலும் வெளிப்படுகின்றன.

ஆகம வரலாறு

திருக்கயிலாயத்திலே சிவபெருமானார் தமது ஐந்து திருமுகங்களிலேயிருந்தும் சிவாகமங்கள் 28-ம் தோற்றுவித்தார் என்பது சைவநூற்றுணிபு. திருமூலர் திருமந்திரத்திலே இவ்வுண்மைக்கு ஆதாரமுண்டு.

வெள்ளி மால்வரைக் கைலையில் விற்றிருந் தருளித்
துள்ளு வார்புனல் வேணியார் அருள்செயத் தொழுது
தெள்ளு வாய்மையி னாகமத் திறனெலாந் தெரிய
உள்ள வாறுகேட் டருளின னுலகையா ளுடையாள்
திருக்குறிப்பு 50

என்பது பெரியபுராணம். இதனை நம் சுவாமிகள்

மன்னு மாமலை மகேந்திர மதனிற்
சொன்ன வாகமந் தோற்றுவித் தருளியும் ... ...
மாவேட் டாகிய ஆகமம் வாங்கியும்
மற்றவை தம்மை மகேந்திரத் திருந்து
உற்ற வைம்முகங்க ளாற்பணித் தருளியும் கீர்த்தி

என்ற திருவாக்குகளால் உணர்த்தியருளினார். இங்கு மகேந்திரமாமலை என்பது திருக்கயிலைமலையைக் குறிக்கிறதென்று எண்ணுகின்றேன். ஆகமங்களைத் திருக்கயிலையினின்றும் இறைவன் வெளிப்படுத்தியருளியதாய் மேலே காட்டிய பெரிய புராணத் திருப்பாட்டினாலே அறிகிறோம். திருவிசைப்பாவில் திருமாளிகைத்தேவர் ௫-வது கோயில், உறவாகிய யோகம் என்ற பகுதியில் பாசுரங்கள்தோறும் மகேந்திரமாமலை குறிப்பிடப் பெற்றிருக்கிறதுடன்

மகேந்திர மாமலை மேலுறையுங் குறவா
மகேந்திரப்பொன் மலையின் மலைமகளுக் கருளுங் குருநீ

என்றும் அருளிச் செய்யப்பெற்றிருக்கிற திருவாக்குகள் இங்கே கவனிக்கற்பாலன.

உலகத்தைச் சுவாமிகள் கருதியநிலை

பகட்டாகிய அரசசேவைக்கும் செல்வத்துக்கும் கல்விக்கும் உலகமெல்லாம் மேல்விழுந்து போராடிக் கிடந்து மயங்கும் இக்காலத்தில்,

மன்னரோ டுறவு மஞ்சேன்
செல்வ மென்னு மல்லலிற் பிழைத்தும்
கல்வி என்னும் பல்கடற் பிழைத்தும்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவு மினியமையும்

என்ற கருத்துக்கள் உலகினர்க்கு வியப்பையும் அற்புதத்தையும் விளைக்கும். உண்மை அறிவாளிகளுக்கே இவ்வுண்மைகள் விளங்குமன்றி ஏனைய உலகவர்க்கு விளங்கா.

ஆன்றோர் மொழிகளின் ஆட்சி

குறள், திருமூலர் திருமந்திரம் முதலிய முன்னோர் மொழி பொருளே யன்றி அவர்மொழிகளையும் சுவாமிகள் மிக்க சுவை யோடும் எடுத்தாளுவார்.

பிணியு மதற்கு மருந்தும் பிறழப் பிறழ மின்னும் கோவை 5
= ஒன்று நோய் நோய்க் கொன்றந் நோய் மருந்து குறள்
வேண்டாது ஒன்றும் வேண்டாது மிக்க
அன்பே மேவுதலே பிரார்த்தனை 4
= வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்டவரும் குறள்
உவமனி லிறந்தன வொண்மலர்த்தாள் . சத - 39
தனையொப்பாரை யில்லாத் தனியை புண - 7
ஒப்புனக் கில்லா ஒருவன் பிடி. - 5
= தனக்குவமை யில்லாதான் ருள் குறள்
பற்றற நான் பற்றி நின்ற கோத் - 5
பற்றுங்கவை யற்றீர்பற்றும் பற்றுங்கது பற்றி உயிருண் -5
= பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு குறள்
கற்றுங் கவன் கழல்பேணினர் உயிருண் - 5
=கற்றபின் நிற்க அதற்குத்தக, கற்றதனாலாயபயனென் கொல்
வாலறிவன் நற்றாள் தொழாஅ ரெனின் குறள்
உடையா ளுன்ற னடுவிருக்கு முடையாள் நடுவுள் நீயிருத்தி
கோ. மூ. 1
— அண்ணல் இருப்பதவள் அக்கரத்துளே
பெண்ணி னல்லாளும் பிரான் அக்கரத்துளே திருமந்திரம்
இமவான் மகட்குத் தன்னுடைக் கேள்வன்
மகன் தகப்பன் தமையன் பொற் 13
தன்னொருபால் அவள் அத்தனும் மகனும் தில்லையான்
கோவை 112
— தாயுமகளுநற் றாரமு மாவளே திருமந்திரம்
உண்ணின் றுருக்கி உலப்பிலா ஆனந்தக் கண்ணீர்
அன்னை 2
— உண்ணின் றுருக்கியொரொப்பிலா ஆனந்தக் கண்ணின்று
திருமந்திரம்
தெய்வம் பணிந்தறியாள் கோவை 304
— தெய்வந் தொழா அள் குறள்

இனித் தேவாரத் திருமுறைகளிலே சுவாமிகளின் திரு வாக்கானது அனேக இடங்களில் சொற்போக்கும் பொருட்

போக்குமாக அமைந்திருப்பதைக் காணலாம். அவற்றில் ஒருசில உதாரணங்கள் காட்டுவேன்.

வேதமும் வேள்வியும் பொற் 20
—வேதமும் வேள்வியும் தக்கராகம். சம். திருவேட்களம் 3
நிச்சம்மென நெஞ்சின் மன்னி யானுகி நின்ருனே உயிருண் 9
சிவமாக்கி அச் 1
—மெய்ப்பரபொருள் சேர்வார் தாமே தானுகச் செயுமவன்
சம் 1 வியாழக்குறுஞ்சி திருக்கழுமலம் 7
— நானுயபரனே சுந். கொல்லிக்கௌ. விரட் 14
= இருமையின் ஒருமையும் சம். திரு. எழுகூற்
சோறுபற்றினவா தோணே 7
= தருஞ்சாதம் (முத்தி) சம் 1 மேகரா கழுமலம் 6
புறம்பய மதனி லறம்பல அருளியும் கீர்த்தி
= நால்வர்க் கறம்பய னுரைத்தனை புறம்பய மமர்ந்தோய்
சம் 11 இந்தளம் திருவிரா புறம்பயம் 1
சோதியே சுடரே அருட் 1
= சோதியே சுடரே சம் 11 சீகாமரம் - திருஆமாத்தூர் 6
= சோதியே சுடரே வாகீ - அதிகை - நேரிசை 3
= சோதியாய்ச் சுடரதானுர் வாகீ 1 நேரி - சோற்றுத்துறை 9
மென்மலர் கழல்காட்டி, யாடுவித்தென தகம்புகுந் தாண்டு
கொண் டருளிய அற்புத மறியேனே அற் 5
= அறைகழல் சிலம் பார்க்கநின் ருடிய அற்புத மறியோமே
சம் 11 நட்டராகம் வலஞ்சுழி 4
தான் ஒருவனுமே பலவாகி நின்றவா தோணேக்க
மாட்டாமோ தோணே 5
= ஒருவனுமே பலவாகி நின்றதொரு வண்ணமே சம் 111
காந்தார பஞ்: இராமேசு 9
ஆயிரந் திருநாமம் தெள் 1
= ஞானப்பே ராயிரம் பேரிறு னண்ணிய
சம் 111 கொல்லி கானப்பேர் 5
= ஆயிரம் பேருகந்தானும் வாகீசர் ஆரூர் 8
விச்சதன்றியே விளைவு செய்குவாய் சத 96
= கருவினு லன்றியே கருவெலா மாயவன்
உருவினு லன்றியே உருவுசெய் தானிடம்
சம் 111 கொல்லி தென்குடித் திட்டை
= விச்சின்றி நாறுசெய் வானும் வாகீ 1 ஆரூர் 2
கடகரியும் பரிமாவும் தேருமுகந் தேருதே
இடபமுகந் தேறியவாறு சாழல் 15
= மற்றேரும் பரிமாவும் மதகளிறு மிவை யொழியப்
பெற்றேரும் பெருமானுர் சம் 111 பஞ்சமம் பெருவேளூர் 10

= பிடிமட வாரணம் பேணுதுரக நிற்கப் பெரிய
விடிகுரல் வெள்ளெரு தேறுமி தென்னேகொல் வெம்மிறையே
வாகீ II நாகை 1
பச்சையனே நீத் 31
= பச்சைநிற முடையர் வாகீ III இடைமருது 7
= பச்சை மேனியர் சம் III பல்லவனீச்சரம் ஈரடி 6
புற்றில் வாளரவு மஞ்சேன் அச் 1
= புற்றில் வாளரவும் சம் III புறநீர்மை கழுமலம் 6
நரியைக் குதிரைப் பரியாக்கி ஆன 7
= நரியைக் குதிரை செய்வானும் வாகீ I ஆரூர் 2
இருதலைக் கொள்ளியினுள் ளெறும்பொத்து நீத் 9
= இருதலை மின்னுகின்ற கொள்ளிமே லெறும் பென்னுள்ளம்
வாகீ I தனிநேரிசை 6
தாழச் செய்தார் முடி தன்னடிக்கீழ் வைத்தவரை விண்ணோர்
சூழச் செய்தான் கோவை 43
= தொழுத பின்னைத் தொழப்படுந் தேவர் தம்மாற்
றொழுவிக்குந் தன்றொண்டரையே வாகீ I தனித்திருவி 5
மத்துறு தண்டயிரிற்புலன் தீக்கதுவ வித்துறுவேனை நீத் 30
வன்மத்திட உடைந்து தாழியைப் பாவு தயிர்போற்
றளர்ந்தேன் அடை 6
= சித்தத்து ளைவர் தீயசெய்வினை பலவுஞ் செய்ய
மத்துறு தயிரேபோல மறுகுமென் னுள்ளம் வாகீ I ஆரூர் 9
வஞ்சகப் பெரும்புலைய னேனை சத 96
வாழ்வற வாழ்வித்த மருந்தே பிடி 1
= வஞ்சகப் புலையனேனை வழியறத் தொண்டிற்பூட்டி
யஞ்சலென் றாண்டு கொண்டாய் வா2 தனிநேரிசை 5
அடியேனை விடுதி கண்டாய் விடிலோ கெடுவேன் நீத் 23
உமையாள் கணவா விடிற்கெடுவேன் வாகீ I சத்திமுற்றம் 5
திருவளர் தாமரை சீர்வளர் காவிக ளீசர்தில்லை
குருவளர் பூங்குமிழ் கோங்குபைங் காந்தள் கோவை 1
= திருவளர் தாமரை சீர்வளர் செங்கழு
நீர்கொணெய்தல்
= குருவமர் கோங்கம் வாகீ I நல்லூர் திருவி 10
நல்லா தொழியானமக் கென்றுன் னுமம் பிதற்றி......
பரவிப் பொன்னம்பல மென்றே
யொல்கா நிற்குமுயிர்க் கிரங்கி யருளாய் கோ . ப . 10
= சித்தத் துருகிச் சிவனெம் பிரானென்று சிந்தையுள்ளே
பித்துப் பெருகப் பிதற்றுகின்றார் பிணி தீர்த்தருளாய்
வாகீ I பசுபதித் திருவி 8

— நின்றன் சரணென் றேம்பலிப் பார்கட் கிரங்கு கண்டாய்
வாகீ I ஏகம்பம் திருவி 8
வேலன்றுதை பொற்சு 3
குமரன்றுதை உந்தி 17
= வேலவன்றுதை வாகீ I அதிகைத்திருவி 5
கோலமே எனை யாட்கொண்ட கூத்தனே
ஞாலமே விசும்பே இவை வந்துபோங், காலமே சத 48
— ஞாலமே விசும்பே நலந்திமையே - காலமே
கோலமே வாகீ II விழி 3
முத்தனே முதல்வா அருட் 8
— முத்தனே முதல்வா வாகீ II விழி 4
மேலை வானவரும் அறியாததோர் சத 43
— சோதி வானவரு மறியாததோர் வாகீ II விழி 7
தடக்கையி னெல்லிக்கனி எனக்காயினன் அ - பகுதி
— மையலாய் மறவா மனத்தார்க் கெலாம்
கையிலா மலகக் கனியொக்குமே வாகீ II நீலக்குடி 2
தொழுதகை துன்பம் துடைப்பாய் போற்றி போற்றி அக 131
— தொழுதகை துன்பம் துடைப்பாய் போற்றி வாகீ III விரட் 8
உன்னை ஒலமிட்டலறி உலகெலாந் தேடியுங் காணேன்
அருட் 2
—நின்னைத்தேடி, ஒருரு மொழியாமே யொற்றித் தெங்கும்
உலகமெலாந் திரிதந்து நின்னைக் காண்பான் வாகீ III ஆரூர் 9
நானுரடி யடைவான் உயிருண் 2
நானுர் என்னுள்ளமார் கோத் 2
விலங்கினேன் வினைக்கேடனேன் கழுக் 3
= நானு ருமக்கோர் வினைக் கேடனேன் வாகீ III ஆவடு 6
குற்றாலத் தமர்ந்துறையும் கூத்தா புலம 3
= குற்றாலத் தமர்ந்துறையும் கூத்தன் கண்டாய்
வாகீ III கோடிகா 4
பாரிடை யைந்தாய் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை யிரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை யொன்றாய் விளைந்தாய் போற்றி
போற்றி - அக 137-141
— மண்ணதனி லைந்தைமா நீரினுன்கை
வயங்கெரியின் மூன்றைமா ருதத்திரண்டை
விண்ணதனி லொன்றை வாகீ III கற்குடி 3
— மின்னுருவ விண்ணகத்தி லொன்றாய் மிக்கு
வீசுங்கால் தன்னகத்தி லிரண்டாய்ச் செந்தீத்

தன் னுருவின் மூன்ருய்த்தாழ் புனலி னுன்காய்த்
தரணிதலத் தஞ்சாகி யெஞ்சாத் தஞ்ச மன்னுருவை
வாகீ III புள்ளிருக்குவேளூர் 5
ஊ ஞ யுயிரா யுணர்வா யென் னுட் கலந்து அம் 16
=ஊ னுகி யுயிராகி யதனுணின் ற வுணர்வாகி, வாகீ III ஆனைக்கா
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய் எம்பா 19
— எங்கெழி லென் ஞாயி றெளியோ மல்லோம் வாகீ III தனி 2
குஞ்சரங் கோளிழைக்கும் கோவை 21
— குஞ்சரங் கோளிழைத்திர் சுந் - கோத்திட் 9
அடித்தடித்து வக்காரமுன் றிற்றிய வற்புதம் அற் 9
= வேம்பினெடு தீங்கரும்பு விரவி யெனைத்தீற்றி
சுந் - காரோணம் 2
சித்தனே செல்வத் திருப்பெருந்துறையில் அருட் 8
= சித்தனே செல்வத் திருமுல்லைவாயில் சுந் - தக்கேசி 9
தனையொப்பாரை யில்லாத்தனி புண 7
= சான்று காட்டுதற் கரியவன் சுந் - தக்கேசி வலிவலம் 10
— மற்ருருந் தன்னெப்பா ரில்லாதானை வாகீ III கோயில்
குறைவிலா நிறைவே கோதிலா அமுதே கோ - ப 5
— குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
சுந் - தக்கேசி, திருவாவடுதுறை 8
பந்தணை விரலியும் நீயும் பள் - எழு 8
பந்தணை விரலாள் பங்க வாழா 8
= பந்தணவும் விரலாள் சுந் - புறநீர்மை கூடலையாற்றூர் 4
மாலுங் காட்டி வழிகாட்டி வாராவுலக
நெறியேறக் கோலங்காட்டி யாண்டாயை ஆன 3
= மாயங்காட்டிப் பிறவி காட்டி மறவா மனங்காட்டிக்
காயங்காட்டி சுந் - செந்துருத்தி ஆரூர் 7
நீருறுநியே
= தண்ணிய வெம்மையினுன்
சுந் - பஞ்சமம் நன்னிலத்துப்பெரு 1
பற்று நான் மற்றிலேன் கண்டாய் வாழ 1, 7, 8, 9, 10
மற்று நான் பற்றிலேன் கண்டாய் டி படி 4
= மற்றுப்பற் றெனக்கின் றி சுந் - பாண்டிக்கொடுமுடி 1
புறம் புறந்திரிந்த செல்வமே பிடி 9
= உயிர்ப்பாய்ப் புறம்போந்துபுக்கு வாகீ II இன்னம்பர்
ஆளா னவர்கட் கன்பா போற்றி போற் - அக
= ஆளான அடியவர்கட் கன்பன் றன்னை வாகீ III புள்வேளூர்
அஞ்செழுத்தின் புணைபிடித்து சத 27
= கடலிற் பாய்ச்சினு நற்றுணையாவது நமச்சிவாயவே
வாகீ - பஞ்சாக்கரப்பதிகம் 1

யாமார்க்கும் குடியல்லோம் யாதுமஞ்சோம் சத 30
= நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்
வாகீ II மறுமாற்றத் திருத்தாண்டகம் 1
பூவா ரடிச்சுவ டென்மேற் பொறித்தலுமே தெள் 7
= பூவா ரடிச்சுவ டென்மேற் பொறித்துவை
வாகீ I சத்திமுற்றம்
எய்ப்பினில் வைப்பனே சத 98
= எய்ப்பினில் வைப்பை சுந் - தக்கேசி வலிவலம்
எண்ணுடை மூவர் இராக்கதர்கள் எரிபிழைத்துக்
கண்ணுதலெந்தை கடைத்தலைமு னின்றதற்பின் தோணோ 9
= மூவெயில் செற்ற ஞான் றுய்ந்த மூவரில்இருவர் நின்திருக்
கோயிலின் வாய்தற்
காவலாளரென் றேவிய பின்னை சுந் - தக்கேசி புன்கூர் 8
எண்ணிலி யிந்திர ரெத்தனையோ பிரமர்களும்
மண்மிசை மால்பலர் மாண்டனர்காண் தோணோக்கம் 9
= நூறுகோடி பிரமர்கள் நொங்கினர்
ஆறுகோடி நாராயண ரங்கனே
ஏறு கங்கை மணலெண்ணி லிந்திரர்
வாகீ II ஆதிபுராணத் திருக்குறுந்தொகை 3

இன்னும் இவைபோல்வன பலவுள. கால ஆராய்ச்சிக்காரர்கள் இவற்றை உபயோகப்படுத்திக்கொள்ள வாய்ப்பாயிருக்குமென்று இத்தனை எடுத்துக்காட்டுக்கள் எழுதலானேன். ஆனால் இவற்றை ஆதரவாகக்கொண்டு அவர்கள் செய்யும் முடிபுகளில் எனக்கு யாதொரு பொறுப்புமில்லை. திருவிசைப்பாவிலும் பதினோராந் திருமுறைப் பிரபந்தங்கள் சிலவற்றிலும், பெரியபுராணத்திலும் சுவாமிகள் திருவாக்குகள் சொல்லும் பொருளுமாக எடுத்தாளப் பட்டுள்ளன. சுருங்கிய அளவில் ஒன்றிரண்டு உதாரணங்கள் காட்டாகக் காட்டுவேன்.

குலாத்தில்லை கண்டேனே குலா
= குலாத்தில்லை திருவிசை - திருமாளிகை (3) கோயில்
ஊறிநின் றென்னு ளெழுபரஞ்சோதி கோ. ப. 1
= உள்ள முள் கலந் தெழுபரஞ்சோதி
திருவிசை - கருவூ கங்கை 6
கல்லைப் பிசைந்து கனியாக்கி அம் 5
= கற்போன் மனங் கனிவித்து
திருவிசை சேந்த 2 திருவாவடுதுறை 7
சொல்லும் பொருளு மிறந்தசுடர் புண 4

— உரையின் வரைப்பும் பொருளி னளவுமென்
திருவகைப்பட்ட எல்லையுங் கடந்து பட்டினத்தார்
தமியனேன் றனிமை தீர்த்தே சத 68
தமியேன் றனிநீக்குந் தனித்துணையே நீத் 38
— தனியனேன் றனிமை நீங்குதற்கே
திருவிசை - கருவூ முகத்தலை 1
என்பெலா முருக்கி பிடி 10
— என்பெலா முருக கருவூ 8
பாதகமே சோறு பற்றினவா தோணோ 7
— பாதகத்துக்குப் பரிசுவைத்தானுக்கே பல்லாண்டு
திருவிசை - திருப்பல் 10
செய்தனவே தவமாக்கும் தோணோ 6
— அன்புதந்த வடியார் செய்தனவே தவமாமன்றே
பெரியபுராணம்
உருத்தெரியாக் காலத்தே உள்புகுந்தென் உளமன்னிக்
கருத்திருத்தி கண்ட 3
— எனையறியாப் பருவத்தே எடுத்தாண்ட பெருந்தகை
பெரியபுராணம் சம் 880
செருப்புற்ற சீரடி தோணோ 3
— செருப்படி யவ் விளம்பருவச் சேயடி பெரியபுரா - கண் 158
— திருப்பாதச் செருப்புத்தோய பெரியபுரா - சம்பந் 1018
ஐம்புலன்களார வந்தனை சத 26
— ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள
பெரியபுராணம் - தடுத்தாட் 106
— உருவின்கண், உணருமைம்பொறி யளவினு மருளினை
பெரியபுராணம் - ஞான 161
ஐம்புலன்க ளின்னைப் புணர்கிலாப் புணர்க்கையானே சத 70
— பூண்ட ஐம்புலனிற் புலப்படா இன்பம்
புணர்ந்து மெய்யுணர்வினிற் பொங்க
பெரியபுராணம் - ஏயர்கோன் 9
அணிகுழன்மேல் வண்டார்ப்ப திருவெம் 12
—தேங்கோதை மலர்க் குழன்மேற் சிறைவண்டு கலந்தார்ப்ப
பெரியபுராணம் - தடுத்தாட் 146
இங்குநம் மில்லங்கள் தோறு மெழுந்தருளி திருவெம் 17
— அடியவர் மனைகடோறும் சென்று பெரியபுரா - திருநில 42
நறுமுறு தேவர் கணங்களெல்லா நம்மிற் பின்பல்ல
தொடுக்கவொட்டோம் பொற்சு 5
— தொண்டர்கள் பின்னும்பர் குழாமல்கு
பெரியபுரா - திருநா 343
பள்ளந் தாழுறு புனலினிற் கீழ்மேலாகப் சத 21

— அன்பு பள்ளமடையா யென்றும் பயின்றுவரும் பண்பு
பெரியபுரா - சிறுத் 4

சிந்தனை நின்றனக்காக்கி
வாக்குன் மணிவார்த்தைக் காக்கி சத 26

— ஆங்கவர் மனத்தின் செய்கை யரனடிப் போதுக்காக்கி
யோங்கிய வாக்கின் செய்கை யுயர்ந்தவஞ் செழுத்துக் காக்கி
பெரியபுரா - நேச 3

திருவாசகத்திற்கும் பெரியபுராணத்திற்கும் உள்ள இன்னும் இதுபோன்ற பல ஒப்புமைகளை இத்திருமுறைகளிலே ஊறிப் பழகுகின்றவரும் புலவரும் ஏனையோரும் ஏற்றபெற்றி கண்டு களிப்புறுவாராக. இங்கு எழுதப்பட்டுள்ள தெல்லாம் ஒருசிறிது ஒப்புமையாகும். அனைத்தையும் ஒப்புநோக்கியுணர்தல் கற்றறிந்த மாந்தரது தலையாய கடனாகும்.

சுவாமிகளின் கால ஆராய்ச்சிக் குறிப்புகள்

இனி சுவாமிகள் இருந்த காலத்தைப்பற்றிச் சில கூறி என்னுடைய நூலை முடித்துக் கொள்ளுவேன். கால ஆராய்ச்சியானது நூல்களின் போக்குகளையும், வரலாற்றுப்போக்குகளையும் ஒப்பிட்டுப் பார்த்துச் சில உண்மைகள் தெரிந்துகொள்ள ஒருவாறு உதவியாக இருக்கும் என்பது தவிர அதனால் ஆகும் உறுதிப் பயன் ஒன்றுமில்லை என்பது அடியேனுடைய கொள்கை. பல நல்லறிஞரது துணிபுமாகும்.

காலம் என்கிறது ஒரு தத்துவம். அது சடம். தத்துவங் கடந்த நிலையிலே நின்று தத்துவ ஞானிகள் நிலையிலே காலம் நமக்கு என்ன கொடுக்கும்? ஆனால் காலச்சக்கரத்துக்குள்ளே சிக்கியிருக்கும் நமக்கு நம்காலத்தைப் போக்கிவிடும். உதாரணமாகத் திருவாவடுதுறையில் திருப்போதி நிழலில் யோகிருந்தருளிய திருமூலர் காலத்தைப்பற்றி நாம் என்னசொல்வது! எந்த வரலாறோ, சிலாசாசனமோ நமக்கு இவர் திறத்தில் என்செயவல்லன? யோக வலிமையினாலே 3000 ஆண்டுகள் சிவயோகத்திலிருந்ததாக வரலாறு இருக்கும்போது கால ஆராய்ச்சி எம்மட்டில் இவர் வரலாற்றிற் செல்லும்? பெரியோர்களாய் வாழ்ந்தவர்களுடைய ஆன்ம உயர்வுகளைக் கொண்டாடுதல் விட்டு அவர்களின் சடசம்பந்தமான நகம்—பல்—மயிர் முதலியவற்றை வைத்து வழிபட்டுவரும் சிலர் கொள்கையைப் போன்றதேதான் கால ஆராய்ச்சிக்குத் தற்காலத்தில் சிலர் பெருங்கலகம் விளைத்துக்கொண்டு கொடுத்துவரும் உயர்வான இடமும் ஆகும் என்பது நல்லறிஞர் பலரது கொள்கையாகும். அதுசரி என்றே எனக்குத் தோன்றுகிறது.

நமது சுவாமிகள் ஐந்து ஆண்டுக்கு முன்பு இருந்தால் என்ன? ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுந்தருளினும் என்ன? அவருடைய அருளிப்பாடுகளும் வரலாறும் நமக்கு முக்கியமே தவிர அவரிருந்த காலத்தைப்பற்றிய சண்டையிலே நமக்கு என்ன அத்தனை கவலையும் ஆத்திரமும் வேண்டியிருக்கிறது? ஆயினும் இச்செயலானது பெருஞ்சண்டைக்கு ஏதுவாகிக் கலகம் விளைப்பித்து வருவதால் ஒருசில உரைகள் மட்டும் இதைப்பற்றி இங்குக் கூறுதல் மிகையாகாதென்று நம்புகிறேன். இதனைக் காய்தலுவத்தலகற்றி ஆய்தல் அறிவுடையார் கடனாகும். அதுவே முறைமையுமாகும்.

சுவாமிகள் காலத்தைப்பற்றிய கொள்கைகளுக்குக்கணக்கே இல்லை. கி. பி. இரண்டாம் நூற்றாண்டு முதல் கி. பி. பதினோராம் நூற்றாண்டு வரை உள்ள ஒவ்வொரு நூற்றாண்டையும் சுவாமிகள் காலமாகக் குறிப்பார்கள் ஒவ்வொரு கொள்கையுடையார். விரிவான பலநூல்கள் வெளிவந்துள்ளன.

சிறிது காலத்திற்கு முன்வரை சுவாமிகள், வாகீசமூர்த்திகள் ஞானசம்பந்தமூர்த்திகள், சுந்தரமூர்த்திகளாகிய மூவருக்கும் முந்தியவர் என்ற கொள்கையே நாட்டிடை நிலவி வந்தது. ஆனால் இப்பால் சில ஆண்டுகளாக அந்தக்கொள்கை நிற்கச் சுவாமிகள் மூவர்க்கும் பிந்தியவர் என்ற கொள்கை பரவி வருகின்றன.

சிறைவான் புனற்றில்லைச் சிற்றம் பலத்துமென் சிந்தையுள்ளும்
உறைவா னுயர்மதிற் கூடலி னய்ந்தவொண் தீந்தமிழின் துறை
கோவை 20

என்று சுவாமிகள் மதுரைச் சங்கத்தைக் குறிக்கின்றமையாலும், திருக்குறளை எடுத்தாண்டிருத்தலாலும் அவர் கடைச்சங்கக் காலத்திற்குப் பின் இருந்திருக்க வேண்டுமென்பது எல்லோருக்கும் ஒப்ப முடிந்த ஒரு முடிபு.

வித்தகப் பாடல் முத்திறத் தடியரும்
திருந்திய அன்பிற் பெருந்துறைப் பிள்ளையும்

என்று பட்டினத்தடிகள் நமது சுவாமிகளைத் தோத்திரித்திருப்பதால் அவருக்கு முற்பட்டது சுவாமிகள் காலம் என்பதையும ஒருவரும் மறுக்க முடியாது. கடைச்சங்க காலம் கி. பி. இரண்டாவது நூற்றாண்டென்பதும், பட்டினத்தடிகள் காலம் பத்தாம் நூற்றாண்டு என்பதும் ஒருவாறு துணியப்படும். எனவே

சுவாமிகள் இரண்டாவது நூற்றாண்டுக்குப் பின்னும், பத்தாவது நூற்றாண்டுக்கு முன்னும், உள்ள ஒரு காலத்தவர் என்பது ஒத்துக்கொள்ளக் கூடியதாகும். இவ்வாறு எல்லை குறித்த 800 ஆண்டுகளுக்குள்ளேதான் நமது சைவ சமயாசாரியர்களாய்த் தேவாரமருளிய மூவர் பெருமக்களும் வாழ்ந்தனர் என்று தெரிகிறது.

திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் ஆகிய இரு அடியவர் காலமும் 7வது நூற்றாண்டு என்று அறுதியிடப்பட்டுள்ளது. சுந்தரர் இருவருக்கும் பிற்பட்டவர். இதனை நோக்க மாணிக்கவாசகர் சமயாசாரியர்கள் மூவர்க்கும் முற்பட்டவர் என்று துணிதலே ஏற்புடையதாகும்.

சுவாமிகள் அவர்கட்கு முந்தியவரா பிந்தியவரா என்று தீர்மானித்தால் மேலே காட்டிய 800 ஆண்டு கால எல்லை இன்னும் குறுகிவிடும். மூவர்களிலே கடைசியாக இருந்தவர் சுந்தரமூர்த்திகள். அவர்காலம் சுமார் கி. பி. 825 ஆண்டுக்கு அடுத்தது என்று ஒருவாறு உறுதி செய்யப்பெறுகிறது. அவருக்குப் பின்னர் சுவாமிகள் இருந்திருப்பார்களாயின் ஒன்பதாவது பத்தாவது நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலமே அவர் காலம் என்று கூறலாம். சுவாமிகள் காலம் பின் என்பார் கூறும் முக்கிய காரணங்களாவன.

1. சைவர்களுக்குள் சமயசாரியர்களை வழங்கும் முறையிலே சுவாமிகளை இறுதியில் வைத்துக் கூறுவது.

2. திருமுறை வகுப்பிலே திருவாசகம் மூவர்தேவாரங்களுக்குப் பின்னர் வைத்திருப்பது.

இவை அவ்வாறு கால நிச்சயத்திற்குப் போதிய ஆதாரமாகாது என்று எண்ணுகிறேன். சமயாசாரியர்களைப் பலவாறு வைத்து வழங்குகிறார்கள். சுந்தரமூர்த்திசுவாமிகளை இரண்டாவது வைத்துவழங்கும் வழக்கமும் ஒன்று உண்டு. அவ்வாறு எழுதிய சிலபடமும் நான் கண்டிருக்கிறேன். எப்படியாயினும் திருமுறை வகுப்பிலே திருஞானசம்பந்த மூர்த்திகளின் திருமுறைகள் முதலிலிருப்பவும் உலகவழக்கத்திலே அப்பரை முதலில் வைத்துக் கூறுவது வழக்காயிருக்கிறது. அன்றியும் திருமுறை வகுப்பிலிருந்து அவ்வாசிரியர் காலநிச்சயம் செய்தல் சரியன்றெனக் கொள்ளவேண்டியிருக்கிறது.

அப்படியாயின் திருஞானசம்பந்தர் அருளியவை முதன் மூன்று திருமுறைகளாகவும் திருநாவுக்கரசர் அருளியவை

அடுத்த மூன்று திருமுறைகளாகவும் அமைக்கப்பட்டிருக்க, அவர்களுக்கு முன்னேயவராகிய இவர் அருளிய வாசகமும் கோவையும் எட்டாந்திருமுறையாக அமைக்கப்படுவானேன்? எனில், திருமுறை வகுத்த நம்பியாண்டார் நம்பிகள் 'அவ்வவர் களின் காலத்தைக்கொண்டு வகுத்தாரல்லர். சுந்தரமூர்த்தி நாயனார் அருளியவை ஏழாந்திருமுறையாக இருக்க அவருடன் ஒருகாலத்தவராகிய சேரமான் பெருமாணாயனார் அருளியவை பதினோராந் திருமுறையாக அமைந்திருப்பதை நோக்கினால் இவ்வுண்மை விளங்கும் கடைச்சங்கப் புலவராகிய நக்கீரனா ரருளியவை பதினோராந்திருமுறைப் பிரபந்தங்களுள் ஒன்றாக இருத்தலைக் கண்டும் அவ்வவர் இருந்த காலத்தைக்கொண்டு முறை வகுத்தார் நம்பிகள் என்பார் உண்டா? அன்று என்று ஆசிரியர் பண்டிதர் ச, திருச்சிற்றம்பலம்பிள்ளை அவர்கள்தமது மாணிக்கவாசகர் என்ற நூலில் எழுதியுள்ளது இங்கே குறிக் கற்பாலதாம்.

3. திருத்தொண்டத் தொகையில் சுவாமிகளைச் சேர்த்துக் கூறாமை.

இதற்குப் பலர் பலவாறும் காரணம் காட்டுவார்கள். அவற்றை எல்லாம் ஆராய்ந்து விவகரிப்பது இங்கு சாலாது. ஆனால் திருத்தொண்டத் தொகையிலே தனியாகப் பெயர் கூறப்பெறாது எத்தனையோ அடியார்கள் உண்டு. அவர்கள் எல்லாம் சுந்தரமூர்த்திகள் காலத்துக்குப் பிற்பட்டவர்கள் என்றாவது அல்லது சுந்தரமூர்த்திகள் தமது காலத்துக்கு முற்பட்ட எல்லா அடியார்களையும் தமது தொகையிற் பாடினார் கள் என்றாவது சொல்லமுடியாது.

கண்ணுதல் கோயிற் றேவா சிரியனுங் காவ ணத்து
விண்ணவ ரொழிய மண்மேல் மிக்கசீ ரடியார் கூடி
எண்ணிலா ரிருந்த போதில் இவர்க்குநா னடியே னாகப்
பண்ணுநா ளெந்நா ளென்று பரமர்தாள் பரவிச் சென்றார்.
தடுத்தாட் - 189.

சுந்தரமூர்த்திகளுக்குத் தேவாசிரிய மண்டபத்திலேயிருந்த திருக்கூட்டத்திலே, 'மன்னுசீர் அடியார் தங்கள் வழித் தொண்டை உணரநல்கி'னார் தியாகேசப் பெருமான். சுந்தர மூர்த்திகள் காலத்திலும் அதற்கு முன்னும் உள்ள தனியடி யார்கள் அறுபத்துமூன்றுபேர்தான். அதற்கு மேலில்லை என்று முடிவுசொல்ல நாம் துணிந்தாலன்றித் திருத்தொண்டத் தொகையிற் சொல்லப்பெறாத காரணத்தாலேயே சுவாமிகள்

அதற்குப் பிற்பட்ட காலத்தவர் என்று சொல்லமுடியாது. அடியார்கள் எண்ணிறந்தோராவர் என்பது,

அளவி லாத பெருமைய ராகிய
அளவிலா அடியார் புகழ் கூறுகேன்
அளவு கூட உரைப்பரி தாயினும்
அளவி லாசை துரப்ப அறைகுவேன்.

பெரியபுரா - பாயிரம் - 5

என்ற பாசுரத்தினுல் விளங்கும். ஒருகாலப் பகுதியில் இருந்த அடியார்களைமட்டும் சுந்தரமூர்த்திகள் தொகையிற் பாடினுர் என்பதும் அத்தனை பொருத்தமாயில்லை. சண்டீசரையும் கண்ணப்பரையும் எந்தக்காலப்பகுதியிலும் சேர்த்தல் கூடாமை யாயிருக்கும்.

4. வரகுண பாண்டியரைத் திருக்கோவையில் பாடியிருத்தல். வரகுணரென்ற பேரோடு இரண்டுபேரிருந்தனர் என்றும், அவர்களிலொருவர் கி. பி. 862 ஆண்டின்போது ஆட்சிபுரிந்தனரென்றும், மற்றவர் இவரது பாட்டனுர் என்றும், சுவாமிகளால் குறிக்கப்பெற்றவர் முன்சொன்ன பின்னவரே என்றும் சாசன ஆராய்ச்சிக்காரர்கள் துணைகொண்டு இரண்டாவது துணியப்படுகின்றது. இவ்வரகுணரைத்தான் பட்டினத்தடிகளும் நம்பியாண்டார் நம்பிகளும் பதினேராந்திருமுறையிலே துதித்தருளினுர்கள் என்றும் சொல்லப்பெறுகிறது.

ஒரேபேருடைய பலமன்னர்கள் ஒவ்வோர் பெரிய அரச பரம்பரைகளிலும் இருந்திருப்பதை நாம்பார்க்கிறேம். பாட்டனுர் பெயரைப் பேரனுக்குவைப்பது முற்காலத்து வழக்கமாய் இருந்தது. இது,

மாசிலா மறையோர்ஐயா மற்றுங்கள் பேரனுர்தந்
தேசுடை எழுத்தே யாகிற் றெளியப்பார்த் தறிதி யென்ருர்

பெரிய - தடுத். 60

தனித்தனிக் கல்வெட்டுக்களை வைத்துக்கொண்டு அவற்றினுதவிகொண்டு ஒருதொடர்ச்சியான வரலாற்றைக் கற்பிப்பது இன்ன பெயராலே இத்தனைபேர்தான் இருந்தார்கள் என்று முடிப்பது பலகாரணங்களாலும் வழுவுக் கிடமாகுவதொன்ரும். வரகுணர் என்ற பெயராலே இரண்டுபேர்தான் உண்டு என்னும் முடிவுக்குக் கல்வெட்டு ஆராய்ச்சிக்காரர்கள் ஒன்றற்கொன்று சம்பந்தப்படாது தனித்தனி கல்வெட்டுக்களினுலே

ஊகித்துக்கொண்ட வமிசாவழியைத்தவிர வேறு ஆதாரங்கள் கிடையா என்று தோன்றுகிறது.

அரிமர்த்தனபாண்டியர் காலத்தே சுவாமிகள் இருந்தார் என்று சுவாமிகள் வரலாறு கூறும் எல்லாப் புராணங்களும் சொல்லுகின்றன. இதற்குமாறாய் சுவாமிகள் வரகுணர் காலத்தவர் என்று கொண்டு அதனைச் சமப்படுத்தும் பொருட்டு வரகுணருக்கு அரிமர்த்தனன் என்றொரு பேருண்டு என்ற யூகமும் கொள்ளப்பெறுகிறது. திருக்கோவையாரிலே குறித்த இரண்டு பாடல்களாவன:

மன்னவன் றெம்முனை மேற்செல்லு மாயினு மாலரியே
றன்னவன் றேர்புறத் தல்கல் செல்லாது வரகுணனுந்
தென்னவ னேத்துசிற் றம்பலத் தான்மற்றைத் தேவர்க்கெலாம்
முன்னவன் மூவலன் னூமற் றோர்தெய்வ முன்னலளே.

புயலோங் கலர்சடை யேற்றவன் சிற்றம் பலம்புகழும்
மயலோங் கிருங்களி யானை வரகுணன் வெற்பின்வைத்த
கயலோங் கிருஞ்சிலை கொண்டுமன் கோபமுங் காட்டிவருஞ்
செயலோங் கெயிலெரி செய்தபி ரான்றோர் திருமுகமே.

இவற்றிலிருந்து சுவாமிகள் இதில் தாம் குறித்த அரசர் காலத்தவர் என்று கொள்ளவேண்டிய அவசியமுங்காணோம்.

5. மாயாவாதம், ஆகமம், மும்மைமலம் 'சிவமாக்கி' பிரபந்தவகைகள் (கோவை, சதகம், அம்மானை முதலியன) இத்திறத்த பிரயோகங்களும் கொள்கைகளும் தேவார காலத்தில் நமது நாட்டில் இல்லை.

மாயாவாதம் என்ற பெயர் வடமொழிச் சாத்திரங்களிலே மிகுதியும் பயின்றோர் அக்கொள்கைக்கு வழங்கி வந்தனர். அப்பெயர் தமிழில் இன்ன காலத்தில்தான் வந்ததென்பதற்கு எவ்விதமான உறுதியான ஆதரவும் காணவில்லை. ஆகமங்களைப்பற்றித் தேவாரங்களில் பல இடங்களிலும் சமயாசாரியர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

'மலங்கெடுத்து மா தீர்த்த மாட்டிக்கொண்ட
மறையவனைப் பிறைதவழ்செஞ் சடையினானைச்
சலங்கெடுத்துத் தயாமூல தன்மமென்னுந்
தத்துவத்தின் வழிநின்று தாழ்ந்தோர்க்கெல்லா
நலங் கொடுக்கும் நம்பியை நள்ளாறு (6) வாகீ

மலங்கெடுத்து என்னும் அபிப்பிராயமே 'சித்தமல மறுவித்து' என்பதிலும் உள்ளது.

ஊழ்வினை சுந் - திருவாஞ்சியம் - 6
மூலநோய்தீர்க்கு முதல்வன் கண்டாய் வாகீ - மறைக்காடு
(மூலநோய் என்பது ஆணவமலம்)
அரவொலி ஆகமங்கள் அறிவாரறி தோத்திரங்கள்
சுந் - பஞ்சமம் - நொடித்தான்மலை
அம்மானே ஆகமசீலர்க் கருணல்கும் பெம்மானே
சுந் - பஞ்சமம் - பரவையுண்மண்டளி
பணியி லாகமஞ் சொல்லுந்தன் பாங்கிக்கே
வாகீ - இடைமருது
அண்டனை யண்டர்தமக் காகமநூன் மொழியு மாதியை
சுந்த - புறநீர்மை - கானப்பேர்
தத்துவந் தலை நின்றவர்க் கல்லது தத்துவனலன்
வாகீ || புகலூர்

என்பனவாதி தேவாரத் திருவாக்குகளும் திருமூலர் அருளிய ஆகமம்பற்றிய திருமந்திரங்களும் ஆகம வசனப்பிரயோகமும் மும்மைமலங்களின் கொள்கையும் மாயாவாதம் முதலிய தத்துவ விசாரணைகளும் தேவார காலத்திலே இருந்தனவென்று விளக்குவனவாம்.

தேவாரம் அருளிய பெருமக்கள் தலங்கள்தோறும் சென்று வழிபட்டார்கள். அங்கங்கே திருக்கோயில்கள் முன்னரே தாபிக்கப்பெற்று வழிபடப்பெற்று வந்தன.

'மாதொருபாகனுர்க்கு வழிவழி அடிமைசெய்யும் வேதியர்க' ளாகிய சிவவேதியர்கள் பெருமானிடத்தே அணுக்கத் தொண்டர்களாயமர்ந்து ஆகமவிதிவழியே பூசைசெய்து வந்தார்கள். சிவகோசரியார் திருக்காளத்தியப்பருக்கு,

எய்தியசி ராகமத்தி லியம்பிய பூசனைக் கேற்பக்
கொய்தமல ரும்புனலு முதலானகொண் டணைந்ததுவும்,

கண்ணப்பனுர் பூசனையைப் பழுதென்று எண்ணியவராய்ப் 'பழுது புகுந்ததுதீரப் பவித்திரமாஞ் செயல்புரிந்த' துவும் முதலிய வரலாறுகள் ஆகமவிதிப்படியே சிவாலய பூசைகள் தமிழ்நாட்டில் பழங்காலமுதல் வழங்கிவந்ததை நமக்கு எடுத்துக்காட்டும்.

வாகீசர் திருவாரூர் வீதிவிடங்கப் பெருமானுடைய திருவாதிரைத் திருவிழாவைச் சிறப்பித்துச் சம்பந்தமூர்த்திகளுக்குச் சொல்லியருளிய

முத்துவிதான மணிப் பொற் கவரி

என்ற திருப்பதிக முதலிய திருவாக்குகள் விதிப்படி திருவிழாக் கொண்டாடும் வழக்கம் அந்தக் காலத்திலேயே நம்நாட்டிடை இருந்ததென்று காட்டுவனவாம்.

நானுய பரனே சுந்
தாமே தானுகச் செயுமவன் சம்

என்பன 'சிவமாக்கி' என்ற கருத்துடையன.

இருமையி னொருமையும்

என்ற திருவாக்கு அத்துவிதத்தை விளக்கும். தேவாரப்பதிகங்களிற் சில அந்தாதித் தொடையிலே உள்ளன. சுந்தரமூர்த்தி சுவாமிகளுடனிருந்த சேரமான்பெருமாள் நாயனுர் ஆதியுலாவும், மும்மணிக்கோவையும், அந்தாதியும், முன்னிருந்த அம்மையார் அந்தாதி, இரட்டை மணிமாலை முதலியனவும் பாடியருளினமையினுலே தேவார காலத்திலேயும் அதற்கு முன்னும் பிரபந்த வகைகள் வழங்கின என்பது போதரும்.

தருந்தடக்கை முத்தழலோர் மனைகடொறு மிறைவனது
தன்மைபாடிக்
கருந்தடங்கண் ணுர்கழல்பந் தம்மானைப் பாட்டயருங்
கழுமலமே சம் • கழுமலம்

என்பது சுவாமிகள் திருவாசகப் பகுதிகளாகிய பாட்டுக்களையே குறிப்பதுபோன்றிருக்கிறதும் கவனிக்கற்பாலதாம்.

6. திருவிசைப்பாக்காரர்கள் மூவர்களைப் பாடினவர்கள் சுவாமிகளைப்பாடவில்லை.

பட்டினத்தடிகள் சுவாமிகளைப்பற்றித் துதித்தருளினமை மேலேகண்டோம். சேந்தனர் பட்டினத்தடிகளின் சீடர் என்று புராணங்கூறுகிறது. சுவாமிகள் திருவாக்குகள் திருவிசைப்பா பலவற்றிலும் பிரதிபலித்திருப்பதையுங் கண்டோம். ஆகையால் இக்காரணம் இக்கொள்கைக்கு ஆதாரமாகாதென்று நினைக்கிறேன்.

7. தொல்காப்பியம் அகத்திணை களவு கற்பு இலக்கணங்களுக்கு இளம்பூரணர் திருக்கோவையாரிலிருந்து ஒருதுறையையும் மேற்கோள்காட்டவில்லை. இறையனார் அகப்பொருள் உரையில் 8-ம் நூற்றாண்டிலிருந்த பாண்டியன் கோவையில் இருந்து உதாரணங்காட்டியிருக்கத் திருக்கோவையாரிலிருந்து ஒன்றும் காட்டப்பெறவில்லை. 10-ம் நூற்றாண்டுக்கு முன் இயற்றிய உரைகளில் திருவாசகம் திருக்கோவையாரிலிருந்து மேற்கோள்கள் எடுக்கப்படாமையைக் காணலாம்.

ஏழாவது நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்த ஞானசம்பந்தராதியரியற்றிய நூல்களிலிருந்து நச்சினார்க்கினியராதிய உரையாசிரியர்கள் மேற்கோளொன்றும் எடாமையின் அவர்கள் ஆறும் நூற்றாண்டில் இருந்திருக்க வேண்டுமென்றேற்படுகின்றது. அவர்கள் மாணிக்கவாசகர் இயற்றிய வாசகம் கோவைகளிலிருந்து மேற்கோள்கள் எடுத்திருக்கின்றார்கள். பேராசிரியர் உரையே இயற்றியிருக்கின்றமை மேலேகாட்டியுள்ளோம். இவ்வுரையாசிரியர்கள் இறையனார் அகப்பொருள் உரையிலிருந்து சிலவற்றை எடுத்தாளுகின்றார்கள். அவ்வகப்பொருளுரையில் மாணிக்கவாசகர் நூல்களிலிருந்து மேற்கோள்களொன்றும் எடுத்தாளப் படுவதில்லை. ஆதலின் அவ்வகப்பொருளுரை இவ்வுரையாசிரியர்களாகிய நச்சினார்க்கினியராதியர்களுடைய காலத்திற்கு முந்தியதாக இருக்க வேண்டுமென்று ஆசிரியர் ச. திருச்சிற்றம்பலம்பிள்ளை அவர்கள் எழுதியிருப்பது நாம் இங்கே பார்க்கத்தக்கதாம்.

அகப்பொருளுரையிலே நக்கீரர் முதற்பத்து பேர்வரை பரம்பரையாகச் சொல்லப்பெற்றுவந்து கடைசியாக அவர் முசிறியாசிரிய நீலகண்டனார்க்கு உரைத்தார். இங்ஙனம் வருகின்றதுரை என்று நீலகண்டனாருடன் நிகழ்காலத்தில் முடிகின்றமையின் இப்போது வழங்கிவரும் உரை நக்கீரர் கண்ட உரையைத் தழுவிய கருத்துடன் நீலகண்டனாரால் இயற்றப்பட்டதென்பது கனகசபைப்பிள்ளை அவர்கள் கருத்து. அது மிகவும் பொருத்தமே.

ஆகவே சுவாமிகள் ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்த ஞானசம்பந்தராதியர்க்கு முன் இருந்த நச்சினார்க்கினியராதியர்க்கு முன்னும், இரண்டாவது நூற்றாண்டின் தொடக்கத்திருந்த சங்கத்தார்க்குப் பின் பத்தாவது பரம்பரையிலே நின்ற முசிறியாசிரிய நீலகண்டனார்க்குப் பின்னும் இருக்கக்கூடிய ஒருகாலத்தவராக இருத்தல்வேண்டு மென்பதுதான் நாம் இப்போது நிச்சயிக்கக்கூடிய முடிபு என்று ஆசிரியர்

திருச்சிற்றம்பலம் பிள்ளை அவர்கள் கருதுகிறார்கள். வாகீசர் தேவாரத்திலே,

குடமுழ நந்தீசனை வாசகனாகக் கொண்டார் 1

நரியைக் குதிரை செய்வானும் 2

அணியார் வையைத் திருக்கோட்டி னின்றதோர்
திறமுந் தோன்றும் 3

என்ற மூன்று பாசுரங்களும் சுவாமிகள் மூவர்க்கு முந்தியவர் என்ற கொள்கைக்காரர் காட்டும் ஆதாரங்களாம்.

ஆனால் நந்திதேவர் மாணிக்கவாசகராய் வந்தாரென்று குறிப்பிட்டு அவர் சரிதங்கூறும் புராணமெவற்றிலும் சொல்லப் பெறவில்லை என்றும் 'நன் கணத்தலைவர்' கணநாதர் தமி லொருவர், என்றிவ்வாறு பொதுவாகவே கூறப்பட்டதென்றும் அதனால் நந்திதேவரே அவ்வாறு வந்தார் என்றுகொள்ள இடமில்லை என்றும் இதற்குத் தஞ்சை சீனிவாசப்பிள்ளை அவர்கள் பல ஆட்சேபங்களைக் கூறி 'வாசகன்' என்பது "மணிவாசகன்" என்ற பொருள் அல்ல; இறைவன் வாசகங்களை (ஆணைகளை) பிறருக்கு வெளிப்படுத்தும் கருவி யாயுள்ளவர் என்றுதான் பொருளென்றும் காட்டியிருக்கிறார். ஆனால் வடமொழிப் புராணங்களில் இக்கதைக்கு ஆதாரங் கிடைக்கிறதாய்ச் சொல்லுகிறார்கள். அதற்கு மாறாய்த் தமிழ்ப் புராணங்களில் ஒன்றும் இல்லாதபோது வடமொழிப் புராண வரலாற்றை வாகீசர் குறித்ததாய் நாம் ஏன்கொள்ளக்கூடாது; ஒருவர் என்றும் கணத்தலைவர் என்றும் பொதுவாய்ப் பேர் கட்டியது ஏன் நந்திதேவரைத் தான் என்று நாம் கொள்ளக் கூடாது.

... ... உன்னுடன் பிறந்தான்
முன்னமே முனியாகி எனையடையத் தவமுயன்றான்

பெரி - திருநா - 48

என்றபாட்டிலே முனியாகி என்று பொதுப்படச் சுட்டியிருப்பது பிற வரலாறுகளால் கயிலாயத்திலிருந்த வாகீச முனிவரைத் தான் என்று தெரியுமானால் பெரிய புராணத்திற்கு மாறுபடாத போது நாம் அதைக் கொள்வதற்கு என்னதடை: அது போலவே இங்கும் நாம் கொள்ளலாமே.

நரியைக் குதிரை செய்வான் என்பது இறைவனது அளவி லாற்றலைக் குறிப்பதே தவிர மாணிக்கவாசகர்க்காக நிகழ்த்திய

திருவிளையாடலை அல்லவென்று பிள்ளை அவர்கள் கருதுகிறார்கள். இது அச்சரித நிகழ்ச்சியானால் இப்பாட்டிலுள்ள நரகரைத் தேவுசெய்வான் முதலியவும் அவ்வாறே ஒவ்வோர் வரலாறுகளைக் குறிக்கவேண்டுமே என்று பிள்ளையவர்கள் ஐயப்படுகிறார்கள். ஆனால் அவ்வாறிருத்தல் அவசியமில்லை என்று தோன்றுகிறது. ஒரே பாசுரத்தில் உள்ளவற்றில் சில அடைகள் வரலாற்றையும் வேறு சில பொதுச்சிறப்பு இலக்கணங்களையும் குணங்களையும் சொல்வதை நாம் காண்கிறோம்.

உதாரணமாக அந்தத் திருவாரூர்ப்பதிகத்திலே 10-வது பாடலிலே,

பையஞ் சுடர்விடு நாகப் பள்ளி கொள்வா னுள்ளத்தானும்
கையஞ்சு நான்குடையானைக் கால்விரலா லடர்த்தானும்
பொய்யஞ்சி வாய்மைகள் பேசிப்புகழ் புரிந்தார்க்கருள் செய்யும்
ஐயஞ்சி னப்புறத் தானும் ஆரூ ரமர்ந்த வம்மானே.

என்று அருளிச் செய்யப்பட்டது. அடர்த்தானும் என்பது வரலாறு. உள்ளத்தானும் என்பதும் அப்படியே கொள்ளக் கூடியது; தத்துவவிளக்கமுமாம். அப்புறத்தானும் என்பது தத்துவமும் இலக்கணமுமாம். ஆகவே ஒரு பாட்டிலே ஒன்று சரிதக்குறிப்பாயிருந்தால் மற்ற எல்லாம் சரிதமாகவே இருத்தல் வேண்டுமென்ற அவசியமில்லை என்று தோன்றுகிறது.

நரியைக் குதிரை செய்வானும் என்பதிலே நரியைக் குதிரைப்பரியாக்கி என்ற சுவாமிகள் திருவாக்கே தொனிக்கப் பெறுகிறதும் காணலாம்.

"வையைத் திருக்கோட்டின்ற தோர்திறம்" என்பது மண் சுமந்த திருவிளையாடலல்ல வையைக் கரையில் ஆலவாயிலே எழுந்தருளியிருத்தலைத்தான் குறிக்கும் என்று பிள்ளையவர்கள் கருதுகின்றார்கள். வையைக் கரையிலே எத்தனையோ பலதலங்களுள்ளன. அவற்றிற்கெல்லாம் பிள்ளை அவர்கள் கூறும் பொதுப் பொருள் பொருந்தும். ஆனால் மண்சுமந்த திருவிளையாடல் வையைத்திருக் கோட்டுக்கு விசேடத்தைச் செய்ததனால் விசேடப்பொருளாகும். வையையின் கரை முழுதும் செல்லும் பொதுப்பொருளைவிடத் திருவிளையாடலினாலே சிறப்பாய்க் கொண்ட கூடற்கரைக் கொள்ளும் சிறப்புப்பொருள் கைக் கொள்ளத் தக்கது என்பது அடியேன் அபிப்பிராயம்.

வாதவூரடிகள் மூவர்க்குப் பிந்தியவராயிருந்தால் மூவர்களை ஏன் எவ்விடத்தும் அவர் குறிக்கவில்லை என்று ஒரு ஆசங்கை

நிகழும். அதற்குச் செந்நாவலர் பரசும், பண் சுமந்தபாடல் முதலிய சில திருவாசகங்களை மூவர்களைக் குறிப்பதாகக் காட்டுவர். ஆனால் அது பொருத்தமன்றென்று தோன்றுகிறது.

பண்ணென்ற இசைபாடும் அடியவர்கள் குடியாக
மண்ணின்றி விண்கொடுக்கும் மணிகண்டன். ஞான-வேளூர்.

என்பது போன்ற திருவாக்குகள் தேவாரத்திலே அநேக இடங்களில் காணலாம்.

இனி, மேலே நாம் தேவாரத் திருவாக்குகளுக்கும் திருவாசகம் திருக்கோவை திருவாக்குகளுக்கும் சொல்லிலும் பொருளிலும் ஒற்றுமைகாண அனேக உதாரணங்கள் கண்டோம். அவைகள் சுவாமிகள் மூவர்க்கு முற்பட்டவர் என்ற கொள்கையையே வலியுறுத்தும் என்று எண்ணுகிறேன்.

திருப்பெருந்துறையிலே சுவாமிகள் அடைந்தபோது கோயில் இல்லை. ஆசாரியர் பிரிந்த பின்னே அவர் ஆணையின்படி அவருக்குப் பீடம் தாபித்துக் கோயில் அமைத்துச் சுவாமிகளும் எஞ்சிநின்ற அடியார்களும் பூசித்துவந்ததாகத் திருவாதவூரர் புராணங் கூறுகிறது. திருவாசகமும் அங்கங்கே இந்த வரலாற்றையே வலியுறுத்துகின்றது. பரஞ்சோதியார் திருவிளையாடலிலே சொல்லியபடி முன்னமே அங்கே கோயில் இருந்ததென்பதற்கு ஆதாரம் இல்லை. இப்போது அங்கே காணப்பெறும் திருக்கோயிலின் அமைப்பும் குருபீடத்தானமும் திருவாதவூரர் புராணவரலாற்றையே உறுதிப்படுத்துகின்றன. வரலாற்று ஆதாரத்திற்கு இதுவே கொள்ளத்தக்கதென்பது அடியேன் கொள்கை.

வாகீசமூர்த்திகள்

பெருந்துறை காம்பீலிபிடவூர்

என்று பெருந்துறையைத் துதித்திருக்கின்றாராதலின் திருப்பெருந்துறையானது சுவாமிகளை ஆட்கொண்ட பின்னரே தலமாயிற்றாதலான் வாகீசர் சுவாமிகள் காலத்துக்குப் பிற்பட்டவர் என்று கொள்ளக்கிடக்கின்றது.

இனி இதுவரை கிடைத்த கல்வெட்டுக்களிலிருந்து சுவாமிகள் விடயமாக நமக்குக் கிடைக்கிற சில கருத்துக்களை ஆராய்வோம். பதினோராம் நூற்றாண்டுக்கு முற்பட்ட தென்னாட்டுக் கல்வெட்டுக்களில் சுவாமிகள் பெயர் காணப்படாமையும் தேவாரமுடையார் பெயர்களும் மற்றை நாயன்மார் சிலர்

பெயர்களும் காணப்படுதலும் சுவாமிகள் காலம் பிற்பட்டதென் பதற்கு ஒரு காரணமாக எடுத்துக்காட்டினார்கள் அனவரத விநாயகம்பிள்ளை அவர்கள். நமக்கு இதுவரை கிடைத்திருக்கும் கல்வெட்டுக்களைப்பார்ப்போமானால் பிள்ளையவர்கள் சொல்வது போல பதினோராம் நூற்றாண்டுக்கு முன் சுவாமிகள் பெயர் காணப்படுவதில்லை என்பது உண்மைதான். நமக்கு இது வரை எட்டாத வேறு கல்வெட்டுக்களும் இருத்தல் கூடும்.

அன்றியும் சுவாமிகள் உலகத்தார் தத்தம்மனத்தனபேச எஞ்ஞான்றுகொல் சாவதுவே, என்று தாமே அருளிய திரு வாக்கின்படியே உலகத்தில் ஒரு கலப்புமில்லாத வகையிலே உலகத்தாராலே பித்தர் என்று எள்ளப்பெற்றுத் திரிந்த ஞான நிலையுடையார். ஆதலின் அவர் பெருமையும் வரலாறும் நெடுங் காலம்வரை பரவாமலும் அரசர் முதலிய பலராலும் கொண் டாடப்பெறாமலும் இருந்திருத்தலும் கூடும். ஆதலால் கல் வெட்டில்லாமைகொண்டு நாம் எதுவும் துணிதல் கூடாது.

மாணிக்கவாசகன் என்றபெயர் விளக்கமாக வழங்கப் பெற்று அப்பேரை அன்பர்கள் தங்கள் பிள்ளைகட்கு வைத்தது கி. பி. 1024-க்கு முன்னாலேயே வழக்கமாய்விட்டது என்று தெரிகிறது. திருவொற்றியூர் கோயிலில் கற்பகிருகம் மேல்புறம் சுவரில் அந்த ஆண்டில் பொறித்த கல்வெட்டொன்றால் ஒரு பெரிய நாயன் என்ற மாணிக்கவாசகன் என்ற பெயருடைய அக்கோயில் ஊழியம் செய்யும் ஒரு அன்பரால் அதற்கு 32 பசுக்கள் தானஞ்செய்த வரலாறு தெரிகிறது. இதனாலே அக் காலத்தே கி. பி. 1024-க்கு முன்னர் சுவாமிகள் பெயர் மிகப் பிரசித்தமாய் வழங்கி வந்ததென்று தெரிகிறது.

திருவொற்றியூரிலே கிடைத்த மற்றொரு கல்வெட்டில் (செங் கற்பட்டு 997 நெ. கல்வெட்டு) பதினோராம் நூற்றாண்டிலே அக்கோயிலிலே மாணிக்கவாசகர் திருவெம்பாவை ஓதுதற்குப் பூதானம் செய்த வரலாறு தெரிகிறது. தென்னாற்காடு மாவட் டம் 523 நெ. கல்வெட்டாலே திருக்கோயிலூர் வட்டம் சோழ கேரள சதுர்வேதி மங்கலம் இறையநறையூரிலே உள்ள கோயிலிலே பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் திருச்சாழல் ஓதுவதற்கென்று ஒரு பூதானம்செய்த வரலாறு தெரிகிறது. அவ்வாறே தஞ்சாவூர் 213 நெ. கல்வெட்டினாலே திருவலஞ் சுழிக்கோயிலிலே திருவாதவூரடிகளுக்குப் பூதானம் செய்யப் பட்டுள்ளதாகத் தெரிகிறது. இவ்விரண்டு கல்வெட்டுகளும் பன்னிரண்டாம் நூற்றாண்டில் பொறிக்கப்பட்டவை. இக்காலத்

திலேயே திருவழுவூர் ஆலயத்திலே வாதவூராளி நாயனர் சந்நிதானத்தில் மார்கழித் திருவாதிரைத் திருவிழாவில் திருவெம்பாவை ஓதுவதற்காகவும், நாயனர்க்குப் பூசைக்காக வும் தானங்கள் செய்ததாக உள்ள இருகல்வெட்டுக்கள் கிடைக் கின்றன. பதின்மூன்ரும் நூற்ருண்டுக் கல்வெட்டொன்று திருவீழிமிழலையில் இதுபற்றியதாகவே கிடைத்திருக்கின்றது.

இனி இக்கால ஆராய்ச்சியை இம்மட்டோடு நிறுத்துவேன். பலவாற்ருனும் என்னினும் மேம்பட்டு ஆராய்ச்சி வல்லுன ராய் விளங்கும் பல பெரியோர்கள் கொள்கைக்கு அடியேன் குறிப்புகள் மாறுபட்டவையாயிருக்கலாம். ஆதலின் மிக்க அச்சத்துடனேதான் இவ்வாராய்ச்சியில் புகுந்தேன்.

இந்நூல் அடியேன் எண்ணியதைவிட மிகநீண்டுவிட்டது. இனியும் இதை வளர்க்க எனக்கு மனமில்லை. சுவாமிகள் சரிதத் தையும், அதன் தத்துவங்களையும் அவர் திருவாக்குகளையும், அவற்றின் பொருள்களையும் சிந்தித்துப்பயனடைவதைவிட்டுக் கால ஆராய்ச்சியிலே காலத்தைக் கழித்துவருவது அத்துணை பயனுள்ளதல்லவென்பது என் கருத்தென்று மேலேயே கூறி யுள்ளேன். கால ஆராய்ச்சியிலே என்னின் மாறுபட்ட பெரி யோர்கள் என்மீது கோபியாதிருக்கவேண்டுகிறேன்.

எளியேனது சிற்றறிவிற்பட்ட அளவிலே சுவாமிகள் வரலாற்றையும், திருவாக்குகளையும் ஒருவாறு துதித்தேன். சிவானுபூதிப் பெருவாழ்வினர்களாகிய பெருமக்களின் சொற் செயல்களை ஆய்வது என்போன்ற புல்லறிவாளர்க்குத் தக்க தன்ரும். இதனுலேயே என் புல்லறிவு வெளிப்பாடுற்றது. ஆயினும் சுவாமிகளுடைய இணையார் திருவடி என்றலைமேல் வைத்துக்கொண்டு அவரைத் துதிக்கும் வகையாலே அந்த அருந்தமிழாகரர் வரலாறு அடியேனுக்கு அவர்பாதம் தரும் பரிசாலறிந்தபடி துதிசெய்தேனுயினேன்.

இந்நூலாசிரியரின் திருத்தொண்டின் உறைப்பே இந்நூல் இக்காலத்துக்கேற்புடைத்தாம் வகையில் செப்பம் செய்யப் பட்டுத் திருந்திய பதிப்பாகத் திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து இருபத்திரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ அம்பலவாணதேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களால் வெளிவரப்பெறும் நன்னிலையைப் பெற்று விளங்குகிறது.

இதுபோன்ற பல அருள்நூல்கள் ஆதீன வெளியீடுகளாக வெளியிடப்பட்டுத் தமிழுலகுக்கு அளித்துவரும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் பெருங்கருணையை எண்ணி எண்ணி இன்புறுவதைத் தவிர வேறு என்செய வல்லோம்.

குற்றமே தெரிவார் குறு மாமுனி
சொற்ற பாவினு மோர்குறை சொல்வராற்
கற்றி லாவென் கவிவழு வாயினு
முற்று நாடிவல் லோராய்ந் துரைக்கவே.

மாணிக்கவாசகர் மலரடிகள் வாழ்க

சுபம்